சாண்டில்யன்
ராஜ பேரிகை
வானதி பதிப்பகம்

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

வங்கத்து
பாரதீய பாஷா
பரிஷத்தின் விசேஷ
விருது பெற்ற
நாவல்

ஸ்ரீ சாண்டில்யன்
ஸர்வசிரேஷ்ட கிரந்தம்
வானதி வெளியீடு

முன்னுரை

நீண்ட நாட்களாக என் மனத்தில் ஒரு சந்தேகம் உறுத்திக் கொண்டிருந்தது. எல்லா வளப்பங்களும் உடைய இந்தப் பாரத பூமி, சந்திரகுப்தன், அசோகன் போன்ற ஏகசக்ராதிபதிகளையும், ராணா பிரதாப்சிங், சிவாஜி போன்ற சிறந்த வீரர்களையும் பெற்றிருந்த இந்தப் பெரிய புண்ணிய பூமி, ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வந்த ஆங்கிலேயரிடம் எப்படி அடிமைப்பட்டது?

வியாபாரிகளாக இங்கு வந்த ஒரு சிறு கூட்டத்தால் இங்கு எப்படிப் பெரிய சாம்ராஜ்யத்தை அமைக்க முடிந்தது? இப்படியெல்லாம் நினைத்தேன். அதனால் அதைப்பற்றி ஆராய்ச்சியிலும் இறங்கினேன். அந்த ஆராய்ச்சியின் விளைவுதான் ''ராஜ பேரிகை.''

ஆங்கிலேயர்களைப்பற்றிப் பல குறிப்புகளைப் பல ஆங்கில ஆசிரியர்களும், நம்மவர்களும் எழுதியிருக்கிறார்கள். அந்தப் புத்தகங்களில் நமக்குப் போதிக்கப்பட்டதெல்லாம் 'லண்டனில் காலாடியாகத் திரிந்த கிளைவ் என்பவன் இங்கே குமாஸ்தாவாக வந்து முந்நூறு சிப்பாய்களைக் கொண்டு ஆற்காட்டைப் பிடித்து, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு வித்திட்டான். அந்த முந்நூறு தமிழ்ச் சிப்பாய்களும் தாங்கள் கஞ்சியைக் குடித்துச் சோற்றைப் பிரிட்டிஷ் சோல்ஜர்களுக்கு ஊட்டி உதவினார்கள்' என்ற கதைதான்.

இந்தப் பொய்யை நாம் படித்துப் பரீட்சைகளும் எழுதி நல்ல மார்க்குகளும் வாங்கியிருக்கிறோம். ஆற்காட்டுப் படையெடுப்பு பிரிட்டிஷாரின் முதல் படையெடுப்பல்ல. பிரிட்டிஷாருக்குச் சாதம் போட்டு நமது சிப்பாய்கள் கஞ்சி குடிக்கவும் இல்லை.

ஆங்கிலப் பேராசிரியர்கள் எழுதிய புத்தகங்களே நான் சொல்வதை நிரூபித்திருக்கின்றன. இந்தியாவைப் பற்றி இந்தியர்களுக்கு இருந்த சிரத்தையைவிட வெளிநாட்டாருக்கு அதிக சிரத்தை இருந்திருக்கிறது. ராபர்ட் ஆர்ம், கார்ல் மார்க்ஸ், லாபோர்ட், டாட்வெல் முதலிய பல விதேச ஆசிரியர்கள் இங்கு நடந்ததைத் தேதிவாரியாக எழுதி வைத்திருக்கிறார்கள்.

அந்த விவரங்களின்படி பிரிட்டிஷாரின் முதல் படையெடுப்பு ஆற்காட்டு மீதல்ல, தேவிக்கோட்டையின் மீது.

www.thamizhthenee.blogspot.com

இது கொள்ளிடத்தின் முகத்துவாரத்தில் இருக்கிறது. நாற்புறமும் நீர் சூழ்ந்திருப்பதால் முன்பு தீவுக் கோட்டை என்றும் பின்னால் தேவிக் கோட்டையென்றும் அழைக்கப்பட்டது.

இப்படியோர் இடம் இருப்பது நமது தமிழ் நாட்டுச் சர்க்கார் இலாக்காக்களுக்குக் கூடத் தெரியாது. இது சம்பந்தமாகத் தகவல் கேட்க ஒரு இலாக்கா அதிகாரிக்கு டெலிபோன் செய்தேன். பதிலுக்கு அவர் ''தேவ கோட்டையா?'' என்று கேட்டார். இடத்தை நான் விளக்க வேண்டியதாயிற்று.

தேவிக்கோட்டையை ஒட்டினாற் போல் கொடியம்பாளையம் என்ற சோழர் காலத் துறைமுகம் இருக்கிறது. இவை எல்லாம் நமது தமிழ் நாட்டுப் படத்தில் கிடையாது. இன்னும் தமிழ் நாட்டு விவரங்களை முழுதாகப் படைக்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம் என்பதை, இந்தக் கதையை எழுதுவதில் பூகோள, அரசியல் விவரங்களைச் சேகரிப்பதில், நான் உணர்ந்து கொண்டேன். ஆகவே ஆறு மாதகாலம் தீவிரமாக ஆராய்ச்சி செய்து இந்தக் கதையை எழுதினேன்.

நமது நாடு அடிமைப்பட்டது சம்பந்தமான சரித்திரக் குறிப்புகளை இந்த நூலில் தாராளமாக வாரி வழங்கி இருக்கிறேன். இதை வெறும் கதையாகப் பல ஆசிரியர்களைப் போல் நானும் எழதியிருக்க முடியும். எழுதிவிட்டு எனக்கு இணை கிடையாதென்று மார்தட்டியும் இருக்கலாம். ஆனால் நான் இன்னும் என்னை மாணவனாகக் கருதுவதால் ஆராய்ச்சி செய்து, அதை மக்களுடன் பகிர்ந்து கொள்வதையே என் வாழ்க்கை லட்சியமாகக் கொண்டிருக்கிறேன். இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் சரித்திரக் குறிப்புகள் மாணவர்களுக்கு மட்டுமல்ல, கல்லூரி ஆசிரியர்களுக்கும் பயன்படும்.

தவிர இந்த ஆராய்ச்சியிலிருந்து நான் தெரிந்துகொண்டதெல்லாம் நாம் பிரிட்டிஷாரிடம் அடிமையானதற்கு அவர்கள் காரணமல்ல என்பதுதான். நமக்குள்ளிருக்கும் பேதங்களும், நாட்டின் நன்மையைப் பறக்கவிட்டுச் சுய நன்மைக்காக எல்லாவற்றையும் விற்றுவிடும் நமது சுபாவமுமே என்பதைத் தெரிந்து கொண்டேன். இந்து முஸ்லிம் பூசலே பிரிட்டிஷ் அரசாங்கத்தை இங்கு நிலைநிறுத்தியது. ஆற்காட்டு நவாபுகள் தஞ்சை, மதுரை போன்ற இந்து ராஜ்யங்களை விழுங்க முற்பட்டிருக்கா விட்டால் கிளைவோ, டூப்ளேயோ முளைத்திருக்க முடியாது. தஞ்சையின் மகாராஷ்டிர ராஜாக்கள் ஸதாராவிலிருந்த சிவாஜி பரம்பரையுடன் இணைந்திருந்தால் பூனாவிலிருந்து கன்யாகுமாரி வரை பெரும் இந்து சாம்ராஜ்யம் ஏற்பட்டிருக்கும். ஆனால் மகாராஷ்டிரர் அவர்களுக்குள்ளேயே சண்டை போட்டுக் கொண்டார்கள்.

இப்படி ஏற்பட்ட பூசல்களால் தஞ்சை அழிந்தது, மதுரை அழிந்தது. ஆர்க்காடும் போர்க்காடாயிற்று. இந்த உண்மை தகுந்த சரித்திர ஆதாரங்களுடன் இந்தப் புத்தகத்தில் தரப்பட்டிருக்கிறது.

இதன் ஊடே ஒரு கதையையும் ஒட்டியிருக்கிறேன். காதலும் வீரமும் கலந்த சம்பவங்கள் கதையில் ஆங்காங்கு அள்ளித் தெளிக்கப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். என் கதைகளை ஒழுங்காகப் படிக்காமல் செக்ஸ் மயமாயிருக்கிறதென்று இலக்கிய வறம்புகள் தெரியாமல் உளறும் பெருமக்களுக்கு விஷயங்களை எடுத்துரைப்பதற்காக ஸ்ரீராமானுஜரின் 'ஸ்ரீபாஷ்ய'த்தின் ஆரம்ப சுலோகத்தைக் கொண்டே கதையைத் துவங்கி இருக்கிறேன். இதில் ஸ்ரீநிகமாந்த தேசிகனின் பாதுகாசகஸ்ரம், பிரபந்தங்கள் எல்லாம் இடம் பெறுகின்றன. பல ஜீவதத்துவங்களைப் புரிந்து கொள்வதற்கு இந்த நூலில் வசதி இருக்கிறது.

இதை இரண்டு ஆண்டுகள் குமுதத்தில் வாரம் விடாமல் படித்த தமிழ்ப் பெருமக்கள் இந்த நூலையும் வாங்கிப் படிப்பார்களென்று எதிர்பார்க்கிறேன். முக்கியமாக மாணவர்கள் இதைப் படித்துப் பயனடைவார்களென்றும் நிஜமான சரித்திர அறிவைப் பெறுவார்களென்றும் நம்புகிறேன்.

மற்றப் பெரிய நாவல்களைப் போலவே இதையும் பிரசுரித்து உதவிய குமுதம் ஆசிரியர் திரு எஸ். ஏ பி. அவர்களுக்கு என் நன்றி உரித்தாகும். பணத்தை லட்சியம் செய்யாமல் திண்டு திண்டான எனது மற்றப் புத்தகங்களைப் போல் இந்தத் திண்டையும் உயரிய முறையில் பதிப்பித்திருக்கும் வானதி அதிபர் திரு திருநாவுக்கரசுக்கும் எனது நன்றி உரித்தாகும்.

சாண்டில்யன்

1-12-78

பி.கு.-

சரித்திர மாணவர்களுக்கு உதவுதற்காக நான் இந்த நூலுக்காகப் படித்த சரித்திர நூல்களின் பட்டியலைத் தந்திருக்கின்றேன். இந்த நூல்கள் அனைத்தும் கன்னிமாரா பொது நூலகத்தில் ஆராய்ச்சிப் பிரிவில் இருக்கின்றன.

பதிப்புரை

இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் கால் ஊன்றுவதற்குக் காரணமாயிருந்த ராபர்ட் கிளைவைப் பற்றியும், அந்த நேரத்தில் தமிழகத்தின் நிலையைப் பற்றியும் விவரித்து எழுதப்பட்ட வரலாற்று நூல்தான் ராஜ பேரிகை.

தமிழகத்தில்தான் வரலாற்றின் மாற்றங்கள் நடந்திருக்கின்றன. அன்றைய நிலையில் இந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையில்லாமல் இருந்ததால்தான், பிரிட்டிஷார் வியாபாரம் செய்ய வந்தவர்கள், நாட்டையே ஆளும் நிலைக்கு உயர்ந்தார்கள்.

பிரிட்டிஷ்காரர்களின் வருகை ஒருவகையில் இந்தியாவின் ஒற்றுமையை உருவாக்கியது என்றே சொல்லலாம். இந்தியாவைச் சீர்ப்படுத்திய பெருமையும் அவர்களைச் சாரும். தனித் தனிச் சிற்றரசுகளாகவும் ஒற்றுமையில்லாமலும் நாட்டை வெவ்வேறு பாதையில் கொண்டு சென்ற நேரத்தில், நாட்டை ஒரு நிலைப் படுத்தியவர்கள் என்ற பெருமையும் அவர்களுக்கு உண்டு. ஆனால் நம் கலைச் செல்வங்களைக் கொண்டு போனார்கள் என்பதற்கு நாம் என்ன செய்ய முடியும்?

வியாபார நோக்கோடு வந்தவர்கள் எப்படிப்பட்ட தந்திரத்தைக் கையாண்டார்கள் என்பதை நோக்க வேண்டும். போரில் வெற்றி பெற்றதற்கு அடையாளமாகக் காஞ்சி வரதராஜப் பெருமாள் கோவிலுக்கு வைர நகை ஒன்றை ராபர்ட் கிளைவ் காணிக்கையாக அளித்தாரென்றால், அவர்கள் நம் மதத்தின் மீதும் நம்முடைய கோயில்கள் மீதும் எவ்வளவு மதிப்பு வைத்திருந்தார்கள் என்பதைக் காட்டுகிறதல்லவா!

பிரெஞ்சுக்காரர்களும்தான் வியாபாரம் செய்ய வந்தார்கள், அவர்களால் ஆங்கிலேயரை வெற்றி கொள்ள முடியவில்லை. காரணம், ஆங்கிலேயர்கள் கையாண்ட தந்திரமான போர் முறைகள்தாம்.

ஒரு விதத்தில் ராணி மீனாட்சியின் மரணமும் வரலாற்றின் மாற்றத்துக்குக் காரணமாகி விட்டிருக்கிறது. இதனால், இந்துக்கள் சிலரும் ஆங்கிலேயருடன் சேர்ந்து கொண்டு முஸ்லிம்களை எதிர்க்க ஆரம்பித்தார்கள். இப்படித்தான் இந்தியாவில் அந்நிய ஆதிக்கம் ஏற்படத் தொடங்கியது -- இது எல்லோரும் அறிந்த செய்திதான்.

இந்த வரலாற்று ஆதாரங்களை வைத்து நம் கண் முன்னே படக் காட்சியாகக் காட்சிகளைக் காட்டிக் கொண்டு செல்கிறார்

பிரபல நாவலாசிரியர் சாண்டில்யன் அவர்கள். இன்று சில இடங்கள் சாதாரண ஊர்களாகத் தோன்றுபவை அன்று வரலாற்று முக்கியம் வாய்ந்த ஊர்களாக விளங்கின. கடற்கரை ஓரங்களில் ஆங்கிலேயர்கள் அமைத்துள்ள கோட்டைகளையும் துறைமுகங்களையும் இன்றும் நமக்கு ஆச்சரியப்படும்படி அடையாளம் காட்டுகிறார் ஆசிரியர். இதையெல்லாம் இப்படிச் சொல்லா விட்டால் நம்மவர்கள் அறியாமலேயே போய்விடுவார்கள் அல்லவா?

இதில் நிகழும் சம்பவங்கள் நம்மைச் சுற்றியே நிகழ்கின்றன. சென்னை, காஞ்சி, ஆற்காடு, வேலூர், கடலூர், திருச்சி, தஞ்சை என்று படிப்பவர்களுக்கே திகைப்பு, இந்த இடங்களில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்தனவா என்று. அப்படிக் காண்பிக்கும் பெருமை பேராசிரியர் சாண்டில்யன் அவர்களைத் தவிர வேறு யாரால் முடியும்?

சமீப காலத்தில் தமிழகத்தில் நடந்த வரலாற்றுக் கதை இது. வரலாற்றுக் கதை மட்டுமல்ல; வரலாற்றுப் பெட்டகமும் கூட. அவசியம் நம் மக்கள் படிக்கவேண்டிய வரலாற்றுக் கருவூலம். நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்புகூட நம்மவர்கள் எவ்வளவு வீரத்தோடு வாழ்ந்தார்கள் என்பதை இந்த நூலில் காணலாம். அதுமட்டுமல்ல, அன்று வந்த வெளிநாட்டவர்கள் நம் தமிழ் மொழியை எவ்வளவு ஆர்வத்துடன் கற்றுக்கொண்டு பேசினார்கள் என்பதை எண்ணும்போது, நமக்கு உடல் புல்லரிக்கிறது. ராபர்ட் கிளைவ்கூடத் தமிழ் பேசியிருக்கிறான் என்னும் போது, நமக்கு வியப்பாக இருக்கிறது. ஆனால் உண்மை. அந்த மாபெரும் வீரனின் வாழ்விலும் காதலும் வீரத்தோடு போட்டி போட்டுள்ளது.

இப்படி வரலாற்றோடு, நம்மவர் பெருமையையும் இணைத்துக் கொண்டு செல்லும் இந்நவீனம் இன்றைய மாணவர்கள் அவசியம் படிக்க வேண்டிய அரும் பொக்கிஷமாகும்.

வரலாற்றுப் பெருமை வாய்ந்த மகோன்னத சரித்திர நாவலான ராஜ பேரிகையை வானதி பதிப்பக வெளியீடாக வெளியிட அனுமதியளித்த ஆசிரியர் திரு சாண்டில்யன் அவர்களுக்கு மிக்க நன்றி.

அன்புள்ள,
ஏ. திருநாவுக்கரசு
(வானதி பதிப்பகம்)



ராஜ பேரிகை

1. அழகும் ஆத்திரமும்

'அகில புவன ஜன்ம ஸ்தேம பங்காதி லீலே' என்கிற வாக்கியப்படி எல்லா உலகங்களுடைய உற்பத்தி, இருப்பு, மறைவு முதலிய காரியங்களையெல்லாம் எந்தவிதச் சிரம சாத்தியமும் இல்லாமலே விளையாட்டாகச் செய்து முடிக்க வல்லவனும், குடதிசை முடியை வைத்து, குணதிசைப் பாதம் நீட்டி, வட திசை பின்பு காட்டி, தென்திசை இலங்கை நோக்கி கண் வளர்ந்திருப்பவனும், பெருமதிள் சூழ் ஏழு பிராகாரங்களுக்கு மத்தியிலே உள்ளதும், பொன் வேய்ந்த பராந்தகனாலும் மதி நலங்கொண்ட மாபெரும் வீரன் சுந்தர பாண்டியனாலும் பொன் வேயப்பட்ட பிரணவாகார விமானத்தின் உள்ளே 'உளன் சுடர்மிகு சுருதியுள்' என்கிறபடி, உயர்ந்த கோபுரங்களுள்ள கோவில்கள் ஆயிரமாயிரம் இருப்பினும் அவன் குடிகொண்ட ஒரே காரணத்தினாலேயே பெருங்கோவில் எனத் தனிச் சிறப்புப் பெற்றதுமான அரங்கன் திருக்கோவிலுக்கு வெளி நான்கு கோபுரங்களிலும், அன்றிரவு விளக்குகள் ஜாஜ்வல்லியமாக எரிந்து கொண்டிருந்தன.

அரங்கனை விட்டுத் திருவைப் பிரிப்பது சம்பிரதாய விரோதமென்ற காரணத்தினாலேயே ஸ்ரீரங்கம் எனப் பெயர் கொண்ட மாநகரத்தின் கோபுரங்களில் மட்டுமின்றிப் பெரும் மதிள்களின் பலவிடங்களிலும் பெரும் பந்தங்கள் கொளுத்தப்பட்டு, ஒளிக்கு அங்கு ஏதும் குறைவு வைக்காவிட்டாலும், பன்னிரண்டு ஆழ்வார்களின் மங்களா சாஸனங்களாகிற தமிழ் மறையால் அழியாமல் பிரகாசம் பெற்றுவிட்ட உள்ளிருக்கும் வேத ஒளிக்குமுன் தாங்கள் ஒளி காட்ட முற்பட்டது எத்தனை கேவலம் என்ற உணர்ச்சியாலோ என்னவோ, கோபுர விளக்குச் சுடர்களும் மதிள் பந்த ஜ்வாலைகளும் இரு காவிரிகளிடமிருந்து எழுந்த காற்றினால் மனித மனத்தின் சலனம்போல் அலைந்து கொண்டிருந்தன.

அந்தச் சலனம் சரிதான் என்பதை ஆமோதிப்பனபோல், தென் திருக் காவிரியின் கரையிலிருந்த பெரிய நானாவித மரங்கள் தங்கள் தலைகளை ஆட்டிப் புஷ்பமிருந்தால் புஷ்பங்களையும்,

www.thamizhthenee.blogspot.com

ஏதும் இல்லாவிட்டால் பழுத்த இலைகளையும் ஆங்காங்கு உதிர்த்துக் கொண்டிருந்ததாலும், காவிரியின் பெருங்காற்று அவற்றை எதிரேயிருந்த வீதிக்குள் தூக்கி எறிந்து கொண்டிருந்ததாலும், காலை வேளையில் திருமஞ்சனக் குடமேந்திச் செல்லும் அந்தணருக்கும், புரவியில் செல்லும் வீரர்களுக்கும், ஏதோ இலையும் பூவும் இணைந்த பாதையை இயற்கை சிருஷ்டித்துக் கொண்டிருந்தது.

அடுத்த காலை நேரத்துக்கு வேண்டிய அந்தப் பாதையை முன்னடியாக விரிப்பானேன் என்று கேட்டுச் சிரிப்பதுபோல் தென் திருக் காவிரியில் அப்பொழுது பூர்ணமாயில்லாத சிறு நீர்க்கால்கள் சலசலசப்புடன் ஓடிக்கொண்டிருந்தன. அந்தச் சலசலப்புக்குச் சுருதி கூட்டுவனபோல் மா, பலா, கொய்யா மரங்களில் பறந்து பறந்து சிறகடித்து இன்பமாகக் கூவிக் கொண்டிருந்த கிள்ளை, மைனா முதலிய பட்சி ஜாலங்கள், தாங்கள் உறங்கும் காலம் நெருங்கிவிட்டதை உணர்ந்து, கூண்டுகளுக்குள்ளும், இலைகளின் மறைவுகளுக்குள்ளும் சென்று கொண்டிருந்தன.

அந்தப் பட்சி ஜாலங்களுக்கெல்லாம், பிரஜைகளுக்கு வழி காட்டும் அரசனைப் போல், அரைகுறையாகக் கட்டிவிடப்பட்டிருந்த தெற்கு வாசல் கோபுரத்தின் உச்சியில் பெரிய கருடன் ஒன்று தனது சிறகுகளை அடக்கிக்கொண்டு வெள்ளைக் கழுத்துடனும் வளைந்த அலகுடனும் மௌனமாக உட்கார்ந்திருந்தது. அதுதான் மௌனமாக உட்கார்ந்திருந்ததே தவிர, அன்று இரவு முற்றியுங்கூட மக்கள் நடமாட்ட ஒலிகளும் கூச்சல்களும் சிறிதும் குறைந்தபாடில்லை, அந்த மாநகரத்தின் புற வீதிகளிலே.

ஆங்காங்கு மதிள்களைச் சுற்றிலும் என்றுமில்லாத திரு நாளாய் உலாவிக் கொண்டிருந்த அளவுக்கு மீறிய புரவி வீரர்களின் நடமாட்டம் அந்த மாநகரத்தின் அழகுக்கு அதிக அழகையும், ஒரு கம்பீரத்தையும் அளித்தாலும் அரங்கனுக்கு இத்தனை காவலும் கெடுபிடியும் எதற்கு என்ற வினாவைத் தொடுக்கவே செய்ததானாலும், அவர்கள் எச்சரிக்கைக் கூச்சலும் புரவிகளின் குளம்பொலிகளும் காதுக்கு ரம்யமாகவே இருந்தன.

காதுக்கு ரம்யமாகவும் கண்ணுக்கு அச்சத்தைத் தவிர்ப்பதாகவும் அமைந்திருந்த அந்தப் புரவிப் படையின் சஞ்சாரத்துக்குக் காரணம் என்னவென்பதை அறியாத தென்னாட்டுப் பாகவதரும் வடநாட்டுக் கோஸாயிகளும் அந் நகருக்குள் நுழையுமுன்பு பெரும் யோசனையுடனேயே நுழைந்து கொண்டிருந்தார்கள். இரவில்கூட நாலாயிரத்தைச் சந்தை சொல்லிக் கொள்ளும் மாணவர்களின் மறையொலிகள் ஓரளவு

கேட்டுக் கொண்டிருந்தாலும், மதிள்களுக்குள்ளும் இருந்த புரவி வீரர் நடமாட்டத்தின் காரணமாகத் திருவருள் ஓரளவு கிடைத்தால் போதுமென்று 'முன்னடி பின்னடி'களைச் சிறிது அடக்கியே சேவித்துக் கொண்டிருந்தார்கள். பகவான் உறைகிறான் என்ற காரணத்தினாலேயே பயமற்றிருந்த அந்த மாநகரவாசிகள் அன்றிரவு மட்டும் சற்றுப் பயத்துடனே இருந்தார்களென்பதை உத்தர, சித்திரை வீதிகளின் அடைக்கமான சூழ்நிலையே நிரூபித்துக் கொண்டிருந்தது.

அந்தச் சூழ்நிலையின் காரணமாக அந்நகரின் இயற்கையான அழகுகூடச் சிறிது குறைந்திருப்பதாகப் புதிதாக வந்து கொண்டிருந்த யாத்ரீகர்கள் உணர்ந்து கொள்ளும் வண்ணம், அவர்கள் நகருக்குள் புகுந்ததும் புகாததுமாக ஆங்காங்கிருந்த சத்திரங்களுக்குள் அனுப்பப்பட்டார்கள். அந்த எச்சரிக்கையையும் மீறிக் குறுக்கும் நெடுக்கும் விஷயம் புரியாமல் போக முயன்றவர்கள் கத்தி முனைகளில் கோவிலுக்குச் செல்லும் தெற்கு வாசல் பாதையிலிருந்து வீரர்களால் அகற்றப்பட்டார்கள்.

ஆனால் எந்த ராஜா வந்தாலும் தான் அடங்க முடியாதென்பதை நிரூபிக்கக் கோவிலின் பிரதான வாசலுக்கு முன்பிருந்த தோட்டத்தில் அசைந்து கொண்டிருந்த சிறு யானைக் குட்டி மட்டும் 'ரங்கா' வென்று பெருங் கூச்சலை ஒரு முறை கிளப்பியது. அந்தக் குட்டி யானையின் துடுக்கை அடக்கு வதற்காகவோ என்னவோ பக்கத்தில் நின்ற பெரிய யானை அதன் மத்தகத்தில் தனது துதிக்கையால் ஒருமுறை ஓங்கி அறைந்து விசிறிக் காதுகளைப் பெரிதாக ஆட்டியது. ஆனால் குட்டி அதற்கு இடங்கொடுக்காமல் தனது சிறு தந்தங்களைத் தூக்கியும் மத்தகத்தால் குனிந்து தாக்கியும், பெரிய யானையுடன் சண்டைக்குச் சென்று பாகவதர்களில் பெரியவர் சின்னவர் கிடையாதென்ற வைணவ தத்துவத்தை அறிவுறுத்தியது. ஆனால் அந்தச் சண்டை அதிக நேரம் நீடிக்கவில்லை. மதிள்களுக்கு வெளியே திடீரெனப் பெருங்கூச்சல் கேட்டது. புரவிகள் பல திடீரெனப் பாய்ந்து வந்தன, உள்நோக்கி. அவற்றின்மீது வந்த வீரர்கள் வாட்களை உயர்த்தி வீசி மக்களைப் பக்கவாட்டு வீடுகளுக்கும் வீதிகளுக்கும் துரத்தினார்கள்.

சற்று நேரத்திற்கெல்லாம் பெரிய வெள்ளைப் புரவி யொன்றில் காவலர் பலர் புடைசூழத் தலை முதல் உடல் முழுவதும் மறைய முக்காடிட்ட பெண் உருவமொன்று மிக நிதானமாகவும் மெதுவாகவும் வந்து கொண்டிருந்தது. அவளுக்கு முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் வாட்களையும், வேல்களையும், 'மாட்ச்லாக்' என்ற மெல்லிய துப்பாக்கிகளையும் தாங்கிய பல வீரர்கள் காவல் புரிந்து வந்தார்கள். அவளுக்கு

அருகில் மட்டும் பெரும் மகாராஷ்டிர அங்கியணிந்த ஒரு பெரியவர் அவள் புரவியும் தன் புரவியும் உராய வந்து கொண்டிருந்தார்.

பிரதான வாயிலை அடைந்ததும் அந்தப் பெரியவரும் முக்காடிட்ட பெண்ணும் புரவிகளிலிருந்து இறங்க, அவர்களை வரவேற்க வாயிலில் நின்றிருந்த வீரர்கள் இருவர் புரவிக் கடிவாளங்களைக் கையில் பிடித்துக் கொண்டார்கள். முக்காடிட்ட பெண் சர்வ சாதாரணமாகப் புரவியிலிருந்து இறங்கினாள். பெரியவரும் வயோதிகத்தால் தாம் தளர்ந்து விடவில்லை என்பதை நிரூபிக்கப் புரவியிலிருந்து வெகு லாகவமாகக் குதித்தார். மற்றவர்கள் அங்கேயே இருக்கும்படி சைகையால் உணர்த்திய பெரியவர், தமது இடையிலிருந்த பெரும் கத்தியைச் சற்றுச் சரிசெய்துவிட்டுக் கொண்டு, ''வாருங்கள் போகலாம்'' என்று கூறி, கோவிலுக்குள் நுழைந்தார்.

முக்காடிட்ட பெண், கால் சிலம்புகள் கலீர் கலீரென ஒலிக்க அவரைப் பின் தொடர்ந்தாள். வாயிலிலிருந்து பத்தடி அவ்விருவரும் சென்றதும் கருட மண்டபத்திலிருந்து அவர்களை நோக்கி விரைந்த இருவர் பெரியவரையும் முக்காடிட்ட பெண்ணையும் நோக்கி முதலில் தலை தாழ்த்தி வணங்கினார்கள். பிறகு மண்டியிட்டு மரியாதையைத் தெரிவித்ததும் பெரியவர் அவர்களை எழுந்திருக்கும்படி உத்தரவிட்டு, ''உங்களில் யார் இங்கு நிர்வாகம் செய்பவர்?'' என்று வினவினார் அதிகார தோரணையில்.

மண்டியிட்டு எழுந்த இருவரில் பெரும்பட்டாடைக் கச்ச மணிந்து இடுப்பில் பழுக்காக் கரை அங்கவஸ்திரத்தைச் சுற்றி நெற்றியில் பட்டையான தென்கலைத் திருநாமத்துடன் காட்சியளித்தவர், ''இங்கு நிர்வாகி ஒருவர் தான் என்பது அமைச்சருக்குத் தெரியாததல்ல'' என்று மிகுந்த பணிவுடன் தெரிவித்தார்.

அமைச்சர் என்றழைக்கப்பட்ட பெரியவரின் கண்களில் சிறிது சினம் துளிர்த்தாலும் அதை அவர் வெளிக்குக் காட்ட வில்லை. ''அந்த நிர்வாகி ஏன் வரவில்லை, இவர்கள் வருகிறார்க ளென்பதை அறிந்திருந்தும்?'' என்று கேட்க மட்டுமே செய்தார், அதிகார தோரணையில்.

''இந்தக் கோவில் மற்றக் கோவில்களைப் போன்றதல்ல'' என்று சுட்டிக் காட்டினார் முதலில் பேசியவர்.

''இது பெரிய கோவில் என்பது எனக்குத் தெரியும், ஆனால்...'' என்று அமைச்சர் தமது ஆட்சேபணையைச் சொல்லி முடிக்கு முன்பே முதலில் பேசியவர் சற்றுத் தைரியத்துடனும் திட்டவட்டமாகவும் சொன்னார்: ''இதன் நிர்வாகம் எம்பெரு

மானாரால் நிர்ணயிக்கப்பட்டது. அதுவே இன்றும் அவருடைய மடாதிபதிகளான துறவிகளால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இன்றும் அந்த மகானுடைய பீடத்தில் எழுந்தருளியிருக்கும் ஜீயர்தான் இதற்கு நிர்வாகி. துறவிகள் மன்னனைக்கூட வரவேற்பதில்லை. இது சம்பிரதாயம்'' என்று.

இதைக் கேட்ட அமைச்சர் சற்றே நிலைகுலைந்தார். ஆனால் அந்தப் பெண் சற்றும் நிதானத்தை இழக்கவில்லை. ''அமைச்சரே! யார் நம்மை எதிர்கொண்டால் என்ன? நாம் அனுப்பிய ஓலைப்படி சந்நிதி இருக்கிறதா என்று விசாரியுங்கள்'' என்று கூறினாள், தன்னுடன் வந்த பெரியவரை நோக்கி.

பெரியவர் விசாரிக்க உதடுகளைத் திறக்கு முன்பாகப் பட்டாடை கட்டியவரே பதில் சொல்லிவிட்டார்: ''ஓலையில் கண்டபடி சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன'' என்று.

அப்படித் தன்னுடைய அனுமதியின்றிப் பட்டாடை கட்டியவர் பேசியதை ரசிக்காத அமைச்சர், ''சந்நிதியில்...'' என்று துவக்கினார் எச்சரிக்கை ஒலித்த குரலில்.

''யாரும் அனுமதிக்கப்படவில்லை'' என்று கூறினார் பட்டாடையார், அளவுக்கு மீறிய பணிவுடன்.

''பட்டர்கள்?'' மீண்டும் எழுந்தது கேள்வி அமைச்சரிட மிருந்து.

''வீடுகளுக்கு அனுப்பப்பட்டார்கள்'' என்று அறிவித்தார் பட்டாடையார்.

''உள்ளே யாருமில்லை?''

''இல்லை.''

''நிச்சயமாகத் தெரியுமா?''

''கோவில் காவலரைக் கொண்டு துருவிப் பார்த்து விட்டோம்!'' என்ற பட்டாடையார் கண்கள் மட்டுமின்றி அவர் திருமண் காப்பும் தீட்சண்யமாக ஜொலித்தது.

அதற்கு மேல் கேள்வி ஏதும் கேட்காத அமைச்சர் உள்ளே போகலாம் என்பதற்கு அறிகுறியாகத் தமது கையை அசைத்தார். அடுத்த விநாடி அடிமேலடி வைத்துப் பட்டாடையாரும் அவரோடிருந்த மற்றொருவரும் வழிகாட்ட, முன்னால் அந்த முக்காடிட்ட பெண்ணும், அவளுக்குப் பின்னால் வாளின்மேல் கையை வைத்த வண்ணம் அமைச்சரும் சென்றார்கள். மிக நிதானமாகவும் அடக்கத்துடனும் சென்ற அந்த நால்வரும் உட்பிராகாரத்துக்குள் நுழைந்து வலம் வந்து அரங்கன் சந்நிதிக்குச் செல்லும் படிகளின் மீது ஏற முற்பட்டதும், முன் சென்றவர்களில் ஒருவரை விளித்த அமைச்சர், வட்டா போலிருந்த தமது மகாராஷ்டிரப் பெரும் தலைப்பாகையைக் கழற்றி அவரிடம் கொடுத்துவிட்டு, பரமபக்தியுடன் படிகளில் ஏறிச் சென்றார்.

அவருக்கு முன்பாகவே படிகளில் ஏறிவிட்ட அந்த முக்காடிட்ட பாவை படிகளில் உச்சிக்குப் பின் நான்கே அடிகள் நடந்து முக்காட்டை நீக்கி நெருப்பைக் கக்கிய விழிகளால் சந்நிதியின் பொற் கதவுகளுக்கு எதிரே நோக்கினாள்.

அவள் மனத்திலே கோபத்துடன் அச்சம் கலந்து கொண் டிருக்க வேண்டும். ''அமைச்சரே! இது என்ன?'' என்று அச்சமும் சினமும் இழைந்த குரலில் வினவினாள் அவள்.

அவள் சுட்டிய இடத்தைக் கண்ட அமைச்சர்கூடச் சினத் தின் சிகரத்தை எட்டினார். பட்டாடையாரும், அமைச்சர் தலைப் பாகையை ஏந்தி நின்ற மற்றொரு கோவில் கைங்கரியக்காரரும் வெலவெலத்துப் போனார்கள். ''இது...இது...'' என்று ஏதோ சொல்ல முற்பட்ட பட்டாடையார் மேற்கொண்டு வார்த்தை வராமல் குழறினார். தலைப்பாகையை ஏந்தி நின்றவர் கை நடுங்கி விரல்கள் கஞ்சிரா வாசிக்கத் தொடங்கின.

''உமது நிர்வாக லட்சணம்'' என்று சீறிய அமைச்சர், உணர்ச்சி மேலிட்டுப் பேசும் சக்தியை அறவே இழந்தார்.

அவர்கள் அத்தனை பேர் சினத்துக்கும் காரணமான வாலிபன் மட்டும் சிறிதும் அவர்களைத் திரும்பிப் பாராமல் மண்டியிட்டுச் சந்நிதிக் கதவுகளை நோக்கித் தலை வணங்கிய வண்ணம் தியானத்தில் ஆழ்ந்திருந்தான். வளைந்த பெரு வாளொன்று அவனெதிரே தரையில் கிடந்தது. அதன்மீது அவன் வலக் கை கெட்டியாகப் பதிந்து கிடந்தது. உதடுகள் சிறிதுநேரம் ஏதோ முணுமுணுத்தன.

அடுத்த விநாடி அங்கிருந்த யாவர்க்கும் பேரச்சத்தையும் பிரமிப்பையும் விளைவிக்கக்கூடிய சொற்கள் அந்த வாலிபன் வாயிலிருந்து பெரிதாக எழுந்து அந்த மண்டபத்தின் தூண்களில் தாக்கிப் பயங்கரமாக எதிரொலி செய்தன. அவன் வாயிலிருந்து உதிர்ந்த சொற்கள் அந்தப் பாவையை மட்டுமின்றி அமைச்சரையும் சிலையாக அடித்தன. பெரிய விபரீதம் உருவாவதை இருவருமே புரிந்து கொண்டார்கள்.

2. காணாத கண்

சோழன் கரிகாலன் காலத்திற்கு முன்பாகவே ரோமாபுரி அழகிகளின் மனத்தையும், அம் மாநகரின் பணத்தையும் ஒருமிக்கக் கவர்ந்ததால் உலகெலாம் இணையற்றதெனப் புகழ் பெற்ற தமிழகத்தின் மிக மெல்லிய மஸ்லின் துணியால் முக்காடிட்டிருந்தபோதே அதற்குள் பரிமளித்த பாவையின் பால்வதனம், அந்த முக்காடு நீக்கப்பட்டதும், வெண்மேகத்தின்

அரைகுறைத் திரையிலிருந்து வெளிவந்த பூர்ண சந்திர பிம்ப மெனக் காட்சியளித்ததன்றி, சந்திரனுக்கும் சுடும் சக்தி உண்டென்பதை நிரூபிக்கும் வகையில் கண்கள் கனலைக் கக்கியதால், முகமும் நன்றாகச் சிவந்து சந்திரனும் காலைச் சூரியனாக முடியும் என்பதை எடுத்துக் காட்டவே, அவளுடன் கூட வந்த அமைச்சர் மட்டுமின்றி, அரங்கன் சந்நிதி கைங்கர்யபரர்கள் இரண்டு பேரும் பெரும் அச்சத்திற்கு இலக்காகினர்.

அந்த இரு கைங்கர்யபரர்களின் கைகள் மட்டும் நடுங்காதிருந்திருந்தால் அவர்களுக்கும் சந்நிதியின் கதவுகளுக்கு அக்கம்பக்கத்தில் கம்பீரமாக நின்று கொண்டிருந்த இரண்டு துவாரபாலகர்களின் சிலைகளுக்கும் அதிக வித்தியாசம் இருக்காது. அமைச்சரும் சரி, அந்த இருவரும் சரி, முக்காட்டை விலக்கிய பாவையின் முக அக்னியை எப்படியாவது அணைக்க வேண்டுமென்று சிரமப்பட்ட சமயத்தில் சந்நிதிக்கெதிரே மண்டியிட்டு வணங்கிய வாலிபன் ஏதோ முணுமுணுக்க ஆரம்பித்ததாலும், அவன் முணுமுணுத்த சொற்கள் அவர்கள் காதில் விழுந்ததாலும் அவர்கள் நா அடியோடு கட்டுப்பட்டுக் கிடந்தது.

இத்தனைக்கும் அந்த வாலிபன் தீனமான குரலில்தான் சொற்களை முதலில் முணுமுணுத்தான். முணுமுணுத்த சொற் களும் வேதம் தமிழ் செய்த மாறனின் ஆரம்பப் பாசுரமாயிருந் தும், 'உயர்வற உயர் நலமுடையவன் எவன் அவன்' என்ற ஆரம்பப் பாசுரத்தின் ஆரம்ப வரியாலேயே, மனுஷ்யானந்தம் பிரும்மானந்தம் என்ற ஆனந்தங்களை அளவெடுத்தும் ஆண்டவன் சங்கல்பத்தை அறியமுடியாததால் 'யதோவாசோ நிவர்த் தந்தே' என்று வடமொழி வேதங்கள் திரும்பிவிட்ட போதிலும், அவனுடைய குணப் பிரபாவத்தை நிர்ணயித்துவிட்ட தமிழ் மறையின் முதல் அடியையும் அடுத்த அடிகளையும் மெல்ல பய பத்தியுடன் அவன் சொல்லிய போதிலும், அவன் குரல் மிக இனிமையாயிருந்த போதிலும், அவை எதிலும் ஈடுபட மறுத்த அந்தப் பெண் தன் வாலிப வேகத்தாலும், தன் ஆணையையும் மீறி ஒரு வாலிபன் அங்கு வந்துவிட்டானென்ற சினத்தாலும், இடக் காலை லேசாக அசைத்தாள், சந்நிதிக்கு எதிரிலிருந்த மண்டபத்தின் தூணை ஒரு கையால் லேசாகத் தொட்ட வண்ணம். வாலிபனின் இருப்பும் தீனசுரமுமே அவளுக்கு அத்தனை சினத்தை உண்டாக்கியதென்றால், அடுத்து அவன் அந்த மண்டபமே அதிரும்படி கிளப்பிய கூச்சல் அவளைத் திக்பிரமை யடையச் செய்ததன் விளைவாக அவள் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டாள்.

www.thamizhthenee.blogspot.com

அந்த வாலிபனின் தீனகுரம் இடியென மாறும் என்பதையோ, அதில் மறையின் ஆரம்பப் பாசுர முடிவில் 'துயரறு சுடரடி' களைத் தொழுது எழவேண்டியவன், எழாமலே மிகப் பயங்கரமான கூச்சலைக் கிளப்புவான் என்பதையோ அறியாத அமைச்சரும் கைங்கர்யபரர்களும் கிலியின் உச்சத்தை அடைந்தார்கள்.

''பிரபு! எந்தத் திருவடிகளைத் தொழுதால் இகபர சித்திகள் கிடைக்குமென்று பெரியவர்கள் கூறுகிறார்களோ அந்த உன் திருவடியின் ஆணையாகச் சொல்கிறேன். என் அன்னையைக் கொன்றவனை, அவளைத் தீயிட்டுத் தற்கொலை செய்து கொள்ளத் தூண்டிய அந்த அரக்கனை, நவாபை, அவன் தலையை இதோ கிடக்கும் இந்த வாளால் துண்டித்து உன் சந்நிதிக்கு எடுத்து வருகிறேன். இதோ என் முன் கிடப்பது வாளானால், நான் வீரனானால், இந்த வாளின் மீது ஆணை. இந்தச் சபதத்தை நான் நிறைவேற்றுகிறேன். அதை நிறைவேற்ற உன் கருணைக் கண்கள் என் மீது திரும்பட்டும். எல்லா உலகங்களையும் ஆட்டிப் படைக்கும் உன் சக்தியின் ஒரு திவலை இந்த உடலுக்குள் சிறிது காலமாவது இயங்கட்டும். அருள் செய். பக்தனைக் கைவிட்டான் அரங்கன் என்ற அவச்சொல்லுக்கு ஆளாகாதே. அவனைக் கொன்றே தீருவேன், உன் துணையால். இது சத்தியம், இது சத்தியம்'' என்ற சொற்களை மிக இரைந்து கூவினான் அந்த வாலிபன்.

சந்நிதிக்கு எதிரேயிருந்த மண்டபத்தின் தூண்களிலும், கண்ணாடியறைக் கதவுகளிலும் மண்டபக் கூரையிலும் அந்தச் சொற்கள் தாக்கியதால் ஒவ்வொன்றும் பயங்கரமாக எதிரொலி செய்தன. 'இது சத்தியம்' 'இது சத்தியம்' என்ற கடைசிச் சொற்கள் உச்சஸ்தாயிக்குப் போய்விடவே துவாரபாலகர்கள்கூட அச்சத்தால் சிறிது அடங்கியதாகத் தோன்றியது, அங்கிருந்த மற்றவர்களுக்கு. சந்நிதி வாயிலில் எரிந்துகொண்டிருந்த இரு தீபங்கள் சந்நிதியின் தங்கக் கதவுகளிலும் துவாரபாலகர்களிலும் பிரதிபலித்ததால் ஏற்பட்ட ஒளியில்கூடப் பெரும் சினமும் தீட்சண்யமும் தெரிந்தன.

'என்ன துணிவுடன் அந்த வாலிபன் யாரும் அறியாமல் கோவிலுக்குள்ளே, அதுவும் மண்டபத்துக்குள்ளே வந்திருக்க வேண்டும்? அமரரும் அரவம் செய்ய அஞ்சும் அரங்கன் சந்நிதிக்கெதிரே கூச்சலிட என்ன துணிவு இருக்கவேண்டும்?' என்னும் கேள்விகளை உள்ளூறக் கேட்டுக் கைங்கர்யபரர்கள் நடுங்கிக்கொண்டு நின்ற சமயத்தில், முக்காட்டைத் திறந்த முக சந்திரபிம்பம் குங்குமச் சிவப்பாக மாறிய சமயத்தில், அமைச்சரின் கை, வாளுக்குச் சென்ற சந்தர்ப்பத்தில், அந்த வாலிபன் தனது சபதம் முடிந்ததற்கு அறிகுறியாக வாளைக்

கச்சையில் கட்டிக்கொண்டு திரும்பிய பிறகே, வேறு சிலரும் அந்த மண்டபத்தில் இருப்பது அவனுக்குத் தெரிந்தது. அப்படித் தெரிந்த பின்பும், அமைச்சர் வாளை உருவ முற்பட்டதைக் கண்டும், சிறிதும் அச்சமற்ற அவன் கண்கள் எதிரேயிருந்த நால்வரையும் ஒருமுறை அளவெடுத்துவிட்டு முடிவில் தூணைத் தொட்டு நின்ற மலர்க்கரத்தின் மீதும் அந்த மலர்க்கரத்துக்கு உடையாளின் முகத்தின்மீதும் நிலைத்தன.

தன் பார்வை விழுந்தவுடனேயே அந்தப் பாவையின் கண்கள் அஞ்சுமென்றோ, நாணத்தால் தரையை நோக்குமென்றோ அந்த வாலிபன் நினைத்திருந்ததால் ஏமாந்தே போனான். அவள் கண்கள் அப்பொழுதும் சினத்துடன் அவனை நோக்கின. தூணைத் தொட்ட கையின் காரணமாகவும், மேலேயிருந்த பாரத்தின் காரணமாகவும் துவண்ட இடை வளைந்து கிடந்ததால், அரங்கனுக்கு யாரோ புது மன்னன் ஒருவன் புத்தழகுச் சிற்பமொன்றை அந்த மண்டபத்தில் கொண்டுவந்து வைத்து விட்டது போல் இருந்தது அவள் நின்ற நிலை. அவள் முகத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே அவளுக்கு வயது பதினாறுக்குமேல் இருக்க முடியாதென்பதை அந்த வாலிபன் தீர்மானித்துக் கொண்டான். அவள் நின்ற அதிகார தோரணையிலிருந்தும் எரித்து விடுவதுபோல் தன்னைப் பார்த்ததிலிருந்தும் அவள் கழுத்தில் தெரிந்த மாணிக்க ஆபரணத்திலிருந்தும், அவள் பக்கத்தில் சற்று எட்ட நின்றவரின் பயபக்தியிலிருந்தும், அவள் அரச குலத்தவள் என்பதைச் சந்தேகமறத் தெரிந்து கொண்ட அந்த வாலிபன், முன்பின் தெரியாத பெண்களை வெறித்துப் பார்ப்பது, அதுவும் சந்நிதிக்கெதிரே அபசாரப்படுவது தகாது என்ற சிந்தனையால் தன் பார்வையை அமைச்சரை நோக்கித் திருப்பினான்.

அமைச்சரின் தீர்க்கமான நாசியிலிருந்தும், அவரை அடுத்த கைங்கர்யபரர் ஒருவர் பிடித்துக்கொண்டிருந்த வட்டத் தலைப்பாகையிலிருந்தும், அவர் நெற்றியில் குறுக்கே தீட்டியிருந்த மூன்று மெல்லிய சிவப்புக் கோடுகளிலிருந்தும், அந்தக் கோடுகளின் முனைகள் இரண்டு கோடுகளால் இணைக்கப் பட்டிருந்ததிலிருந்தும், அவர் ஒரு மகாராஷ்டிரப் பிரபுவென்பதை அறிந்து கொண்ட வாலிபன், அவர் இடையில் வாளிருந்ததைக் கண்டதும், சிறிது குழப்பத்தை அடைந்தான். அந்தக் குழப்பத்தை அவரும் கவனித்திருக்க வேண்டும். ஆகவே ''என்ன விழிக்கிறாய்?'' என்று வினவினார் கோபத்துடன்.

வாலிபன் இதழ்களில் முதல் முதலாகப் புன்முறுவல் அரும்பியது. ''விழிக்கவில்லை. வியப்படைந்தேன்!'' என்றான் மிக மிருதுவான குரலில்.

வாலிபனை அமைச்சர் உற்று நோக்கினார். அவனுக்கு

வயது இருபதுக்கு மேல் இருக்காது என்பதைப் புரிந்துகொண்டார். அவனுடைய உதட்டின் மேலிருந்த அரும்பு மீசையாலும் முகத்தின் இளமையாலும், அவன் அதிக உயரங்கூட இல்லாததாலும் சிறு பையன் என்றுகூடச் சொல்லாம் என்று தீர்மானித்தார். ஆனால் அவன் நீண்ட கைகளும், பாதம்வரையில் தொங்கிய வளைந்த வாளும், தீட்சண்யமான கண்களும் அவன் வயதில்தான் குழந்தையே தவிர, தீரத்தில் இல்லையென்பதை உணர்ந்து கொண்டார். கொஞ்சம் நஞ்சமிருந்த சந்தேகத்தை அவன் கச்சையின் குறுக்கே செருகியிருந்த நீண்ட கைத்துப்பாக்கி நீக்கிவிட்டது. உறுதியாக நின்ற அவன் கால்கள் சதா போரை எதிர்பார்ப்பவன் என்பதை அறிவுறுத்தின அமைச்சருக்கு.

அவனைப் பார்த்தது அமைச்சர் மட்டுமல்ல. அஞ்சன விழியாளும் பார்த்தாள். சீற்றம் நிரம்பிய விழிகள் அவனைக் கண்டபோதும் அவன் முக விலாசத்தையும் முகத்தில் அலைந்து விளையாடிய ஓரிரு தலைக்குழல் முடிகளையும், நுதலில் தெரிந்த அர்த்த சந்திர திலகத்தையும் கவனிக்கத் தவறவில்லை. அவன் உதடுகளின் உறுதியையும், அவற்றில் சதா விளையாடிய விஷமச் சிரிப்பையும் கூடக் காணத் தவறவில்லை. அங்கியணிந்திருந்த போதிலும், மார்பு மிகக் கடினமானது என்பதையும் ஈட்டிகூட அதில் நுழைவது சந்தேகமென்பதையம் எண்ணத் தவறவில்லை, அவள் மனம். இந்த வாலிபன் இந்தச் சிறுவயதில் எதற்காக இத்தகைய கொடிய சபதத்தைச் செய்கிறான் என்று தன்னைத் தானே வினவிக் கொண்டாள், அந்தக் காரிகை. அமைச்சர் கேட்ட கேள்விகளுக்கு அவன் கூறிய, ''விழிக்கவில்லை, வியப் படைந்தேன்'' என்ற பதில் அவளுக்குப் பிரமிப்பை அளித்த தென்றால், அடுத்துத் தொடர்ந்த உரையாடல் அந்தப் பிரமிப்பைப் உச்ச நிலைக்குக் கொண்டு சென்றது.

''வியப்பா அடைந்தாய்?'' என்று சீறினார் அமைச்சர்.

''ஆம்!'' என்றான் அந்த வாலிபன் மீண்டும் அலட்சியமாக.

''வியப்புக்கு என்ன இருக்கிறது இங்கே?'' என்று மறுபடியும் கேட்டார் அவர். இம்முறை அவர் குரலில் சிறிது குழப்பமும் இருந்தது, அந்த வாலிபன் போக்கின் காரணமாக.

வாலிபன் ஒரு விநாடி தயங்கினான். பிறகு ''வியப்புக்கு...'' என்று வார்த்தையை இழுத்தான் மெள்ள.

''சொல், பயப்படாதே'' என்றார் பெரியவர்.

''தங்கள் வாள் இருக்கிறது.''

''அதற்கென்ன?''

''அதை உருவவும் பார்க்கிறீர். பாதி உருவியும் இருக்கிறீர்.''

''அதில் வியப்பென்ன?''

''உமக்கும் வாட்போருக்கும் எந்தவிதச் சம்பந்தமும் கிடையாது.''

இந்த வார்த்தைகளை மிகச் சாவதானமாக உதிர்த்தான் வாலிபன். அமைச்சர் அசந்து போனாலும் அதை வெளிக்குக் காட்டாமலே கேட்டார், ''அது உனக்கெப்படித் தெரியும்?'' என்று.

''உங்கள் புறங்கைகளில் வடு எதுவும் காணோம். ஆகவே வாட்போர் தங்கள் பழகவில்லை. வாள் உங்களுக்கு அலங்காரந்தான்'' என்றான்.

இதைக் கேட்ட அமைச்சர் பிரமித்தார். கைங்கர்யபரர்கள் பயந்தனர். பைங்கிளி மெல்ல நகைத்தாள். அந்த நகைப்பொலி அமைச்சரது சினத்தைக் கிளறிவிட்டிருக்க வேண்டும். ''நீ யார்? யார் உத்தரவின்மீது இங்கு வந்தாய்?'' என்று வினவினார் தம் அதிகாரத்தைப் பிரயோகிக்க.

வாலிபன் புன்முறுவல் கொண்டான். ''நான் யார் என்பதைப் பற்றித் தாங்கள் அறிய வேண்டிய அவசியம் இல்லை. ஆண்டவன் சந்நிதிக்கு வர யார் அனுமதியும் தேவையில்லை'' என்று முறுவலின் ஊடே கூறினான்.

அமைச்சர் முகத்தில் வியப்பு விரிந்தது. சிறிது சமாளித்துக் கொண்டு, ''என் பெயர் டபீர் பண்டிட்'' என்றார்.

''நல்லது.'' வாலிபன் ஆமோதிக்கும் பாவனையில் பதில் சொன்னான்.

''இவர்கள்...'' என்று பக்கத்திலிருந்த பெண்ணைச் சுட்டிக் காட்டினார் அமைச்சர்.

''சொல்லுங்கள்.''

''நந்தினி.''

''அழகான பெயர்.''

''இவள் தகப்பனார் ராஜா.''

''அப்படியா?''

''மிக உயர்ந்த ராஜா.''

இதைக் கேட்ட வாலிபன் வாய்விட்டுப் பெரிதாக நகைத்தான். அதற்குப் பதில் டபீர் பண்டிதரிடமிருந்து வரவில்லை. அந்தப் பெண்ணிடமிருந்து வந்தது, ''ஏன் சிரிக்கிறாய்?'' என்ற கேள்வி மூலம்.

''இதோ அந்தக் கதவுகளுக்குள் அரவணைத் துயிலும் ரங்க ராஜாவுக்கு மேல் வேறு உயர்ந்த ராஜா இருக்க முடியாது'' என்ற வாலிபன் மேலும் சொன்னான்: ''இங்கு அந்தஸ்துக்கு இடமில்லை. இந்த இடமும் யாருக்கும் சொந்தமில்லை. இங்கே தரப்படும் ஒரே அந்தஸ்து அவனிடம் ஈடுபாடு'' என்று அத்துடன் நிற்கவில்லை அவன். ''அமைச்சரே! அரசகுமாரியைக் காக்க

வைக்கவேண்டாம். சந்நிதிக் கதவு திறக்கட்டும். அரங்கனைக் கண்ணார ஒரு விநாடி வணங்கிச் செல்கிறேன்'' என்றும் விண்ணப்பித்துக் கொண்டான்.

டபீர் பண்டிதர் ஏதோ சொல்ல முயன்றார். அதற்குள் இளவரசி பேசினாள்: ''கதவைத் திறவுங்கள்'' என்று. பட்டாடையார் அந்த இக்கட்டிலிருந்து கிடைத்த சமயத்தை உபயோகப் படுத்திக் கொண்டு தமது மடியிலிருந்த பெரும் சாவிக் கொத்தை எடுத்து ஒரு சாவியால் கதவைத் திறந்தார்.

கதவு திறக்கப்பட்டதும் முதலில் அரசகுமாரியும் அடுத்தபடி டபீர் பண்டிதரும் உள்ளே நுழைந்தார்கள். நுழைந்தவர்கள் அச்சமுற்று நின்றார்கள். அவர்களை நோக்கிய அரங்கனின் இரண்டு கண்களில் ஒன்று மங்கிக் கிடந்தது. இன்னொன்று கோபத்தால் பல வர்ணங்களை வெளியிட்டு ஜொலித்தது. அரசகுமாரியும் அமைச்சரும் அஞ்சி, சிலையென நின்றார்கள். அடுத்த விநாடி அமைச்சரின் குரல் பெரிதாக ஒலித்தது: ''அரங்கனின் ஒரு கண்ணிலிருந்த பெரும் வைரத்தைக் காணோம். *அழையுங்கள் என் வீரர்களை, சிறை செய்யுங்கள் இந்தத் திருடனை!'' என்று கூவினார் அமைச்சர். வீரர்களை அழைக்க வெளியே ஓடினார் பட்டாடையாருடன் கூட வந்தவர், கையில் வட்டத் தலைப்பாகையைப் பிடித்த வண்ணம். இரண்டு விநாடிகளுக்கெல்லாம் உள்ளே வந்த மகாராஷ்டிர வீரர்கள், அந்த வாலிபனை வளைத்துக் கொண்டார்கள்.

3. மறைந்த இருவர்

அரங்கன் சந்நிதிக் கதவைத் திறந்த பட்டாடையார் பயத்தினால் உள்ளேயிருந்த பெருமாள்மீது தமது கண்களை நாட்டாமலே, கர்ப்பக் கிருகத்தின் பெரிய வெண்கல நெய் விளக்கின் திரியை வலக் கைப் பெருவிரலாலேயே தூண்டி விட்டாராகையால், திடீரென டபீர் பண்டிதர் இரைந்ததும் அதிகக் கிலிக்கு இலக்காகி இறைவனின் கண்களை நோக்கினார். இவருக்கு நினைவு தெரிந்த நாள் முதல் மூலவரின் இரண்டு கண்களையும் அலங்கரித்திருந்த பெருவைரங்கள் இரண்டில் ஒன்று காணவில்லையென்பதை உணர்ந்ததும் கைகால்கள்

* அரங்கனின் கண்ணிலிருந்த ஒரு வைரம் 18-ஆவது நூற்றாண்டில் திருடப்பட்டது. பின்னர் ரஷ்யாவின் ஜார் மன்னரின் மணிமகுடத்தில் பிரதான ரத்தினமாகப் பதிக்கப்பெற்று 'ஆர்லாப் டைமண்ட்' (Orloff Diamond) என்று பிரசித்தியுடன் விளங்கியது. "The Presidency with Mysore, Coorg and other Associated States" - By Idger Thurston G.I.E., Page 273.

உதறியதால் நெஞ்சம் திக்கு திக்கென்று அடித்துக் கொள்ளவே மயக்கம் போடும் நிலைக்கு வந்துவிட்டார்.

அந்த நிலைக்கு இன்னொருவர் வராததற்குக் காரணம், அவர் டபீர் பண்டிதரின் உத்தரவை நிறைவேற்ற வாயிலிலிருந்த மகாராஷ்டிர வீரர்களை அழைத்து வர ஓடிவிட்டதுதான். இத்தனை ஆர்ப்பாட்டத்திலும் இளவரசியும் டபீர் பண்டிதருக்குப் பின்னால் கர்ப்பக்கிருகத்துக்குள் நுழைந்த வாலிபனும் மட்டும், எந்த விதச் சப்தத்தையும் கிளப்பாமலும் நிதானத்தைக் கைவிடாமலும் நின்றார்கள்.

சகல சராசரங்களின் மூலப் பொருளின் அர்ச்சாவதாரமாய்ச் சயனத் திருக்கோலம் கொண்டிருந்த மூல அரங்கனுக்கு அன்று முத்தங்கி சார்த்தியிருந்தபடியால் தலை முதல் கால்வரை மூடிய முத்துக்கோப்புகள் கர்ப்பக்கிருக வெண்கல விளக்கின் ஒளியில் அற்புதமாகப் பிரகாசித்தாலும் திடீரென ஒற்றைக் கண் மட்டும் அவனருளை வீசியதால், ஏற்பட்ட பிரமை மட்டும் அந்த இருவரையும் கூட விடவில்லை.

எந்த இரு கண்களைக் கண்ட மாத்திரத்தில் 'அமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே' என்று அரிஜன குலத்தவரான திருப்பாணாழ்வார் தமது பத்துப் பாட்டில் கடைசி அடியைப் பாடி வேறெதையும் காணாமலே அங்கேயே உயிர் நீத்தாரோ, அப்பேர்ப்பட்ட அழகிய மணவாளனின் அழகுத் திருவிழிகளொன்றின் வைரத்தை யார் திருடியிருக்க முடியும்? எப்படித் திருடியிருக்க முடியும்? இந்த எண்ணங்களே அவ்விருவர் மனத்திலும் எழுந்தபடியால் வேறு விஷயங்களில் அவர்கள் சிந்தனை செல்லாததால், இருவரும் செயலற்றே நின்று கொண்டிருந்தனர்.

அந்த வைரம் பிரெஞ்சுக்காரன் ஒருவனால் திருடப்பட்டு ரஷ்யாவில் விற்கப்பட்டு ரஷ்ய மன்னர் கிரீடத்தில் இணைந்துவிட்டதாக வரலாறு பின்னால் கூறினாலும், அதைப்பற்றி முன்கூட்டி அறிய வகையில்லாத டபீர் பண்டிதர் தனித்துச் சந்நிதிக்கு எதிரிலிருந்த அந்த வாலிபன்தான் திருடியிருக்க வேண்டுமென்ற ஊகத்தில் கூறி விட்டாரானாலும், அவர் கூறியதைப் பற்றி லட்சியம் செய்யாத வாலிபன் கர்ப்பக் கிருகத்திலிருந்து தப்ப எந்தவித முயற்சியும் எடுக்காமல், 'அரங்கனின் ஒரு கண் காணாமற் போய் விட்டதால் அந்த ஸ்ரீரங்கத்துக்கும் சோழ மண்டலத்துக்கும் ஏதோ பெருத்த விபரீதம் ஏற்படப் போகிறது. இது நிச்சயம்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டே சயனங்கொண்ட பெருமானை மனத்தால் வணங்கினான்.

முத்திங்கி மூடிய மூலப்பெருமாளின் ஒரு கண்மட்டும்

காணாதது குறையாகத் தெரிந்தும், 'இச்சா மாத்திரத்தினாலேயே சகல உலகுக்கும் மங்களம் விளைக்கவல்ல உன் அருள் சுரக்க ஒரு கண் போதாதோ?'' என்றும் வினவிக் கொண்டான் அந்த வாலிபன்.

அவன் எண்ணங்கள் இப்படிப் பலவிதமாக ஓடிக் கொண்டிருந்த படியாலும், வீரர்கள் வருவதற்குள் தப்ப அவனுக்கு நேரம் மிக இருந்ததாலும் தப்பச் சிறிதளவும் முயலவில்லை அந்த வாலிபன். ஆனால் வீரர்கள் வந்து அவனைச் சூழ்ந்து கொண்டதும் கணீரென்ற குரலில் அவர்களை நோக்கிக் கூறினான்; ''கர்ப்பக் கிருகத்தை விட்டு வெளியே செல்லுங்கள். சண்டைக்கு இடம் சந்நிதானமில்லை'' என்று. வந்த வீரர்கள் பத்துப் பேர்கள் இருந் தாலும், அவர்களில் இருவர் தங்கள் கைகளில் 'மாட்ச் லாக்' துப்பாக்கியைத் தூக்கி அவன் மார்பை நோக்கிப் பிடித்திருந் தாலும், கர்ப்பக்கிருகத்தில் இடமின்மை காரணமாக எட்டு வாட்கள் உருவப்பட்டு மற்றவர்கள் வெளியே நின்றிருந்தாலும், அவர்கள் யாரையுமே அந்த வாலிபன் லட்சியம் செய்யவுமில்லை, தன் வாளை உருவவுமில்லை. இடையில் செருகியிருந்த கைத்துப்பாக்கியைக் கூட அவன் எடுக்கவில்லை. ஏதோ அடிமைகளுக்கு ஆணையிடும் அரசன் போலவே அவன் பேசினான்.

அவன் பேச்சும் தோரணையும் அரசகுமாரிக்கும், பட்டாடை யாருக்கும், வீரர்களுக்கும், வியப்பை அளித்ததென்றால் டபீர் பண்டிதரின் கோபத்தையும் அது அபரிமிதமாகக் கிளறிவிடவே, ''நீ யார் உத்தரவிட?'' என்று சீறிய அவர், ''ஏன் நிற்கிறீர்கள்...?'' இன்னும் ஏதோ சொல்ல முயன்றவர் வாயடைத்து நின்றார். அடுத்த விநாடி அந்த வாலிபனின் இடக்கரம் இளவரசியின் இடையை இரும்புப் பிடியாக இழுத்துப் பிடித்தது. ''இளவரசி! வாருங்கள் வெளியே. அரங்கன் முத்தங்கி சேவை உங்களுக்கும் கிடைத்தது, உங்கள் அருளால் எனக்கும் கிடைத்தது. ஆனால் இங்கு திருட்டுப் போயிருக்கிறது. இந்த டபீர் பண்டிதனுக்கு மூளையில்லை. திறவாத கர்ப்பக்கிருகக் கதவுகளுக்குள் நான் நுழைய முடியாது என்பதை உணர. அப்படித் திருடியிருந்தால் நீங்கள் வரும் வரை மண்டியிட்டுக் காத்திருக்க நான் முட்டாளல்ல என்பதும் பண்டிதனுக்குப் புரியாவிட்டாலும் உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன்!'' என்று கூறிக்கொண்டே அந்தப் பெண்ணை இழுத்துக்கொண்டு கர்ப்பக் கிருகத்திலிருந்து அடுத்திருந்த மண்டபத்துக்கு வந்தான். அப்படி வந்தவனைப் பார்த்துத் துப்பாக்கிகளைக் குறிவைத்துக் கொண்டே இரு வீரர்கள் பின் வாங்க, வாட்களை உருவியர்களும் திடீரென அவனைச் சூழ்ந்து

கொண்டனர். மண்டபத்துக்கு வந்ததும் வீரர்களால் சூழப்பட்ட நிலையிலும் அவன் சொற்கள் நிதானமாகவும் பயங்கரமாகவும் ஒலித்தன. ''துப்பாக்கிகளையும் வாட்களையும் கீழே எறிந்து விடுங்கள், இல்லையேல் உங்கள் அரசகுமாரியின் உயிர் சல்லிக் காசு பெறாது'' என்ற வாலிபன் சொற்களைக் கேட்ட வீரர்கள் முதலில் அவனுக்கு மூளைக் கோளாறு என்றே நினைத்தார்கள். இரண்டு துப்பாக்கிகளையும் எட்டு வாட்களையும் அலட்சியம் செய்யக்கூடியவன் பைத்திய மாகத்தான் இருக்க வேண்டுமென்ற முடிவுக்குக் கர்ப்பக்கிருகத்திலிருந்து வெளியே வர முற்பட்ட டபீர் பண்டிதர்கூட முதலில் நினைக்கவே செய்தார். ஆனால் அவனது வலக் கரத்தில் திடீரென மந்திரத்தால் வெளிக் கிளம்பியதுபோல் இடையிலிருந்து கிளம்பிய கைத்துப்பாக்கி இளவரசியின் கழுத்துக்கு நேரே காட்சியளித்ததும் அவர் சந்தேகமும் பறந்து பயத்துக்கு இடம் கொடுத்தது. ''டேய்! நீ யாரைத் தொட்டுவிட்டாய்? யார் மீது கைத்துப்பாக்கியை நீட்டுகிறாய் என்பது புரிகிறதா உனக்கு?'' என்று அச்சத்தால் நடுங்கும் சொற்களை உதிர்த்தார்.

வாலிபன் தனது ஈட்டிக் கண்களைப் பண்டிதர் மீதும் நாட்டினான், தன்னிடம் சிக்கியிருந்த பைங்கிளிமீதும் நாட்டி னான், எதிரேயிருந்த வீரர்கள்மீதும் நாட்டினான். விநாடி நேரத் தில், அவன் பதிலும் தங்கு தடையின்றி வந்தது. ''நீங்கள் உங்கள் பெயரை டபீர் பண்டிதர் என்று பறைசாற்றிக் கொண்டதுமே தஞ்சை மன்னர் ராஜா பிரதாப் சிங்கன் வருமானத் துறை அமைச்சர் என்பதைப் புரிந்து கொண்டேன். இந்த நேரத்தில் உங்களுடன் தனித்து இந்தப் பெண் வரமுடியு மானால், அதுவும் உங்களுக்காக யாருக்கும் திறவாத அரங்கன் கர்ப்பக்கிருகம் இந்த நேரத்தில் திறக்க வேண்டுமானால், இவர் தஞ்சை இளவரசியாக இருக்க வேண்டும் என்பதையும் புரிந்து கொண்டேன். இந்த அரசகுமாரியைத் தொட்டதற்கே மரண தண்டனை உண்டு என்பதைக்கூடப் புரிந்து கொண்டேன் பண்டிதரே. ஆனால்...'' என்ற அந்த வாலிப வீரன் அவரை நகைப்புத் ததும்பும் விழிகளால் நோக்கினான் மீண்டும் ஒருமுறை.

''ஆனால்?'' என்ற கேள்வி பண்டிதரிடமிருந்து பதற்றத் துடன் வந்தது.

''நீர் யாரைக் கைது செய்ய முயல்கிறீர் என்பதைப் புரிந்து கொள்ளவில்லை. தவிர, யாரும் அறியாமல் இங்கு வந்த ஒரேகாரணத்தாலேயே என்னைத் திருடனென்றும் தீர்மானித் ததிலிருந்து உமக்கும் அறிவுக்கும் அதிகச் சம்பந்தமில்லை யென்பதும் தெரிய வந்தது'' என்றான் வாலிபன் சர்வ சாதாரணமாக.

டபீர் பண்டிதரின் சொற்கள் குழப்பத்துடன் மீண்டும் ஒலித்தன, ''யார் நீ?'' என்ற கேள்வியில்.

''அதைத் தஞ்சையில் புரிந்து கொள்வீர்.''

''அங்கேதான் நீ செல்கிறாயா?''

''ஆம்.''

''அப்படியானால் எங்களுடன் வரலாம்.''

''வந்திருப்பேன்-நீர் மட்டும் என்னைக் கைது செய்ய உத்தர விட்டிருக்காவிட்டால்.''

இதைக் கேட்ட பண்டிதர் சினத்தின் வசப்பட்டார். ''இப் பொழுது வர மாட்டாயாக்கும்?'' என்றார் கோபக் குரலில்.

''மாட்டேன்'' என்றான் வாலிபன் திட்டமாக.

''ஏன்?'' என்று வினவினார் பண்டிதர்.

''தங்கள் சகவாசம் எனக்குப் பிடிக்கவில்லை'' என்ற வாலிபன் சிறிது நகைத்தான்.

''ஏன் நகைக்கிறாய்?'' என்று சீறினார் பண்டிதர்.

வாலிபன் இதழ்களில் இளமுறுவல் அரும்பியது. ''பண்டி தரே! உமது மனத்தில் நீர் கெட்டிக்காரராக நினைத்துக் கொண் டிருக்கிறீர். இப்படியே பேச்சுக் கொடுத்தால் நான் சற்று அயர்ந்து விடுவேனென்றும் அந்தச் சமயத்தில் உமது வீரர்களைக் கொண்டு பிடித்துவிடலாமென்றும் மனப்பால் குடிக்கிறீர். ஆனால் என்னிடம் அந்தக் கதை பலிக்காது. இது மட்டும் அரங்கன் சந்நிதியாக இல்லாதிருந்தால் இந்தக் கைத்துப்பாக்கியால் உம்மையும் இந்த இரண்டு மாட்சலாக் துப்பாக்கிகளையும் கொன்றிருக்கமாட்டேன், ஆனால் செயலிழக்கச் செய்திருப்பேன். இங்கு அதைச் செய்யவில்லை, ஏன் தெரியுமா?'' என்று வினவினான் நிதானமாக.

''ஏன்?'' பண்டிதர் குரல் வறண்டு ஒலித்தது.

''சயனத்திலிருக்கும் எம்பெருமானுக்குத் தமிழ்மறை இன் பத்தைத் தவிர வேறு அதிர்ச்சி ஒலிகளைக் கேட்டு வழக்கமில்லை. அறையர்கள் இன்னிசையைத்தான் அவன் செவிகளும் அவனுக்கு மேலிருக்கும் பஞ்ச முக அனந்தனின் கட்செவிகளும் கேட்டிருக் கின்றன. அவனுக்கு வேனிற் காலத்தில் சுகமளிக்கக் கர்ப்பக் கிருகத்தைச் சுற்றிலும் காவிரியின் குளிர் நீர் தேக்கப்படுகிறது. அதற்காகக் கருங்கல் தேக்கமும் ஓடுகிறது உட்பிராகாரத்திற் குள்ளே. அப்படிச் சுகப்படும் பரம புருஷன் சந்நிதியில், தர்மம் துளவமாயிருக்கும் தாமோதரன் இருப்பிடத்தில் துப்பாக்கி சத்தமோ வாளரவமோ கூடாது என்ற ஒரே காரணத்தில்தான் அங்கே சுடவில்லை நான். இப்பொழுது வழிவிடுங்கள்'' என்ற அந்த வாலிபன், அவன் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறான் என்பதை அறியுமுன்பே, திடீரென இளவரசியை

இருகைகளாலும் தூக்கித் தோளின்மேல் போட்டுக்கொண்டு கைத்துப்பாக்கியை அவன் உடலை நோக்கி நீட்டிக் கொண்டே, ''அசைய வேண்டாம், அப்படியே நில்லுங்கள்'' என்று கூறிக்கொண்டு பின்னுக்கு நகர்ந்து படிகளில் இறங்கினான். அடுத்த விநாடி அவன் வெளிவாசலை நோக்கி வேகமாக ஓடும் சத்தம் கேட்டது.

அரசகுமாரிக்கு ஆபத்துக் கூடாது என்பதால் சிலைகளாகி விட்ட பண்டிதரும் வீரரும் திடீரெனச் சுறுசுறுப்பைக் காட்டினார்கள். ''பிடியுங்கள், அவனை விட்டால் உங்கள் தலைகள் தஞ்சை மண்ணில் உருளும்'' என்றார் அமைச்சர். வீரர்கள் ஓடினார்கள். பண்டிதர் ஓடாமல் பட்டாடையாரைப் பார்த்தார். பட்டாடையார் நடுங்கி, ''எனக்கு எதுவும் தெரியாது, எல்லாம் தங்கள் கட்டளைப்படிதான், ஓலையின் படிதான்...'' என்று குழறினார்.

''சரி சரி! கதவைப் பூட்டும். கோவில் காவலரை அழைத்துச் சந்நிதியைப் பாதுகாக்க ஏற்பாடு செய்யும்'' என்று உடல் தள்ளாட, பெருமூச்சு வாங்க, பக்கத்திலிருந்த இன்னொரு கைங்கர்யபரர் நீட்டிய வட்டாவைக்கூட வாங்கிக்கொள்ளாமல் படிகளில் இறங்கி ஓடினார்.

அவர் சென்றதும் கைங்கர்யபரர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். இருவரில் வட்டாவைத் தாங்கியவர் கேட்டார், ''இதை என்ன செய்யட்டும்?'' என்று வட்டாவைக் காட்டி.

பட்டடையார் சினம் மிதமிஞ்சிற்று. ''உன் தலையில் கவிழ்த்துக் கொள்'' என்று கூவினார். ''உனக்குத் தெரியவில்லை? சாவி நம்மிடம் இருக்கிறது. அரங்கன் கண் வைரம் காணோம். நம் இருவர் தலைக்கும் தீம்பு வந்திருக்கிறதடா பீடையே!'' என்று கத்தினார்.

''பீடை போன்ற சொற்களை இங்கே சந்நிதியில் பேசக் கூடாது'' என்றார் வட்டாவைத் தாங்கியவர்.

''அட பாகவதப் பிரபூ! போடா! போய்க் காவலரை அழைத்து வா. நாளைக்கு நாம் இருக்கப் போகும் இடம் இதுவல்ல!'' என்றார் பட்டாடையார்.

''வேறு எதுவோ?''

''எம்பெருமான் திருவடி.''

அதைவிடப் பெரிய பேறு இல்லையென்று தெரிந்திருந்தும் வட்டாவைத் தாங்கியவர் நடுங்கினார். அத்தனை சின்ன வயதில் திருவடிகளை அடையும் நிலையை அவர் எய்தவில்லை. ஆகவே ஏதோ முணுமுணுத்துக் கொண்டு ஓடினார் காவலரை அழைக்க.

இவர்கள் உரையாடல் இப்படியிருக்க, வாலிபனைத் துரத்திச் சென்ற தஞ்சை வீரர்களால் அவனைக் கண்டு பிடிப்பது எளிதாயில்லை. நான்கு பக்கங்களிலும் அவர்கள் தேடிய போது ஒருபுறத்தில் மட்டும் அவன் ஓடிய காலரவம் கேட்டதால் அங்கு அவர்களும் ஓடவே, வாலிபன் அவர்கள் வருகையை அறிந்து ஆயிரங்கால் மண்டபத்துக்குள் நுழைந்துவிட்டான். அதற்குள் வீரரும் நுழைந்து துழாவினாலும் இருட்டின் காரணமாக அந்தப் பிரும்மாண்டமான மண்டபத்தில் காலைத் தூக்கி நின்ற கற்புரவிகளைத்தான் அவர்களால் தடவ முடிந்தது.

அடுத்த சில விநாடிகளில் வேறு ஒருபக்கம் காலரவம் கேட்கவே வடக்கு வாசலை நோக்கி ஓடினார்கள் அந்த வீரர்கள். வடக்கு வாசல் திட்டிக் கதவு திறந்து கிடந்தது. அதை அணுகுமுன்பே ஒரு புரவி காற்றிலும் கடுகப் பாய்ந்ததால் ஏற்பட்ட குளம்பொலிகள் இரவின் நிசப்தத்தைப் பயங்கரமாகக் கிழித்தன. அந்த வாலிபன் புரவியில் இளவரசியைத் தூக்கிச் சென்றுவிட்டான் என்ற உண்மையை அறிந்ததும் அவர்கள் பிராணனே போய்விடும் போலாயிற்று.

அடுத்த ஒரு விநாடிக்குள் ஸ்ரீரங்கத்தின் வீதிகள் அல்லோல கல்லோலப்பட்டன. பண்டிதரின் ஆணையால் நூறு புரவிகள் பறந்தன, வாலிப வீரனின் புரவி சென்ற வடக்கு திக்கை நோக்கி. ஸ்ரீரங்கமும் சல்லடை போட்டுச் சலிக்கப்பட்டது. வாலிபனை எங்கும் காணோம். எப்படி, எந்தத் திசையில் அவன் சென்றான், எப்படிப் பலமான காவலைக் கடந்தான் என்பது பெரும் புதிராக இருந்தபடியால் பண்டிதர் பிரமை பிடித்து மக்கம் போட்டு வடக்கு வீதியிலேயே சாய்ந்துவிட்டார்.

4. ''வாள் மகளே! வா!''

'கங்கையிற் புனிதமாய காவிரி நடுவு பட்டு, பொங்கு நீர் பரந்து பாயும் பூம்பொழில் அரங்கந்தன்னுள்' வீதிகள் அனைத்திலுமே மகாராஷ்டிர வீரர்கள் சல்லடை போட்டுச் சலித்தும், தஞ்சை மன்னன் செல்வியைக் கடத்திச் சென்றுவிட்ட வாலிபன் கிடைக்காதது மற்றவர்களுக்குப் பெருவியப்பை அளித்தும், அவனால் தூக்கிச் செல்லப்பட்ட அரச மகளுக்கு மட்டும் அது எவ்வித வியப்பையும் அளிக்கவில்லை.

அரங்கன் சந்நிதிப் படிகளை விட்டு இறங்கிய மாத்திரத்திலேயே அநாயாசமாகத் தன்னைத் தோளின்மீது போட்டுக் கொண்டு வெகுவேகமாக ஓடத் துவங்கிய வாலிபன், ஓடிக்கொண்டே அவன் காதில் மட்டும் கேட்கும் வண்ணம்,

''வாயைத் திறவாதே'' என்று கூறிய எச்சரிக்கைச் சொற்களும், பிறகு பின் தொடர்ந்த காவலருக்குப் பாய்ச்சல் காட்ட ஆயிரங்கால் மண்டபத்தில் அவன் பதுங்கி விட்டதும், அதற்குப் பிறகு வடக்கு வாசல் திட்டிக் கதவுக்காக மெல்ல ஓடி, அதன் வெளியே தனித்து நின்ற புரவிமீது தன்னைக் குறுக்கே போட்டு அவனும் தாவி ஏறிக் கடிவாளக் கயிறுகளைத் தொட்டதுமே அந்தப் புரவி காற்றைப்போல் பறந்துவிட்டதும், எல்லாமே சொப்பனம் போல் இருந்தாலும் அந்தச் சொப்பனம் நடக்கவே செய்ததென்பதை உணர்ந்த அரசகுமாரி வாயைத் திறவாமலே குதிரை முதுகின் குறுக்கே கிடந்தாள்.

அப்படிக் கிடந்த நிலையில் அந்தப் புரவியின் முதுகின் கடினம் தன்னைக் கடத்தியவன் தோளுக்கும் இருந்ததை நினைத்து, 'இந்தச் சிறுவயதில் இவனுக்கு எப்படி இத்தனை உடல் உரமும் உள்ள உரமும் வந்தன?' என்று தன்னை வினவிக்கொண்டாள். விடை காணவில்லையே தவிர அதனால் துன்பமோ கோபமோ அவள் இதயத்தைப் பாதிக்கவுமில்லை. அத்தகைய நிலையில், சற்று எட்ட உத்திர, சித்திரை வீதிகளிலும் வடதிருக் காவேரியான கொள்ளிடப் பெரும் பாதையிலும் வீரர்கள் கோஷமும் புரவிக் குளம்பொலிகளும் 'இத்தனை பேரையும் மீறி இந்த வாலிபன் எப்படித் தப்ப முடியும்? என்ற விசனமும் அவளைக் காரணம் இல்லாமல் கவர்ந்து கொண்டாலும், வாலிபனது அடுத்த நடவடிக்கைகள் அவளுக்கு அவன் தந்திரத்தின் எல்லையைக் காட்டின.

வடதிருக்காவேரிக்குச் சென்ற பெரும் பாதையிலிருந்து வாலிபன் தனது புரவியைத் திடீரெனப் பக்கத்து அடர்ந்த தோப்புக்குள் திருப்பி, புரவியிலிருந்து கீழே குதித்து, புரவியின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு மரங்களின் ஊடே மெல்ல நடந்தான், அரவம் எதும் செய்யாமலே. அப்படி அரை நாழிகைப் பயணம் செய்ததும் கொள்ளிடத்தின் ஓரமாக ஓடிக்கொண்டிருந்த நீரில் குதிரையை இறக்கித் தான் மட்டும் முழங்கால் மட்டுமே ஓடிய நீர்க் காலைக் கடந்தான். அங்கிருந்து கொண்டே மிக நிதானமாகச் சற்று மேற்கே கண்களை ஓட்டியவன் மெல்ல நகைத்தான். அவன் நகைப்புக்குக் காரணத்தை அறிய மெல்லத் தலை தூக்கிய அரசகுமாரி, புரவி வீரர் பலர் கொள்ளிடப் பெரும் பாதையின் முனையிலேயே அலைவதையும் இன்னும் சிலர் புரவிகளை விட்டு இறங்கிப் பந்தங்களுடன் கொள்ளிட நீர்க்காலிலும் அதை அடுத்த மணற் பரப்பிலும் தன்னைத் தேடுவதையும் கண்டாள். அவர்கள் அப்படித் தேடி அலைந்து அலைந்து மீண்டும் கரையேறிப் பாதையை நோக்கிச் சென்றதும், வாலிபன் மீண்டும் தனது புரவிமீது ஏறிப் புரவியைத்

தட்டிவிட்டதையும், அந்தப் புரவியும் அவனது எண்ணப்படி கொள்ளிட மணலில் மிக வேகமாகப் பாய்ந்து சென்றதையும் கவனித்த அரசகுமாரி, அது நல்ல அரபு ஜாதிப் புரவியென்பதை சந்தேகமறப் புரிந்து கொண்டாளாதலால் மௌனமே சாதித்தாள். சிறிது நேரத்திற்கெல்லாம் அவள் மௌனத்தை அந்த வாலிபன் கலைத்து, "அரசகுமாரி! இனி நீங்கள் இறங்கலாம், ஆபத்து கடந்துவிட்டது" என்று கூறியபடி அவளை முன்பு தூக்கியதுபோல் மறுபடியும் தூக்கிக் கீழே இறக்கினான்.

அவள் இறங்கிய இடம் கொள்ளிடத்தில் வடக்குக் கரைக்கு அருகிலிருந்த நீர்க்காலை அடுத்திருந்ததைக் கவனித்த அரச குமாரி தனது கண்களை நாலாபுறத்திலும் அலையவிட்டாள் சில விநாடிகள். பின்புறத்தே பிரும்மாண்டமாக விரிந்து கிடந்த வடதிருக்காவேரியின் வெளேரென்ற மணற்பரப்பு அந்த நல்ல இருட்டிலும் வெண்மை மங்காதிருந்ததையும் எதிரே தெரிந்த கரைமீது வளர்ந்திருந்த நானாவித மரங்கள்கூட மெல்ல மெல்லக் காற்றில் அசைந்து கொண்டிருந்ததையும், பட்சிஜாலங்களின் அரவம் அடங்கிவிட்ட சமயமாதலால் அந்த மரக் கூட்டத்தின் இன்ப நிலைகூட அச்சத்தைத் தரக்கூடிய வகையில் அமைந்து கிடந்ததையும் கண்டாள் அந்தக் காரிகை.

ஆனால் சில அடிகளே தள்ளி ஓடிக்கொண்டிருந்த நீர்க்கால் மட்டும் சிறிது சலசலப்பக் காட்டி மரங்கள் அளித்த அச்சத்திற்கு மாற்று செய்திருந்ததால், எந்தப் பயங்கரத்துக்கும் ஒரு மாற்று இருக்கிறதென்று தனக்குள் சொல்லிக் கொண்டாள் தஞ்சை அரசமகள். பிறகு வானத்தை நோக்கிய அவள் சப்தரிஷி மண்டலம் இருந்த நிலை கண்டு நடுநிசி தாண்டிவிட்டதென்பதை உணர்ந்து கொண்டாலும், அந்த நடுநிசிகூட நட்சத்திரக் கூட்டங்களால் உலகத்துக்கு எத்தனை அழகை அளித்திருக்கிறதென்பதை எண்ணிப் பார்த்தாள். பிறகு இரண்டடி நடந்து சென்று நீர்க்காலுக்கு அருகே மணலில் உட்கார்ந்து காற்சேலையைச் சிறிது மேலெடுத்துக் கால்களை நீரில் அலையவிட்டாள்.

புரவியிலிருந்து இறங்கிய பின்னர் அவள் தன்னைக் கடிந்து கொள்வாளென்றோ, தன்னைப் பார்த்துச் சீறி வசை மொழிகளை வாரி உதிர்ப்பாளென்றோ வாலிபன் எதிர்பார்த்து ஏமாந்தே போனான். தான் அவளைத் தூக்கிக் கொணர்ந்ததைப் பற்றி வியப்பையாவது கண்டிப்பாய்க் காட்டுவாளென்று நினைத்திருந்தால் அதிலும் ஏமாற்றத்தையே அடைந்தான். தான் அவளைக் களவாடி வந்ததைப்பற்றி எந்தவிதப் பிரஸ்தாபத்தையும் செய்யாமல், எந்தவிதப் பரபரப்பையும் காட்டாமல், அவள் கொள்ளிட மணலையும், எதிரேயிருந்த சோலையையும், அண்ணாந்து வானத்தையும் பார்த்தது

விசித்திரமாக இருந்தது அவனுக்கு. 'இப்படியும் ஒரு பெண் உண்டா?' என்று எண்ணி அவன்தான் வியப்படைந்தான்.

ஆனால் வியப்போ படபடப்போ பதற்றமோ இன்றி நீர்க்காலில் கால்களை அளைய விட்டுக் கொண்டு அரசகுமாரி அசட்டையுடன் உட்கார்ந்திருந்ததைக் கண்டதும் சிறிது கோபமும் வரவே, "அரசகுமாரி!" என்று சற்றே சினம் கலந்த குரலில் அழைத்தான் வாலிபன்.

அரசகுமாரி உட்கார்ந்த நிலையைவிட்டு அசையவும் இல்லை, அவனைத் திரும்பிப் பார்க்கவுமில்லை. அவளருகே சென்று நீரைப் பருக முற்பட்ட புரவியின் கழுத்தில் தனது கையைப் போட்டுக் கட்டிக் கொண்டாள். "என்ன அழகான புரவி!" என்ற சொற்கள் மட்டும் அவள் வாயிலிருந்து உதிர்ந்தன.

வாலிபன் மெள்ள நிதானத்தைப் பறக்கவிடும் நிலைக்கு வந்தான். ஆகவே அவள் இருந்த இடத்தை நெருங்கி, "புரவியை அழகு பார்க்க உங்களை இங்கு அழைத்து வரவில்லை" என்றான் மெல்ல சினம் ஒலித்த குரலில்.

அவள் அவனைத் திரும்பக்கூடப் பார்க்கவில்லை. புரவியின் முகத்தை இரு கைகளாலும் தூக்கிப் பிடித்துக்கொண்டவண்ணம் கேட்டாள், "அப்படியானால் என்னை அழகு பார்க்க அழைத்து வந்தீர்களா?" என்று.

இந்தப் பதிலைச் சற்றும் எதிர்பாராத வாலிபன் திக்பிரமை அடைந்ததால் சினத்தை அகற்றிக் சந்தேகம் வலுக்க, "அரசகுமாரி! உங்களுக்கு..." என்று ஏதோ கேட்க முற்பட்டு முடியாமல் சொற்களை மென்று விழுங்கினான்.

"சித்தப் பிரமையில்லை" என்று சொற்களை அலட்சியமாகக் கூறினாள் அவள்.

"அச்சம்?" வாலிபன் கேள்வியில் குழப்பம் மிக அதிகமாயிருந்தது.

"எதற்கு அச்சப்பட வேண்டும்?"

"தனிமையாக ஓர் ஆடவனிடம்...."

"அதாவது உங்களிடம்?"

"ஆம்."

"அகப்பட்டுக் கொண்டு விட்டேன்."

"ஆம், ஆம்."

"அதற்காகக் கவலைப்பட வேண்டுமென்கிறீர்கள்?" இந்தக் கேள்வியைக் கேட்டு அவன் மெல்ல நகைத்தாள். அந்த நகைப்பில் அவன் புரவியும் பங்கு கொண்டு பற்களை நன்றாகக் காட்டி வாலிபனை நோக்கிக் கனைத்தது.

அதுவரை நின்ற நிலையிலிருந்த வாலிபன் இருமுறை மணலில் அப்புறமும் இப்புறமும் நடந்துவிட்டு மெள்ள

அரசகுமாரி இருந்த இடத்திற்குச் சற்றுத் தள்ளி நீர்க்காலருகே உட்கார்ந்து கொண்டு, ''அரசகுமாரி!'' என்று சற்று உரக்கவே அழைத்தான்.

''என்ன?'' என்று கேட்ட அரசகுமாரி கொள்ளிட நீரை எடுத்து இருகைகளாலும் சற்று எட்ட இறைத்தாள்.

''உங்களை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை'' என்றான் வாலிபன் தயக்கத்துடன்.

''புரியாததற்கு என்ன இருக்கிறது?'' என்று கேட்டாள் அவள்.

''உங்களைப் பலவந்தமாகத் தூக்கி வந்திருக்கிறேன், அரங்கன் சந்நிதியிலிருந்து...'' என்று துவங்கினான் வாலிபன்.

''ஆம்.''

''வேறு வழியில்லை எனக்கு.''

''ஆம். பெரும் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டது உங்கள் மேல். அகப்பட்டுக் கொண்டிருந்தால் உங்கள் தலையை நாளைக்கே வெட்டி விடுவார்கள்.''

''அது உங்களுக்குப் புரிகிறதைப்பற்றி எனக்கு மகிழ்ச்சி. இப்படி ஓர் அபலையை நான் தூக்கி வந்தது இதுதான் முதல் தடவை. என் உணர்ச்சிகளை மீறி, அறத்தை மீறி, நான் தெரிந்து செய்த முதல் குற்றம் இதுதான்.'' இதைச் சொன்ன வாலிபன் துன்பப் பெருமூச்சு விட்டான்.

அவன் துன்பத்தைக் கவனித்த அரசகுமாரி சொன்னாள், ''நீங்கள் துன்பப்பட ஏதுமில்லை'' என்று.

''ஏன்?'' வாலிபன் கேட்டான் வியப்புடன்.

''முதலில் நான் அபலையல்ல. அதாவது பலம் இல்லாதவளல்ல. இரண்டாவது நான் இஷ்டப்பட்டிருக்கா விட்டால் உங்களால் என்னைக் கொண்டு வந்திருக்க முடியாது'' என்று திட்டமாகக் கூறிய தஞ்சை அரசகுமாரி வாலிபனைத் திரும்பிப் பார்த்தாள்.

இருட்டு கண்களுக்குப் பழகிவிட்டதால் நட்சத்திர வெளிச்சமே போதுமாயிருந்தது அவ்விருவருக்கும், ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ளவும் புரிந்துகொள்ளவும். ஆகவே, வாலிபன் அவள் கண்கள் தன்னை நோக்கி நகைப்பதைக் கண்டான்.

''உங்கள் இஷ்டமில்லாவிட்டால் உங்களை நான் தூக்கி வந்திருக்க முடியாதா?'' என்று வியப்பு மண்டிய குரலில் வினவினான்.

''முடியாது'' என்றாள் அவள், அவன் கண்களைத் துணிவுடன் தன் கண்களால் சந்தித்து.

''உங்கள் கழுத்தில் நான் கைத்துப்பாக்கியைப் புதைத்தேனே!'' என்று சுட்டிக் காட்டினான் அவன்.

''ஆம், புதைத்தீர்கள்'' என்று ஒப்புக்கொண்டாள் அவள் சர்வ சகஜமாக.

''அது....?''

''மற்ற வீரர்களை அச்சுறுத்த.''

''உங்களுக்கு அச்சம் இல்லை அப்போது...?''

''அப்பொழுதும் இல்லை. இப்பொழுதும் இல்லை.'' இந்தச் சொற்களைச் சந்தேகத்திற்கிடமின்றி மிகத் தெளிவாக உச்சரித்தாள் அரசகுமாரி.

''இப்பொழுதும் இல்லையா?'' என்று கேட்ட வாலிபன் தனது கச்சையிலிருந்த கைத்துப்பாக்கியில் கையை வைத்தான்.

அடுத்த கணம் அவன் விழிகள் பிரமிப்பின் எல்லையை அடைந்தன. அரசகுமாரியின் கையில் எங்கிருந்தோ ஒரு சின்னஞ்சிறு கைத்துப்பாக்கி மின்னல் வேகத்தில் தோன்றியது. அதன் வாய் வாலிபன் கண்களை நோக்கிக்கொண்டு பயங்கரமாக அசைவற்று நின்றது.

வாலிபனுக்கு அப்போதுதான் மெள்ள மெள்ள உண்மை உதயமாயிற்று. அந்த உண்மையை வெளிப்படையாகச் சொன்னாள் அரசகுமாரி: ''நீங்கள் தோளில் என்னைத் தூக்கிப் போட்டுக் கொண்டு ஓடியபோது இந்தக் கைத்துப்பாக்கியை மெள்ள எடுத்து உங்களைச் சுட்டிருக்கலாம் மார்பில். அப்பொழுது முடியாவிட்டாலும் வடக்கு வாசலில் என்மீது பிடியைத் தளர்த்திப் புரவிமீது போட முயன்றபோது சுட்டிருக்கலாம். அப்போதும் முடியாவிட்டாலும் கொள்ளிடத்தில் நீங்கள் புரவியிலிருந்து இறங்கியபோது சுட்டிருக்கலாம். ஏன் இப்பொழுதுகூட அந்தப் பணியை முடிக்கலாம்....''

இந்த இடத்தில் பேச்சை நிறுத்திய அரசகுமாரி மீண்டும் தனது இடையில் கைத்துப்பாக்கியைச் செருகி மேலாடையை இழுத்துவிட்டு, அதை மறைத்துவிட்டாள். அத்துடன் நிற்க வில்லை அவள். இடக் கையை இடையில் செலுத்தி மெல்லிய குறுவாளொன்றையும் எடுத்துக் காட்டி, ''இதுவும் அந்தப் பணி யைச் சுலபமாக முடித்திருக்கும்'' என்றும் காட்டி அதையும் மறைத்தாள்.

வாலிபன் திகைத்தான் சில விநாடிகள். பிறகு சொன்னான்: ''அரசகுமாரி! நீங்கள் ஒரு ஆயுத சாலை.''

அரசகுமாரி மெல்ல நகைத்தாள். ''இப்போது நாடு இருக்கும் நிலையில் எல்லாப் பெண்களும் ஆயுத சாலைகளாக இருப்பதே நல்லதல்லவா?'' என்றும் வினவினாள்.

ஆமென்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் வாலிபன். அவள் தன்னுடன் விருப்பத்துடன் வந்திருப்பதை

உணர்ந்ததால் நன்றி ததும்பிய கண்களை அவள்மீது நிலைக்க விட்டான். ''இத்தனை பாதுகாப்பிருக்க என்னுடன் ஏன் வந்தீர்கள்?'' என்றும் வினவினான், ஒரு சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள.

அரசகுமாரி வளைந்த தன் உடலை நன்றாக நிமிர்த்திக் கொண்டு அரச தோரணையில் சொன்னாள்: ''டபீர் பண்டிதர் திடீரென்று நிரபராதியான உங்கள்மீது பெரும் குற்றத்தை அந்தச் சமயத்தில் சுமத்திவிட்டார். அவர் பிடியிலிருந்து அந்தச் சமயத்தில் நீங்கள் தப்பாவிட்டால் பின்னால் உங்களைத் தப்புவிக்க என்னால்கூட முடியாது. ஆகவே உங்கள் செயலுக்கு நான் உடன்பட்டேன். தவிர, முத்தங்கியை இந்த நாட்களில் அரங்கனுக்குச் சார்த்தும் வழக்கமில்லை. தனித்து முத்தங்கி சார்த்திய முகுந்தனைப் பார்க்க எண்ணினேன். அதற்கு அரசாங்க அதிகாரத்தை உபயோகப்படுத்தினேன். வீரர்களை விட்டுப் பாக வதர்களை விலக்கினேன். பட்டர்களைக்கூட விலக்கினேன். அந்தப் பாவத்தைத் தீர்த்துக் கொள்ள நினைத்தேன். நீங்கள் கூறினீர்களே சந்நிதியில், 'உள்ளிருக்கும் ரங்கராஜாவைவிடப் பெரிய ராஜா யாரும் உலகத்தில் கிடையாது' என்று. அப்போது நினைத்தேன், நான் செய்த தவறு எத்தனை மகத்தானது என்பதை. அதற்கு இதுவும் ஒரு பிராயச்சித்தம்.'' இப்படிச் சொன்ன அரசகுமாரி கேட்டாள்: ''ஆமாம், நீங்கள் யார்? எதற்காக அத்தகைய பயங்கர சபதத்தைச் செய்தீர்கள்?'' என்று.

வாலிபன் சில விநாடிகள் பதில் சொல்லவில்லை. தீர்க்கா லோசனையில் சிக்கிக் கிடந்தான். கடைசியாகப் பேச முற்பட்டு, ''என் பெயர் விஜயகுமாரன். சபதத்திற்குக் காரணம் கேட்கா தீர்கள். காலம் வரும்போது நீங்களே புரிந்துகொள்வீர்கள், உலகே புரிந்துகொள்ளும்'' என்று நிதானமாகச் சொன்ன அந்த வாலிபன் மணலிலிருந்து எழுந்து நின்றுகொண்டான். ''வாருங்கள் போகலாம்!'' என்று அழைத்தான் தஞ்சை மன்னன் மகளை.

அவளும் எழுந்து நின்று ஆடையைச் சரிசெய்து கொண்டு, ''இங்கிருந்து...?'' ஒரு கேள்வியை அரையும் குறையுமாக விட்டாள்.

''அக்கரை சென்று சமயபுரத்தை அடைவோம். உங்களூர் சத்திரம் இருக்கிறது'' என்றான்.

அரசகுமாரி பதிலேதும் சொல்லாமல் வாலிபன் உதவிக்கு வந்ததைக்கூடக் கவனிக்காமல் புரவிமீது ஏறிக்கொண்டாள். புரவியின் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு நீரில் இறங்கிய விஜயகுமாரன் மெள்ள எதிர்க்கரையை அடைந்தான். அங்கிருந்து புரவியை மெள்ளச் செலுத்தி வெள்ளி முளைப்பதற்கு முன் சமயபுரத்தின் சத்திரத்தை அடைந்தான் அரச குமாரியுடன்.

புரவியைச் சத்திரத்தின் வாயில் தூணிலேயே கட்டிவிட்டு, சத்திரத்துக் கதவைத் தட்டினான் இருமுறை. சத்திரத்துப் பெரும் தாழ்ப்பாள்கள் சில விநாடிகளுக்குப் பிறகு திறக்கப்பட்டதும் கையில் விளக்குடன் தலையை வெளியே நீட்டிய சத்திரத்துக் காவலன், ''இங்கு யாரும் தங்க இடமில்லை'' என்று கூறிவிட்டு மீண்டும் கதவைச் சாத்தத் துவங்கினான்.

அந்தச் சமயத்தில் சத்திரக் காவலனை ஒதுக்கித் தள்ளி விட்டுத் திடீரெனக் கதவைத் திறந்த விஜயகுமாரன், ''வாருங்கள் உள்ளே!'' என்று அரசகுமாரியை அழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

நுழைந்த இருவரும் கூடத்தில் விளக்குகள் பல எரிந்து கொண்டிருந்ததைக் கண்டார்கள். குடி மயக்கத்தில் சில வீரர்கள் இருந்ததையும் பார்த்தார்கள். இதெல்லாம் அந்த இருவரும் எதிர்பாராத காட்சிகளல்ல. ஆனால் முற்றும் எதிர்பாராத ஒரு நிகழ்ச்சியும் ஏற்பட்டது. அந்தக் குடிகாரர்களுக்குச் சற்று அப்பாலிருந்த மஞ்சத்திலிருந்து ஆஜானுபாகுவாய் எழுந்த ஒரு மனிதன் அரசகுமாரியை ஒரு விநாடி நோக்கினான். பிறகு நகைத்தான். அத்துடன் நிற்கவில்லை. ''வாள் மகளே! வா!'' என்று செல்லமாக அழைக்கவும் செய்தான்.

'வாள் மகளா! இவளா அது!'' என்று பிரமித்தான் விஜய குமாரன். புரியாத பல விஷயங்கள் அப்போதுதான் புரிய லாயிற்று அவனுக்கு.

5. சத்திரத்துச் சிக்கல்

''மறந்தும் புறந்தொழா மாந்த'ராயிருக்க வேண்டிய மாபெரும் வைணவரும் முடி இறக்கும் மாரியம்மன் இருப்பிடமான சமயபுரத்தின் தஞ்சை மன்னன் சத்திரத்தில், இரவு பெரிதும் முற்றிவிட்ட அந்த நேரத்தில், குடிகார வீரர்களுக்குப் பின்னாலிருந்த மஞ்சத்திலிருந்து ஆஜானுபாகுவாய் எழுந்த மனிதன் அரசகுமாரியைப் பார்த்து நகைத்ததால் விஜயகுமாரன் முதலில் சினத்தின் வசப்பட்டாலும், அடுத்த விநாடி அந்த மனிதன் அவளை 'வாள் மகள்' என்று அழைத்ததாலும் பெரும் பிரமிப்பையே அடைந்தான். அந்தப் பெயர் சோழ மண்டலம் முழுதும் பிரசித்தியான பெயர். நந்தினி என்ற உண்மையான பெயரை மறைத்துவிட்ட காரணப் பெயர்.

தஞ்சை மகாராஷ்டிர மன்னர் பரம்பரையில் வந்த மகாவீரனும், ராஜா துகோஜியின் மகனும், துகோஜியின் வாளுக்கு மாலையிட்ட அன்னபூர்ணாபாயின் செல்வனும், தஞ்சையை

www.thamizhthenee.blogspot.com

ஆண்ட மகாராஷ்டிர அரசகுலத்தவரின் இணையற்றவனென்று பிரசித்தி பெற்றவனுமான *ராஜா பிரதாப்சிங் 'வாள் மகன்' என்று அழைக்கப்பட்டது அவன் பிறப்பின் காரணம் மட்டுமல்ல என்பதையும் அவன் வீரத்தையும் குறிக்க ஏற்பட்டது என்பதையும் உணர்ந்திருந்த விஜயகுமாரன், பிரதாப்சிங்கின் பல மனைவியரில் ஒரு மனைவியின் புதல்வி மட்டும் வீரத்தில் அவனுக்குச் சளைத்தவளல்ல என்பதையும், பெரும் துணிவுள்ளவள் என்பதையும், ஆகவே அவளையும் மக்கள் 'வாள் மகள்' என்றே அழைத்து வந்தனர் என்பதையும் ஏற்கனவே உணர்ந்திருந்தாலும் அவள்தான் இந்த நந்தினி என்பதை உணராத காரணத்தால் பெரும் பிரமிப்பையே அடைந்தான்.

முதலில் தான் பலவந்தமாகத் தூக்கி வந்த போதிலும் அதை அவள் சிறிதும் லட்சியம் செய்யாமலிருந்தது, கொள்ளிடத்தில் தன்னைக் கைத்துப்பாக்கியையும் கத்தியையும் காட்டி அச்சுறுத்தியது, முதலிய பல சம்பவங்களுக்கும் அவனுக்கு அப்போதுதான் காரணம் புரிந்தது.

எதற்கும் துணிந்த 'வாள்மகள்' தன்னை அத்தனை தூரம் கொல்லாது வந்தது பெரும் விசித்திரம் என்பதை உணர்ந்ததால் விஜயகுமாரன் வியப்பிலும் பிரமிப்பிலும் சிக்கிப் பல விநாடிகள் திரும்பி அரசகுமாரியைப் பார்த்தவண்ணம் சிலையென நின்றுவிட்டான். அந்தச் சமயத்தில், அந்தப் புது மனிதன் மீண்டும் ஏளனப் பெருநகை ஒன்றை உதிர விட்டதால், அவனை நோக்கித் தீ விழிகளை திருப்பிய விஜயகுமாரன் திடீரெனத் தனது வாளின் உறையின் மீது கைவைத்தான். அந்தக் கையைக் கண்டோ, விஜயகுமாரன் வாளைக் கண்டோ அந்த மனிதன் சிறிதும் அஞ்சியதாகத் தெரியவில்லை. அச்சத்துக்குப் பதில் பரிசாக இளநகையொன்று அவன் இதழ்களில் தவழ்ந்தது. ''வாள் மகள் ஒரு வாள் வீரனையும் அழைத்து வந்திருப்பதாகத் தெரிகிறது'' என்றான் அந்த மனிதன், ஏளனம் ததும்பிய குரலில் அரசகுமாரியை நோக்கி.

அரசகுமாரி உடன்படியாக அந்த மனிதனுக்குப் பதில் சொல்லாவிட்டாலும் விஜயகுமாரனைத் தனது கையின் சைகையால் அடக்கவே செய்தாள். ''வீரரே! வாளை உருவ அவசியமில்லை. மகாராஷ்டிரர்களின் மாபெரும் வீரரைச் சந்தியுங்கள்'' என்று அறிமுகம் செய்து வைத்தாள்.

விஜயகுமாரனின் விழிகள் அந்த மனிதனை மிக அலட்சியமாக ஏறெடுத்து நோக்கின. ''இவருக்குப் பெயர் ஒன்று

---

*Raja Pratap Singh was born to a sword wife of Tokuji named Annapurna- The Maratha Rajas of Tanjore, by K. R. Subramaniam, page-42.

உண்டு என்று நினைக்கிறேன்'' என்ற அவன் சொற்களிலும் பண்மய பிரமை மறைந்து இகழ்ச்சி ஒலித்தது.

வாலிபன் துணிவைக் கண்ட அந்த மனிதன் விழிகள் ஆச்சரியத்தில் நன்றாக மலர்ந்தன. அவன் ஏதோ சொல்ல வாயெடுக்கு முன்பு அரசகுமாரியே இடைபுகுந்து, *''இவர் பெயர் முராரிராவ் கோபர்டே'' என்று அறிவித்தாள்.

அந்த அறிவிப்பு விஜயகுமாரனுக்கு அன்றிரவின் இரண்டாவது அதிர்ச்சியை அளித்தது. மகாராஷ்டிரத் தளபதிகளில் மிகச் சிறந்தவரென்று பெயர் பெற்றவரும், அஞ்சா நெஞ்சம் படைத்தவரும், ஆர்க்காடு நவாபுகளையும் ஆங்கிலேயரையும் பிரெஞ்சுக்காரரையும் எல்லாரையுமே பெரும் பீதிக்குள்ளாக்கியிருந்தவரும், திருச்சியிலிருந்து சந்தாசாகேபை விரட்டியடித்து, பின் தன்னிஷ்டப்படி ஆட்சி புரிந்தவரும், பிறகு அதையும் விட்டு நீங்கியவரும், நிலையாக எங்கும் நில்லாதவருமான முராரிராவைச் சந்தித்ததையே பாக்கியமாகக் கருதிய விஜயகுமாரன் அவரை கூர்ந்தும் நோக்கலானான்.

மகாராஷ்டிரர்களின் பிரதம தளபதி ரகோஜி போன்ஸ்லேயின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான முராரிராவ் சாதாரண மகாராஷ்டிரர்களைப் போல் அல்லாமல் ஆறடிக்கும் அதிக உயரத்தைப் பெற்றிருந்ததையும், அவர் சரீர உயர்வுக்குத் தக்க சதைப் பிடிப்பு உடலில் இல்லையென்றாலும் சரீரம் முழுவதுமே உருவி விடப்பட்ட சாட்டை போல் துடிப்புடன் இருந்ததையும், அவர் இரு கருவிழிகளில் சதா துள்ளிக்கொண்டிருந்த ஒரு வீர ஒளியும் அவை யாரையும் அளந்துவிடும் சக்தியுடன் சீறிக் கொண்டிருந்ததையும் கவனித்தான் விஜயகுமாரன்.

அது மட்டுமின்றி அந்த மகாராஷ்டிர வீரனின் இடையிலிருந்து தொங்கிய வளைந்த வாள் கச்சையில் இறுகப் பிணைக்கப்படாமல் தொங்கலாடிக் கொண்டிருந்தபடியால், அதை அரை விநாடியில் அவர் உருவிவிட முடியுமென்பதையும், கச்சையில் செருகப்பட்டிருந்த பெரும் கைத்துப்பாக்கிகூட அவரது ஒவ்வொரு அசைவிலும் கூட அசைந்ததையும் கண்ட விஜயகுமாரன், ''இவரைக் கண்டு பிரிட்டிஷாரும், பிரெஞ்சுக் காரரும்கூடப் பயப்படுவதில் வியப்பில்லை'' என்ற தனக்குள் சொல்லிக் கொண்டான். அவனுக்குப் புரியாதது மட்டும் ஒன்றிருந்தது. ஆற்காட்டுக்கு வேறு நவாப் ஏற்பட்டுவிட்டதால், மகாராஷ்டிர தளபதியின் உத்தரவுப்படி திருச்சியைப் பழயபடி நவாபின் பிரதிநிதியிடம் ஒப்படைத்தும், முராரி ராவ் திரும்பத்

---

*Murari Rao Gorepade one of the most famous leaders of the Marathas "Lord Clive" by colonel G. B. MALLESON C.S.I. page 26.

தமது இருப்பிடமான 'குத்தி நகர்' செல்லாமல் இங்கேயே எதற்காக உலாவ வேண்டும் என்பது புரியவில்லை, விஜயகுமாரனுக்கு. ஆனால் அதைப்பற்றி அவன் ஏதும் கேட்காமல் முராரிராவை மீண்டும் கூர்ந்து நோக்கவே செய்தான்.

விஜயகுமாரன் தன்னை அளவெடுப்பதையும் திடீரென அவன் கண்களில் துளிர்விட்ட சந்தேகத்தையும் முராரிராவ் விநாடிநேரத்தில் கவனித்து மெல்ல மறுபடியும் நகைத்தார். நகைத்ததோடு நில்லாமல் அரசகுமாரியை நோக்கி, ''மகளே, இவனை எங்கே பிடித்தாய்?'' என்று வினவினார்.

அரசகுமாரியின் இதழ்களில் இளநகை பூத்ததை விஜயகுமாரன் கண்டான். அடுத்தபடி அவள் சொன்ன பதிலிலும் சற்றே இன்பம் கலந்திருந்ததாகத் தோன்றியது விஜயகுமாரனுக்கு. ''இவரை நான் பிடிக்கவில்லை, இவர்தான் என்னைப் பிடித்தார்'' என்றாள் அரசகுமாரி.

இதைக் கேட்ட முராரிராவ் பெரிதாகச் சத்திரமே அதிரும் படியாக நகைத்தார். ''பலே பலே, அப்படியா!'' என்று கேட்டார் நகைப்பின் ஊடே.

விஜயகுமாரன் பொறுமையை முராரிராவின் நகைப்பு உடைத்துவிட்டதால், ''மகாராஷ்டிரத் தளபதியின் நகைப்புக்குக் காரணம் தெரியவில்லை எனக்கு'' என்று சீற்றம் சற்றே ஏறிவிட்ட குரலில் கேட்டான்.

''ஏன் தெரியவில்லை? நந்தினியைப் பலவந்தமாகத் தூக்கி வந்திருக்கிறாய்!'' என்றார் முராரிராவ்.

''ஆம்.'' விஜயகுமாரன் குரலில் கோபம் குறையவில்லை.

''பெண்களைத் தூக்கிச் செல்வது இந்துக்கள் பழக்கமல்ல'' என்று சுட்டிக் காட்டினார் முராரிராவ்.

''அவசியம் புதுப் பழக்கங்களை ஏற்படுத்துகிறது. உதாரணமாக...''

''உதாரணமாக...?''

''நீங்கள் தஞ்சையின் சுற்றுப்புறங்களைச் சூறையாடியிருக்கிறீர்கள். சூறையாடுவதும் இந்துக்கள் பழக்கமல்ல.''

இதைக் கேட்ட முராரி அசந்து நின்றுவிட்டார். பிறகு மெள்ள அரசகுமாரியை நோக்கிச் சொன்னார், ''நந்தினி, நல்ல முரடனைத்தான் பிடித்து வந்திருக்கிறாய்!'' என்று.

''நான் பிடித்து வரவில்லை என்று ஏற்கனவே சொன்னேன்!'' என்று சுட்டிக் காட்டினாள் நந்தினி.

''ஆம் ஆம், தவறிச் சொல்லி விட்டேன். இந்த முரடனிடம் அகப்பட்டுக் கொண்டாய். முராரிராவையே எதிர்த்துப் பேசக் கூடியவன் உண்மையில் பெரும் மூர்க்கனாயிருக்க வேண்டும்!'' என்றார்.

விஜயகுமாரன் இதயத்தில் அதுவரை எழுந்து கொண்டிருந்த கோபம் தணிந்து இகழ்ச்சிக்கு இடம் கொடுத்தது. ''தற்பெருமை வீரர்களுக்கு உகந்ததல்ல'' என்று கூறினான் முராரிராவை நோக்கி.

முராரிராவுக்கு விஜயகுமாரனின் பேச்சின் அர்த்தம் புரிந்திருந்தும் அவர் சிறிதும் அதைப் பற்றிச் சினம் கொள்ளவில்லை. ஒரு அடி எடுத்து வைத்து விஜயகுமாரனை அணுகி அவன் தோள்மீது தன் வலக் கையை வைத்தார். கை மிக மெல்லியதாயிருந்தும் லேசாகவே அது பதிந்துங்கூட ஏதோ வாளொன்று தோளின் குறுக்கே விழுந்த பிரமை ஏற்பட்டது விஜயகுமாரனுக்கு. அத்துடன் முராரிராவின் அடுத்த சொற்களும் மிக இன்பமாக அவன் காதில் விழுந்தது. ''வீரனே! உன் பெயர் என்ன?'' என்று வினவினார் முராரிராவ் கோர்படே.

''விஜயகுமாரன்.'' பதிலில் நிதானம் சொட்டியது.

''உன்னைப் போன்ற வீரர்கள் இருந்தும் இந்த நாடு முஸ்லிம்கள் கையில் சிக்கிக் கிடப்பதும், மதுரை நாயக்கர்கள் வம்சம் மங்கிவிட்டதும் பெரும் துர்ப்பாக்கியம். அது கிடக்கட்டும், நீ பிடித்து வந்திருக்கும் நந்தினி எப்பேர்ப்பட்டவள் தெரியுமா?'' என்று வினவினார் முராரிராவ்.

''தெரியும்.''

''எப்பேர்ப்பட்டவள்?''

''விரும்பியிருந்தால் என்னைக் கொன்றிருக்கக் கூடியவள். இப்பொழுது உங்களையும் நொடிப்பொழுதில் கொல்லக் கூடியவள்.''

''சரி, சரி. புரிந்துகொண்டு விட்டாய். புரிந்துமா இவளைத் தூக்கி வந்தாய்?''

''தூக்கி வந்தபோது தெரியாது.''

''தெரியாமல் உடும்பைப் பிடித்துக் கொண்டாய்!''

''ஆம். ஆனால் ஒரு வித்தியாசமிருக்கிறது.''

''என்ன?''

''உடும்பிலிருந்து விடுபட மற்றவர்கள் இஷ்டப் படுவார்கள்...''

''நீ இஷ்டப்படவில்லை.''

''ஆம்.''

''ஏன்?''

''உடும்பு......'' மேற்கொண்டு சொல்ல முடியாமல் சொற்களை விழுங்கினான் விஜயகுமாரன்.

ஆனால் வாசகத்தை முடித்தார் முராரிராவ், ''அழகாயிருக்கிறது, அதில் மயங்கிவிட்டாய்'' என்று.

அதுவரையிலும் வாளாவிருந்த 'வாள் மகள்' நந்தினி

வாளினும் கூரிய தன் விழிகளை அந்த இருவர் மீதும் மாறி மாறி நாட்டினாள். ''நீங்கள் இருவரும் பேசுவது வீரர்கள் பேச்சா யில்லை'' என்ற அவள் பவள உதடுகளிலிருந்து உதிர்ந்த சொற்களில் உஷ்ணம் பலமாக இருந்தது.

அந்தச் சொற்கள் அந்த இருவரையும் அடக்கிவிடவே இருவரும் அவளை நோக்கித் திரும்பினார்கள். அவர்களில் முராரிராவே பேச்சைத் துவக்கினார். ''நந்தினி! இவனிடம் நீ எந்தக் காரணத்தால் சிக்கிக் கொண்டாய் என்பது எனக்குத் தெரியாது. உன் வரவுக்காக ஸ்ரீரங்கத்தில் செய்யப்பட்ட பெரும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மீறி, உன்னை இவன் தூக்கிவர முடியுமானால் இவன் அசகாய சூரன் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இவன் செய்ததும் தவறு. சமயத்தில் இவனை நீ தடுக்காமல் இங்கு வந்ததும் தவறு'' என்று கூறினார் முராரிராவ்.

''ஏன்?'' என்று சர்வ சாதாரணமாக வினவினாள் நந்தினி.

''சமயபுரத்தில் இப்போது பிரெஞ்சுக்காரர் நடமாட்டம் அதிகம் இருக்கிறது. நவாபின் வீரர்களும் தஞ்சைச் சாலையில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார்கள். நீ காவலின்றித் தஞ்சைக்குச் செல்ல முடியாது'' என்றார் முராரிராவ். அத்துடன் குடிமயக்கத்திலிருந்த வீரர்களையும் சுட்டிக் காட்டி, ''இவர்கள் அனைவரும் நாவாபின் வீரர்கள், என்னைச் சிறை செய்ய வந்தார்கள். நான் யார் என்பது இவர்களுக்குத் தெரியாது. இவர்களுக்குப் பிரெஞ்சுக்காரர் குடியைக் காட்டி ஏமாற்றினேன். அதில் சிறிது மயக்க மருந்தையும் கலந்து விட்டேன். நாம் இங்கிருந்து தஞ்சை செல்வதானால் உடனடியாகச் செல்லவேண்டும்'' என்று உணர்த்திய மகாராஷ்டிரத் தளபதி சத்திரக்காரனைக் கூப்பிட்டு, ''நாங்கள் புறப்பட சித்தம் செய்'' என்று உத்தரவும் இட்டு, ''என்னுடன் வாருங்கள்...'' என்று அவ்விருவரையும் அழைத்துக் கொண்டு சத்திரத்தின் இரண்டாவது கட்டுக்குச் சென்றார். அங்கிருந்த உடைகளைக் காட்டி, ''நீங்கள் இருவரும் இந்த உடைகளை அணிந்து கொள்ளுங்கள்'' என்றும் உத்தரவிட்டார்.

''தேவையில்லை.'' விஜயகுமாரன் பதில் திட்டமாக வந்தது.

''ஏன்?''

''இறப்பதனாலும் இந்த மதுரை உடையிலேயே இறக்க இஷ்டப்படுகிறேன்.''

முராரிராவ் இளநகை பூத்தார். ''பயப்படாதே. உன் விருப்பம் இன்றிரவே நிறைவேறும். தஞ்சை வழிநெடுக அதற்கு வசதி இருக்கிறது'' என்ற முராரிராவ், பின்புறம் சென்று சில ஏற்பாடுகளைச் செய்துவிட்டுத் திரும்பினார். ''சத்திரத்துக்காரன் உன் புரவியைப் பின்புறம் கொண்டு வந்து விட்டான். அரச குமாரிக்கும் ஒரு புரவியைக் கொணர்ந்திருக்கிறான். வாருங்கள் போவோம்'' என்று கூறிவிட்டு விடுவிடுவென்று நடந்தார்.

மிகத் துரிதமாகச் செய்யப்பட்ட அந்த ஏற்பாடுகளால் பிரமையடைந்த விஜயகுமாரனும், நந்தினியும் அந்த மாவீரனைப் பின்பற்றினார்கள்.

ஆனால் சத்திரத்துக்குப் பின்னாலிருந்த நிலை அவர்களை அசர வைத்தது. இரண்டு முஸ்லீம் சிப்பாய்களின் பிடியில் சத்திரக் காரன் சிக்கித் தத்தளித்துத் திமிறிக்கொண்டிருந்தான். அவனுக்கு இருபுறத்திலும் சேணமிடப்பட்டிருந்த மூன்று புரவிகளுக்கு முன்னாலும் பத்து முஸ்லீம் வீரர்கள் வாட்களை உருவி நின்றனர். தலைவனாக இருந்தவன் கூறினான், ''முராரிராவ்! வாளை எடுத்துக் கீழே எறிந்துவிடு. உன் பின்னால் இருப்பவனுக்கும் சொல், பிழைக்கும் வழியை!'' என்று.

அதைக் கேட்ட முராரிராவ் பதிலேதும் சொல்லாமல் வாளைக் கழற்றலானார் கச்சையிலிருந்து. விஜயகுமாரன் பிரமிப்பு எல்லை மீறியது. 'சே! இவர் வீரம் இவ்வளவுதானா? இவரைப் பற்றிய பிரதாபமெல்லாம்....' என்று சிந்திக்கத் துவங்கிய விஜயகுமாரன் சிந்தனையை முடிக்க முடியவில்லை. மின்னல் வேகத்தில் அவன் சற்றும் எதிர்பாராத நிகழ்ச்சிகள் ஏற்பட்டன.

6. சோலையில் விரிந்த காட்சி

க்ஷணம் என்ற சம்ஸ்கிருதச் சொல்லைத்தான் கணம் என்று தமிழில் சொல்லுகிறோம். 'உத்பன்ன மாத்ரமேவ நச்யதி, அதாவது 'பிறக்கும்போதே அழிந்துவிடுகிறது' என்று க்ஷணத் திற்குப் பொருள் கூறப்படுகிறது. ஆகவே கணம் மனிதன் கணக் கால் அளவிட முடியாத ஒரு துரிதத்தைப் பெற்றது என்பது சாஸ்திரம் கண்ட உண்மை. அந்தச் சாஸ்திரத்தை விஜயகுமாரன் படித்ததில்லைதான். ஆனால் அதன் தத்துவத்தை அநுபவ பூர்வ மாகக் கண்டான் சமயபுரத்துச் சத்திரத்துப் புழக்கடையில்.

அன்றிரவு முஸ்லீம் வீரர்களின் தலைவன் சொற்படி வாளைக் கழற்றத் துவங்கிய மகாராஷ்டிர மாவீரனைப் பற்றித் தப்பபிப்பிராயம் கொண்ட விஜயகுமாரன் தனது கருத்து தோன்றி முடிவதற்குள், முராரிராவின் வலகை வாளை அவிழ்க்க, அதே சமயத்தில் இடக் கை கச்சையிலிருந்த கைத்துப்பாக்கியை எடுத்து எதிரேயிருந்த முஸ்லீம் வீரர் தலைவனைச் சுட்டுவிட்டதுடன் இன்னும் இருவரையும் சாய்த்துவிட்டதையும் கண்டான். ஆகவே

அவனும் தனது கைத்துப்பாக்கியை எடுத்து மேலும் இருவரை, முந்திச் சென்றுவிட்ட மூவருக்குத் துணை சேர்த்து விடவே, மீதியிருந்த ஐந்து வீரர்களும் வாட்களுடன் முராரிராவ் மீது பாய்ந்தார்கள். ஆனால் அது எத்தனை பயனற்றது என்பதை விஜயகுமாரன் உடனபடியாக உணர்ந்தான். எழுந்த வேகத்தில் கச்சைக்குள் மீண்டும் முராரிராவின் கைத் துப்பாக்கி புகுந்து விட, வலக் கை வாளை உருவிக்கொண்டு எதிரிகளைத் தடுத்தது. விஜயகுமாரனும் பெரிய மனிதர்கள் செய்யும் கொலை வழியைத் தானும் பின்பற்ற வேண்டுமென்ற கடமை உணர்ச்சியில், தன் வாளையும் உருவிக்கொண்டு இரு முஸ்லீம் வீரரைத் தடை செய்தான். ஆனால் சண்டைக்கு நேரம் கிடைக்கவில்லை அதிகமாக விஜயகுமாரனுக்கு.

முராரிராவின் வளைந்த வாள் எதிரிகளின் வாள்களின்மீது பயங்கரமாக உராய்ந்து மீண்டும் ஏதோ இந்திர ஜாலம்போல் எழுந்து இருவர் கழுத்தை அறுத்துவிடவே அலறக் கூடச் சமயமின்றி அந்த இருவரும் மாய்ந்தனர். மற்றவர் ஓடி விட்டார், தனது வாளால் தடுக்கப்பட்ட இருவரும், மற்ற வீரர்களை ஓட்டப் பந்தயத்தில் வெற்றி கொள்ள விடக்கூடா தென்ற உறுதியால், திரும்பி மற்றவர் ஓடிய பாதையில் பாய்ந்து விட்டதை விஜயகுமாரன் கண்டு திகைத்து நின்ற சமயத்தில், முராரிராவ் அவனை நோக்கித் திரும்பிப் புன்னகை செய்து, ''விஜயகுமாரா! பிரமிப்புக்கு நேரமில்லை. போன வீரர்கள் இன்னும் அதிக வீரர்களுடன் திரும்புவார்கள். அநேகமாக வருபவர்கள் பிரெஞ்சுக்காரர்களாகவும் இருக்கலாம். ஆகவே கிளம்பு சீக்கிரம்'' என்று கூறிவிட்டுச் சத்திரத்துக் காவலனை நோக்கினார்.

அதுவரை இரும்புப் பிடியாகப் பிடித்திருந்த முஸ்லீம் வீரர்கள் ஓடிவிடவே, சற்றுக் கம்பீரமாகவே தனது உடலைச் சரிப்படுத்திக் கொண்டிருந்தான் சத்திரத்துக் காவலன். அவன் உடம்பை நெளித்துக்கொண்டதையும், சற்று உற்சாகத்துடனேயே நிமிர்ந்து கொண்டதையும் கண்ட முராரிராவ் மெல்ல நகைத்து, ''ஓடிவிட்டவர்களின் புரவிகளில் ஒன்றை நீயும் எடுத்துக்கொண்டு எங்களுடன் வா!'' என்று உத்தரவிட்டார்.

சத்திரக்காரன் முகத்தில் திகில் தோன்றியது. ''இது ராஜா சத்திரம்...'' என்று ஏதோ பேசத் துவங்கினான்.

''ஆம்.'' முராரிராவ் பதில் சொல்லிக்கொண்டே எட்ட இருந்த தமது புரவியை நோக்கி நடந்தார். புரவியில் ஏறும்படி அரசகுமாரிக்கும் ஜாடை காட்டவும் செய்தார்.

''தளபதி! நான் சொல்லிக் கொண்டேயிருக்கிறேன், நீங்கள் போய்க்கொண்டே இருக்கிறீர்களே!'' என்று கூவினான் சத்திரக் காவலன்.

''இங்கு இன்னும் சற்று நேரம் இரு. கூவ அவசியம் இருக்காது'' என்று சொல்லிக்கொண்டே புரவிமீது தாவி விட்ட முராரிராவ் சத்திரக் காவலனைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் புரவிகளில் ஏறிக்கொண்ட அரசகுமாரியும் விஜயகுமாரனும் பின் தொடர, சத்திரத்துப் பின்புறத்தை அடுத்திருந்த தோப்புக்குள் நுழைந்து விட்டார்.

சத்திரக் காவலன் அப்புறமும் அரைவிநாடி விழித்து விட்டுப் பக்கத்திலிருந்த புரவிமீது சற்றுச் சிரமப்பட்டு ஏறி, முன்னே சென்றவர்களைப் பின்பற்றிப் புரவியைச் செலுத்தினான். கொள்ளிடக் கரையிலிருந்து அதிகத் தூரத்தில் இல்லாத காரணத்தாலும், கொள்ளிடத்தின் ஜீவ ஊற்றுக் கால்கள் அந்தர்வாஹினியாகப் பூமிக்குள் பாய்ந்து வந்ததாலும் பெரும் செழிப்பைச் சமயபுரத்துத் தோப்பு பெற்றிருந்ததால், மரங்கள் வானளாவி நின்றன.

அவற்றுக்கிடையே ஓடிய ஒற்றையடிப்பாதைகள் இரண்டு மூன்று சிறிது விஸ்தாரமாக இருந்தாலும் மரங்களின் அடர்த்தி காரணமாகவும், கிளைகள் சில இடங்களில் மிக இடைஞ்சலாகவே இருந்தன. இருப்பினும் அந்தத் தோப்பின் ஒவ்வொரு பக்கத்தையும் அறிந்திருந்த முராரிராவ் அநாயாசமாகத் தமது புரவியைச் செலுத்தியதாலும் தாழ்ந்த கிளைகள் வரும்போது அவர் தலையைத் தாழ்த்திக் கொண்டதாலும் ஏதோ ஒரு மாயப் புரவி அந்தத் தோப்பில் ஊடுருவிச் செல்லும் பிரமை ஏற்பட்டது விஜயகுமாரனுக்கு.

முன்னே செல்பவரைக் கூர்ந்து கவனித்துக் கொண்டு அவன் புரவியை நடத்தியதாலும், அவர் குனிந்த போது தானும் குனிந்தும் அவர் நிமிர்ந்தபோது தானும் நிமிர்ந்தும் கிளைகளிலிருந்து தப்பித் தப்பி மீண்டதாலும் பெரும் உற்சாகத்தை அடைந்த விஜயகுமாரன், 'இத்தகைய வீரர்கள் இருந்தும் மகாராஷ்டிரர்களின் இந்து சாம்ராஜ்யம் ஏன் இத்தனை பலமிழந்து கிடக்கிறது?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொள்ளவும் செய்தான்.

அதற்கு விடை அவனைச் சுற்றிக் கிடந்தாலும் மகாராஷ்டிரர்களுக்குள்ளிருந்த பூசல்கள் சரித்திரப் பிரசித்தி பெற்றிருந்தாலும் முராரிராவின் கம்பீரத் தோற்றமும் வீரமும் அவனுக்குச் சரித்திரத்தையும் நினைவூட்டவில்லை. ஏன், இரவின் முன் பகுதியில் அரங்கன் முன்பு இட்ட பயங்கர ஆணையைக்கூட அவன் அந்தச் சில விநாடிகளில் மறந்தான்.

இப்படி யோசனையில் ஆழ்ந்திருந்தது அவன் மட்டுமல்ல. முன்னே சென்றுகொண்டிருந்த முராரிராவும் சிந்தனை வசப்பட்டிருந்தார். 'யார் இந்த விஜயகுமாரன்? அரசகுமாரியை எப்படித் தூக்கி வந்தான்? டபீர் பண்டிதர் அப்படி

ஏமாறக் கூடியவரல்லவே' என்று சிந்தித்தார். எல்லாவற்றுக்கும் விடை தஞ்சையில் கிடைக்கும் என்ற காரணத்தால் தன் மனத்தில் ஏற்பட்டிருந்த நினைப்புகளை நீக்கிகொண்டு புரவியைத் திடீரெனப் பக்கத்துப் பாதையொன்றில் திருப்பினார்.

அதைக் கண்ட விஜயகுமாரன், ''தளபதி!'' என்று அவரை அழைத்துக்கொண்டே அவரது புரவியை நெருங்கினான்.

முராரிராவ் புரவியைச் சட்டென்று நிறுத்தி அவனை நோக்கித் திரும்பி, ''என்ன?'' என்றார்.

''இந்தப் பாதை...'' என்று இழுத்தான் விஜயகுமாரன்.

''கொள்ளிடத்துக்குச் செல்கிறது'' என்றார் முராரிராவ்.

''அதைத் தாண்டித்தானே நான் வந்தேன்'' என்றான் விஜயகுமாரன்.

''திரும்பத் தாண்டக் கூடாதென்று யார் சொன்னது?''

''வந்த இடத்துக்குப் போவதற்காக நான் இங்கு வரவில்லையே?''

''அங்கு யார் போகச் சொன்னது உன்னை?''

''அப்படியானால்...?''

முராரிராவ் உடனடியாக அவனுக்குப் பதில் சொல்லவில்லை. சற்றுச் சிந்தித்துவிட்டு, ''வீரனே! கொள்ளிடம் ஒரே இடத்தில் ஓடவில்லை. பல இடங்களைத் தொட்டுக்கொண்டு ஓடுகிறது. அதன் பெயரும் மாறுகிறது. திருச்சியை அடுத்திருந்தால் திருச்சிக் காவேரி, ஸ்ரீரங்கத்தை அடுத்திருந்தால் ஸ்ரீரங்கத்துக் காவேரி, வடக்கேயும் தெற்கேயும் பிரிந்திருந்தால் அது வடதிருக் காவேரி, தென்திருக் காவேரி. மைசூரில் இருந்தால் மைசூர்க் காவேரி; தெரிகிறதா?'' என்று கேட்டார்.

முராரிராவின் சொற்களைக் கேட்ட விஜயகுமாரன் அசந்து போனான். முராரி ராவ் பெரும் கொள்ளைக்காரர், தளபதி, மாவீரர் என்று தான் கேள்விப்பட்டிருந்தான் அவன். முராரி ராவுக்கு இலக்கியப் பரிச்சயமும் உண்டு, தத்துவப் பரிச்சயமும் உண்டு என்று அப்போதுதான் தோன்றியது அவனுக்கு.

கம்பனைப்பற்றி நினைத்தான் விஜயகுமாரன் அந்தச் சமயத்தில். முராரிராவின் அதே கற்பனை! சரயூ நதியைப்பற்றிக் கம்பன் சொன்ன இணையிலா உவமை! 'கல்லிடை பிறந்து போந்து' என்று துவங்கி, 'பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும்போல் பரந்ததன்னே' என்று முடியும் தீஞ்சுவைத் தமிழ்க் கவிதையை, கம்பராமாயணச் செய்யுளை நினைத்தான் விஜயகுமாரன். ''எங்கோ மலைக் கல்லில் சுனையாக உற்பத்தியாகி, பெருகி, பல இடங்களைத் தாக்கி, அந்த அந்த இடங்களில் இடத்துக்குத் தக்க பெயரைத் தாங்கினாலும், அந்தப் பல பெயர்களும் ஒரே நதியைக் குறிப்பது போல், பல நாடுகளில் பரந்து கிடக்கும் மதங்கள் ஆங்காங்கு ஆண்டவனுக்குப் பல பெயர்களைச் சூட்டினாலும் அத்தனை பெயர்களும் சொல்லும் பரம்பொருள் ஒன்றுதானே!' என்ற கம்பன் உவமையை நினைத்து மெய்மறந்தான். 'ஆனால் இந்த மகாராஷ்டிரருக்குக் கம்பனைப் பற்றி என்ன தெரியப் போகிறது?' என்றும் எண்ணினான்.

அந்தச் சமயத்தில் முராரிராவ் நகைத்து, ''என்ன, ஆற்றுப் படலத்துக்குப் போய்விட்டாயா?'' என்று கேட்டு விஜயகுமாரன் பிரமிப்பை ஆயிரமடங்கு அதிகப்படுத்திவிட்டு, புரவியைச் சற்று வேகமாகவே கொள்ளிடப் பாதையில் திருப்பினார். அடுத்து அடுத்து வந்த சோலைகளின் நெருக்கத்தாலும் பாதைகளின் குறுகலாலும் திசை தெரியாமல் தவித்த விஜயகுமாரனுக்குச் சுரணையை வரவழைக்கச் சத்திரத்துக் காவலன் தனது புரவியை அவர்கள் புரவிகளுக்குச் சமானமாகக் கொண்டு வந்து, ''தென்கிழக்குப் பாதையில் போகிறீர்களே?'' என்று வினவினான் முராரிராவை நோக்கி.

''ஆம்,'' என்று கூறித் தலையசைத்தார் முராரிராவ்.

''இந்த வழி...''

''கோவிலடிக்குச் செல்கிறது, அதுவும் கொள்ளிடத்தைத் தாண்டியபின்.''

''அங்கே பிரெஞ்சுக்காரர்களும் முஸ்லீம்களும் இணைந்த படை இருக்கிறது.''

''இருக்கட்டுமே.''

இதைக் கேட்ட சத்திரக் காவலன் எரிச்சல் அதிகமாகியது. ''அதிர்ஷ்டம் எப்போதும் நமக்குக் கைகொடுக்காது,'' என்றான்.

''இப்பொழுதும் அதிர்ஷ்டம் கைகொடுக்கவில்லை'' என்றார் முராரிராவ்.

''வேறு எது கை கொடுத்ததோ?'' என்று கேட்டான் சத்திரக்காரன்.

''எவை என்று கேள்.''

''சரி, எவை?''

''கைத்துப்பாக்கி, வாள்!'' என்று கூறிய முராரிராவ், தமது புரவியை வேகமாகத் தூண்டினார். மற்றவர்களும் புரவிகளைத் தூண்டவே அடுத்த ஒன்றரை நாழிகையில் கொள்ளிடத்தையும் தாண்டிவிடவே, சற்றுத் தென்மேற்கில் காவிரியின் வடக்குக் கரையில் கோவிலடியின் மதில்கள் மெல்லத் தெரியலாயின.

ஆனால் முராரிராவ் கோவிலடியை நோக்கிச் செல்லாமல் அதைச் சுற்றிச் சென்ற பாதையில் சென்று மீண்டும் ஒரு தோப்பில் நுழைந்தார். திரும்பி விஜயகுமாரனை மட்டும் நோக்கிச் சொன்னார்: ''விஜயகுமாரா, நாம் கோவிலடிக்குச் சற்று அப்பால், அதாவது சிறிது கிழக்கில் காவிரியைக் கடக்கிறோம். கடந்தவுடன்

திருச்சியிலிருந்து தஞ்சை செல்லும் அரசாங்கப் பெருஞ்சாலையை அடைகிறோம். அங்கிருந்து நீ அதிக எச்சரிக்கையுடன் அரசகுமாரியை அழைத்துச் செல். இப்பொழுது நாடு இருக்கும் நிலையில் எதிரே வரும் வீரர் கூட்டம் எது, யாரைச் சேர்ந்தது என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. அவ்வப்போது பக்கத்துச் சோலைகளில் மறைந்தும் மீண்டும், மிக ஜாக்கிரதையாகச் செல், புரிகிறதா?'' என்று வினவினார்.

''புரிகிறது. ஆனால் தாங்கள்?''

''நான் உங்களுடன் வருவது உங்களுக்குப் பாதுகாப்பை அளிக்காது'' என்று கூறினார் முராரிராவ். அதற்கு மேல் ஏதும் பேசாமல் புரவியைப் பறக்கவிட்டு, காவிரிக் கரைக்கு வந்து நதிக்குள் வேகமாக இறங்கினார்.

விஜயகுமாரனுக்கு ஏதும் புரியவில்லை. திரும்பித் தனது பக்கத்தில் வந்துகொண்டிருந்த அரசகுமாரியை நோக்கினான். அரசகுமாரியின் முகம் நட்சத்திர வெளிச்சத்தில் சரியாகத் தெரியவில்லை. அவள் முகத்தைக் காட்டினாலும் முழுவதும் சரியாகக் காட்டவில்லை. ஆனால் அவள் புரவியில் உட்கார்ந்திருந்த தோரணை, சத்திரத்துப் புழக்கடையிலிருந்து யாரிடமும் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் புரவியை நடத்தியது, எல்லாவற்றிலுமே ஒரு கடுமை இருந்ததை அவன் கவனித்தான். அரசகுமாரி அடியோடு விலகி நிறகிறாள் என்பதை அவன் போக்கிலிருந்து விஜயகுமாரன் கவனித்தக்கினாலும் அவள் மௌனத்தை உடைக்க எண்ணினான். ''முராரிராவ் உடன் வருவது நமக்குப் பாதுகாப்பை அளிக்காதாமே?''

அப்பொழுது புரவிகள் நான்கும் காவிரித் தாயின் நீர்க்கால்களைத் தாண்டி மணலில் நடந்து கொண்டிருந்தன. அப்போதும் காவிரியின் காட்சி ரம்மியமாயிருந்தும், அதன் வானக் கூரையிலிருந்த நட்சத்திரங்கள் கண் சிமிட்டியும், எதையும் கவனிக்கவில்லை அரசகுமாரி. அவன் கேள்விக்குப் பதில் சொல்லவுமில்லை.

ஆனால் காவிரியின் தென் கரையைத் தாண்டி மீண்டும் ஓர் அடர்ந்த தோப்புக்கு வந்ததும் அரசகுமாரி புரவியைச் சற்று நிறுத்தினாள். முராரிராவின் புரவியும் சட்டென்று நின்றது. முராரிராவை நோக்கிக் கேட்டாள் அரசகுமாரி, ''எடுக்கட்டுமா?'' என்று.

''எடு, நான் சற்று அப்புறம் மறைவாக இருக்கிறேன்'' என்றார் முராரிராவ்.

அதன் பிறகு விஜயகுமாரனை நோக்கிச் சொன்னாள், ''நீங்களும் சத்திரக் காவலனும்கூடச் சிறிது மறைவில் இருங்கள்'' என்று.

''எதற்கு?'' என்று சீறினான் விஜயகுமாரன்.

அரசகுமாரியின் அடுத்த சொற்கள் சீற்றத்துடன் வெளி வந்தன, ''உம் சீக்கிரம்.'' என்று.

விஜயகுமாரனுக்கு ஏதும் புரியாவிட்டாலும் ஒன்று மட்டும் புரிந்தது, முராரிராவுக்கும் அரசகுமாரிக்கும் பேச்சுக்கு அவசியம் இல்லாத ஏதோ ஒரு சம்பாஷணை நடந்திருக்கிறது என்று. ஆனால் அதைப்பற்றி அவன் வாதிக்க இஷ்டப்படாமல் ஒரு மரத்தின் மறைவுக்குச் சென்றான். சத்திரக் காவலன் முராரிராவைத் தொடர்ந்து அவர் சென்ற திக்கில் சென்றுவிட்டதால் அரசகுமாரியின் செய்கையை விஜயகுமாரன் மரத்தின் மறைவிலிருந்து நன்றாகக் கவனிக்க முடிந்தது. அவன் கண்கள் முன்பாக, தோப்பின் சிறு வெளிச்சத்தில்கூட விரிந்த அந்த நிழ்ச்சி, மயக்கத்தையும் சினத்தையும் ஒருங்கே ஊட்டக்கூடிய அரசகுமாரியின் விபரீதச் செய்கை, அவனை அப்படியே கலக்கி விட்டது.

7. சரித்திர புருஷன்

கவேர மன்னன் மகளாகப் பிறந்ததால் காவேரி யென்றும், அவள் செல்லுமிடங்கள் எல்லாம் 'கா' வெனச் சோலைகள் விரிந்ததால் காவிரியென்றும் திருநாமங்களைத் தாங்கி, தான் ஊர்ந்த மண்ணில் தோன்றிய கோடானுகோடி மக்களுக்கெல்லாம் உணவு தோன்றப் பயிர்களுக்கு உரமூட்டியதால் காவிரித் தாயாக விளங்கிய அந்த மகாநதியின் தென் கரைத் தோப்பு அதிக அடர்த்தியாக இருந்தபோதிலும், இரவு மிக ஒடி கிருஷ்ண பட்சத்துச் சந்திரன் எழுந்து விட்டதால் சிறிது இருள் கிழிந்த நிலையிலேயே காட்சியளித்தது.

அந்த நிலவின் ஒரு கிரணம் அரசகுமாரி, புரவியை நிறுத்தியிருந்த இடத்தில் சற்று அதிகமாகவே மரக் கிளைகளையும் இலைகளையும் ஊடுருவி விட்டதால், அவள் தலைக்கு நேராக இறங்கி அவள் மஸ்லின் முக்காட்டின் வெண்மையைப் பல மடங்கு அதிகமாகக் காட்டியதால், ஏதோ வெண்ணிறத் தேவதையொன்று ஆகாயத்திலிருந்து இறங்கி நிற்பது போன்ற பிரமையை அளித்தது, சற்று எட்ட மரத்தின் மறைவிலிருந்து பார்த்த விஜயகுமாரனுக்கு.

தவிர, அந்த வான் மகள், மற்றவர் அப்புறம் போய்விட்டார்களென்ற நினைப்பில் தனது முக்காட்டை இடக் கையால் அநாயாசமாக எடுத்து மடியில் கிடத்திக் கொண்டதும், மகாராஷ்டிரர்களின் வாள்போல் வளைந்து கிடந்த அவள் நுதலும், சற்றுக் கீழேயிருந்த புருவங்களை அடுத்துக் கரிய

இமைகளுக்குள்ளேயிருந்த வாள் விழிகளும், அந்த ஒற்றைக் கிரணத்தால் தழுவப்பட்டதன் விளைவாக மிதமிஞ்சிய மயக்கத்தையும் அச்சத்தையும் ஒருங்கே அளித்தன, அந்த வாலிபனுக்கு. அதுவரை அவளை நன்றாகக் காணவோ, கண்டால் அழகை அலசவோ அதிக வாய்ப்பில்லாத அந்த வீரனுக்கு அந்தத் தோப்பும், மதியின் கிரணமும் சிறிது வாய்ப்பை அளிக்கவே அவளது தெய்விக அழகைப் பருகிய அவன் மெய்மறந்து நின்றான், மரத்தின் மறைவிலே.

அவள் அதிக உயரமோ பருமனோ இல்லையென்பதையும், புரவியில் உட்கார்ந்திருந்த தோரணையில்கூட ஒரு புஷ்பக் கொடி மரக்கிளையிலிருந்து திடீரென்று புரவியின்மீது இறங்கிவிட்டது போன்ற பிரமையை ஏற்படுத்தியதையும், வெண்மதிக் கிரணம் அவள் கரிய கூந்தலை அதிகக் கருமையாக அடித்ததன்றி அவள் தலையை அலங்கரித்த வைரச் சரத்தை ஆயிரம் மடங்கு அதிகமாக மின்ன வைத்துவிட்டதால், வானத்தில் வரிசையாகத் தோன்றி விட்ட நட்சத்திரங்கள்போல் அவள் தலையாபரணக் கற்கள் பளிச்சிட்டதையும், ஆனால் அவள் கண்ணகளின் ஒளிக்கு முன்னால் அந்த வைரக்கற்களின் ஒளி அர்த்தமற்றுப் போனதையும் கண்ட விஜயகுமாரன், நந்தினியின் அழகைப்பற்றியும் வீரத்தைப்பற்றியும் ஏற்பட்டுள்ள பிரசித்தியில் தவறேதும் இல்லை என்ற முடிவுக்கு வந்தான்.

புரவியில் உட்கார்ந்த வண்ணம், அவள் முக்காட்டைக் கழற்றிய பின்பு நன்றாகத் தெரிந்த அவள் சரீர வாகு அவனை ஏதோ தேவலோகத்துக்குக் கொண்டு போய்க் கொண்டிருந்தது. நீண்ட அவள் மெல்லிய கைகள் முக்காட்டைப் பற்றி மடியில் கிடத்தியதும் அவள் அணிந்திருந்த காச்மீர வெண்பட்டுச் சேலையில் மேல்பகுதியில் தெரிந்த வெளுத்த கழுத்தும், இடையைச் சுற்றியிருந்த இடத்தில் சிறிதும் தளராத கட்டு இருந்ததால் அதற்குமேலே லேசாகத் தெரிந்த அழகிய வழவழத்த மேனியும், மேலே ஆடை ஓடிய இடத்தில் ஆடையை முட்டி வெளிவர முயன்று கொண்டிருந்த இரட்டை முரட்டு மொட்டுக்களும், வெளியே புலப்பட்ட அழகுகளை ஏற்படுத்திக் கொடுக்கவே பெருமூச்செறிந்தான் அந்த வாலிப வீரன்.

ஆனால் புலப்பட்ட அழகுகளுக்குத்தான் என்ன குறை என்று அவன் தனக்குத்தானே வினவிக் கொள்ளவும் செய்தான். புரவியின் வயிற்றை அணைத்து நின்ற கால்களில் ஒன்று அவன் கண்களுக்கு நன்றாகத் தெரிந்ததால், அந்தப் பூங்கொடியிலும் திண்மையான பகுதியும் சாட்டை போன்ற பகுதியும் இன்ப ஜாலங்களை அள்ளித் தெளிக்கும் இணைப்புப் பகுதிகளும்

உண்டென்பதை உணர்ந்த அவன், ஓவியத்திலும் அவளைத் திறம்படத் தீட்டுவது முடியாதென்ற முடிவுக்கு வந்தான். மேலும் அவன் கற்பனைகளை ஓட்டியிருப்பான் அவள் மட்டும் திடீரெனத் தனது சேலையின் மேற் பகுதியை நீக்கியிருக்கா விட்டால்.

என்ன காரணத்தாலோ நந்தினி தனது மார்பை மறைத்து ஓடிய சேலைப் பகுதியைத் திடீரென நீக்கி, ஒரு கையை உள்ளே விட்டு இரண்டு ஆபரணங்களைச் சேலைமீது கிடத்தினாள். அவள் சேலைமீது கையை வைத்தவுடனேயே அதற்குமேல் தனது பார்வையை ஓடவிடுவது அதர்மமென்ற நினைப்பால் சட்டென்று கண்களை மூடிக்கொண்ட அந்த வாலிபனை நோக்கி நகைப்பன போல் காவிரித் தென்றலில் அவன் பதுங்கியிருந்த மரத்தின் இலைகள் சலசலவென சப்தித்தன. அது மரமல்லி மரமாதலால் அதன் நீண்ட வெண்மை மலர்களில் சில அவன் தலை மீது விழுந்தன.

ஆசைக்கும் வேட்கைக்கும் அளவு கிடையாத காரணத்தாலும், மனிதனின் சபலத்தாலும், அறத்தின் நினைப்பு இதயத்தில் அறுக்கப்பட்டுவிடவே அவன் கண்கள் திறந்தன அடுத்த விநாடி. ஆனால் தமிழகத்தின் பெண்மை எத்தனை பண்பாடு உடையது என்று அவன் புரிந்துகொண்டான் அந்தச் சில விநாடிகளில். நந்தினி தனது சேலையை மார்புக்கு மேலேயே தனது முகவாய்க்கட்டையால் அழுத்தி நிறுத்தியிருந்தாள். அவள் கைகள் மட்டும் கழுத்துக்குப் பின்புறம் ஓடி அங்கிருந்த சிறு பட்டுக் கயிறுகளை அவிழ்த்து மார்பைத் தொட்டுக் கொண்டிருந்த பெரிய மகர ஆபரணத்தை மடியில் வைத்துக் கொண்டன. இப்படியே அவள் தனது தலையாபரணத்தையும் கற்களுடனிருந்த மகராபரணத்துடன் சேர்த்தாள். கடைசியில் காலிலிருந்த இரு சிலம்புகளையும் நீக்கினாள். இப்படி அவள் ஆபரணங்களையெல்லாம் கழற்றி மடியில் ஒன்று சேர்ப்பதைக் கண்ட விஜயகுமாரன் அதற்குக் காரணம் புரியாமல் திணறினான். அந்தத் திணறலை அவள் அழைப்பு ஓய வைத்தது.

ஆபரணங்களை எடுத்த பின்பு சேலையைச் சரிப்படுத்திக் கொண்டு, ''இனி நீங்கள் வரலாம்'' என்று அவள் குரல் கொடுத்ததும் விஜயகுமாரன் அவளை நோக்கித் தனது புரவியைக் கண நேரத்தில் செலுத்திவிட்டாலும், அதற்கு முன்பே எங்கிருந்தோ முராரி ராவ் திடீரென முளைத்துவிட்டதாலும், அவன் புரவி அவள் புரவியை அணுகியதும் அரசகுமாரி தனது மடியிலிருந்த நகைகளைத் தனது முக்காட்டின் ஒரு பகுதியைக் கிழித்து, அதில் சுற்றிக் கட்டி அவரிடம் ஆபரண முடிப்பைக் கொடுத்துவிட்டதையும் கண்டதும் பெரும் சினத்துக்குள்ளானான். அவள் நகைகளை நீக்கத் துவங்குமுன்பு அவள் அழகில்

மயங்கியும், அவள் ஆபரணங்களை நீக்க முற்பட்டவுடன் அதன் காரணத்தை ஊகித்துச் சிறிது சினத்தின் வசமும் பட்டிருந்த விஜயகுமாரன் மனம், ஆபரண முடிப்பை முராரிராவிடம் அவள் கொடுத்ததும் சினத்தின் உச்சியை அடைந்துவிட்டதால், ''இதற்கென்ன அர்த்தம்?'' என்று சீறினான் முராரி ராவை நோக்கி.

அரசகுமாரியின் அழகிய வதனத்தில் சிரிப்பின் சாயை லேசாக விரிந்தது. அவள் கண்களும் அந்த வாலிபனை நோக்கி மெள்ளச் சிரித்தன. ''மகாராஷ்டிரத் தளபதி கொள்ளைக் காரரென்று பெயர் வாங்கியிருப்பதை நீங்கள் கேள்விப் பட்டதில்லையா?'' என்ற சொற்களை மிக மதுரமாக உதிர்த்தாள்.

அவள் தன்னைப் பார்த்து நகைக்கிறாளென்பதை அறிந்த விஜயகுமாரன் சற்றே தனது சினத்தை உதறி, ''கேள்விப்பட் டிருக்கிறேன். அதற்கென்ன இப்பொழுது?'' என்று வினவினான்.

அவள் கண்கள் முராரிராவையும் நோக்கி அந்த வாலிபனையும் நோக்கின. கடைசியில் வாலிபனிடம் சொன்னாள் அரச குமாரி, ''அதை நிரூபிக்கிறார் இப்பொழுது'' என்று.

''எப்படி?'' என்றான் விஜயகுமாரன்.

''இந்த நகைகளைக் கொள்ளையடிப்பதன் மூலம்,'' என்று அரசகுமாரி முராரிராவின் கையிலிருந்த ஆபரண முடிச்சைச் சுட்டிக் காட்டினாள்.

விஜயகுமாரன் சிறிது நிதானித்தான். தனது கூரிய விழிகளை அந்த இருவர்மீதும், அவர்களுக்குச் சற்று எட்ட வந்து புரவியில் அமர்ந்திருந்த சத்திரத்துக் காவலன் மீதும் உலாவவிட்டான் ஒரு விநாடி. கடைசியாக அரசகுமாரிமீது அவன் விழிகள் நிலைத்தன கோபத்துடன். ''அவர் கேட்கவில்லை இந்த ஆபரணங்களை'' என்று கூறவும் செய்தான், கோபம் குரலிலும் ஒலிக்க.

''கேட்டார்!'' என்றாள் அரசகுமாரி.

''எப்பொழுது?''

''நம்மை விடுவிக்க ஏற்பாடு செய்தபோதே!''

''விடுவித்ததற்கு இது கூலியா?'' இந்தக் கேள்வியை மிகுந்த உஷ்ணத்துடன் கேட்டான் விஜயகுமாரன்.

அரசகுமாரி ஏதும் பதில் சொல்லாவிட்டாலும் முராரிராவ் மெல்ல நகைத்து, ''சே, கூலியா! என்ன அர்த்தமற்ற பேச்சு!'' என்றார்.

''வேறு என்ன?'' என்று அவரைத் திரும்பி நோக்கினான் விஜயகுமாரன்.

''கொள்ளைக்குக் கூலியென்று பொருள் கிடையாதே,'' என்று சுட்டிக் காட்டிய முராரி ராவ் மெல்ல நகைத்தார். அரச குமாரியும் நகைத்தாள்.

அவர்கள் இருவரும் சேர்ந்து தன்னை ஏளனம் செய்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்ட விஜயகுமாரன் கை அவனது வாளை நோக்கிச் சென்றது. அதைக் கண்ட முராரிராவ் இன்னும் பலமாக நகைத்தார். அந்த நகைப்பு விஜயகுமாரனின் நிதானத்தை அறவே வெட்டி விட்டதால் அவன் வெளிப்படை யாகவே சீறினான், ''தளபதி! உமது நகைப்புக்குக் காரணம் எனக்குப் புரியவில்லை!'' என்று.

''எனக்குப் புரிகிறது.''

''என்ன புரிகிறது?'' என்று கேட்டான் விஜயகுமாரன் சீற்றம் மீண்டும் உதயமான குரலில்.

''உன் ஆசை.''

''ஆம், சத்திரத்தில் நீ கூறவில்லை, இறப்பதானால் இந்த உடையிலேயே இறக்கப் போவதாக?''

''ஆம், சொன்னேன்?''

''நான் என்ன பதில் சொன்னேன்?''

''தஞ்சை வழியில் அதற்கு நிரம்ப வசதி இருப்பதாகச் சொன்னீர்கள்.''

''அது தவறு.''

''ஏன்?''

''இந்தத் தோப்பிலேயே அந்த வசதி கிடைக்கும் வழியை நாடுகிறாய்!'' இதைச் சொன்ன முராரிராவ் பலமாக நகைத்தார். அந்த விநாடியில் அவர் நகைப்பு திடீரென நின்றது. விஜயகுமாரன் வாளின் நுனி அவர் கழுத்தைத் தடவிக் கொண்டு நின்றது.

முராரிராவ் அதைக் கண்டு நகைப்பை நிறுத்தினாரே தவிர, இதழ்களில் தவழ்ந்து கொண்டிருந்த புன்முறுவலை அகற்றவில்லை. ''இது எதற்கு?'' என்று மெல்ல வினவவும் செய்தார்.

''நீங்கள் குறிப்பிட்ட வசதியை விஜயகுமாரனுக்குச் சுலப மாக அளிக்க முடியாது என்பதை உணர்த்துவதற்கு'' என்று பதில் கூறினான் விஜயகுமாரன்.

வாளின் நுனி கழுத்தில் சீறுமோ என்ற பயம் சிறிதும் இல்லாமல் ஆம் என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார் முராரிராவ். வாளின் நுனி கழுத்தைத் தடவி நின்ற சமயத்திலும் அவர் காட்டிய அசட்டையைக் கண்ட விஜயகுமாரன் முராரிராவின் நெஞ்சுரத்தைப் பெரிதும் பாராட்டினான் மனத்துள்.

சற்றுப் பொறுத்து முராரி ராவ் தனது கழுத்தைத் தடவி நின்ற அவனது வாளைச் சாதாரணக் குச்சியை அகற்றுவதுபோல் கையால் அகற்றிவிட்டு, ''விஜயகுமாரா! வாளை உறையில் போடு, நான் சொல்வதை நன்றாகக் கவனி'' என்று சொன்னார். ''இங்கிருந்து தெற்கில் தோப்புக்குள்ளேயே பயணம் செய்தால்

அரை நாழிகைக்கெல்லாம் தஞ்சைப் பெருஞ்சாலையை அடைய லாம். அந்தச் சாலையில் கால் காதம் சென்றதும் பக்கச் சோலை யொன்று பிரும்மாண்டமாகத் தெரியும். அந்தச் சோலையின் நடுவில் பெரும் சத்திரம் ஒன்று இருக்கிறது. அங்கே சென்றதும் இதைச் சத்திரக் காவலனிடம் காட்டு'' என்று கூறி இடையிலிருந்த குறுவாளை எடுத்து விஜயகுமாரனை நோக்கி விட்டெறிந்தார்.

திடீரெனச் சம்பாஷணையோடு சம்பாஷணையாக எதிர் பாராமல் எறியப்பட்ட அந்தக் குறுவாளை இடக் கையில் மிக லாகவமாகப் பிடித்துக் கொண்ட விஜயகுமாரன் அதைத் திருப்பிக்கூடப் பார்க்காமல கச்சையின் ஒரு புறத்தில் செருகிக்கொள்ளவும் செய்தான். அந்தச் சமயத்தில் மீண்டும் சொன்னார் முராரிராவ்: ''இதைக் கண்டால் உங்களுக்கு தேவையான சகல வசதிகளையும் சத்திரக் காவலன் அளிப்பான். அரசகுமாரி அங்கு இந்த உடையை நீக்கிப் பணிப்பெண் உடையை அணியட்டும். அங்கிருந்து நீங்கள் உடனடியாகப் புறப்பட்டால் பொழுது புலருவதற்கு முன்பாகத் தஞ்சை எல்லையை அடையலாம். பிறகு அரசகுமாரிக்கு ஆபத்து ஏதுமில்லை புரிகிறதா?''

இத்துடன் பேச்சை நிறுத்திய முராரிராவ், தமது புரவியைச் சரேலெனத் திருப்பிக்கொண்டு அந்தச் சோலையின் மற்றொரு பகுதியில் மறைந்துவிட்டார். அவரது செய்கைகளாலும் பேச்சினா லும் பிரமித்திருந்த விஜயகுமாரன் தனது வாளை உறையில் போட்டுக்கொண்டு தஞ்சைச் சாலையை நோக்கித் தனது புரவியைத் திருப்பினான். இளவரசியும் சமயபுரச் சத்திரக் காவலனும் பின்தொடர முராரிராவ் சொன்னபடி பயணம் செய்து அவர் குறிப்பிட்ட சத்திரத்தையும் அடைந்தான்.

இரவு மூன்றாம் ஜாமத்தின் பாதியைத் தாண்டி விட்டதால் சத்திரத்தில் வாயில் விளக்கு ஒன்றுதான் எரிந்து கொண்டிருந்தது. மற்றபடி எங்கும் நிசப்தம் பரிபூரணமாக நிலவிக் கிடந்தது. அந்த நிசப்தத்தை அதிகமாகக் கலைக்காமல் மெள்ளப் புரவியைச் செலுத்திய விஜயகுமாரன் சத்திரத்தை அணுகியதும் புரவியிலிருந்து இறங்கி அதன்மீதே சேணத்தை விட்டெறிந்து விட்டுச் சத்திரத்தின் படிகளில் ஏறி, கதவை, முராரிராவின் குறுவாளைக் கொண்டே மெள்ளத் தட்டினான். இரண்டு மூன்று முறை. சிறிது நேரத்திற்குப் பின் கதவின் தாழ்கள் மெதுவாகத் திறக்கப்பட்டன. நடுத்தர வயதுள்ள ஒரு மனிதன் வெளியே வந்து ''யார், நீ?'' என்று விசாரித்தான் விஜயகுமாரனை.

''சத்திரக் காவலன் எங்கே?'' என்று வினவினான் விஜயகுமாரன்.

''நான்தான் சத்திரக் காவலன்'' என்று அவன் கூறியதும்

குறுவாளை அவனிடம் விஜயகுமாரன் கொடுக்கவே, அதை வாங்கி இருமுறை திருப்பிப் பார்த்த காவலன். ''சரி, இப்படி வாருங்கள்'' என்று கதவை முன்புறம் சாத்திக்கொண்டு வந்து சத்திரத்தைச் சுற்றிப் பின்புறம் சென்றான். விஜயகுமாரன் அவனைத் தொடர விஜயகுமாரனை அவன் புரவியும் தொடர்ந்தது. அரசகுமாரியின் புரவியும் சமயபுரத்தான் புரவியும் முன் சென்றவர்களைத் தொடர்ந்தன.

சத்திரத்தின் பின்புறத்திலிருந்த ஒரு மரத்தடிக்கு வந்ததும் சத்திரத்துக் காவலன் சட்டென்று நின்று, ''நீங்கள் இதோ இந்தப் பக்கத்துத் தோப்பு வழியாகச் சென்று விடுங்கள்'' என்று கூறினான். அவன் சொற்களில் சிறிது நடுக்கம் தெரிந்ததை விஜயகுமாரன் கவனித்தான்.

''ஏன்?'' என்று ஏதோ கேட்க முற்பட்ட விஜயகுமாரன் சரேலென்று சொற்களை அடக்கிக் கொண்டான். அவர்கள் வந்த அதே பாதையில் மெல்லிய சரீரத்தையுடைய மற்றொரு மனிதனும் வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்ட விஜய குமாரன் கண்கள் கேள்வி கேட்பனபோல் சற்றே உயர்ந்தன, சத்திரக் காவலனை நோக்கி. சத்திரக் காவலன் முகத்திலும் குழப்பம் மிகுதியாகத் தெரிந்தது. ''இவன் யாரோ புதிதாயிருக் கிறது'' என்றான் சத்திரக் காவலன். பாரதத்தின் சரித்திரத்தைப் புதிதாக எழுத வந்தவன் அந்த இளைஞன் எனபதை அன்று யாரும் உணர்ந்து கொள்ளவில்லை.

8. எமனையும் சுடுவேன்

இரவின் நான்காம் ஜாமம் நடக்கத் தொடங்கிவிட்டதன் விளைவாகக் கிருஷ்ணபட்சத்துச் சந்திரன் தனது கிரணங்களை மிக வெண்மையாக்கி எங்கும் நிலவ விட்டதால், சத்திரத்துப் பாதையில் வந்துகொண்டிருந்த அந்த இளைஞனை மரத்தடி வீசியிருந்த இருளில் மறைந்து நின்ற நால்வரும் நன்றாகவே பார்க்க முடிந்தது. அதே மரத்தை நோக்கி வந்து கொண்டிருந்த வாலிபனுககு வயது இருபத்து நான்குக்கு மேல் இருக்க முடியாதென்பதை அவன் முகத்தில் விழுந்த சந்திர வெளிச்சம் காட்டியது. நல்ல விசாலமான நெற்றி. ஆனால் சற்றே எழுந்து முன்புறம் வந்துவிட்ட அவன் நுதல் அவனுக்கு அதிகமாக அழகு எதையும் அளிக்க வில்லையென்பதையும் தெளிவாகக் காட்டவே செய்தது. அந்த நுதலின் காரணமாக அவன் முகம் அதிக அழகைப் பெறாவிட்டாலும் கண்களில் தெரிந்த ஒரு கம்பீர ஒளியும், நடையில் இருந்த அரச தோரணையும், மிக அலட்சியமாக

www.thamizhthenee.blogspot.com

அசைந்து வந்த வலக் கையும், அவன் ஏதோ பாரை ஆளவந்த மாவீரன் என்ற நினைப்பையே அறிவுறுத்தியது.

சந்திர வெளிச்சத்தில் அவன் முகமிருந்த வெளுப்பும், சட்டையால் மறைக்கப்படாத புறங் கைகளின் தோற்றமும், அவன் அணிந்திருந்த உடையும் அவன் பாரத நாட்டைச் சேர்ந்தவனல்ல என்பதையும், வெள்ளையன் என்பதையும் சந்தேகமற எடுத்துக் காட்டின. அவன் தலையில் குறுக்காக வைக்கப்பட்டுப் பக்கவாட்டில் அகன்றிருந்த 'ஹாட்' என்ற தலை அணியும், கீழே முக்கால்வாசிப் பித்தான்களைப் போடாததால் உள்ளேயிருந்து எட்டிப் பார்த்த ஷர்ட்டும், காலை மூடியிருந்த நிஜாரின் மேல் பாகத்தில் அவன் இடையைச் சுற்றிக் கிடந்த தோல் பெல்ட்டும், அவனை ஏதோ வெள்ளைக்கார வியாபாரிபோல் தோற்றுவித்தாலும், அந்த பெல்டில் செருகப்பட்டிருந்த நீண்ட கைத்துப்பாக்கி அவன் வியாபாரம் வர்த்தகப் பொருள்களைப் பற்றியதாக மட்டும் இருக்க முடியா தென்ற நினைவைச் சந்தேகமற ஊட்டவே செய்தது.

அவன் கண்களில் புலியைப் போன்ற தீட்சண்யம் இருந்தாலும் பாதங்களிலிருந்த பூட்ஸ் இரண்டும் சத்திரத்துப் பாதையில் சிறிதளவும் சத்தம் போடாமல் பூனைபோல் வந்ததால், அந்த வாலிபன் பூனையா, புலியா என்பதை நிர்ணயிக்க முடியாமல் இருந்தது. இத்தனைக்கும் அவன் பொதுத் தோற்றத்தில் எந்தவிதத் திருட்டுத்தனமோ, அச்சமோ இல்லாததையும், அவன் ஒரே நிர்ணயமாக அக்கம் பக்கம் பார்க்காமல் நேராக மரத்தடியையே நோக்கி வந்ததையும் கவனித்த விஜயகுமாரன் சத்திரத்துக் காவலனை நோக்கி, ''அவன் நம்மை நோக்கித்தான் வருவதாகத் தோன்றுகிறது'' என்று கூறினான்.

''ஆம், ஆம். அப்படித்தான் தோன்றுகிறது'' என்று ஒத்துப் பாடிய சத்திரத்துக் காவலன் சில விநாடிகள் யோசித்து விட்டு, ''சரி சரி, உங்களுக்கு என்ன இவனைப்பற்றி? நீங்கள் பக்கத்துத் தோப்பு வழியாகத் தப்பித்துச் சென்றுவிடுங்கள்'' என்று கூறியதுடன், ''உம். இதோ இருக்கிறது வழி'' என்று சற்று எட்ட இருந்த ஓர் ஒற்றையடிப் பாதையையும் சுட்டிக் காட்டினான்.

சத்திரத்து வாயிலின்மீது விட்டெறிந்த கடிவாளங்களைக் கூடக் கையில் எடுக்கவில்லை விஜயகுமாரன். அரசகுமாரியையோ சமயபுரத்துச் சத்திரக் காவலனையோ செல்லுமாறும் பணிக்கவில்லை. ''ஆம்! எங்களை எதற்காகத் திருட்டுத்தனமாக இங்கு அழைத்து வந்தாய்? இங்கிருந்து எதற்காக ஓடச் சொல்லுகிறாய்? இந்த இடத்தில் தங்கி இதோ இருக்கும் பெண்ணுக்கு வேறு ஆடை தந்து அழைத்துச் செல்லத்தானே

குறுவாளுக்குடையவர் உத்தரவிட்டார்?'' என்று சம்பாஷணையில் இறங்கினான்.

''உங்களிடம் குறுவாளைக் கொடுத்தபோது மகாராஷ்டிரத் தளபதிக்கு இங்குள்ள நிலைமை தெரியக் காரணமில்லை'' என்றான் சத்திரக் காவலன்.

''அப்படியானால் குறுவாள் யாருடையதென்று புரிந்து கொண்டுவிட்டாய் நீ?''

''எனக்கென்ன, இந்த ராஜ்யத்தில் யாரிடம் இதைக் காட்டினாலும் புரிந்து கொள்வார்கள்.''

''புரிந்து கொண்டால்?''

''உங்களை யாரும் அணுகவும் அஞ்சுவார்கள். முராரிராவ் கோர்படேயின் பெயர் அல்ப சொல்பமானதல்ல.''

விஜயகுமாரன் வியப்பின் வசப்பட்டான். 'முராரி ராவின் குறுவாளுக்கே அத்தனை சக்தியென்றால் அவர் சக்தி எத்தனை இருக்க வேண்டும்?' என்று தனக்குள் கேட்டுக் கொண்டான். மேலும் ஏதோ அவன் கேட்க முயன்றதும் சத்திரத்துக் காவலன் தடுத்து, ''இப்படியே பேசிக் கொண்டிருந்தால் நீங்கள் தஞ்சை போய்ச் சேர முடியாது'' என்று கவலையைக் காட்டினான்.

விஜயகுமாரன் வியப்பு மேலும் அதிகப்பட்டது. ''நாங்கள் தஞ்சைதான் போகப் போகிறோம் என்பது உனக்கு எப்படித் தெரியும்?'' என்று வினவினான்.

''மேல்புறம் போனால் திருச்சிக்குப் போகலாம். அங்கிருக்கிற நிலைமை பயங்கரம். கோட்டை மிகப் பலமாகப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. உள்ளே செல்லும் ஒவ்வொருவரும் சோதிக்கப்படுகிறார்கள். சிறிது சந்தேகம் இருந்தாலும் சிறையில் தள்ளி வருகிறார்கள். உங்களைப் பார்த்தால் சிறையை விரும்புபவர்களாகத் தெரியவில்லை. ஆகையால் கிழக்கே தஞ்சைக்குத் தான் போவீர்கள் என்று நினைத்தேன். அது தவிர...'' என்ற சத்திரத்துக் காவலன் வாசகத்தை முடிக்காமல் விட்டான்.

''இப்படியே பேசிக்கொண்டிருந்தால் நீங்கள் தஞ்சைக்கும் போக மாட்டீர்கள், திருச்சிக்கும் போக மாட்டீர்கள்'' என்றான் காவலன்.

''வேறு எங்கே போவோம்?'' என்று வினவினான் விஜயகுமாரன்.

''எமலோகத்துக்கு....'' என்றான் காவல்காரன்.

சத்திரத்தைச் சுற்றியிருந்த விசாலமான பாதையில் ஒரே சீராகக் கால்கள் பரவ அரவமேதும் செய்யாமல் நடந்து வந்த வாலிபன் அவர்கள் இருந்த மரத்துக்கு வந்து, அது அளித்திருந்த நிழலுக்குச் சற்று வெளியிலேயே நின்றிருந்தான். சத்திரத்துக் காவலன் சொன்ன கடைசி வார்த்தைகள் அவன் காதில் விழுந்

திருக்கவேண்டும். ஆகவே உறுதியான, ஆனால் மிக மிருதுவான குரலில் வினவினான்: ''அது எங்கே?'' என்று. அவன் தமிழ் உச்சரிப்பு சரியாயில்லை. அது மிகவும் இலக்கணமாகவும் இருந்தால் அவன் என்ன காரணத்தாலோ தமிழைச் சிரமப் பட்டுப் பியன்று வருகிறான் என்பது மட்டும் தெரிந்தது மரத்தடி யில் இருந்தவர்களுக்கு. ஆனால் அவன் தங்கள் உரையாடலில் குறுக்கிட வேண்டிய அவசியம் என்னவென்பது புரியாததால் சிறிது நேரம் மௌனம் சாதித்தனர் நால்வரும்.

அந்த வாலிபன் இரண்டாம் முறை கேள்வியைத் திருப்பி னான் ''அது எங்கே?'' இம்முறை அவன் கேள்வியில் உஷ்ணம் லேசாக உதயமாகியிருந்தது. அதில் அதிகார தோரணையும் இருந்தது.

அதை விஜயகுமாரன் கவனிக்கவே செய்தான். ஆகையால் வெள்ளைக்காரனுக்குப் பதில் சொல்லத் துவங்கிய சத்திரத்துக் காவலனைக் கையின் சைகையால் அடக்கிவிட்டு, ''எது?'' என்று தானே வினவினான், தனது குரலிலும் சிறிது உஷ்ணத்தைக் காட்டி.

வெள்ளைக்கார வாலிபன் விஜயகுமாரன்மீது கண்களை ஒரு விநாடி ஓடவிட்டான். பிறகு முக்காடிட்டிருந்த அரசகுமாரி யையும் அவளுக்குப் பின்னாலிருந்த சமயபுரத்துச் சத்திரக்காரனை யும் கூர்ந்து நோக்கினான்.

அவன் பார்வை மரத்தின் நிழல் தந்த சிறு இருளையும் கிழித்துக் கொண்டு வந்தது அரசகுமாரிக்குப் புலனாகவே, அவள் மிகுந்த தர்மசங்கடத்துடன் அசைந்தாள் தனது புரவியில். சமயபுரத்தானைக் கிலி பிடித்துக் கொண்டிருந்தது. இவை எதையும் கவனிக்கத் தவறாத வெள்ளையன் சொன்னான்: ''பயம் வேண்டாம், இவன் சொன்ன இடத்தைச் சொன்னால் போதும்'' என்று கூறி அதற்குமேல் தமிழ் ஓடாததால் 'லெட் ஹிம் ஸ்பீக்'' எனறு உத்தரவிட்டான்.

இதற்குள் தைரியத்தை வரவழைத்துக்கொண்ட சத்திரக் காவலன், ''அட சனியனே! எதைக் கேட்கிறாய்?'' என்று எரிந்து விழுந்தான்.

''நீ ஒரு இடம் சொன்னாய்?''

''எந்த இடம்?''

''எமலோகம்''

''அது எதற்கு?''

''இந்த நைட் தங்க வேண்டும்?''

''தங்கி?''

''காலையில் போவேன்.''

''முடியாது.''

''ஏன்?''

''அங்கே போனால் திரும்பி வர முடியாது.''

''என்னால் முடியும்.''

''எப்படி?''

பதிலுக்கு அந்த வாலிபன் இடையிலிருந்த கைத்துப் பாக்கியைத் தட்டிக் காட்டினான். உண்மையில் அவன் தட்டிக் காட்டிய தோரணையில் ஓர் அபாரத் துணிவும் அசட்டையும் இருந்ததைக் கவனித்த விஜயகுமாரன், 'இவன் எமனையும் சுட்டு விடுவான் போல்தான் இருக்கிறது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அவனுக்குத் தமிழ் புரியாததால் எமலோகம் ஏதோ அக்கம் பக்கத்தில் தங்கக்கூடிய இடமென்று கேட்கிறான் என்பதை யும் புரிந்துகொண்டு, ''எமலோகம் மேலே யிருக்கிறது'' என்று கூறிக் கையை உயர்த்தி ஆகாயத்தைக் காட்டினான்.

''யூ மீன் ஹெவன்?'' என்று வினவினான் வெள்ளைக்கார வாலிபன்.

''இல்லை. அதற்கு நேர் விரோதம்...''

''ஹெல்...''

ஆமென்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் விஜயகுமாரன். இதைக் கேட்ட அந்த வாலிபன் வாய்விட்டுப் பெரிதாக நகைத்தான். ''தமிழ் இன்னும் சரியாகப் புரியவில்லை'' என்றும் கூறிவிட்டு, ''எமலோகம் எமலோகம் ஹெல் ஹெல்'' என்று இருமுறை சொல்லிக் கொண்டான்.

அவன் நகைத்ததைக் கண்ட சத்திரத்துக் காவலனுக்கு உதைப்பெடுக்கவே, ''உஷ்! உஷ்! சிரிக்காதே!'' என்று எச்சரித்தான்.

''ஏன்?'' என்று கேட்டான் வெள்ளைக்கார வாலிபன். அத்துடன் ஏதோ சந்தேகம் கொண்டு, ''இங்கே ஏன் நிற்கிறீர்கள்?'' என்றும் வினவினான்.

''உள்ளே எமன் இருக்கிறான்'' என்றான் சத்திரக் காவலன் மீண்டும்.

''அப்படியானால் இதுதான் எமலோகமா?'' என்று கேட்ட வெள்ளைக்கார வாலிபன் சத்திரத்தைக் கையால் சுட்டிக் காட்டி மீண்டும் நகைத்தான். அத்துடன், ''எனக்குப் புரிகிறது!'' என்றும் கூறினான் நகைப்பின் ஊடே.

''என்ன புரிகிறது?'' என்ற கேட்டான் விஜயகுமாரன்.

''உங்கள் மனத்தில் பயம் இருக்கிறது'' என்றான் அந்த வெள்ளைக்கார வலிபன்.

விஜயகுமாரன் நிதானத்தைச் சிறிது இழந்தான். ''எனக்கா பயமா!'' என்று சீறினான்.

''ஆம். முதலில் நீ கதவைத் தட்டினாய்'' என்றான் வெள்ளைக்கார வலிபன்.

''தட்டினேன்'' என்றான் விஜயகுமாரன்.

''இவன் திறந்தான்'' என்று சத்திரத்துக்காரனைச் சுட்டிக் காட்டினான் வெள்ளைக்கார வாலிபன்.

''ஆம், திறந்தான் மெள்ள.''

''அப்புறம் நீங்கள் எல்லாரும் திடுட்டுத்தனமாக இங்கு வந்தீர்கள்.''

''அதனால்?''

''உள்ளே யாரையோ கண்டு பயம் உங்களுக்கு. அவன் தான் எமன்.''

''எமன் இல்லை. எமனைவிடக் கொடியவன்'' என்று விளக்கினான் சத்திரக்காரன். ''அவன் கையில் நீங்கள் சிக்கினால் சித்திரவதை நிச்சயம்'' என்று பதில் கூறிய சத்திரக்காரன் சித்திர வதை எப்படியிருக்கும் என்பதைக் குறிப்பிட, கழுத்து, கால் கைகளை வெட்டுவதுபோல் சைகை காட்டினான்.

வெள்ளைக்கார வாலிபன் சிறிது யோசித்தான். பிறகு கேட்டான், ''உள்ளே எத்தனை பேர் இருக்கிறார்கள்?'' என்று.

''ஆறு பேர்.''

''எல்லாரும் சிப்பாய்களா?''

''ஆம்.''

''ஆல் ரைட், வாருங்கள்.''

விஜயகுமாரன் சத்திரக்காரனை நோக்கினான். சத்திரக் காரன், ''இவன் ஏதோ பைத்தியம் போலிருக்கிறது. இவனை நம்பி உள்ளே போகாதீர்கள்'' என்று கெஞ்சினான்.

வெள்ளைக்கார வலிபன் சட்டென்று திரும்பி சத்திரக் காரனை நெருப்புப் பொறி பறக்கும் கண்களால் நோக்கினான். ''பைத்தியமென்று யாரைச் சொல்கிறாய்?'' என்று சுத்தமான தமிழில் கேட்டான்.

''உள்ளேயிருப்பது யாரென்று தெரிந்தால் அங்கே போக முயல மாட்டீர்கள்.''

''இருப்பது ஆறு பேர். உன்னைச் சேர்த்து நாம் ஐந்து பேர். ஐந்து பேர் ஆறு பேர்களைச் சுட முடியாதா?'' என்று வினவினான். அவன்.

''அவர்கள் தலைவன்...?''

''எமனாயிருந்தாலும் சுட்டு விடுகிறேன்.,'' என்றான் அந்த வாலிபன்.

''நம்மில் ஒருவர் பெண்,'' என்றான் சத்திரக்காரன்.

வெள்ளைக்கார வாலிபன் அருகில் வரும்படி அரசகுமாரிக்குக் சைகை காட்டினான். அவளும் புரவியை நகர்த்தி அவனுக்கு எதிரில் வந்து மிக அசட்டையுடன் நோக்கினாள் அவனை. அவனும் அவளை நோக்கினான் கூர்ந்து. மஸ்லின்

துணிக் குள்ளிருந்த கண்களால் அவள் அந்த வாலிபனை உக்கிரத்துடன் பார்த்ததால், வெண்மதியின் நிலவு மஸ்லினை ஊடுருவியதால் அவள் கண்கள் கோபத்திலும் அழகாகத் தெரிந்தன.

''உனக்கு இவர்களைவிடத் துணிவு இருக்கிறது. வா என்னுடன்'' என்று கூறி நடக்க முற்பட்டான்.

''இரு இரு. பொறு!'' என்று உதறலுடன் கூறினான் சத்திரக்காரன்.

ஓர் அடி எடுத்து வைத்த வாலிபன் சற்று நின்று திரும்பி னான். ''என்ன?'' என்று எரிச்சலுடன் கேட்கவும் செய்தான்.

''உள்ளே இருப்பவன் இப்ராஹிம்'' என்று அறிவித்தான் சத்திரக்காரன்.

''யார் அவன்?''

''சந்தா சாகேப்பின் வலக் கை.''

''அப்படியானால் அவனை முதலில் சுட்டு விடுகிறேன்'' என்று கூறி அந்த வாலிபன் மீண்டும் நடக்க ஆரம்பித்தான்.

அந்தச் சமயத்தில் அரசகுமாரி தனது புரவியைச் செலுத்தி அவனை வழி மறித்தாள். ''யார் நீ?'' என்று வினவினாள்.

சிறிது அவன் சிந்தித்தான். பிறகு அவளை ஏறிட்டு நோக்கி விட்டுச் சொன்னான், ''நான் பிரிட்டிஷ் சோல்ஜர்,'' என்று.

''பெயர்?'' என்று மீண்டும் வினவினாள் தஞ்சை அரசகுமாரி.

''ஏன் கேட்கிறாய்?''

''கேட்க வேண்டும் போலிருக்கிறது.''

''ஏன்?''

''உன் துணிவு அதிகமாயிருக்கிறது.''

''துணிவில்லாதவன் இந்த நாடு இருக்கும் நிலையில் உயிரோடு இருக்க முடியாது.''

''உண்மை.''

''அதுவும் எங்கோ இருந்து வந்திருக்கிறேன். தவிர என் உயிரும் லேசில் போகாது.''

''அப்படியானால் உன் பெயரை அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும்.''

''ராபர்ட் கிளைவ்!'' என்ற சொற்கள் மிக நிதானமாக, அலட்சியமாக, ஆனால் மிகத் தெளிவாக உதிர்ந்தன அவன் வாயிலிருந்து.

9. பின்னால் வந்த எதிரி

வெள்ளைக்கார வாலிபன் சர்வசாதாரணமாகவும் மிகுந்த அலட்சியத்துடனும் தனது பெயர் ராபர்ட் கிளைவ் என்பதை அறிவித்தபோதிலும், அவன் அதை உச்சரித்த தோரணை, அவன் ஏதோ பெரிய அரசன் பெயரை உச்சரிப்பதைப் போல் இருந்தபடியாலும், அதில் ஒரு கம்பீரமும் பெருமையுங்கூட ஊடுருவி நின்றபடியாலும் பிரட்டிஷ் படையில் அவன் பெரும் பதவி வகிப்பவனாக இருக்க வேண்டுமென்று நினைத்த தஞ்சை மன்னன் மகள், அத்தகைய பெயர் எதையும் அதுவரை கேட்டிராத காரணத்தால் சிறிது மலைக்கவே செய்தாள்.

அந்த மலைப்பினால் இரண்டு விநாடிகள் ஏதும் பேசாமல் புரவிமீதே அமர்ந்துவிட்ட அவள் தனது மலைப்பை உதறிக்கொண்டு, ''பிரிட்டிஷ் படையில் நீ யார்? காப்டன், மேஜர் என்று ஏதோ சொல்கிறார்களே... அது மாதிரி ஏதாவது பதவி வகிக்கிறாயா?'' என்று வினவினாள்.

இதைக் கேட்ட அந்த வாலிபன் புன்முறுவல் கொண்டான். ''இல்லை, இப்பொழுது அந்த மாதிரி எதுவும் இல்லை. சீக்கிரம் வரும்'' என்று இட்டமாகக் கூறினான், புன்முறுவலின் ஊடே.

பெண்களுக்கு இயற்கையாக உள்ள குணத்தினால் பேச்சை அத்துடன் முடிவு கட்டாமல் மேலும் தொடர்ந்த அரசகுமாரி, ''அப்படியானால் இப்பொழுது நீ யார்?'' என்று வினவினாள்.

''வியாபாரி. போர்ட் ஸெய்ன்ட் டேவிட்டுக்கு உணவுப் பொருள் வாங்கத் திருச்சி வந்தேன்'' என்று தனது பதவியை மட்டுமின்றி, பணியையும் விளக்கினான் அந்த வாலிபன்.

''சொல்ஜர் என்று சொன்னாயே?'' என்று கேட்டாள் அரசகுமாரி.

''ஆம்.''

''சோல்ஜர் என்றால் படை வீரனாயிற்றே?''

''ஆம்.''

''இப்பொழுது வியாபாரி என்கிறாயே?''

''இங்குள்ள பிரிட்டிஷ்காரர்கள் எல்லாரும் அப்படித்தான். வியாபாரிகள் எல்லாரும் சோல்ஜர்கள், சோல்ஜர்கள் எல்லாரும் வியாபாரிகள். இரண்டிற்கும் வித்தியாசம் கிடையாது.'' இதைச் சொன்ன வாலிபன் நகைத்தான் மெல்ல.

அவன் சொன்னதன் பொருளைப் புரிந்து கொண்டதால் நந்தினியும் நகைத்தாள். வியாபாரிகளாக இந்த நாட்டுக்கு வந்த

பிரிட்டிஷ்காரர்கள் தற்காப்புக்காகப் படை வீரர்களாக மாறி, கோட்டைகளையும் மெள்ள மெள்ள சுவீகாரம் செய்து கொண்ட செய்திகளைத் தனது தந்தையிடமிருந்து அவள் கேட்டிருந்ததாலும், அதே விஷயத்தை நகைச்சுவையுடன் வாலிபன் சுட்டிக் காட்டியதாலும் சத்திரத்துக்குள்ளிருந்த ஆபத்தையும் மறந்து அவள் சற்று வாய்விட்டே நகைத்து விட்டாள்.

அந்த இருவர் பேச்சையும் நகைப்பையும் ரசிக்காத விஜயகுமாரன் மரத்து நிழலிலிருந்து தனது புரவியை இழுத்துக் கொண்டு நிலவுப் பாதைக்கு வந்து, ''சிரிப்பதற்கு இப்பொழுது சமயமில்லை.'' என்று சுட்டிக் காட்டினான் அரசகுமாரிக்கு.

நந்தினி அதற்குப் பதில் சொல்லத் துவங்கு முன்பாக வெள்ளைக்கார வாலிபனே பேசத் துவங்கி, ''வேறு எதற்கு சமயம்? பதுங்குவதற்கா? ஓடுவதற்கா?'' என்று வினவினான் இகழ்ச்சி நிரம்பிய குரலில்.

விஜயகுமாரன் விழிகள் நெருப்பைக் கக்கின. ''பேச்சு பலமாயிருக்கிறது உனக்கு. நீ என்ன ஆற்காட்டு நவாபென்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா?'' என்று வினவினான் சினம் தலைக்கேற.

இதைக் கேட்ட அந்த வாலிபன் இரைந்தே நகைத்தான். ''ஆற்காடு நவாப் மை காட்! போயும் போயும் அது ஒரு பதவியா?'' என்று கூறினான் நகைப்பின் ஊடே.

''அந்தப் பதவி கர்நாடக சாம்ராஜ்யத்தில் உயர்ந்த பதவி. நவாப் நினைத்தால் எதையும் செய்யலாம்'' என்றான் விஜயகுமாரன்.

''இருந்தால்தான் செய்யலாம்.''

''என்ன சொல்கிறாய்?''

''இன்றைக்கு இருக்கிற நவாப் நாளைக்குக் கிடையாது. நவாபாகவும் கிடையாது, நபராகவும் கிடையாது. நாளைக்கு ஒரு நவாப் க்ளோஸ் ஆகிறார். யார் கெஞ்சினாலும் அந்தப் பதவியை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்'' என்று கூறிய ராபர்ட் கிளைவ், ''இங்கு இப்படியே நாம் நின்று பேசிக்கொண்டிருந்தால் நாமும் நவாபாகி விடுவோம். அதாவது ஒன்று கைதாவோம் அல்லது கொல்லப்படுவோம்'' என்றும் தெரிவித்தான்.

அந்த வாலிபன் கூறிய சொற்களில் உண்மை இருந்ததாலும், இயற்கையாகவே ஓட இஷ்டப்படாத வீரம் தெரிந்ததாலும், அவனை நெருங்கினான் விஜயகுமாரன். அதே சமயத்தில் அரசகுமாரியும் புரவியிலிருந்து இறங்க முயலவே, வேண்டாம் என்று அவளை நோக்கிக் கையால் சைகை செய்த கிளைவ், ''நீங்கள் எங்களுக்குப் பின்னால் மெள்ளப் புரவியில் வாருங்கள்'' என்று கூறிவிட்டுச் சத்திரத்துக் காவலனை நோக்கிக்

கேட்டான், ''உள்ளே இருப்பவர்கள் தூங்கிக் கொண்டிருக்கிறார்களா, விழித்துக்கொண்டிருக்கிறார்களா?'' என்று.

''நான் வரும்போது தூங்கிக் கொண்டுதான் இருந்தார்கள்'' என்றான் சத்திரத்துக் காவலன்.

''சரி. உன் கையிலிருக்கும் சிறுவாளை என்னிடம் கொடு'' என்று கையை நீட்டினான் கிளைவ்.

''அது முராரிராவுடையது'' என்றான் சத்திரத்துக் காவலன்.

''அதனால் என்ன?''

''இதை அவரிடம்தான் கொடுக்க வேண்டும்.''

''நீ உயிருடன் இருந்தால்தானே கொடுக்கலாம், திருப்பி எடுத்துக் கொள்ளலாம். இப்படி கொடு, உம்,'' என்று கிளைவின் பேச்சு உத்தரவு போல் இருந்ததால் மறு பேச்சின்றி அதைக் கொடுத்தான் காவலன்.

அடுத்தபடி என்ன செய்ய வேண்டுமென்பதை விவரித்தான் கிளைவ்.

சத்திரக்காரன் முதலில் சென்று கதவைத் திறந்து விட்டுப் பக்கவாட்டில் சென்றுவிடட்டும். நானும் நீங்களும் அதோ உங்களுக்குப் பின் நிறகிறானே அவனும் உள்ளே நுழைவோம். உள்ளே இருப்பவர்களை அவன் எழுப்பியதும் நம் இருவர் கைத்துப்பாக்கிகளும் அவர்கள் கண்கள் முன்பு தெரியும். ஆயுதங்களைத் தொட அவர்களுக்கு அவகாசம் இருக்காது. எவனாவது ஆயுதத்தைப் பக்கத்தில் வைத்திருந்து கையால் எடுத்தால் உடனே சுட்டுவிடுங்கள்'' என்று உத்தரவிட்ட கிளைவ், அரசகுமாரியை நோக்கி, ''நீங்கள் உள்ளே வரவேண்டாம்'' என்றும் உத்தரவிட்டு, சத்திரத்து வாசலை நோக்கி நடந்தான்.

அவன் தங்கள் ஆமோதிப்புக்கோ பதிலுக்கோ காத்திராமல் நடந்துவிட்டதைக் கண்ட விஜயகுமாரன் ஒரு கணம் கோபத்தின் வசப்பட்டாலும் அடுத்த விநாடி ஏதோ காந்தத்தால் இழுக்கப்பட்டவன் போல் வலக் கையில் வாளை உருவிக் கொண்டும் இடக் கையில் கைத்துப்பாக்கியை ஏந்திக்கொண்டும் அந்த வெள்ளைக்கார வாலிபனைப் பின் தொடர்ந்தான். சமயபுரத்துச் சத்திரக் காவலனும் அவர்கள் இருவரையும் தனது இடையிலிருந்த குறுவாளை எடுத்துக்கொண்டு பின் தொடரவே, அரசகுமாரி அவர்கள் போவதைச் சிறிது நேரம் புரவியில் உட்கார்ந்த வண்ணமே கவனித்தாள். ஏதோ படையைப் போருக்கு அழைத்துச் செல்பவன்போல் கம்பீர நடை போட்டுக் கொண்டு முன்னால் சென்ற வெள்ளைக்கார வாலிபனைக் கண்ட நந்தினியின் உள்ளத்தில் விவரிக்க இயலாத வியப்பு விரிந்து கிடந்தது.

அந்த வாலிபன் தங்களைத் தொடர்ந்து வந்ததையும் தோப்பு வழியாக ஓட வேண்டிய தங்களைத் திருப்பிச் சத்திரத்துக்

குள் சண்டைக்கு இழுத்துச் செல்ல ஏற்பாடு செய்து விட்டதையும், எத்தனையோ கட்டுக்காவல்களைக் கடந்து அரங்கன் கோயிலுக்குள் நுழைந்த நெஞ்சுத் துணிவுள்ள விஜயகுமாரன்கூட அந்த வெள்ளைக்கார வாலிபன் சொல்லுக்கு ஆட்பட்டு அவனைப் பின் தொடர்ந்துவிட்டதையும் நினைக்க அரசகுமாரிக்கு வியப்பு மனத்தின் எல்லையையும் கடந்து வதனத்திலும் விகசித்ததால், கிருஷ்ணபட்சத்துச் சந்திர ஒளி அவள் முகப் பொலிவை எத்தனையோ மடங்கு அதிகப்படுத்தியது.

தஞ்சை அமைச்சர் டபீர் பண்டிதரின் கண்ணிலும் மண்ணைத் தூவித் தன்னைத் தூக்கி வந்த விஜயகுமாரனையே இஷ்டப்படி இயக்கவல்ல அந்த வாலிபனிடம் ஏதோ ஓர் அபாரமான கவர்ச்சியும் சக்தியும் இருக்கின்றன என்ற முடிவுக்கே அவள் வந்தாள். அப்பேர்ப் பட்டவன் என்னதான் செய்யப் போகிறான் என்பதைக் கவனிக்கத் தனது புரவியையும் மெள்ள மெள்ள முன் சென்றவர்களைத் தொடரவிட்டாள்.

புரவி ராஜநடை நடந்தது. முன்னே சென்றவர்களுக்கெல்லாம் முன்பாக எப்படியும் எதிரிகளைத் தானே முதலில் சந்தித்து விடவேண்டும் என்ற ஆசையுடன் செல்பவன்போல் திடமாகவும், அவசரப்பட வேண்டாமென்று பின்புறம் வந்தவர்களுக்குக் கையால் சைகை காட்டிக்கொண்டும், ராஜநடை நடந்த ராபர்ட் கிளைவ், பாதையின் முடிவுக்கு வந்து சத்திரக் கட்டிடத்துக்குத் திரும்பும் வழியில் சற்று நின்று சத்திரக் காவலனை நோக்கி, ''இனி நீ மெதுவாகச் சென்று கதவைத் திறந்து விடு'' என்று உத்தரவிட்டான்.

சத்திரத்துக் காவலனும் பூனை போல் பதுங்கிப் பதுங்கி நடந்து சத்திரத்துப் படிகளை அடைந்து ஏறித் தாழ்வரையின் மங்கலான விளக்கு வெளிச்சத்தில் ஒரு விநாடி நின்றான். பிறகு மெள்ளக் கதவைத் திறந்தான். திறந்ததும் பக்கவாட்டில் நடந்து தாழ்வரையின் வடக்குக் கோடிக்குச் சென்றான்.

அவன் கதவைத் திறந்த பின்பும் சத்திரத்துக்குள் நிசப்தமே நிலவி நின்றதால் வெள்ளைக்கார வாலிபன் மெள்ளப் படிகளில் ஏறிச் சென்று வாயிற்கதவை ஒரு பக்கமாக அணுகி உள்ளே மெள்ள எட்டிப் பார்த்தான். உள்ளே எந்த அரவமும் இல்லாதிருக்கவே மற்ற இருவரையும் வரும்படி அழைத்து முதலில் அவனே உள்ளே புகுந்து விட்டான். விஜயகுமாரன் சிறிதும் தாமதிக்காமல் சமயபுரத்தானையும் அழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்து, கையில் இருந்த துப்பாக்கியின் குதிரையை இழுத்துக் கொண்டு எந்த நிலையையும் சமாளிக்கத் தயாரானான்.

ஆனால் அங்கே சமாளிக்கக்கூடிய நிலை ஏதும் இல்லாதிருந்ததாகத் தோன்றியது அவனுக்கு. அதேதான்

தோன்றியிருக்க வேண்டும் ராபர்ட் கிளைவுக்கும். அவன் நின்ற இடத்தில் சில விநாடிகள் எச்சரிக்கையுடன் நின்றான். பிறகு எதையோ கண்டு விட்டவன் போல் கூடத்து இருட்டில் வெகுவேகமாக ஓடி எதிரே இருந்த ஓர் அறைக் கதவைக் காலால் வெகுவேகமாக உதைத்தான். அறையிலிருந்த ஒரு பெருவிளக்கின் வெளிச்சம் கூடத்தில் விழுந்தவுடன் சரேலென்று பின்புறம் திரும்பிக் கூடத்தின் எதிர்ப் புறத்தை நோக்கி, அதாவது, விஜயகுமாரன் நின்றிருந்த திசையில் இருமுறை பட்பட்டென்று வெகு துரிதமாகச் சுட்டான். அத்துடன் உள்ளே பாய்ந்து அறையின் விளக்கையும் ஊதி விட்டான். அடுத்த விநாடி அந்தக் கூடம் கன இருளில் அமிழ்த்தப்பட்டது.

தன்னை நோக்கி கிளைவ் துப்பாக்கியைத் திருப்பியதும் ஒரு விநாடி திக்பிரமையடைந்த விஜயகுமாரன், கிளைவின் துப்பாக்கிப் பிரயோகத்தின் விளைவு தன்னைப் பாதிக்காததையும், தனது தலைக்குமேல் சென்று விட்டதையும் கண்டதும் சட்டென்று தானும் திரும்பி, கிளைவ் குறி வைத்த இடத்தில் இருமுறை சுட்டான். பிறகு வலக் கையிலிருந்த வாளையும் பாய்ச்சி இழுத்தான். கிளைவின் கைத்துப்பாக்கியும் விஜயகுமாரன் கைத்துப்பாக்கியும் ஒன்றையொன்று அடுத்தடுத்து சப்திப்பதால் தனக்குப் பின்னால் யாரோ இருவர் அலறியதைக் கேட்ட சமயபுரத்தான் தான் செய்யக்கூடிய ஒரே ஒரு புத்திசாலித்தனமாக பணியைச் செய்தான். அதாவது, தரையில் நெடுஞ்சாண் கட்டையாக விழுந்தான். அப்படி விழுந்த தன்மீது யாரோ ஒருவன் கால் வைத்து ஓடியது புரிந்தது அவனுக்கு. இருப்பினும் அந்தச் சமயத்தில், கூடத்தின் இருட்டில், குறுக்கும் நெடுக்கும் கைத் துப்பாக்கிகளின் கடுவெளிச்சம் மட்டும் தெரிந்து கொண்டிருந்த பயங்கர நிலையில், பூமிப் பிராட்டியைத் தவிர தஞ்சம் ஏது மில்லை என்பதை அவன் நன்றாகப் புரிந்து கொண்டதால் கையைக் காலை அசைக்காமல் கீழே கிடந்தான்.

அடுத்த விநாடியில் திடீரெனக் கூடத்தின் எதிரக்கோடியிலிருந்து இன்னொரு அறையிலிருந்து ஒரு தீபம் கொளுத்தப்பட்டுக் கூடத்துக்கு வந்தது. அப்பொழுது எழுந்தது கிளைவின் குரல், ''வாட்களைக் கீழே போடுங்கள். துப்பாக்கிகளைத் தொட வேண்டாம், அசையும் எவனும் பிணமாகி விடுவீர்கள்'' என்று.

புதிதாகக் கொண்டு வரப்பட்ட விளக்கின் வெளிச்சத்தில் எதிரே மூவர் இறந்து கிடப்பதை விஜயகுமாரன் கண்டான். தன் கத்தியிலிருந்த ரத்தத்திலிருந்து தான் வாளைப் பாய்ச்சி இழுத்த போது அதிலும் ஒருவன் மாண்டிருக்கிறான் என்பது புலனாயிற்று அவனுக்கு. அவனுக்கு நேர் எதிரில் உருவிய வாளுடன் நின்று

கொண்டிருந்தான் ஆஜானுபாகுவான ஒரு முகமதிய வீரன். அவன் நின்ற தோரணையிலிருந்து அவன்தான் இப்ராஹீமாக இருக்க வேண்டுமென்று தீர்மானித்தான் விஜயகுமாரன். அவன் தீர்மானத்தை உறுதி செய்யும் முறையில் எழுந்தது கிளைவின் குரல்: ''நீதான் இப்ராஹீம் என்று நினைக்கிறேன்,'' என்று மிகக் கம்பீரமாக.

இப்ராஹீம் முகத்திலும் அவனிடமிருந்த மற்ற இருவர் முகத்திலும் ஆச்சரியம் படர்ந்தது, வெள்ளைக்காரன் தமிழ் பேசுவதைக் கண்டு. ஆனால் அந்த வியப்பைக் கணநேரத்தில் மறைத்துக் கொண்ட இப்ராஹீம், ''நீ கம்பெனிக்காரன் தானே?'' என்று வினவினான்.

''ஆம்,'' என்றான் கிளைவ்.

''இந்தச் சண்டை இந்தியர்களுடையது. நீ எதற்காகத் தலையிடுகிறாய் இதில்?'' என்று வினவினான் இப்ராஹீம்.

''இந்தியர் சண்டையில் வெள்ளைக்காரர் தலையிடுவது இப்பொழுது சகஜமாகிவிட்டது'' என்று சுட்டிக் காட்டினான் கிளைவ்.

''என்னுடைய வீரரில் மூவர் மாண்டுவிட்டார்கள்'' என்றான் இப்ராஹீம்.

''ஐ ஆம் ஸாரி!'' என்றான் கிளைவ் சிறிது தமிழை மறந்து.

''என்ன?''

''வருந்துகிறேன்?''

''எதற்கு வருந்துகிறாய்?''

''உங்கள் அனைவரையும் கொல்லாதற்கு.''

''அந்தக் குறை இருக்கிறதா உனக்கு?''

''ஆம். ஆனால் இப்பொழுதுகூடத் தீர்த்துக்கொள்ள முடியும்.''

இதைக் கேட்டதும் இப்ராஹீம் சிறிது முகம் சிணுங்கினான். ''உனக்குப் பைத்தியம் ஏதாவது உண்டா?'' என்று கேட்டான் உஷ்ணமாக.

கிளைவ் சிறிது யோசித்தான். பிறகு சொன்னான், ''உண்டு. அது வரும்போது யாரையாவது சுட்டுவிடுகிறேன்'' என்று கூறி விட்டுக் கையிலிருந்த சிறு துப்பாக்கியைச் சிறிது உயர்த்தினான்.

இப்ராஹீம் அதைக் கண்டு சிறிதும் அஞ்சவில்லை. ''நீ கொஞ்சங்கூட மூளை இல்லாதவன். என்னை இப்பொழுது சுடு. அடுத்த விநாடி உயிருடன் இருக்கமாட்டாய்'' என்று கூறினான் கடுசொல்லால்.

''ஏன்?''

''திரும்பிப் பார்.''

''ஆல் ரைட்'' என்று கூறிய கிளைவ் விஜயகுமாரனை நோக்கி, ''அவன்மீது ஒரு கண்ணை வைத்துக்கொள்'' என்று எச்சரித்து விட்டுத் திரும்பினான். அவனுக்குப் பின்னால் ஒருவன் நின்றிருந்தான், கையில் துப்பாக்கியுடன். அவனைப் பார்த்த கிளைவின் கண்கள் பெரும் பிரமிப்பை அடைந்தன. ''யூ!'' என்ற சொல் மிக வியப்புடன் வெளிவந்தது.

அப்படி நின்றிருந்தவன் ஒரு வெள்ளைக்காரப் பாதிரி. அவன் முகத்தில் இறுமாப்பும் விரோதமும் மிதமிஞ்சிக் கிடந்தன. ''ஆம், நான்தான்'' என்றான் அவன்.

கிளைவ் சிறதும் அச்சமின்றிக் கூறினான் அவனைப் பார்த்து, ''போர்டைஸ்! கீழே போடு துப்பாக்கியை!'' என்று.

''இல்லை. உன்னை ஒழிக்கப் போகிறேன்'' என்றான் போர்டைஸ். அவன் கண்களில் வெறி தெரிந்தது மிதமிஞ்சி. அவன் கையிலிருந்த துப்பாக்கியின் குதிரையும் இழுபட்டது. கிளிக் என்ற ஒலியுடன்! ஒரே விநாடி! கிளைவின் உயிர் ஆகாயத்தில் பறக்க இருந்தது.

10. விடுதலையும் விளைவும்

கிளைவின் உயிர் மட்டும் அந்தச் சத்திரத்தில் போயிருந்தால் இந்த நாட்டின் சரித்திரம் எந்தத் திசையில் திரும்பியிருக்கும் என்பதைத் திட்டமாகச் சரித்திர ஆசிரியர்களால் கூடச் சொல்ல முடியாது. அப்படிச் சரித்திர ஆசிரியர்களுக்கு எந்தவிதச் சிரமத்தையும் அளிக்க இஷ்டப்படாத காரணத்தாலோ அல்லது பெரும் சாம்ராஜ்யத்தை நிறுவுவதற்கு அவன் தலையில் விதி எழுதிவிட்ட எழுத்தினாலோ, அல்லது எனது உயிர் அத்தனை லேசில் போகாது என்று சற்றுமுன்பு அவன் கூறிய சொல்லைக் காப்பாற்றுவதற்காகவோ, காரணம் எதுவாயிருந்தாலும், அந்த நெருக்கடியான நிலையிலும் கிளைவ் தனது நிதானத்தையும் துரிதத்தையும் இணைத்தே காட்டினான்.

இரண்டும் இணையாத நிலைகள் என்றாலும் அவன் சம்பந்தப்பட்ட வரையில் அவை இணைந்தே நின்றன. ஒரு விநாடி அவனது கூரிய விழிகள் அந்த வெறி பிடித்த பாதிரியை நிதானத்துடன் நோக்கின. அடுத்த விநாடி அவனது இடக் கையிலிருந்த முராரி ராவின் குறுவாள் சரேலென்று பாதிரியின் கையை நோக்கிப் பறந்துவிட்டது. இம்மியும் குறி தவறாமல் எறியப்பட்ட அந்தக் குறுவாள் பாதிரியின் கையில் பாய்வதற்கும், பாதிரி கைத்துப்பாக்கியின் குதிரையை விட்டுச் சுடுவதற்கும், கிளைவ் அந்தத் துப்பாக்கியின் பாதையிலிருந்து ஓர் அடி இடப்

பக்கம் பாய்வதற்கும், நேரம் கனகச்சிதமாகச் சேர்ந்து கொண்டதால், பாதிரியின் அலறலும் துப்பாக்கியின் வெடிச் சத்தமும் ஒன்றாகச் சேர்ந்து அந்தக் கூடத்தில் பயங்கரமான ஒலிகளைக் கிளப்பின.

இந்தச் சம்பவத்தை அடுத்துப் பாதிரியை நோக்கிப் பாய்ந்த ராபர்ட் கிளைவ் அவரைக் கைப் பிடித்து இழுத்துக் கீழே தள்ளிவிட்டு தனது இடுப்புப் பெல்ட்டின் இன்னொரு புறத்தில் செருகப்பட்டிருந்த சிறு பிரம்பைக் கையில் எடுத்துக்கொண்டு, ''போர்டைஸ்! *முன்பு போர்ட்ஸெய்ன்ட் டேவிட் சாலையில் கொடுத்தேனே நினைப்பிருக்கிறதா? அதை மீண்டும் வாங்கிக் கொள்'' என்று கூறிப பாதிரி மீது பட்பட்டென்று பிரம்பைப் பல முறை பாய்ச்சினான்.

மின்னல் வேகத்தில் தொடர்ந்த அந்தப் பிரம்படிகளிலிருந்து தப்ப போர்டைஸ் வெகுவேகமாக நிலத்தில் புரண்டு ஏற்கனவே தரையில் சரணாகதி செய்து கொண்டிருந்த சமயபுரத்தானுடன் மோதிக் கொள்ளவே, ''யாரடா நீ?'' என்று சமயபுரத்தான் கிலியால் கூவினான்.

சமயபுரத்தானின் கிலி நிறைந்த கூச்சலால் தனது சினத்தை அடக்கிக் கொண்ட கிளைவ் மறுபடியும் பிரம்பைப் பெல்ட்டில் செருகிக்கொண்டு, இடக் கையிலிருந்த துப்பாக்கியுடன் கூடத்து ரணகளத்தை ஒருமுறை நோக்கினான். பிறகு விஜயகுமாரனையும் இப்ராஹீமையும் மாறி மாறிப் பார்த்தான்.

விஜயகுமாரன் அத்தனை நிகழ்ச்சியிலும் கூச்சலிலும் தன் பக்கம் சிறிதும் திரும்பாததையும், தனது உத்தரவுப்படி முஸ்லீம் வீரர்களை நோக்கிக் கைத்துப்பாக்கியையும், ரத்தம் தோய்ந்த வாளையும் நீட்டிக்கொண்டு நிற்பதையும் கண்டதும் திருப்தியுடன தலையை அசைத்துவிட்டு, ''சிப்பாய்! உன்னைப் போன்ற வீரர்கள் போருக்கே பெருமை அளிப்பார்கள்! இத்தனை சத்தத்திலும் சண்டையிலும் தலையை நீ திருப்பக்கூட இல்லையே!'' என்று சிலாகித்தான்.

விஜயகுமாரன் அப்போதும் கிளைவ் பக்கம் திரும்பாமலே கூறினான், ''காரணம் சுயநலம், வீரமல்ல'' என்று.

''சுயநலமா! தட் சஸ்?'' என்று வினவினான் கிளைவ்.

''ஸெல்ப் இன்டரஸ்ட்'' என்று தனக்கும் ஆங்கிலம் சிறிது வருமென்பதை விஜயகுமாரன் காட்டினான்.

---

* ஸெய்ன்ட் டேவிட் கோட்டையிலிருந்து கடலூர் செல்லும் பாதையில் போர்டைஸ் (FORDYCE) என்ற பாதிரியைக் கிளைவ் பிரம்பு கொண்டு அடிக்க, அதை காப்டன் ஜுகாஸ் சிரமப்பட்டுத் தடுத்தான் - Clive-Proconsul of India-by James P. Aawford-P. 75, Latest book on Clive (Pub. 1976)

''சுயநலம்! ஸெல்ப் இன்ட்ரஸட்'' என்று இருமுறை அந்த வார்த்தையை மனப்பாடம் செய்து கொண்ட கிளைவ், ''என்ன சுயநலம்?'' என்று வினவினான்.

''நான் தலையைத் திருப்பினால் என் தலை போயிருக்கும்'' என்ற விஜயகுமாரன் ரத்தம் தோய்ந்த தனது வாளால் இப்ராஹீமின் இடையில் காட்சியளித்த குறுவாளைச் சுட்டிக் காட்டினான்.

இதைக் கேட்ட கிளைவ் எதிரே காலடியில் கிடந்த பாதிரியையும் மறந்து பெரிதாக நகைத்து, ''எந்த அபாயத்திலும் உன் ஸென்ஸ் அப் ஹ்யூமர்-அதுதான் நகைச்சுவை-போகவில்லை. சிறந்த வீரனுக்கு அதுதான் அழகு. இறக்கும்போது சிரித்துக் கொண்டே இறக்கவேண்டும்'' என்று கூறினான்.

விஜயகுமாரன் இதற்கு உடனடியாகப் பதில் சொல்ல வில்லை. இரண்டடியில் இப்ராஹீமை அணுகி அவன் இடையி லிருந்த குறுவாளைக் கையில் எடுத்துக் கொண்ட கிளைவைத் திரும்பி நோக்கிச் சொன்னான்; ''சிரிப்பு எனக்கு இப்பொழுது அவசியமில்லை'' என்று.

''ஏன்?'' கிளைவ் புன்சிரிப்புடன் கேட்டான்.

''இன்னும் கொஞ்ச காலத்துக்கு நான் இறக்கப் போவ தில்லை.''

''எப்படித் திட்டமாகச் சொல்கிறாய்?''

''இறப்பதற்கு முன்பு ஒரு முக்கிய வேலை இருக்கிறது''

''அதனால்?''

''இறக்க மாட்டேன்.''

''அது உன் இஷ்டமா?''

இதைக் கேட்ட விஜயகுமாரன் புன்முறுவல் கொண்டு வினவினான், ''உனக்கொரு சட்டம், எனக்கொரு சட்டமா?'' என்று.

''அதாவது?''

''ரூல்!''

''ஐ ஸீ நான் என்ன சட்டம் சொன்னேன்?'' என்று கிளைவ் வினவினான் வியப்புடன்.

''சற்று முன்பு சொல்லவில்லை நீ-உன் உயிர் லேசில் போகாது என்று?''

''ஆம். உன்னுடன் வந்தாளே அந்தப் பெண்ணிடம் சொன்னேன்'' என்றான் கிளைவ்.

''உன் உயிருக்கு இருக்கும் சட்டம் என் உயிருக்கு ஏன் இருக்கக் கூடாது?''

இதைக் கேட்ட கிளைவ் அந்தக் கூட்டத்தில் யாரும் இல்லாதது போலவும், எதும் நடக்காதது போலவும் தீவிர

சிந்தனையில் இறங்க, கையிலிருந்த துப்பாக்கியையும் இருமுறை ஆட்டிக் கொண்டான், சிந்தனையின் விளைவாக. பிறகு நிதானத் துடன் சொன்னான்,

''விஜயகுமாரா! என் உயிரை ஆண்டவன் என்ன காரணத்துக்காகவோ விட்டு வைத்திருக்கிறான். நான் 1744-இல் அதாவது எனது இருபதாவது வயதில் கையில் பணமின்றி உடை கிழிந்து, ஒரு வருஷம் வின்செஸ்டர் என்ற கப்பலில் பயணம் செய்து இல்லாத கஷ்டமெல்லாம் பட்டுச் சென்னப் பட்டணம் வந்தேன். இந்த ஊர் பிடிக்காமல், வேலை பிடிக்காமல், மனநோய்ப்பட்டு ஸெய்ன்ட் ஜார்ஜ் கோட்டையில் இருமுறை என் பொறியில் ரிவால்வரை வைத்துச் சுட்டுக்கொண்டேன். ரிவால்வர் சுடவில்லை. அப்போது உள்ளே நுழைந்த எனது நண்பன்[1] எட்மண்டைக் கைத்துப்பாக்கியைப் பரிசோதிக்கச் சொன்னேன். அவன் வெளியே சுட்டான். கைத்துப்பாக்கி பெரிதாக வெடித்தது.

''அடுத்து பிரெஞ்சு கடற்படைத் தலைவனான [2]லா பூர்துவானே மதராஸைக் கைப்பற்றியதும் தப்பி, போர்ட் ஸெய்ன்ட் டேவிட், அதுதான் ஸெய்ன்ட் டேவிட் கோட்டைக்கு வந்தேன். அங்கு ஒரு பிரிட்டிஷ் அதிகாரி என்னைச் சீட்டாட்டத் தில் ஏமாற்றப் பார்த்தான். அவனை ஸ்கோல்ட் செய்தேன். அவன் என்னைச் சண்டைக்கு இழுத்தான். [3]என் பொறியில் துப்பாக்கியை வைத்தான். நான் அசையாமல் நின்றேன். அவன் சுடாமல் திகூரெனப் போய்விட்டான். ப்ரண்ட்! யூ ஸீ. எனது உயிர் எந்த நெருக்கடியிலும் போகவில்லை. ஏதோ பெரிய காரியத்திற்காக ஆண்டவன் என்னை உயிருடன் வைத்திருக்கிறார். எனது வாழ் வுக்கு ஏதோ பர்ப்பஸ், அதாவது ஒரு காரணம், இருக்கிறது...''

தனது சரித்திரத்தை இப்படிச் சுருக்கமாகவும், உணர்ச்சி யைக் காட்டாமலும், ஆனால் உறுதியாகவும் தமிழைக் கற்ற வனானாலும் முழுதாகப் பேச முடியாததால் ஆங்காங்கு ஆங்கிலச் சொற்களைக் கலந்தும் பேசிய கிளைவ் கனவுலகத்தில் சஞ்சரித் தான். அவன் பார்வை ஏதோ பிற்காலத்தை எட்டிப் பார்ப்பது போல் இருந்தது. அவன் பேச்சின் தொனி எதிரேயிருந்த இப்ராஹீமையும் கீழே கிடந்த பாதிரியையும்கூட ஏதோ காந்த சக்திக்குள் அடக்கியிருந்ததால் அவர்களும் மெய்மறந்து நின்றனர்.

அந்த வெள்ளைக்கார வாலிபனின் சரித்திரத்தைக் காதில் வாங்கிய விஜயகுமாரனும் அந்தக் காந்த சக்திக்கு

---

1. Edmund Maskeline-Friend to Clive-LaWford's Clive-p. 57.
2. La Bourdonnais captured Madras-sept. 20, 1766, Notes on INDIAN HISTORY-by Carl Marx-P. 61
3. LAWFORD'S CLIVE-P. 58.

உட்பட்டானானாலும், அவன் கண்களிலும் ஒரு புத்தொளியும் ஒரு கனவும் பறந்தன. அவனும் பேசினான் திடமான குரலில்.

''கிளைவ்! உன் உயிரைப் போலத்தான் என் உயிரும். லேசில் போகாது. எனக்கும் ஒரு பர்ப்பஸ், அதுதான் லட்சியம் வாழ்க்கையில் இருக்கிறது. அதை நிறைவேற்றத்தான் நான் வாழ்கிறேன். அதற்காக என்னுடன் வந்துள்ள அரசகுமாரியை அழைத்து வந்த காவலரை மீறினேன். அவளையும் பலவந்தமாகத் தூக்கி வந்தேன். அவளைக் காக்க அரங்கன் சந்நிதியில் நின்ற எந்த வீரனும் என்னைக் கொன்றிருக்கலாம். அல்லது சமயபுரத்தில் முராரி ராவும் கொன்றிருக்கலாம். ஆனால் நானும் சாகவில்லை. சாவைத் தேடுகிறவன் சாவதில்லை. அதற்கு அஞ்சுகிறவன்தான் சாகிறான். வாழ்க்கையில் குறிக்கோள் அதாவது பர்ப்பஸ் உள்ளவன் உயிர் நீண்ட நாள் உடலில் இருக்கிறது. இதுதான் உண்மை. இது உனக்கும் சரி, எனக்கும் சரி'' என்று சொற்களை உதிர்த்தான்.

விஜயகுமாரனை மகிழ்ச்சியும் கௌரவமும் தாண்டவ மாடிய விழிகளால் பார்த்தான் கிளைவ். அவன் கூறியதெல்லாம் உண்மை என்பதற்கு அறிகுறியாகத் தலையையும் அசைத்தான் ஒருமுறை. பிறகு பாதிரியை எழுந்திருக்கச் சொல்லிக் கையைக் காட்டி, அவர் உள்ளங்கையில் பாய்ந்திருந்த முராரி ராவின் குறுவாளைப் பிடுங்கி, ''டேய்! யார் அங்கே?'' என்று குரல் கொடுத்தான். அதைக் கேட்டதும் அதுவரை வெளியே பதுங்கி யிருந்த சத்திரக் காவல்காரன் உள்ளே வந்தான். ''இந்தா குறுவாள்'' என்று அவனிடம் குறுவாளைக் கொடுத்துவிட்ட ராபரட் கிளைவ், ''போர்டைஸ்! வெளியே நிற்கும் நமது வண்டிக்குப் போய் உட்கார். நான் வருகிறேன், சீக்கிரம்'' என்று கட்டளையிடும் தோரணையில் பேசினான்.

படுத்த நிலைவிட்டு எழுந்து நின்று கொண்ட போர்டைஸ் கிளைவை ஒருமுறை முறைத்துவிட்டு, விஜயகுமாரனைப் பார்த்துக் கேட்டார், ''நான் யார் தெரியுமா?'' என்று.

''தெரியாது.'' அலட்சியத்துடனும், வெறுப்புடனும் வெளிப்பட்டது விஜயகுமாரன் பதில்.

''சார்லஸ் ப்ளாயர்* தெரியுமா?''

''செய்ன்ட் டேவிட் கோட்டையின் கவர்னர்!''

''கவர்னர் கவின்சிலில் நான் மெம்பர்.''

''அதற்கென்ன இப்போது?''

''இந்தக் கிளைவ் மீது ஏற்கனவே புகார் செய்திருக்கி றேன்.''

* Charles Floyer-Governor of Fort St. Davidtill 1750 - Dupleix and Clive-by H.H. Dodwel.

''மீண்டும் செய்யப் போகிறாய்?''

''ஆம், ஆனால் நீயும் தப்ப முடியாது.''

''ஏன்?''

''என்னை மரியாதை இல்லாமல் பேசுகிறாய். என்னை ரெவரெண்ட் என்று அழைக்க வேண்டும்.''

''இல்லாவிட்டால்?''

''உன்மீதும் புகார் செய்வேன்.''

இந்தச் சமயத்தில் கதவுக்கருகிலிருந்து அந்தச் சிரிப்பொலி அனைவரையும் அந்தத் திக்கில் திரும்ப வைத்தது. வாசல் தாழ் வரை விளக்கை ஒரு கையிலும் கைத்துப்பாக்கியை இன்னொரு கையிலும் ஏந்த நின்றிருந்தாள் அரசகுமாரி நந்தினி. கூடத்தி லிருந்த மூன்று பிணங்களும்அவற்றிலிருந்து தரையில் பிரவகித்த ரத்தமும், அந்தச் சமயத்திலும் போர்டைஸின் கையிலிருந்து சொட்டிக்கொண்டிருந்த ரத்தத் துளிகளும்கூட அவளைச் சிறிதும் பாதித்ததாகத் தெரியவில்லை. அவள் தன் விழிகளைக் கிளைவ் மீது நாட்டிவிட்டுக் கேட்டாள், ''இவர் பைத்தியம் இல்லையே?'' என்று.

''நிச்சயமாகச் சொல்ல முடியாது'' என்றான் கிளைவ்.

இதைக் கேட்ட போர்டைஸ் வெகுண்டு, ''நீங்கள் எல்லாரும் என்னைத் தூற்றுகிறீர்கள். உங்கள் அனைவரையும் கவர்னர் கோர்ட்டுக்கு இழுக்கிறேன்'' என்று சீறினான்.

அதைச் சிறிதும் லட்சியம் செய்யாத அரசமகள் நந்தினி அறைக்குள் வந்து பாதிரியின்கையைச் சோதித்தாள். பிறகு கீழே கிடந்த சமயபுரத்தானை எழுந்திருக்கச் சொல்லி தனது முக்காட்டுத் துணியிலிருந்து இன்னொரு பகுதியைக் கிழித்து, ''இதை வைத்து இவர் கையைக் கட்டிவிடு'' என்று உத்தரவிட்டாள்.

போர்டைஸ் அவளை வியப்புடன் பார்த்தார். ஆனால் அதைக் கவனிக்காத நந்தினி விஜயகுமாரனைப் பார்த்துக் கேட்டாள் ''பொழுது விடிய அதிக நேரமில்லை. நாம் போகப் போகிறோமா இல்லையா?'' என்று.

விஜயகுமாரன் கிளைவை நோக்கினான். கிளைவ் அரச குமாரியை நோக்கினான். ''நீங்கள் தஞ்சை தானே போக வேண்டும்?'' என்றும் வினவினான்.

''ஆம்,'' என்றாள் அவள்.

''அந்த வழிதான் நானும் போகிறேன். உணவுப் பொருள்களை நேற்றே வாங்கிவிட்டேன். வாசலில் என் *செய்ஸ் இருக்கிறது. அதில் வரலாம்'' என்றான் கிளைவ்.

* இரண்டு குதிரைகளால் இழுக்கப்பட்ட உல்லாச வண்டி. 18-ஆவது நூற்றாண்டில் வெள்ளைக்காரர்களால் உபயோகிக்கப்பட்டது.

''இந்தப் பாதிரி?'' என்று வினவினாள் நந்தினி.

''இவரும் நானும் அதில்தான் வந்தோம். அதில்தான் போகிறோம்'' என்றான் கிளைவ்.

''அப்படியானால்...?''

''நான்கு பேருக்கு இடம் இருக்கிறது.''

அரசகுமாரி சிறிது யோசித்தாதாள். ''இல்லை, நானும் இவரும் சமயபுரத்தானும் எங்கள் புரவிகளிலேயே வருகிறோம்'' என்று கூறிவிட்டு, ''இவர்களை என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று இப்ரஹீமையும் மற்ற இருவரையும் சுட்டிக் கேட்டாள்.

''ஆயுதங்களைப் பிடுங்கிக் கொண்டு இவர்களை நம்முடன் பாதி வழி அழைத்துச் செல்லுவோம்'' என்றான் கிளைவ்.

''பிறகு?''

''விட்டுவிடுவோம்.''

இங்கு இடைமறித்து ஆட்சேபித்தான் விஜயகுமாரன், ''சந்தாசாகேபின் படைத் தலைவனை விடுதலை செய்வதற்கில்லை,'' என்று.

''ஏன்?'' கிளைவின் குரலில் வியப்பு ஒலித்தது.

''சந்தா சாகேபின் படைத் தலைவன் ஒவ்வொருவனும் இந்த நாட்டின் விரோதி. அவர்களை விடுதலை செய்வதற்கில்லை'' என்று திட்டமாகக் கூறிய விஜயகுமாரன் இப்ரஹீமையும் மற்ற இருவரையும் வெளியே செல்லச் சைகை காட்டினான் தனது வாளால்.

இப்ரஹீம் பெரிதாக நகைத்தான். விஜயகுமாரன் சொல்லைக் கேட்டு.

''சந்தா சாகேபையோ அவர்கள் ஆட்களையோ எங்கும் சிறை வைக்கமுடியாது'' என்றும் கூறினான் நகைப்பின் ஊடே. அத்துடன் உக்ரத்துடன் மேலும் சீறினான்: ''நீங்கள் நினைப்பதுபோல் சந்தாசாகேப் இப்போது ஸதாராவில் மகாராஷ்டிரச் சிறையில் இல்லை. ஆற்காட்டை நோக்கி வந்து கொண்டிருக்கிறார் பெரும் படையுடன். வெகு சீக்கிரம் இந்தக் கர்நாடக பூமி போரின் உக்கிரத்தால் நடுங்கப் போகிறது. தமிழர்கள் தலைகளை, ஏன், பிரிட்டிஷார் தலைகளைக் கூட நாங்கள் வெகு சீக்கிரம் பந்தாடப் போகிறோம்'' என்று இரைந்து லவலேசமும் அச்சமின்றிப் பேசினான்.

கிளைவ் முகத்தில் இருந்த புன்முறுவல் மறைந்தது. ''யார் விடுவித்தது சந்தா சாகேபை? யார் பணம் கொடுத்தது மகாராஷ்டிரர்களுக்கு?'' என்று வினவினான் இப்ரஹீமை நோக்கி.

இப்ரஹிமின் பருத்த உதடுகளில் பயங்கரப் புன்முறுவல் உதயமாயிற்று. ''யாரென்று நினைக்கிறாய்?'' என்று கேட்டான்.

''ஒரு மகாவீரன், ராஜதந்திரி, ஆனால் நாடாசை பிடித்தவன். அவனாக இருக்கலாம்'' என்றான் கிளைவ்.

''அவன்தான்!'' என்றான் இப்ரஹீம்.

''பெயரைச் சொன்னால் வாய் வெந்துவிடுமா?'' என்று வினவினாள் அரசுமாரி கிளைவை நோக்கி.

''வாய் வேகாது அரசகுமாரி. ஆனால் இந்த நாடு வெந்து போகும். மக்கள் நாசம் ஏற்படும்'' என்றான் கிளைவ்.

''இந்த நாட்டையே கலக்கவல்லவன் இருக்கிறானா வெளி நாட்டு வியாபாரிகளில்?''

''அவன்?''

''லாண்டிரஸீஸ் என்ற இடத்திலிருந்து வந்தவர். *ஜோஸப் ப்ராங்காய் டூப்ளே!'' கிளைவின் குரல் மரியாதையுடனும் கவலையுடனும் உதிர்ந்தது.

11. கண்ணும் காணோம், பெண்ணும் காணோம்!

நஞ்சைப் பயிர்களைக் கொள்ளை கொள்ளையாக அளித்ததால் தமிழகத்தின் நெற்களஞ்சியம் எனப் பெயர் பெற்றதும், விஜயாலய சோழன் காலத்தில் தலை தூக்கி ராஜராஜன் காலத்தில் மாபெரும் சோழ சாம்ராஜ்யமாக விரிந்து, அதன் தலைநகராகப் பெரும் சிறப்படைந்ததும், கோட்டைக்குள் கோட்டையாக இரு பெரும் மதிள்களையுடையதாய், இரண்டாவது கோட்டைக்குள் நிழலே வெளியில் விழாத கலைவெள்ளம் கொண்ட பிரகதீசுவரர் கோவிலை மையத் தலமாகப் பெற்றதும், சோழ சாம்ராஜ்யம் மறைந்தாலும் இந்து சாம்ராஜ்யம் தெற்கே மறையவில்லையென்பதற்கு அத்தாட்சியாய்ச் சத்ரபதி சிவாஜியின் மகாராஷ்டிர சாம்ராஜ்யத்தின் தென்திசைத் தீபமாய், சிவாஜியின் சகோதரரான வியங்காஜியெனும் ஏகோஜியின் ராஜ்யத்தின் தலைநகராய், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர், ஆற்காட்டு நவாபுகள் அனைவர் கண்களுக்கும் எரிச்சலை விளைவிக்கும் சுதந்திர நகராய் எடுத்து காட்சியளித்தது; தஞ்சை.

எத்தனையோ இன்னல்களுக்கிடையே திணறிக் கொண்டிருந்த தஞ்சை மாநகரின் அரண்மனையின் ஆஸ்தான அறையில் தஞ்சை மண்டல மன்னனும், துகோஜியின் வாளுக்கு மாலையிட்ட அன்னை பூர்ணாபாயின் மகனாதலால் வாள்மகன்

* Joseph Francois Dupleix - History of India - by R. Sathianatha Iyer-P. 85.

www.thamizhthenee.blogspot.com

என்று பிரசித்தி பெற்றவனும், மகாவீரனுமான பிரதாப் சிங் மகாராஜா தீர்க்காலோசனையுடன் அப்புறமும் இப்புறமும் உலாவிக்கொண்டும், சற்று நேரத்திற்கொரு முறை சாளரத்தருகே சென்று வெளியே தலை நீட்டிப் பார்த்தும், பிறகு மீண்டு அறையின் நடுப்பகுதிக்கு வந்தும், உள்ளத்தே ஓடிய பல உணர்ச்சிகளால் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தான்.

எப்பேர்ப்பட்ட சமயத்திலும் எவ்வித உணர்ச்சியையும் காட்டாதவனும் *மகாதந்திரசாலியென அக்காலத்திய பிரிட்டிஷ் சரித்திர ஆசிரியர்களாலேயே சிலாகிக்கப்பட்டவனுமான மகாராஜா பிரதாப் சிங் அன்று, அப்படிச் சலனத்தைக் காட்டி விட்டதற்குக் காரணம் இருந்ததென்பதை எதிரே நின்ற மூவரும் புரிந்து கொண்டிருந்ததால் மன்னனே பேசட்டுமென்று வாளா விருந்து விட்டாலும், அவர்கள் உள்ளங்கள் மட்டும் வாளாவிருக்காமல் தங்கள் நிலையைப் பற்றிய பற்பல கேள்விகளைக் கிளப்பி விட்டுக் கொண்டிருந்தன.

அந்த விபரீத மௌன நிலையை வெட்டவோ என்னவோ பிரதாப்சிங் கடைசியாக உலாவுவதை நிறுத்திச் சட்டென்று திரும்பி எதிரே நின்ற மூவரையும் சில விநாடிகள் நோக்கினான். பிறகு ஒற்றைச் சொல்லை வீசினான், அந்த அறையில், மிக மெதுவாக ஆனால் மிக்க கடுமையாக, ''டபீர்!'' என்று.

அந்தச் சமயத்தை டபீர் பண்டிதரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததால், ''மகாராஜா!'' என்று கூறித் தலை வணங்கினார், மிகத் தாழ்ந்து.

பிரதாப்சிங்கின் தந்திர விழிகள் டபீர் பண்டிதரின் அளவுக்கு மீறிய தலைவணக்கத்தையும் கவனிக்கத் தவறவில்லை. தமது வருமான வரி அமைச்சரிடமிருந்து விலகி, எட்ட நின்ற பட்டாடையாரையும் மற்றொரு கைங்கர்யபரரையும் பார்க்கத் தவறவில்லை. அப்படி ஒரு முறை மூவரையும் பார்த்து விட்டு மீண்டும் டபீர் பண்டிதரின் மீது நிலைத்த மகாராஜாவின் கண்கள் சற்று நிதானத்துடன் வெறுப்பையும் காட்டின. இதழ்களும் வெறுப்புடனும் கோபத்துடனும் அசைந்தன. ''தஞ்சை மாநகரத்தின் பரம்பரை ராஜ பேரிகை முழங்க வில்லை'' என்ற சொற்களும் மன்னன் இதழ்களிலிருந்து உதிர்ந்து வெறுப்பையும் கோபத்தையும் சற்று அதிகமாகக் காட்டவே செய்தன.

''ஆம்'' என்று மிகுந்த பணிவு நிரம்பிய குரலில் ஒப்புக் கொண்டார் டபீர் பண்டிதர்.

''ஏன் முழங்கவில்லை?'' மகாராஜாவின் கேள்வி முழங்கிற்று பேரிகையைப் போல்.

* "The Wily Tanjoriane" History of the Military Transactions of the British Nation in Indonesian - By Robert Orme; Book II - P. 138.

''அரசகுலத்தார் உள்ளே நுழைந்தால் தான் ராஜ பேரிகை சாதாரண காலத்தில் முழங்கும்'' என்றார் டபீர்.

''அப்படி யாரும் வரவில்லை உம்முடன்?''

''இல்லை.''

''என் பெண் வரவில்லை?''

''இல்லை.''

''ஆனால் வெறுங்கையுடன் நீர் வரவில்லை...?''

''மகாராஜா!''

''இதோ இந்த இரண்டு நாமதாரிகளையும் கொண்டு வந்திருக்கிறீர் என் மகளுக்குப் பதில்'' என்று கூறிய மகாராஜா பட்டாடையாரையும் இன்னொரு கைங்கர்யபரரையும் சுட்டிக் காட்டினார்.

டபீர் பண்டிதர் ஏதோ சொல்ல வாயெடுத்தார். ஆனால் அவரை முந்திக் கொண்டார் பட்டடாடையார். டபீர் பண்டிதர் என்ன பயமுறுத்தியும் துரிதப்படுத்தியும் கேளாது அன்று காலையில் மீண்டும் நீராடி, தமது பட்டுக்கரை வேஷ்டியையும் உத்தரீயத்தையும் அணிந்து பன்னிரண்டு திருநாமங்களையும் பரக்கப் பளபளக்கச் சாத்திக் கொண்டு வந்திருந்த பட்டாடையார் மகாராஜாவின் சொல்லைக் கேட்டதும் சிறிது சினத்தை முகத்தில் காட்டினார். ''மகாராஜா! தாங்கள் பேசுவது ஒரு மன்னர் பேசக்கூடிய பேச்சாக இல்லை'' என்று லேசாகச் சினம் கலந்த குரலில் கூறவும் செய்தார் தஞ்சை மன்னனை நோக்கி.

அமைச்சரான டபீர் பண்டிதரே தம்மைக் கண்டு அஞ்சி நிற்க, பட்டுக்கரை ஆடையுடுத்த அந்த பிராம்மணன் சீறுவதைக் கண்டதால் எத்தனையோ விசாரத்திலும் சிறிது வியப்பையும் முகத்தில் காட்டிய பிரதாப்சிங், ''என்ன சொல்கிறீர்?'' என்று வினவினார்.

''அரங்கன் சந்நிதியில் நாங்கள் சேவை செய்கிறோம். பகவத் கைங்கர்யத்தில் ஈடுபட்டிருக்கிறோம்'' என்று பக்கத்திலிருந்த இன்னொரு கைங்கர்யபரரையும் சேர்த்துக்கொண்டு கூறினார் பட்டாடையார்.

''அதனால்?''

''எங்களை அவமதிப்பதால் அரங்கனை அவமதிக்கிறீர். அரங்கனை அவமதிப்பதால் அவன் அடியார்களை அவமதிக்கிறீர்கள். அரங்கன் கோவில் நிர்வாகத்திற்குக் 'கோயிலொழுகு'த் திட்டமிட்ட உடையவர் ஸ்ரீரங்கநாராயண ஜீயரை அவமதிக்கிறீர்.''

''அப்படி என்ன அவமதித்து விட்டேன்?''

''எங்களை நாமதாரிகள் என்று அலட்சியமாக அழைத்தீர்.''

பிராதப் சிங்கின் வியப்பு அதிகமாயிற்று. எதிரே நின்ற வைணவப் பிராமணனின் துணிவு மகாராஜாவின் சிந்தனையைப் பெரிதும் கிளறிற்று. ஆகவே டபீர் பண்டிதரை அறவே புறக்கணித்து, பட்டாடையாரை ஏற இறங்க நோக்கினார். பிறகு கேட்டார், ''உமது பெயர் என்ன?'' என்று.

''ரங்கதாஸன்!'' என்றார் பட்டாடையார்.

''தாஸன் என்ற பெயர் பணிவைக் குறிக்கவேண்டும்'' என்று சுட்டிக் காட்டினார் மகாராஜா.

''அரங்கன் அடியார்களின் திருவடிகளுக்கு நான் தாஸன், அரசர்களுக்கு அல்ல. அதுவும் வைணவத்தை அவமதிப்பவர்களுக்கல்ல'' என்றார் பட்டாடையார் திட்டவட்டமாக.

இந்தச் சமயத்தில் கூட வந்த கைங்கர்யபரர் உடல் வெலவெலத்துக் கொண்டிருந்தது. ''ஸ்வாமி! இது மகாராஜாவின் சந்நிதானம்'' என்று சொற்கள் குழறப் பட்டாடையாரை அடக்கப் பார்த்தார்.

ஆனால் பட்டாடையார் அதற்கெல்லாம் மசிகிற பேர்வழியாகத் தெரியவில்லை. ''மகாராஜா! தாங்கள் க்ஷத்திரியர் அல்லவா?'' என்று வினவினார், ஒரு கையால் சகோதர கைங்கர்ய பரரைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு.

''ஆம்'' என்றார் மகாராஜா.

''சத்ரபதியைக் கீழ்க் குலத்தவர் என்று சொல்பவர்களும் உண்டு. சூர்ய வம்சத்தில் வந்த க்ஷத்திரியர் என்று சொல்பவர்களும் உண்டு.''

''உண்டு''

''ஆனால் நீங்கள் க்ஷத்திரியர்கள்தான். உங்களுக்கு முப்புரி நூல் உண்டு. முக்காலக் கடன்களும் உண்டு.''

''ஆம்.''

''ஆசமனம் உண்டு.''

''உண்டு.''

''அதில் கேசவாய நமஹ தொடங்கிப் பன்னிரண்டு பகவந் நாமங்கள் இருக்கின்றன.''

''ஆம்.''

''அந்தப் பன்னிரண்டு திருநாமங்களை வைணவர்கள் நெற்றி தொடங்கி, பன்னிரண்டு இடங்களில் ஸ்தாபிக்கிறார்கள். அதனால்தான் அவற்றுக்கு நாமம் என்று பெயர். அதை அவமதிப்பவர்கள், கேலியாகப் பேசுகிறவர்கள், சர்வலோக ரட்சகனான நாராயணனை அவமதிக்கிறார்கள். இதனால் பெரும் பாவம் சம்பவிக்கிறது'' என்ற பட்டாடையார் அந்த விவரணத்துடன் நிற்காமல் மேலும் சொன்னார்: ''மகாராஜா! இந்த ராஜ்யத்தின் மீது மட்டுமல்ல, இந்த நாட்டின் மீதும் பல பேர் கண் வைத்திருக்கிறார்கள். சனாதனமான ஹிந்து மதமும் ஹிந்து ராஜ்யங்களும் அழியக்கூடிய பயங்கர நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சமயத்தில் பொறுத்துக் கேளுங்கள். ஏதோ விபரீதம் இந்த நாட்டைச் சூழ்ந்து கொள்ள இருக்கிறது'' என்று விவரித்தார்.

பிரதாப்சிங் மகாராஜா அது உண்மை என்பதைக் குறிக்கத் தலையை ஆட்டிவிட்டுக் கேட்டார்: ''அது உமக்கு எப்படித் தெரியும்?'' என்று.

''சகுனம் அப்படியிருக்கிறது மகாராஜா.''

''என்ன சகுனம்?''

இதற்குப் பட்டாடையார் பதில் சொல்லவில்லை. டபீர் பண்டிதரை நோக்கித் திரும்பி, ''அமைச்சரவர்களே, சொல்லுங்கள்! உங்கள் வாயால் வரட்டும்'' என்று கூறினார்.

டபீர் பண்டிதர் ஒருமுறை பட்டாடையாரை எரித்து விடுவதுபோல் பார்த்தார். பிறகு உதடுகள் துடிக்க, ''அரங்கன் கண்களில்...'' என்று துவங்கி மென்று விழுங்கினார்.

''சொல்லும்.''

''ஒன்றைக் காணோம்!''

பிரதாப்சிங் சிலையென நின்றுவிட்டார் பல விநாடிகள். ''என்ன, கண்ணைக் காணோமா?'' என்ற அவர் கேள்வியில் அதிர்ச்சி ஒலித்தது.

''ஆம். அதிலிருந்த பெரிய வைரக் கல்!'' என்றார் பண்டிதர்.

மகாராஜா ஸ்தம்பித்து நின்றார். 'அரங்கன் கண்ணைக் காணோம்: கண்ணிலிருந்த வைரம் காணோம்' என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டார். சில விநாடி மௌனத்துக்குப் பிறகு கேட்டார். ''எனது பெண்?'' என்று.

''காணவில்லை'' என்று பண்டிதர் சுருக்கமாக உளறினார்.

''கண் காணவில்லை, என் பெண் காணவில்லை. இரண்டையும் ஒரே சமயத்தில் எப்படித் தொலைக்க முடிந்தது உம்மால்?'' என்று விசாரித்தார் மகாராஜா அமைதியுடன்.

அது எரிமலையின் அமைதி என்பதைப் புரிந்து கொண்ட டபீர் பண்டிதர் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு நடந்ததைக் கூறினார்.

மகாராஜா அறை நடுவிலிருந்த மஞ்சத்தில் உட்கார்ந்து கொண்டார். ''விசாரணைக்கு எந்த ஏற்பாடும் செய்யவில்லை நீர்?'' என்று வினவினார்.

''அரங்கன் சந்நிதி சாவி இவர்களிடம் இருப்பதால் வைரத்தின் விஷயமாக விசாரிக்க இவர்களை அழைத்து வந்தேன்'' என்ற டபீர் பண்டிதர்மீது வெறுப்புத் ததும்பிய பார்வையை வீசிய பிரதாப்சிங் மகாராஜா, ''பெண்ணைக்

கொண்டு போனவனைப்பற்றி விசாரிக்க யாரையும் அழைத்து வரவில்லையா?'' என்று வினவினார்.

''இல்லை.''

''ஏன்?- அதற்கும் சம்பந்தப்படாத இருவரைப் பிடித்துக் கொண்டு வந்திருக்கலாமே?''

மகாராஜா தன்னைப் பார்த்து நகைக்கிறார் என்பதைப் புரிந்து கொண்ட டபீர் பண்டிதரும் சிறிது எதிர்ப்பைக் காட்டி, ''மகாராஜா! நான் வருமானத் துறை அமைச்சன், போர் வீரனல்ல'' என்று விளக்கம் கூறினார்.

பண்டிதர் கச்சையில் தொங்கிய வாளை மகாராஜா அர்த்த புஷ்டியுடன் பார்த்தார். ''தெரிகிறது தெரிகிறது'' என்று கூறிய பிரதாப்சிங் சிறிது சிந்தித்துவிட்டு டபீர் பண்டிதரை நோக்கி, ''சரி. இவர்கள் திரும்பி ஸ்ரீரங்கம் செல்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடும். அரண்மனை வண்டி எது இருந்தாலும் அனுப்பும்'' என்று உத்தரவிட்டார்.

''இளவரசி....''

''அதைப்பற்றிக் கவனிப்போம்.''

''எப்பொழுது?''

''இனிமேல் எப்பொழுது கவனித்தால் என்ன?''

''மகாராஜா! இளவரசியாருக்கு ஆபத்து ஏதாவது நேர்ந்தால்?''

''அவளுக்குத் தற்காப்பு செய்து கொள்ளத் தெரியும்'' என்று கூறிய பிரதாப்சிங், 'இப்பொழுது என் பெண்ணைவிட முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயங்கள் இருக்கின்றன. நீர் போய் மானாஜியை அனுப்பும்'' என்று உத்தரவிட்டார்.

அவர் குரலில் கவலை தோய்ந்து நின்றது. அந்தக் கவலையைக் கலைக்கவோ குலைக்கவோ தெரியாது; திடீரென ராஜபேரிகை திமுதிமுவென சப்தத்தது, வெளியே கோட்டையின் வடக்கு திசையில். அதே சமயத்தில் உள்ளே சாளரத்தின் மூலம் மன்னனை நோக்கி ஒரு பேரம்பும் பாய்ந்து வந்தது.

12. காரணங்கள் மூன்று

அரசகுலத்தார் வரவையோ அல்லது எதிரிகள் வரவையோ மட்டும் குறிப்பதற்காக ஒலிக்கும் அரண்மனைக் கோட்டை வாசல் ராஜ பேரிகை திடீரென்று திமுதிமுவெனச் சப்தித்ததே அரசன் ஆஸ்தான அறையிலிருந்த டபீர் பண்டிதருக்கும் மற்றொரு கைங்கர்யபரருக்கும் திகிலை விளைவித்த தென்றால், அதைத் தொடர்ந்து பேரம்பு ஒன்றும்

சாளரத்தின் மூலமாக அரசனை நோக்கிப் பாய்ந்து வந்தது பயமென்பதை அறியாத பட்டாடையாருக்குக்கூட ஓரளவு பயத்தை விளைவிக்கவே செய்தது.

ஆனால் இவை அனைத்தும் பிரதாப ஸிம்ஹன் என்று மகாராஷ்டிரக் கவிஞர்களாலும், பிரதாப்சிங் என்று வெளிநாட்டு வெள்ளைக்காரர்களாலும், உள்நாட்டு முகம்மதியார்களாலும் அழைக்கப்பட்ட தஞ்சை மன்னருக்கு மட்டும் எந்த வித அச்சத்தையோ அதிர்ச்சியையோ விளைவிக்காததால் அவர் இருந்த இடத்தைவிட்டு நகராமலே உள்ளே பறந்து வந்த பேரம்பை மட்டும் கவனித்தார்.

வந்த அம்பும் அவர்மீது விழாமல் எட்ட இருந்த மஞ்சத்தின் மீதே விழுந்ததால் அதை எடுக்க மட்டும் மகாராஜா நாலடி நடந்து மஞ்சத்திலிருந்த அந்தப் பெரிய அம்பைக் கையிலெடுத்துத் தூக்கினார். அம்பின் நுனி நன்றாகச் சிறு சீலையால் சுற்றப்பட்டிருந்தது. மேலும் அதன் இரும்பு முகப்புக்கு அடுத்தபடி இருந்த மரப்பகுதியில் ஒரு சிறு முடிப்புத் தொங்கியதையும் கண்ட பட்டாடையார்கூடத் தமது முகத்திலிருந்த சினத்தை நீக்கிக்கொண்டு வியப்புடன் நோக்கினார், மன்னர் கையிலிருந்த வாளியை. பிரதாப் சிங் மகாராஜாவின் கண்கள் ஒரு விநாடி அந்த வாளியையும் அதன் கழுத்திலிருந்த சிறு முடிப்பையும் கூர்ந்து நோக்கின. அம்பின் முகப்பில் கெட்டியான சீலைத் துணியொன்று சுற்றப்பட்டிருந்ததைக்கூடப் பார்த்தார் மகாராஜா. பிறகு மெல்ல முடிப்பை அவிழ்த்து அதற்குள் இருந்தவற்றை நோக்கிவிட்டு அவற்றில் இரண்டொன்றைக் கையால் தடவியும் பரிசோதித்துவிட்டு முடிப்பை டபீர் பண்டிதரிடம் நீட்டினார்.

முடிப்பிலிருந்தவற்றை டபீர் பண்டிதர் பார்த்ததும் அவர் முகத்தில் கிலேசம் மிதமிஞ்சிப் பரவவே, ''அரசகுமாரியின் நகைகள்!'' என்று குரல் நடுங்கச் சொற்களை உதிர்த்தார்.

முடிப்பிலிருந்த நகைகளைப் பட்டாடையார் பார்த்ததும், அரங்கன் கோயிலில் நடந்த தடபுடலில் அரசகுமாரியின் நகைகளை அவர் சரியாகப் பார்க்காததால், ''இவையா! அரசகுமாரியின் நகைகளா!'' என்று வினவினார் வியப்புடனும் திகிலுடனும்.

இதற்கு அமைச்சர் பதிலேதும் கூறவில்லை, பதில் கூறத் திராணி இல்லாததால், நா எழாததால்.

பிரதாப ஸிம்ஹ மகாராஜாவே கூறினார் மிகுந்த நிதானத்துடன், ''ஆம்'' என்று.

''மகாராஜா! அப்படியானால் இந்த அம்பு...'' என்று பட்டாடையார் சிறிது கலக்கத்துடன் வினவினார்.

''மகாராஷ்டிரர்கள் அம்பு!'' மகாராஜாவின் குரலில் லேசாகச் சீற்றமிருந்தது.

''மகாராஷ்டிரர்கள் வாள் வீரர்களே தவிர வில் வீரர்கள் என்று கேள்விப்பட்டதில்லையே!'' என்றார் ரங்க தாஸரான பட்டாடையார்.

''தஞ்சை மண்டலத்துக்கு வந்துள்ள மகாராஷ்டிரர்கள் சிலர் தமிழ்நாட்டு வில் வீரர்களிடமிருந்து வில் வித்தையும் பழகியிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் அதில் கைதேர்ந்தவர்'' என்றார் மகாராஜா.

அதுவரை திகில் பிடித்து நின்ற பண்டிதர், ''என்ன சொல்கிறீர்கள் மகாராஜா?'' என்று வினவினார்.

''எனது பெண் க்ஷேமமாக இருக்கிறாள்'' என்று அறிவித்த மகாராஜாவின் குரலில் சிறிது சாந்தியும் ஒலித்தது.

டபீர் பண்டிதரும் மற்ற இருவரும் ஏதுமறியாமல் திணறினாலும் மகாராஜா மட்டும் அம்பை மீண்டுமொரு முறை பரிசோதித்துவிட்டு டபீர் பண்டிதரை நோக்கி, ''முராரி ராவின் பாதுகாப்பு நந்தினிக்கு இருக்கிறது. ஆகையால் கவலை வேண்டாம். இந்த அம்பைப் பத்திரமாய் வைத்திருங்கள்'' என்று கூறி அம்பையும் பண்டிதரின் கைகளில் திணித்தார்.

பண்டிதர் பிரமிப்புப் பல மடங்கு உயர்ந்ததால், ''என்ன! இது முராரி ராவின் அம்பா?'' என்று குரலிலும் பிரமிப்புத் துலங்க விசாரித்தார்.

''அதன் இறகுகளுக்குக் கீழே இருக்கும் குறியைப் பாரும். இந்தக் குறி முராரி ராவின் குறுவாள்களிலும், வாள்களிலும் இருக்கும்'' என்று மகாராஜா சுட்டிக் காட்டினார்.

அம்பைக் கூர்ந்து நோக்கிய பண்டிதர் தமது பெரிய வட்டாத் தலைப்பாகையுடன் தலையைச் சற்று அளவுக்கு அதிகமாகவே அசைத்து அரசர் சொன்னதை ஆமோதித்தார். இருப்பினும், ''முராரிராவ் எப்படி எங்கு அரசகுமாரியைச் சந்தித்தார்? இந்த அரண்மனைக்குள் நாம் அறியாமல் எப்படி நுழைந்தார்? நுழைந்தவர் இந்த அம்பை எதற்காகச் சாளரத்தின் மூலம் எய்தார்?'' என்று கேள்விகளைச் சரமாரியாகத் தொடுத்தார்.

மகாராஜாவின் இதழ்களில் இகழ்ச்சி கலந்த புன்சிரிப்பு ஒன்று உதயமாயிற்று. வருமானத் துறை மந்திரி அந்தத் துறையின் விவகாரங்களில் இணையற்ற அறிவு படைத்தவரானாலும் மற்ற விவரங்களில் அதிகப் பரிச்சயமில்லாதவர் என்ற பொருள் மகாராஜாவின் புன்சிரிப்பில் தெளிவாகப் பளிச்சிட்டது. ஆனால் அதை வெளிக் காட்டாமல் மகாராஜா கூறினார்: ''முராரிராவுக்கும் நமக்கும் அதிக நட்பில்லை என்பது உலகறிந்த விஷயம். ஆகவே அவர் என்னை நேரில் சந்திக்க இஷ்டப்பட.வில்லை'' என்று.

''அதனால்?'' டபீர் பண்டிதரின் கேள்வி சுரணையின்றி வந்தது அவர் உதடுகளிலிருந்து.

''அரண்மனைக்குள் வந்து புரவியில் அமர்ந்தபடியே இந்தச் சாளரத்துக்குள் இந்த அம்பை எய்துவிட்டுப் போயிருக்கிறார்'' என்று விளக்கினார் மகாராஜா.

''அவர் உள்ளே வந்ததால்....'' பண்டிதர் பேச்சை முடிக்கவில்லை.

''அவர் அரசகுலத்தின் தூர உறவினராதலால் ராஜ பேரிகை சப்தித்தது.''

''அப்படியா!''

''ஆம். தம்மை அறிவித்துக் கோட்டைக்குள் நுழைந்தார். அவரது வாயு வேகப் புரவியில் வந்து அம்பெய்தார், போய் விட்டார்.''

''இந்த அம்பு தவறி மன்னர்மீது விழுந்திருந்தால்?''

''எதுவும் ஆகாது. முனை கட்டப்பட்டிருக்கிறது. முடிச்சு அதன் வேகத்தைத் தளர்த்தியிருக்கிறது. இந்த முடிச்சுப் பளுவுடன் அம்பெய்யக்கூடிய மகாராஷ்டிரர் இருவர்தான் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் முராரிராவ்.''

இதைக் கேட்டதும் அந்த அறையில் மௌனம் நிலவியது. சில விநாடிகள். அதைப் பட்டாடையார் கலைத்து, ''மகாராஜா! அரசகுமாரியின் நகைகள் எப்படி முராரிராவின் கைகளில் கிடைத்தன?'' என்று வினவினார்.

''அரச குமாரியே கொடுத்திருக்கிறாள். வழியில் ஆற்காட்டுப் படைகள் நடமாடுவதாலும், அவர்களிடமிருந்து பாதுகாக்க இந்த நகைகளை முராரி ராவ் வாங்கிக் கொண்டிருக்கிறார்'' என்று விளக்கினார் பிரதாபஸிம்ஹ மகாராஜா.

ஏதோ அத்தனையையும் நேரில் பார்த்ததுபோல் மகாராஜா சொன்னது பண்டிதருக்கும் மற்றவர்களுக்கும் அதிக நம்பிக்கையை அளிக்காவிட்டாலும் மேற்கொண்டு மகாராஜாவைக் கேள்விகள் கேட்பது உசிதமில்லையென்ற காரணத்தால் மற்றவர்கள் வாளாவிருந்த சமயத்தில் ஆஸ்தான அறைக் கதவின் மூலம் உள்ளே நுழைந்த காவலன் ஒருவன் தலை தரையில் தொடும்படி மன்னரை வணங்கிவிட்டு, ''ஸதாரா தளபதி இதைத் தங்களிடம் கொடுக்க உத்தரவிட்டார்'' என்று கூறி ஒரு கடிதத்தை நீட்டினான்.

''என்ன மகாராஜா?'' பண்டிதர் குரலில் கவலை தெரிந்தது.

''இதில் கண்டிருப்பது...'' என்று கூறிப் பண்டிதரிடம் ஓலையைக் கொடுத்தார் மகாராஜா. அத்துடன், ''இரைந்தே படிக்கலாம்'' என்றும் கூறினார்.

ஓலையிலிருந்த விஷயத்தைக் கண்டதும் பண்டிதர் முகத்தில் சீற்றம் தெரிந்தது. ''அயோக்கியன்! அயோக்கியன்!'' என்று இருமுறை உணர்ச்சி மீறிக் கூவியும் விட்டார் டபீர்.

''படியும்!'' கட்டளை திட்டமான குரலில் ஒலித்தது.

மெள்ள மெள்ளப் படித்தார் ஓலையைப் பண்டிதர்.

''பிரதாபஸிம்ஹருக்கு முராரிராவ் எழுதிக் கொண்டது. நந்தினியை நல்ல தளபதி காவலில் அனுப்பாமல் கத்தியை உருவக்கூடத் தெரியாத டபீரின் துணையுடன் அனுப்பியது சரியல்ல. அதுவும் நாடு இன்றிருக்கும் நிலையில் உங்கள் எல்லையைவிட்டு ஆற்காடு ஆதிக்கத்திலிருக்கும் ஸ்ரீரங்கத்துக்கு அனுப்பியது மிக மிகத் தவறு. ஆனால் அரசகுமாரியைத் தமிழகத்தின் சிறந்த வீரன் ஒருவனிடம் ஒப்படைத்திருக்கிறேன். ஆகவே கவலை வேண்டாம். நந்தினியின் நகைகளை நான் எடுத்துக்கொண்ட காரணம் மற்றவர்களுக்குப் புரியாவிட்டாலும், உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன் -- முராரிராவ்'' என்ற வரிகளை எரிச்சலுடன் படித்தார் பண்டிதர்.

இதைக் கேட்ட பட்டாடையார் உள்ளத்தில் அரசகுமாரி தப்பியதால் ஏற்பட்ட சாந்தியின் விளைவாக அவரிடமிருந்து பெருமூச்சென்று வெளிவந்தது. ''நல்ல வேளை!'' என்று அந்தப் பெருமூச்சைத் தொடர்ந்து ஒரு சொல்லையும் உதிர்த்தார் பட்டாடையார்.

''எது நல்லது?'' என்று சீறிய டபீர் பண்டிதர், பட்டாடையாரை நோக்கித் தமது தீ விழிகளைத் திருப்பினார்.

''அரசகுமாரி மீது அரங்கன் கருணைக் கண் விழுந்தது'' என்று பதில் சொன்ன பட்டாடையார், அரங்கன் பள்ளி கொண்டிருக்கும் ஸ்ரீரங்கத்தின் திசையில் கண்களைத் திருப்பி, கைகளையும் கூப்பினார்.

கோபத்தின் காரணமாக நிதானத்தைத் தப்ப விட்டிருந்த டபீர் பண்டிதர், ''அரங்கன் கண்தான் போய் விட்டதே!'' என்றார்.

''ஒரு கண், அதுவும் நாம் புதைத்த ஒரு கல், அதுதான் போயிற்று. அகண்டமான அவன் அருட்பார்வை எங்கும் எப்போதும் போகாது. அது விழுபவர்கள் மீது விழும். அரசகுமாரியின்மீது விழுந்திருக்கிறது'' என்று உறுதியுடன் கூறினார் பட்டாடையார்.

''அரசகுமாரியின் மீது என்ன அத்தனை பரிவு ஸ்ரீரங்கநாதனுக்கு?'' என்று கேட்டார் பண்டிதர்.

''அரசகுமாரிக்கு அவனிடமுள்ள பக்தி காரணம். பத்துடை அடியவர்க்கு எளியனான் பகவான் அடியார்களை எப்பொழுதும் காத்து நிற்கிறான். ஆனால் பிறர்களுக்கு...'' என்ற பட்டாடையார் அத்துடன் நிறுத்திக் கொண்டார்.

''பிறர்களுக்கு?'' பண்டிதரின் கேள்வி சிறிது சினத்துடன் ஒலித்தது.

''பிறர்களுக்கு அரிய வித்தகன்'' என்ற பட்டாடையார், ''பக்தியில்லாதவர்கள் அவன் சங்கல்பத்தைப் புரிந்துகொள்ள முடியாது'' என்றும் திட்டமாகக் கூறினார்.

அவர்கள் சண்டையை அத்துடன் நிறுத்தத் தீர்மானித்த மகாராஜா, ''அமைச்சரே! இவர்களைத் தகுந்த மரியாதைகளுடன் ஊருக்கு அனுப்பி வையுங்கள். தலை போகும் காரியங்கள் நம்மை எதிர்நோக்கியிருக்கின்றன'' என்று உத்தரவிட்டார்.

பண்டிதர் வாயைப் பிளந்தார். ''தகுந்த....மரியாதைகளுடனா!'' என்றும் கேட்டார் ஆச்சரியத்துடன்.

''ஆம். கோவிலில் தொண்டு புரிபவர்களுக்கு நாம் என்ன மரியாதை செய்கிறோம்?'' என்ற மகாராஜாவின் கேள்வி மேலும் திகைக்க வைத்தது பண்டிதரை. ''பெருமாள் கண் வைரம் காணாததற்கு இவர்களை விசாரிக்க வேண்டாமா?'' என்று கேட்டார்.

''இவர்கள் நமது ராஜ்யத்தைச் சேர்ந்தவர்களல்ல. ஸ்ரீரங்கம் தஞ்சை அரசைச் சேர்ந்ததல்ல. ஆகவே விசாரிக்க வேண்டியது நாமல்ல. தவிர இவர்கள் அரங்கன் சந்நிதிக் கதவைத் திறந்தபோதே பெருமாளின் கண் வைரம் காணவில்லை. தவிர நீர் கூறியபடி நீங்கள் அங்கே போகுமுன்பு உங்களை அறியாமலே இன்னொரு வீரன் அங்கே இருந்திருக்கிறான். அவன்கூட அதைத் திருடியிருக்க முடியாது. ஏனென்றால் திருட வந்தவனாயிருந்தால் உங்கள் வருகைக்காக அவன் காத்திருக்க மாட்டான்'' என்று விளக்கிய மன்னர், மேலும் பெருந்தன்மையுடன், ''இங்கு அழைத்து வந்த அபசாரத்திற்கு அமைச்சரையும் என்னையும் மன்னித்து விடுங்கள்'' என்றும் கூறிவிட்டு, ''சரி, டபீர்! இவர்களை அனுப்பிவிட்டு வாரும்'' என்று கூறி, பேட்டி முடிந்து விட்டது என்பதற்கு அறிகுறியாகக் கையை அசைத்தார்.

ஆனால் பேட்டி அவ்வளவு சுலபத்தில் முடிவதாயில்லை. மீண்டும் ஒரு காவலன் உள்ளே நுழைந்து தலை வணங்கினான். மகாராஜாவின் விழிகள் அவனை நோக்கிக் கேள்வி கேட்கும் பாவனையில் திரும்பியது. காவலன் கூறினான், ''தங்கள் பேட்டிக்கு இருவர் காத்திருக்கிறார்கள்'' என்று.

''யாரது?'' என்ற தஞ்சை மன்னர், ''யாராயிருந்தாலும் கோட்டைக் காவலரைப் பார்க்கச் சொல்'' என்று உத்திரவிட்டார்.

மன்னர் உத்தரவுக்கு மசியவில்லை காவலன். ''தங்களைத்தான் பார்க்க வேண்டுமாம்!'' என்று பணிவுடன் தெரிவித்தான்.

''முடியாதென்று சொல்லிவிடு.'' மகாராஜாவின் குரல் கடுமையுடன் ஒலித்தது.

''சிபாரிசுடன் வந்திருக்கிறார்கள்.'' காவலன் மீண்டும் கூறினான் வலியுறுத்தி.

''யார் சிபாரிசு?''

''அரசகுமாரியின் சிபாரிசு.''

''என்ன?''

''ஆம். அரசகுமாரிதான்.''

''எங்கிருக்கிறாள் அவள்?''

''அந்த இருவருடன் வெளியில் காத்திருக்கிறார்கள்.''

''என் மகளா!''

''ஆம்.''

''எப்பொழுது வந்தாள்?''

''இப்பொழுதுதான்.''

''ராஜ பேரிகை ஏன் சப்திக்கவில்லை?''

''அரசகுமாரியை அடையாளம் புரியவில்லை?''

பிரதாப் ஸிம்ஹர் காவலனை வியப்புடன் நோக்கினார். அவரைவிட வியப்புடன் பட்டாடையாரும் நோக்கினார். பண்டிதர் மட்டும் கோபத்துடன், ''அரசகுமாரியையே உங்களுக்கு அடையாளம் புரியவில்லையா?'' என்று கேட்டார்.

''இல்லை.''

''காரணம்?''

காரணம் அவன் விவரிக்கத் தேவையில்லாததாக இருந்தது. ஏனென்றால் காரணம் ஓசைப்படாமல் ஆஸ்தான அறையின் வேலைப்பாடு மிக்க வாயிற்படியில் நின்று கொண்டிருந்தது. அதற்குப் பின்னால் மற்றும் இரண்டு காரணங்களும் நின்றிருந்தன.

13. மந்திரக் கடிதம்

அரசன் ஆஸ்தான அறையின் அலங்கார வாசற்படிக்கு அதிக அலங்காரத்தை அளிக்க உன்னதப் பதுமையொன்று நிறுத்தப்பட்டிருக்கின்றதோ என்று பார்ப்பவர் பிரமிக்கும் வகையில் நின்றிருந்த அரசகுமாரியைப் பார்த்த பிரதாப்சிங்கின் கண்கள் மகளுடைய ஆடை அணிகளில் ஏற்பட்டிருந்த மாறுதலைக் கவனித்தாலும், அதற்காகப் பெரும் வியப்பைக் காட்டவில்லை. ஆனால் டபீர் பண்டிதர் மட்டும் சிறிது கோபத்தைத் தமது கண்களில் படரவிட்டுக்கொண்டு, ''அரசகுமாரி யவர்கள் தரிக்க வேண்டிய வேஷமல்ல இது'' என்று கடுப்புடன் சொற்களை உதிர்த்தார்.

''ஆம் ஆம். கேவலம் பணிப்பெண் வேஷம் அரசகுமாரி யின் அந்தஸ்துக்குத் தக்கதல்ல'' என்று பட்டாடையாரும் மெல்லக் கலந்து கொண்டார் பண்டிதருடன்.

ஆனால் அந்த இருவர் சொற்களையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் அறைக்குள் நுழைந்துவிட்ட அரசகுமாரி தனக்குப் பின்னால் நின்றிருந்த இருவரையும், ''உள்ளே வாருங்கள்'' என்று அழைக்கவே செய்தாள்.

உள்ளே நுழைந்த இருவரில் ஒருவன் அரசனுக்குத் தலை வணங்கினான். இன்னொருவன் கால்களைக் குவிய வைத்து வலக் கையால் தனது தலையிலிருந்த ஹாட்டை எடுத்து இடப் பக்கத்தில் அடக்கிக்கொண்டு, வலக் கையை உயரத் தூக்கிக் கம்பீரமாகச் சலாம் அடித்தான். அந்த இருவர் வருகையும் அறையிலிருந்த ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஒவ்வொரு வித உணர்ச்சியைத் தூண்டியிருந்தது.

மன்னன் தனது மகளுடன் வந்த தமிழக வாலிபனையும் வெள்ளைக்கார வாலிபனையும் பார்த்து அவர்கள் எதற்கும் அஞ்சாத வீரர்கள் என்பதைக் கணமாத்திரத்தில் புரிந்து கொண்டான். பட்டாடையாரும் மற்றொரு சந்நிதி கைங்கர்ய பரரும் விஜயகுமாரனை அடையாளம் கண்டு கொண்டதால், அரசகுமாரியைக் களவாடியவன் அவளுடன் அரச சந்நிதானத்துக்கே வந்துவிட்டாலும் அந்த இன்னொரு வெள்ளைக்காரன் யார், எதற்காக வந்திருக்கிறான் என்பதை அறியாமல் குழம்பவும் செய்தனர்.

டபீர் பண்டிதர் உள்ளம் மட்டும் தமிழக வாலிபனைக் கண்டதும் எரிமலையாகி விட்டது. தான் அரசரிடம் பட்ட அபக்கியாதிக்கெல்லாம் அவன்தான் காரணம் என்பதை எண்ணியதால் என்ன செய்வதென்று தெரியாமல் பல விநாடிகள் கலங்கிய பண்டிதர் அந்தக் கலக்கத்தை விலக்கிக் கொண்டு, ''இவன் தான் அவன்'' என்று அறிவித்தார் மன்னனை நோக்கி.

அதுவரை பேசாமலிருந்த வெள்ளைக்கார வாலிபன், ''அவன் பெயர் விஜயகுமாரன், என் பெயர் ராபர்ட் கிளைவ்'' என்று விஜயகுமாரனையும் அறிமுகப்படுத்திக் தன்னையும் அறிமுகப் படுத்திக் கொண்டான்.

கிளைவின் பெயர் அப்போது எந்தவிதத்திலும் பிரசித்தப் படாத காரணத்தால் மகாராஜா பிரதாப்சிங் சர்வசாதாரணமாகத் தலையை அசைத்து அவன் சொன்னதை ஆமோதித்து விட்டு விஜயகுமாரனை நோக்கினார். முராரிராவின் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த சிறந்த தமிழக வீரன் இவனாகத்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்த பிரதாப்சிங், ''நீ எந்த ஊர்?'' என்று அவனை மட்டும் வினவினார்.

''தற்சமயம் சிவகங்கை'' என்று கூறினான் விஜயகுமாரன்.

பிரதாப் சிங் மகாராஜாவின் கண்களில் திடீரென ஏதோ யோசனை தோன்றி மறைந்தது. ''மதுரை நாயக்கர் மன்னர்

வம்சத்தவனா?'' என்று வினவினார் அந்த யோசனையைத் தொடர்ந்து.

''ஆம்.'' ஒற்றைச் சொல் மட்டும் பதிலாக வந்தது.

''முராரிராவை உனக்கு முன்பே தெரியுமா?'' என்று வினவினார் மகாராஜா.

''தெரியாது.''

''அரசகுமாரியை?''

''தெரியாது.''

''இந்த...''

''கிளைவையும் தெரியாது. இந்த அமைச்சரைக்கூடத் தெரியாது.'' என்று பேச்சோடு பேச்சாக டபீர் பண்டிதரையும் விஜயகுமாரன் கையால் சுட்டிக் காட்டினான்.

பிரதாப் சிங்கின் உதடுகளில் லேசாகப் புன்முறுவல் தவழ்ந்தாலும் அது முற்றும் வெளியில் தெரியக்கூடிய வகையில் தோன்றவில்லை. சர்வ சாதாரண குரலிலேயே கேட்டார் மகாராஜா: ''யாரையும் தெரியாது; ஆனால் எல்லோருடனும் சம்பந்தப்பட்டிருக்கிறாய்'' என்று.

விஜயகுமாரன் கண்கள் மன்னனை நன்றாக ஏறெடுத்து நோக்கின. ''மகாராஜா! இன்னொருவரைக்கூட எனக்குத் தெரியாது'' என்று கூறினான் விஷமம் சொட்டும் குரலில்.

புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார் பிரதாப ஸிம்ஹர். ''என்னைச் சொல்கிறாய்?'' என்றும் கூறினார் லேசாக நகைத்து.

அரசரின் நுண்ணறிவு விஜயகுமாரனைத் திகைக்க வைக்கவே அவன் பேசும் திறனிழந்து நின்றான் ஒரு விநாடி. மறுவிநாடி கூறினான்: ''ஆம் மகாராஜா! வாழ்க்கையின் சந்தர்ப்பங்கள் ஏன் வருகின்றன, எப்படி வருகின்றன, யாருடன் நம்மைச் சேர்க்கின்றன, யாரிடமிருந்து பிரிக்கின்றன என்பதைச் சொல்ல முடிவதில்லை. ஒரே நாளில் நான் தஞ்சை அரசகுமாரியை, மன்னரை, அமைச்சரை, யாரும் அஞ்சும் முராரி ராவை, சந்தாசாகேபின் உபதளபதியை, இதோ இந்தக் கிளைவை எத்தனை பேரைச் சந்தித்துவிட்டேன்! எத்தனை பெயருடன் எனக்கு உறவு ஏற்பட்டிருக்கிறது! எத்தனை விதமான உறவு ஏற்பட்டிருக்கிறது!'' என்று கூறினான் உணர்ச்சியுடன்.

அவன் உணர்ச்சி வசப்பட்டதைக் கண்ட மகாராஜா மேலும் அவனைக் கூர்ந்து நோக்கினார். பிறகு டபீர் பண்டிதரை நோக்கி வினவினார், ''இந்த வாலிபன் எப்படி நமது படை வீரரின் காவலை மீறி அரங்கன் சந்நிதி மண்டபத்துக்குள் வந்தான்?'' என்று.

''அதுதான் புரியவில்லை'' என்றார் டபீர் பண்டிதர்.

மகாராஜா அதற்குமேல் அதைப்பற்றிக் கேள்வி எதுவும் கேட்காவிட்டாலும் விஜயகுமாரனே பதில் சொல்லத் துவங்கினான். ''மகாராஜா! திருச்சி இப்போது ஆற்காடு நவாப் அன்வருதீனின் இரண்டாவது இளவரசர் முகம்மது அலியின் வசத்திலிருக்கிறது. அவர் தங்களது நண்பதராதலால் தங்கள் படைப்பிரிவு ஒன்று அந்தப் பகுதிக்கு வருவதும் ஸ்ரீரங்கத்தில் அரசகுமாரி நுழையும்போது காவல் புரிவதும் சாத்தியமாயிற்று. அரங்கன் சந்நிதியில் நுழைய விரும்பி, சிவகங்கையிலிருந்து வந்த நான் ஸ்ரீரங்கம் பலத்த காவலில் இருப்பதைப் பார்த்து என் புரவியைத் திருப்பி, ஆற்காட்டுப் பொதுச்சாலைக்கு வந்து கொள்ளிடத்தின் ஓரமாக ஸ்ரீரங்கம் வந்தேன். அன்று கோவில் காவலனொருவனிடம் வடக்குத் திட்டிவாசலை மட்டும் திறந்துவைக்க ஏற்பாடு செய்தேன். நன்றாக இருள் சூழ்ந்து ஊரடங்கும் சமயம் வந்ததும் வடக்கு வாயிலில் புரவியை நிறுத்திவிட்டுத் திட்டி வாசல் வழியாக உள்ளே நுழைந்தேன். கோவிலின் உட்பகுதியில் யாருமில்லை'' என்று சொல்லிக் கொண்டு போனவனை டபீர் பண்டிதர் இடைமறித்து, ''அது என் உத்தரவு'' என்றார்.

விஜயகுமாரன் டபீர் பண்டிதரை நோக்கி, ''நன்றி'' என்றான்.

''எதற்கு நன்றி கூறுகிறாய்?'' என்று டபீர் பண்டிதர் சினத்துடன் கேட்டார் விஜயகுமாரனை.

''கோவிலுக்குள் காவல் வீரரை நிறுத்தாதற்கு. நிறுத்தியிருந்தால் அத்தனை சுலபமாக நான் அரங்கன் சந்நிதிக்கு வந்திருக்கவும் முடியாது...'' என்றான் அவன்.

''அங்கே கூவியிருக்கவும் முடியாது'' என்றார் டபீர்.

''என்ன கூவினான்?'' என்றார் மன்னர்.

''யாரோ நவாபின் தலையை வெட்டுவதாகக் கூவிக் கொண்டிருந்தான்...'' என்றார் டபீர்.

மகாராஜாவின் கண்களில் சட்டென்று ஒரு புத்தொளி தோன்றி மறைந்தது. பேச்சை மேற்கொண்டு வளர்த்தாமல், ''நீ முராரிராவை எங்கே சந்தித்தாய்?'' என்று வினவினார்.

இதற்கு விஜயகுமாரன் பதில் சொல்லுமுன்பு அரசகுமாரி முந்திக் கொண்டு, ''சமயபுரத்தில் சந்தித்தோம்'' என்று கூறியதுடன் பிறகு நடந்த விஷயங்களையும் சுருக்கமாகத் தெரிவித்தாள். ''எதிரி வீரர் யாரும் அந்தப் பகுதியில் இல்லையென்று முதலில் நினைத்தேன். ஆனால் சமயபுரத்து விவகாரத்துக்குப் பிறகு நிலைமை அப்படியில்லை என்று தெளிவாகிவிட்டதால் நான் ஆபரணங்களுடன் அரசகுமாரியாக உலாவுவது சரியல்லவென்று முராரிராவ் நினைத்தார். ஆகையால்

அவரிடம் ஆபரணங்களைக் கழற்றிக் கொடுத்தேன். பிறகு அவர் சொன்னபடி தஞ்சைச் சாலைச் சத்திரத்தில் இந்த உடையையும் அணிந்து கொண்டேன்'' என்று கூறினாள் அரசகுமாரி. பிறகு நடந்த சண்டை விவரங்களையும் எடுத்துரைத்து, ''இந்த இருவரின் துணையில்லாவிட்டால் நான் இந்த வேஷம் போட்டிருக்க முடியாது. இங்கு வந்திருக்கவும் முடியாது'' என்று கூறி முடித்தாள்.

அந்தச் சமயத்தில் டபீர் பண்டிதர் ஏதோ சொல்ல முயன்றதைக் கையசைப்பினால் தடுத்தார் மகாராஜா. பிறகு கிளைவ்மீது தமது பார்வையை நீண்ட நேரம் நிலைக்கவிட்டார். கடைசியாக, ''கிளைவ்! யூ வாண்ட் டு கோ அட் ஒன்ஸ்?'' என்று ஆங்கிலத்தில் ஒரு கேள்வியையும் தொடுத்தார்.

பிரதாப் சிங்கின் ஆங்கில அறிவைக் கண்டு பிரமித்தான் கிளைவ். ''உங்களுக்கு இங்கிலீஷ் தெரியுமா?'' என்று தமிழில் அவனும் கேட்டான்.

''ஆம். உங்களுக்குத் தமிழ் தெரிந்த மாதிரி'' என்றார் மகாராஜா தமிழில்.

கிளைவ் சிறிது யோசித்துவிட்டுத் தலையை அசைத்தான். ''யுவர் மெஜஸ்டி! * ஸெய்ன்ட் டேவிட் கோட்டைக்குத் தானியப் பொருள்கள் அவசரம் தேவை. ஐ காண்ட் ஸ்டே'' என்றான் கிளைவ் தமிழும் ஆங்கிலமும் கலந்த மணிப்பிரவாளத்தில்.

''இன்னும் இரண்டு மணி நேரம் கழித்துப் புறப்படலாம்'' என்ற மகாராஜா, ''டபீர்! இவர்கள் இருவருக்கும் இருக்க வசதி செய்யுங்கள். மீண்டும் கிளைவை இங்கு அழைத்து வாருங்கள்'' என்று உத்தரவிட்டு நாலடி பின் நகர்ந்து தமது அரியாசனத்தில் அமர்ந்தார்.

கிளைவ் தலைதாழ்த்திப் பணிந்து வெளியே செல்ல மற்றவர்களும் பின்தொடர்ந்தனர். அரசகுமாரி மட்டும் தந்தையின் பக்கத்தில் நின்றிருந்தாள். பிரதாப்சிங் தமது மகளை நோக்கிப் புன்முறுவல் செய்தார். ''மகளே! இனி நீ பணிப் பெண்ணாயிருக்க வேண்டியதில்லை, அரசகுமாரியாக மாறலாம்'' என்றார்.

நந்தினி புன்முறுவல் காட்டினாள். ''அப்பா! இந்த வாலிபன் யார்?'' என்று வினவினாள்.

பிரதாப் சிங்கின் புன்முறுவல் சற்று அதிகமாக விரிந்தது அவர் உதடுகளில், ''ஏன் கேட்கிறாய்?'' என்று விசாரித்தார் விஷமமாக.

---

* பிரதாப் சிங்கை பிரிட்டிஷார் 'யுவர் மெஜஸ்டி' என்று மிக மரியாதையாக அழைத்து வந்தார்கள். - Refer British Military Correspondance (Appendix No.V.Connemara Public Library -Reference Section)

''சிறந்த வீரராயிருக்கிறார்.''

''உம்.''

''பண்பும் அதிகம்.''

''அரசகுமாரியை அபகரித்துச் சென்றது பண்பா?''

''அபகரித்துச் சென்றும் முறைகெடாமல் நடந்து கொண்டது, என்னைக் காத்து அழைத்து வந்தது - இவை பண்பாடுகள் அல்லவா?''

''திருடன் திருட்டுச் சொத்தைக் காப்பாற்றித் திருப்பிக் கொடுப்பது ஒரு விந்தைதான்'' என்ற மகாராஜா தமது பெண்ணின் முதுகைச் செல்லமாகத் தட்டிக் கொடுத்து, ''போய் வா'' என்றார்.

ஆனால் அரசகுமாரி நகரவில்லை. ''அப்பா!'' என்று அழைத்தாள் மெதுவாக.

''என்னம்மா?'' மன்னர் குரலில் அன்பு குழைந்து கிடந்தது.

''இந்த விஜயகுமாரன் யார்?''

''நாயக்க அரச வம்சத்தவன்.''

''அதைத்தான் அவரே சொல்லிவிட்டாரே?''

''வேறு எதைக் கேட்கிறாய்?''

''உங்களுக்குத் தெரிந்ததை...''

''எனக்குத் தெரிந்ததா?''

''ஆம். அவர் சொல்லாமல் மறைத்த எதையோ நீங்கள் ஊகித்திருக்கிறீர்கள்.''

இதைக் கேட்ட பிரதாப் சிங் மகளின் தோளைத் தமது கையால் சிறிது அழுத்தினார். ''மகளே! உன் அறிவு மிகக் கூரியது. என் முகபாவத்திலிருந்தே அந்தரங்கத்தை ஊகிக்கிறாய். ஆம்; வேறொன்றும் எனக்குத் தோன்றியது இவனைப் பற்றி. ஆனால் அதைச் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். வற்புறுத்திக் கேட்காதே'' என்றார் திட்டமாக.

''அப்படியானால் இந்த...'' என்று துவங்கிய அரசகுமாரியின் சொற்களை இடையில் வெட்டிய மகாராஜா, ''விஜயகுமாரன் பெரும் பணியில் ஈடுபட்டிருக்கிறான். அதற்காக உயிரையும் விடுவான். அரசாங்க சம்பந்தமான பெரிய மர்மம் இவன் வாழ்வில் பிணைந்து கிடக்கிறது. அதைக் காலம் விளக்கும். ஆனால் பயல் சாமான்யனல்ல; பிடித்தாலும் புளியங்கிளையைத் தான் பிடித்திருக்கிறாய்!''

தந்தையின் வேடிக்கைப் பேச்சுப் பிடிக்கவில்லை நந்தினிக்கு. சட்டென்று எழுந்து மகாராஜாவை ஒருமுறை முறைத்து விட்டு அறையைவிட்டு நடக்கத் தொடங்கினாள். அவள் சென்றதும் மகாராஜா துரிதத்தைக் காட்டினார். காவலன் ஒருவனை அழைத்துச் சில உத்தரவுகளை மடமடவெனப்

பிறப்பித்தார். ''இப்போது வந்தானே அந்த வெள்ளைக்கார வாலிபன் கிளைவ், இளைப்பாறிச் சிற்றுண்டி யருந்தியதும் அவனை மட்டும் இங்கு அழைத்துவா. நானும் அவனும் பேசும்போது வேறு யாரும் இங்கு வர வேண்டாம்'' என்றார். வேறொரு காவலனை அழைத்து, ''விளக்கு வைத்ததும் மானாஜியையும் டபீரையும் இங்கு வரச்சொல்'' என்றார். வேறொருவனை அழைத்து, ''புதிதாக வந்தானே அரசகுமாரியுடன் ஒரு வாலிபன், அவனை அரண்மனையிலேயே இருக்கச் சொல்'' என்று கூறினார்.

இப்படி உத்தரவுகளைப் பிறப்பித்துவிட்டு மீண்டும் அறையில் உலாவலானார். மறுபடியும் மஞ்சத்தில் உட்கார்ந்து கண்களை மூடினார். சிறிது நேரத்திற்குப் பிறகு இன்னொரு அறைக்குச் சென்று ஒரு கடிதத்துடன் திரும்பி வந்து மஞ்சத்தில் உட்கார்ந்தபடியே அதை வரிவரியாகப் படித்தார்.

பல முறைகள் அதைப் படித்துச் சிந்தனையில் ஆழ்ந்தும் விட்டதால் இரண்டு மணி நேரம் ஓடியது அவருக்குத் தெரிய வில்லை. கிளைவ் வந்திருப்பதாகக் காவலன் அறிவித்த பின்பே மகாராஜா சிந்தனையிலிருந்து விழித்துக் கொண்டார். அடுத்த நிமிடம் பயணத்துக்குத் தயாராய்த் தமது எதிரில் நின்ற கிளைவை எதிரிலிருந்த மஞ்சத்தில் அமரும்படி சைகை செய்தார்.

மிக அலட்சியமாகக் கிளைவ் மஞ்சத்தில் அமர்ந்தான். அமர்ந்ததுடன் நில்லாமல் ''மகாராஜா எனக்கு ஏதோ முக்கிய செய்தி வைத்திருப்பதாகத் தெரிகிறது'' என்றும் கூறினான்.

''உனக்கல்ல, உன் கவர்னருக்கு'' என்றார் மகாராஜா.

''என்ன செய்தி?'' என்று வினவினான் கிளைவ்.

''காட்டுராஜாவை நம்பிப் போரில் இறங்க வேண்டா மென்று உங்கள் கவர்னரிடம் சொல்'' என்றார் மகாராஜா.

'' யாரது காட்டு ராஜா?'' என்று வினவினான் கிளைவ்.

''ஷாஹுஜி என்றும் அவருக்குப் பெயர் உண்டு'' என்ற மகாராஜா, ''இந்தச் சமயத்தில் தஞ்சையுடன் போரில் இறங்குவது இங்கிலீஷ்காரர்களுக்குப் பெரிய அனர்த்தத்தை விளைவிக்கும்'' என்றும் சுட்டிக் காட்டினார்.

''ஏன்?''

''சந்தா சாகேப் ஆர்க்காட்டை நோக்கி வந்து கொண்டிருக்கிறார். அவருக்கு உதவ டூப்ளேயின் பிரெஞ்சுப் படைகள் விரைந்திருக்கின்றன.''

''அதனால்?''

''சந்தாசாகேப் பிரெஞ்சு உதவியுடன் வெற்றியடைந்தால் பிரிட்டிஷ்காரர் இங்கிருந்து ஊருக்கு மூட்டை கட்டலாம். ஆகவே நீங்கள் யார் பக்கம் என்பதை இப்பொழுதே முடிவு செய்ய

வேண்டும்! யூ பிரிட்டிஷ் ஆர் இன் எ டேஞ்ஜரஸ் பொஸிஷன்'' என்று விளக்கினார் மகாராஜா.

கிளைவ் சிறிது சிந்தித்தான். பிறகு கேட்டான், 'உங்களுக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்?'' என்று

பதிலுக்குக் கையிலிருந்த கடிதத்தை எடுத்துக் கிளைவிடம் நீட்டினார் மகாராஜா. அதைப் பிரித்துப் பார்த்தான் கிளைவ். அவன் முகத்தில் மிதமிஞ்சிய பிரமிப்பு விரிந்தது. அந்தக் கடிதத்தின் மூலம் மகாராஜா ஏதோ மந்திரம் போட்டிருக்க வேண்டும். ஏதும் பேசாமல் கடிதத்தில் நிலைத்த கண் நிலைத்தபடி உட்கார்ந்து விட்டான் கிளைவ் நீண்ட நேரம்.

14. பழைய கதை, புதிய பூதம்

தஞ்சை மன்னர் நீட்டிய கடிதத்தைப் படித்ததும் சிலையெனக் கிளைவ் உட்கார்ந்துவிட்டானென்றால், அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. ஸெய்ன்ட் டேவிட் கோட்டையில் கவர்னர் மந்திராலோசனை சபை நிகழ்ச்சியின் விவரங்கள் அப்படியே அடங்கிய கடிதம் அது. அந்தக் கடிதத்தை இரண்டு மூன்று முறை திரும்பத் திரும்பப் படித்தான் கிளைவ். அது எழுதப்பட்டிருந்த காகிதத்தைக்கூட ஒரு முறைக்கு இரு முறை தடவியும் திருப்பியும் பார்த்தான். கவர்னர் சபை நிகழ்ச்சிக் குறிப்பின் சாட்சாத் நகல் அது என்பதையும், கவர்னர் உபயோ கிக்கும் காகிதத்திலேயே அந்த நகல் எடுக்கப்பட்டிருக்கிற தென்பதையும் உணர்ந்ததால், ஆங்கிலேயர் கோட்டைக்குள் அதுவும் கவர்னருக்கு வெகு அருகில் தஞ்சை ஒற்றன் ஒருவன் இருக்கிறான் என்ற நினைப்பும் கிளைவின் பிரமிப்பைப் பலமடங்கு அதிகப்படுத்தியது. ஆகவே கடைசியாக ஒரு முறை கிளைவ் அந்த நகலை ஊன்றிக் கவனித்தான். அதன் ஆங்கிலத்தைத் தமிழில் மொழி பெயர்த்தால் பின்வருமாறு இருக்கும்.

''ஸெய்ன்ட் டேவிட் கோட்டை, ஏப்ரல் *10, 1749* ஆலோசனைக் கூட்டத்தில் இருந்தவர்கள் சார்ல்ஸ் ஃப்ளாயர் எஸ்கொயர், பிரெஸிடெண்ட் கவர்னர், எட்வர்ட் க்ருக், ரிச்சர்ட் பிரின்ஸ், அலெக்ஸாண்டர் வினச். ஸ்ட்ரிஞ்ஜர் லாரன்ஸ், வில்லியம் ஹேறால்ட், ஃபாஸ் வெஸ்காட்.

''தஞ்சையின் நியாயமான மகாராஜா ஷாஹுஜி சில மாதங்களாகத் தம்மிடம் உதவி நாடுவதாக பிரெஸிடெண்ட் இந்த போர்டுக்கு (சபைக்கு) அறிவித்தார். மேற்படி மகாராஜா தாம் அநியாயமாகப் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாகவும், தம்மை

www.thamizhthenee.blogspot.com

மீண்டும் அரசில் இருத்த வேண்டுமென்று அட்மிரல் போஸ் வானுக்கும், ரிச்சர்ட் பிரின்ஸுக்கும் எழுதியிருக்கிறார். இந்த விவரங்களை அறிவிக்க மகாராஜாவே தமது மாமனுடன் பிரெஸிடெண்டை அவரது கார்டன் ஹவுஸில் (தோட்ட வீட்டில்) சந்தித்தார். தம்மை அரசில் இருத்த தஞ்சை மக்கள் துடிப்பதாகவும், பல பிரமுகர்களும் தமக்கு உதவி செய்வதாகக் கடிதங்கள் எழுதியிருப்பதாகவும் மகாராஜா கூறினார். தமக்கு ஆங்கிலேயர் உதவி புரிந்தால் கொள்ளிடத்தின் முகத் துவாரத்திலுள்ள தேவிக் கோட்டையையும் சுற்றுப்புறங்களையும் கொடுத்து விடுவதாக மகாராஜா தெரிவித்தார். இந்த ஏற்பாட்டுக்கு அட்மிரல் போஸ்வான் ஒப்புக் கொள்வதைப் பிரெஸிடெண்ட் சபைக்குத் தெரியப்படுத்தினார். இந்த ஏற்பாட்டுக்கு ஒப்புக் கொள்ளாதவர்கள் மிஸ்டர் க்ரூக்கும் மிஸ்டர் வெஸ்காட்டும்...''

இந்த நகலைக் கடைசி முறையாகப் படித்துவிட்டுப் பிரதாப்சிங்கிடம் திரும்பக் கொடுத்த கிளைவ், ''மகாராஜா! உங்களை ஏமாற்றுவது மிகக் கஷ்டம்'' என்று கூறினார்.

மகாராஜா மெள்ளப் புன்முறுவல் கொண்டார் ஒரு விநாடி. பிறகு அந்தப் புன்முறுவல் மறைந்து உதடுகள் கடினப்பட்டன. அந்தக் கடினப் போர்வையைக்கூடக் கிளைவிடம் மறைத்துக் கொண்ட மகாராஜா, ''கிளைவ்! நான் ஏமாறுகிறேனா அல்லவா என்பது ஒருபுறமிருக்கட்டும். உங்கள் கவர்னர் சபையும் கடற்படைத் தலைவர் போஸ்வானும் ஏமாறாதிருப்பது நல்லது'' என்று சர்வசாதாரணமாகச் சொன்னார்.

கிளைவ் நீர்க்க சிந்தனையுடன் தனது ஆசனத்திலிருந்து எழுந்து கக்கத்தில் இடுக்கிய ஹாட்டுடன் மன்னன் எதிரில் நின்றான், மௌனமாகச் சிறிது நேரம். கடைசியாகக் கேட்டான்; ''நான் ஒரு சாதாரண லெப்டினண்ட், என்னிடம் என்ன எதிர் பார்க்கிறீர்கள்?'' என்று.

மகாராஜா ஆசனத்தில் அமர்ந்தபடியே பேசினார். ''கிளைவ்! நீ பிரிட்டிஷ் ராணுவத்தின் லெப்டினன்டாக மட்டும் இருந்தால் உன்னை உணவுப் பொருள் வாங்கும் கண்டிராக்டராகக் கவர்னர் திருச்சிக்கு அனுப்பமாட்டார். ஏனென்றால் உணவுப் பொருள் சப்ளை உங்கள் மொழிப்படி ஸிவில். மிலிட்டரியைச் சேர்ந்ததல்ல. ஆனால் ஸிவில் ராணுவம் ஆகிய இருவிதப் பொறுப்புகளும் நீ வகிப்பதால் கவர்னருக்கு உன்னிடம் பெருமதிப்பு இருக்க வேண்டும். அபாயமான இந்தக் காலத்தில் உன்னைத் திருச்சிக்கு அனுப்ப வேண்டுமானால் உன் திறமையில் அளவுக்கு மீறிய நம்பிக்கை கவர்னருக்கும் அவரை அடுத்த அதிகாரிகளுக்கும் இருக்க வேண்டும். ஆகையால்....''

''ஆகையால்?'' சந்தேகத்துடன் வினவினான் கிளைவு.

ஆனால்... அந்தச் சந்தேகம் அடுத்த நிமிடம் திகைப்புக்கும் வியப்புக்கும் இடங் கொடுத்தது. மகாராஜாவின் பதில் அத்தனை திட்டமாகவும் உறுதியாகவும் இருந்தது.

''நீ என் தூதுவனாகக் கவர்னரிடம் செல்'' என்றார் பிரதாப்சிங் மகாராஜா.

கிளைவின் கூரிய விழிகளிலும் சஞ்சலம் தெரிந்தது. ''யுவர் மெஜஸ்டி?'' என்ற அவன் அழைப்பிலும் அந்தச் சஞ்சலம் தெளிவாக ஒலித்தது.

''சொல் கிளைவு.''

''நான் ஒரு சாதாரண லெப்டினெண்ட்.''

''அதை முன்பே சொல்லிவிட்டாய்.''

''எதிர்பாராத நிகழ்ச்சிகள் என்னை உங்கள் முன்பு கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றன.''

''ஆம்.''

''நான் உங்கள் மெஸஞ்சராக, தூதனாக, கவர்னரிடம் சென்றால் என்மீது சந்தேகம் ஏற்படலாம்.''

''ஏற்படாது.''

''ஏன்?''

''நடந்த விஷயங்களை நீ தெளிவாகச் சொல்லிவிடலாம். நான் உன்னிடம் காட்டிய கவர்னர் போர்டின் நிகழ்ச்சி விவரங்களின் நகலைப்பற்றிக்கூடச் சொல்லலாம். என் வலுக்கட்டாயத்தின் மேல் நீ செய்தியைச் கொண்டு வந்ததாகச் சொல்லலாம்'' என்ற மன்னர் வேறொரு வெடியையும் எடுத்து வீசினார்; ''இப்பொழுது பிரிட்டிஷார் நிலைமை எனது நிலைமையைவிட திடமானதல்ல'' என்று.

கிளைவு பிரமிப்பு நிரம்பிய விழிகளை மன்னர் மீது நாட்டினான்.

மகாராஜா மேலும் சொன்னார் நிதானமாக. ''கிளைவ்! உன்மீது எனக்கும் நம்பிக்கை விழுகிறது. காரணம் எனக்குப் புரியவில்லை. ஆனால் நீ புத்திசாலி என்பதிலோ, கவர்னரிடமோ, அவரது ஆலோசனை போர்டு மெம்பர்களிடமோ உனக்குச் சலுகை உண்டென்பதிலோ எனக்குச் சந்தேகமில்லை. ஆகவே கவனமாகக் கேள், நான் சொல்வதை. தவறு இருந்தால் மட்டும் மறுத்துச் சொல்.

''இங்கே பிரெஞ்சுக்காரர் கை ஓங்குவதை ஒடுக்க பிரிட்டன் தனது சிறந்த கடற்படைத் தலைவரான போஸ் கவானை, பலமான கடற்படைப் பிரிவுடன் இங்கு அனுப்பியது. அது மட்டுமல்ல. பிரிட்டிஷ் நிலப்படை, கடற்படை இரண்டுக்கும் அவரையே தலைவராகவும் நியமித்தது. ஆனால் டூப்ளேயின் முன்பு அவர் ஜம்பம் பலிக்கவில்லை.

பாண்டிச்சேரியை அவர் பிடிக்க முயன்று தோல்வியடைந்தார். ஐரோப்பாவில் உங்கள் நாட்டுக்கும் பிரான்சுக்கும் போர் முடிந்து சமாதானம் ஏற்பட்டதாலேயே டூப்ளே சென்னையை உங்களுக்குத் திருப்பிக் கொடுக்கும்படியாயிற்று. இல்லையேல், உங்கள் கைக்கு மதராஸும் திரும்பியிருக்காது. உண்மையில் இன்று நீங்கள் மிகவும் பலவீனமான ஸ்திதியில் இருக்கிறீர்கள். அப்படியிருக்க உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுகிறீர்கள். நீங்கள் உதவப் போகும் ஷாஹுஜி என்ற காட்டு ராஜா சரியான அரச பரம்பரையைச் சேர்ந்தவரல்ல. இந்த அரண்மனையிலிருந்த ரூபி அல்லது குப்பி என்று அழைக்கப்பட்ட சலவைத் தெழிலாளி மகன். உங்கள் மொழியில் அவர் இந்த அரசுக்கு ஒரு 'பிரிடெண்டர்.' அவருக்கு உதவக் கூடியவர்கள் இங்கு யாருமில்லை. ஆகவே அவரைக் கருவியாகக் கொண்டு தஞ்சை ராஜ்யத்தைப் பிடிக்க முடியாது. இந்த வீண் கனவை விட்டுவிடும்படி நான் கவர்னருக்குச் சொன்னதாகச் சொல்.'' இப்படிப் பேசிய மகாராஜாவின் குரலில் பதற்றமில்லை. விரோத உணர்ச்சிகூடத் தொனிக்கவில்லை. ஏதோ சிறு குழந்தைக்குப் புத்தி சொல்லும் தொனியில் சொற்களை உதிரவிட்டார்.

''உங்கள் யோசனையைக் கவர்னர் கேட்க இஷ்டப்படாவிட்டால்?'' என்று வினவினான் கிளைவ்.

''கவர்னர் புத்திசாலியாக இருந்தால் கேட்பார், மகாராஷ்டிரர்களிடம் ஸதாராவில் சிறையிருந்த சந்தா சாகேப்பை ஏழு லட்ச ரூபாய் கொடுத்து டூப்ளே சிறை மீட்டியிருக்கிறார். சந்தாசாகேப் இப்போது ஆற்காட்டைப் பிடிக்க வந்து கொண்டிருக்கிறார். அவருடன் மொகலாய அரசின் தட்சிண சுபேதாராக, அதாவது நிஜாமாக விரும்பும் முஸபர் ஜங்கும் சேர்ந்து கொண்டிருக்கிறார். போதாக்குறைக்கு டூப்ளே தமது சிறந்த படைத் தலைவர்களில் ஒருவரான டி ஆதுனில் எனபவரைச் சிறு பிரெஞ்சுப் படையுடன் அவர்கள் உதவிக்கு அனுப்பியிருக்கிறார். சந்தாசாகேப் சாதாரண வீரனல்ல. வெகு சீக்கிரம் ஆற்காடு சந்தாசாகேபின் வசமாகி விடும். அப்பொழுது இங்கே பிரெஞ்சு ஆதிக்கம் ஓங்கிவிடும். பிறகு உங்கள் நிலை... என்னைப் போன்றவர்களின் ஒத்துழைப்பைப் பொறுத்தது'' என்று அரசியல் நிலையை விவரித்தார் மகாராஜா.

மகாராஜா எவ்வளவு திட்டவட்டமாக உள்ள நிலையைப் புரிந்து கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்துகொண்ட கிளைவ் முடிவாகப் பதில் சொன்னான்: ''மகாராஜா, உங்கள் தூதனாக நான் செல்கிறேன். ஆனால் நான் சொல்வதைக் கவர்னர் கேட்பாரா மாட்டாரா என்பதை நான் திட்டமாகக் கூற முடியாது. ஆனால் ஒன்று, உங்களைப் போன்ற வீரரை, ராஜ தந்திரியை எதிரியாகப்

பெற்றாலும் அதையும் நான் விரும்புவேன். ஏனெனில் பிரிட்டிஷ்காரர்களைச் சாதாரணமாக எடை போடாதீர்கள். இதைவிட இக்கட்டான நிலைமையிலிருந்து பிரிட்டிஷ்காரர்கள் மீண்டிருக்கிறார்கள்'' என்று சொல்லித் தலை வணங்கி வெளியே சென்று விட்டான்.

மகாராஜா அவன் வெளியே செல்வதைப் பார்த்துக் கொண்டே நின்றபடியாலும், அவன் சென்றதும் மீண்டும் சிந்தனையில் இறங்கி விட்டபடியாலும், கிளைவ் போனதும், பெரும் பட்டாக் கத்தி இடையில் துலங்க உள்ளே நுழைந்து எதிரில் நின்ற ஒரு பெரிய மனிதரைப் பல விநாடிகள் கவனிக்கவில்லை. அந்த மனிதரும் அரசரின் சிந்தனையை இடையே புகுந்து கலைக்க இஷ்டப்படாமல் அந்த அறையின் சாளரத் தண்டை சென்று எட்டிப் பார்த்தார்.

மன்னர், ''யார்? நீங்களா?'' என்று வினவியதுமே அவர் திரும்பி அறையின் நடுவுக்கு வந்து மன்னர் முன்பு நின்றார்.

அந்த மனிதர் அதிக உயரம் இல்லையென்றாலும் சற்றுப் பருமனாக இருந்தார். பருமனாக இருந்தும், அவர் சாளரத்தை விட்டுத் திரும்பிய தோரணையிலும், அறை நடுவுக்கு வந்த நடையிலும் ஒரு வேகமும் உறுதியும் இருந்தன. சிறிதும் அச்ச மற்ற பெரும் கண்களின் மீது இருந்த அடர்த்தியான புருவம் அவர் முகத்துக்குக் கம்பீரத்தை மட்டுமின்றிச் சிறிது பயங்கரத்தையும் அளித்திருந்தது. கைகள் நீண்டு திரணை திரணையாக இருந்தன. தலையிலிருந்த சரிகை வட்டாவில் தொங்கிய குஞ்சலம் ஒன்று வெள்ளி நரம்புகளால் செய்யப்பட்டிருந்தபடியால் அதிகமாகப் பளபளத்தது. அவரது கச்சையில் தொங்கிய பட்டாக்கத்தியின் அகலமும் வளைவும் அவசியத்துக்கு அதிகமாக அமைந்திருந்தாலும் அவர் உடலுக்குப் பொருத்தமாகவே இருந்தது. அவர் அங்கியும் அதை அடுத்துச் சிறு பாவாடைபோல் தொங்கிய சல்லடமும், சல்லடத்துக்குக் கீழே தெரிந்த கால் சராயும் அவருடைய அவயவங்களை இறுகப் பிடித்திருந்ததால் தேகத்தின் திண்மை மிக மிக நன்றாகப் புலனாயிற்று. அத்தகைய தோற்றத்துடன் மிக அலட்சியமாகப் பிரதாப் சிங்கின் எதிரே நின்ற தஞ்சைத் தளபதி மானாஜி அப்பா மௌனத்தின் சிகரமாகக் காட்சியளித்தாலும், அவர் கண்கள் மட்டும் ஏதோ கேள்விகளை உதிர்ப்பதைப் போலிருந்தது.

அவரை ஏற இறங்கப் பார்த்த மகாராஜா ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காக இரண்டாம் முறையாக, ''நீங்கள் வந்ததை நான் கவனிக்கவில்லை'' என்றார்.

மானாஜியின் கரகரத்த தொண்டையிலிருந்து இரும்புத் துண்டுகள் உராய்வதைப் போன்ற தொனியுடன் வந்தது பதில்.

''மகாராஜா! தாங்கள் தீவிர சிந்தனையில் இருந்தீர்கள்'' என்று.

''ஆம். சிந்தனைக்குக் காரணம் இருக்கிறது'' என்றார் மகாராஜா.

''காரணத்தையும் கவனித்தேன்'' என்றார் மானாஜி.

''கவனித்தீர்களா!'' மன்னர் சொற்களில் வியப்பு ஒலித்தது.

''ஆம்.''

''எங்கே?''

''இப்பொழுதுதான். உங்கள் அறைக்குவெளியே...''

''யார், கிளைவையா?''

''ஆம்.''

''அவனை உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது. ஆனால் மகாராஜாவுடன் அந்தரங்கத்தில் நீண்ட நேரம் பேச வேண்டுமானால் அவன் பெரு வீரனாயிருக்க வேண்டும்'' என்று விளக்கினார் தளபதி.

''ஆம். வீரன்தான். அது மட்டுமல்ல; நல்ல சூடிகையான புத்தியும் உடையவன்'' என்றார் மகாராஜா.

''அப்படியா!''

''ஆம். அவன் நமக்கு விரோதியாக இப்பதைவிட நண்பனாக யிருப்பது நல்லது.''

''பார்ப்பதற்குச் சாதாரண சோல்ஜராயிருக்கிறான்...''

''சாம்ராஜ்யங்களை நிறுவிய பலரும் சாதாரண நிலையிலிருந்து தான் உயர்ந்தவர்கள்'' என்று கூறிய மகாராஜா தளபதியின் கருத்தை அறிய அவரைக் கூர்ந்து நோக்கினான்.

தளபதி உடனடியாகப் பதிலேதும் சொல்லவில்லை.

''அவன் வீரன் என்பது எனக்குப் புரிகிறது. ஆனால் நாம் அதிகப்படி உயர்த்திப் பார்க்க அவசியம் இருக்கிறதா என்பது சந்தேகம்'' என்று தமது கருத்தை மெள்ள வெளியிட்டார்.

மகாராஜா அதை மறுக்கவில்லை. ''காலம் பதில் சொல்லும்'' என்று மட்டும் கூறிவிட்டு மறுபடியும் சில விநாடிகள் மௌனம் சாதித்தார். பிறகு சொன்னார்: ''மானாஜி! தஞ்சை மீது பிரிட்டிஷார் படையெடுக்க இருக்கிறார்கள்'' என்று.

''நான் தயாராக இருக்கிறேன்'' என்றார் மானாஜி.

''எதற்கு?'' என்று கேட்டார் மகாராஜா.

''தஞ்சையைக் காப்பதற்கு'' என்றார் மானாஜி.

''இப்பொழுது அபாயம் தஞ்சைக்கல்ல!''

''வேறு எதற்கு?''

''தேவிக் கோட்டைக்கு!''

''அப்படியா?''

''ஆம்! நீங்கள் தேவிக் கேட்டைக்குப் புறப்படுங்கள்.''

''எப்பொழுது?''

'' நாளைக் காலையில்''

''உத்தரவு.''

''உங்களுக்கு ஒரு துணையும் அனுப்புகிறேன்.''

''எனக்குத் துணையா?''

''ஆம்.''

''எதற்கு எனக்குத் துணை?''

''அவசியம் இருந்தால் எனக்குத் தூது அனுப்ப, எதிரிகளை அலட்சியமாக ஊடுருவி, உயிரைப் பணயம் வைத்து வரக்கூடிய ஒருவன் உமக்குத் தேவையில்லையா?''

''அதற்குப் பலர் இருக்கிறார்கள்'' என்ற மானாஜி, மகாராஜாவின் மனத்தில் வேறு ஏதோ யோசனை இருப்பதை உணர்ந்ததால், ''மகாராஜாவுக்கு வேண்டிய அவன் யார்?'' என்று வினவினார்.

''புதிதாக வந்திருக்கிறான் வாலிப வீரன்'' என்றார் மகாராஜா.

''யார், விஜயகுமாரனா?'' என்று கேட்டார் தளபதி.

மகாராஜாவின் முகத்தில் மிதமிஞ்சிய பிரமிப்பு விரிந்தது. ''அவனைப் பற்றி அதற்குள் கேள்விப்பட்டு விட்டீர்களா?'' என்று கேட்டார் வியப்பு குரலிலும் ஒலிக்க.

''கேள்விப்பட்டது மட்டுமல்ல, பார்த்தும் விட்டேன். அவனுக்குத் தேவை எது என்பதும் எனக்குத் தெரியும்.''

''எது?''

மானாஜி மகாராஜாவை நெருங்கி ரகசியமாகச் சில வார்த்தைகளைச் சொன்னார்.

மகாராஜாவின் முகத்தில் பிரமை தட்டியது. ''அது பழைய கதையல்லவா?'' என்று வினவினார் பிரமிப்புடன்.

''ஆம், புதிய பூதமாக வளர்ந்திருக்கிறது இந்த வாலிபன் உருவத்தில்'' என்ற மானாஜி, ''மகாராஜா! இவன் சபதம், இவன் துவேஷம்; தஞ்சையைக் காக்கலாம். ஆகவே இவனை அழைத்துச் செல்கிறேன். அவன் இதுவரை அடையாத போர்ப் பயிற்சியையும் அளிக்கிறேன்'' என்றும் உறுதி கூறினார். அவர் சொற்களில் மிதமிஞ்சிய திருப்தி இருந்தது.

திருப்தி, அதே சமயத்தில் அரண்மனையின் வேறொரு பகுதியிலிருந்த விஜயகுமாரனுக்கும் இருந்தது. அது வேறுவிதமான திருப்தி. இரண்டுவிதத் திருப்தியும் தஞ்சை மண்டலத்துக்குப் பெரும் கவசமாக அமைந்ததை வரலாறு நிரூபித்தது.

15. யார் அவள்?

மகாராஜா பிரதாப்சிம்மன் உத்தரவுப்படி தஞ்சை அரணமனையில் பாதுகாப்பு வீரர் மனையறையொன்றில் தங்க வைக்கப்பட்ட விஜயகுமாரன் அன்றைப்போது முழுவதையும் அரண்மனையைச் சுற்றிப் பார்ப்பதிலும் மீதி வேளைகளில் அறை மஞ்சத்தில் மல்லாந்து படுத்துத் தனது வாழ்வைப் பற்றிய யோசனைகளிலும் கழித்தான். முந்திய நாளிரவில் ஸ்ரீரங்கம் கோவிலில் தான் சபதம் செய்தது முதல் அந்த இரவில் தஞ்சை அரண்மனையில் தங்கியது வரையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைத் தனது ஆரம்பக் கால வாழ்க்கையுடன் இணைத்துப் பார்த்து, ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் திருப்பங்கள் துரிதமாகவும் எதிர்பாராத வகையிலும் ஏற்படுகின்றன என்பதை எண்ணி எண்ணி வியக்கவும் செய்தான்.

சிறுவயதுச் சம்பவங்கள் அவனுக்குச் சரியாக நினைப்பில் இல்லையானாலும், நினைவு வந்த பிறகு தான் அநாதையாக ஒரு வணிகன் இல்லத்தில் வளர்ந்ததையும், திடீரென ஒரு நாள் சிவகங்கை வீரர்கள் வணிகன் இல்லம் வந்து தன்னை அழைத்துச் சென்றதையும், பிறகு சிவகங்கை மகாராஜா தன்னை அரண்மனையிலேயே அரசரீதியில் வளர்த்ததையும், போர்ப் பயிற்சி தனக்கு அளிக்கப்பட்டதையும் எண்ணிப் பார்த்தான். கடைசியில் சில தினங்களுக்கு முன்பு தன்னை அழைத்த சிவகங்கை மகாராஜா, தன் பணி ஒரு நவாபை ஒழிப்பதென்று கூறியதையும், அந்த நவாபால் தன் வம்சம் அழிந்த வரலாற்றை எடுத்துச் சொன்னதையும், அந்தப் பாதகனை அழிப்பதாக அரங்கன் மீது ஆணையிட்டு 'அந்தப் பணியை நோக்கிப் போ,' என்று கூறியதையும், எண்ணிப் பார்த்துப் 'புறப்பட்டதோ சபதமொன்றை நிறைவேற்ற, இடையில் கிடைத்ததோ திருட்டுப் பட்டம். இப்பொழுது இங்கிருப்பதோ அரண்மனை ராஜபோகம்!' 'என்று தனக்குள் கூறிச் சற்று வெளிப்படையாக நகைத்தும் கொண்டான்.

உண்மையில் அரசனுக்கு நடப்பது போன்ற உபசாரம் அவனுக்கு அவன் இருப்பிடத்தில் நடந்தது. டபீர் பண்டிதரே அவனை அழைத்து வந்து அந்த இடத்தில் விட்டுப் பணி மக்க ளுக்குத் திட்டமான உத்தரவுகளைப் பிறப்பித்திருந்ததால், விளக்கு வைக்கத் துவங்கிய அந்த மாலை நேரத்தில் அவனுக்கு நீராட்ட வசதிகளும் மற்ற உபசரணைகளும் மிகத் திறம்படச் செய்யப்பட்டன.

வீரர் மனையின் அறையொன்றில் அவன் தங்க

வைக்கப்பட்டாலும், அந்த அறை பொது மனையுடன் ஒட்டாமல் தனித்திருந்தபடியாலும் அரண்மனை நந்தவனத்தை அடுத்திருந்த படியாலும், அவன் தன்னந்தனியே இருப்பதற்கும் இஷ்டப்படி உலாவுவதற்கும் சாத்தியமாயிற்று. அவன் அந்த அறைக்கு வந்த சமயம் மாலை முற்றிவிட்டதால் அரண்மனைப் பிராந்தியம் முழுவதும் விளக்குகள் பிரகாசிக்கத் தொடங்கின. காவல் வீரர்கள் புரவிகளில் அரண்மனையைச் சுற்றியிருந்த பெரும் சுவர்களை அடுத்து உலாவலானார்கள். அந்திக் காலம் சென்று விளக்கு வைக்கப்பட்டதும் அரண்மனையில் ஏதோ ஓரிடத்தில் வீணை வாத்யங்களின் சாதக ஒலி மிக இன்பமாகக் கேட்டது. ஒருபுறம் அந்தணர் வேதகோஷமும், இன்னொரு புறம் காவல் வீரர் வீரகோஷமுமாகச் சேர்ந்து, தஞ்சை மன்னன் மாளிகையில் வீரமும் வித்தையும் சமமாகக் கலந்து இணைந்த பெருமையை விளக்கலாயின. இவற்றை அனுசரித்து நந்தவனத்திலிருந்து கூவிய குயிலினங்கள் சில மாலை நேரத்தின் மங்கல இசையையும் அளித்தன.

பயணக் களைப்பை நீராட்டத்தாலும் அரசு மாளிகை உணவினாலும் தீர்த்துக் கொண்ட விஜயகுமாரனுக்குப் புது உடைகள் அரண்மைனையிலிருந்து அளிக்கப்பட்டதால், அவற்றை அணிந்து அவன் மாலை நேரத்தில் அரண்மனை எப்படியிருக்கிறது என்பதைப் பார்க்கச் சிறிது நேரம் உலாவ முற்பட்டான்.

அரண்மனையின் பலமான பாதுகாப்பையும் எட்ட இருந்த பெரும் கோட்டைச் சுவர்களில் இருந்த சில பீரங்கிகளையும் பார்த்த விஜயகுமாரன், கோட்டைத் தளபதியாக இருந்தாலும் அவர் திறமையுடனேயே தமது பணியைச் செய்திருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டான். இருப்பினும் வடக்குக் கோட்டை வாசல் மட்டும் அத்தனை வலுவுள்ளதாகத் தெரியவில்லை விஜயகுமாரன் கண்களுக்கு. அது இருமுறை எதிரித் தாக்குதல்களுக்கு உள்ளாகி இருப்பதையும், பிறகு சரியாகப் பழுது பார்க்கப்படாததையும் கண்டு, 'இதை ஏன் இத்தனை பலவீனமாக வைத்திருக்கிறார்கள்?' என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டு அதன் எதிரே பல நிமிடங்கள் நின்றான். அப்படி யோசனையில் ஆழ்ந்து நின்ற சமயத்தில்தான் அவன் தோள் மீது பலமான கையொன்று அசுரப்பிடியாக விழுந்தது.

அதனால் யோசனையிலிருந்து விடுபட்டுச் சிறிது திரும்பிய விஜயகுமாரன் தன்னை அடுத்து அதிக உயரமில்லாத பருமனான ஒரு மனிதர் நிற்பதைப் பார்த்து, ''தாங்கள் யார்?'' என்று வினவினான்.

அந்த மனிதரின் கண்கள் ஈட்டிகளென அவன் மீது நிலைத்தன. ''மானாஜி என்று சொல்வார்கள்'' என்ற அவர் சொற்களும் கரகரவென்று கடுமையுடன் உதிர்ந்தன.

''மானாஜி அப்பாவா! தஞ்சைத் தளபதியா!'' என்று வியப்புடன் வினவினான் விஜயகுமாரன்.

அவன் வியப்பைக் கவனித்த மானாஜி மெல்லச் சிரித்த சிரிப்பிலும் அசுரச் சாயை லேசாக இருந்தது. ''ஏன், என்னைப் பார்த்தால் தளபதியாகத் தெரியவில்லையா?'' என்று வினவினார்.

''உடை சாதாரணமாக இருப்பதால்...'' என்ற விஜயகுமாரன் மென்று விழுங்கினான்.

''தளபதியாயிருக்க முடியாதென்று நினைத்தாய். உடையினால் யாராவது வீரனாக முடியுமானால் தையற்காரர்களே வீரர்களைச் சிருஷ்டித்து விடமுடியும்'' என்று கூறி நகைத்த தளபதி, ''நீ தானே விஜயகுமாரன்?'' என்று வினாவினார்.

''என்னைப்பற்றி....''

''அரண்மனை முழுவதும் தெரியும். அரசகுமாரியைக் காப்பாற்றியவனாயிற்றே!''

''நான் எங்கே காப்பாற்றினேன்? காப்பாற்றியது முராரிராவ், இளைய...''

''சரி. காக்கவில்லை... கவர்ந்தாய்'' என்றார் தளபதி.

இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் திகைத்த விஜயகுமாரனை நோக்கிய தளபதி, ''என்ன இந்த வடக்கு வாசலைப் பார்த்துக் கொண்டு நிற்கிறாய்?'' என்று கேட்டார்.

''இந்த இடத்தில் கோட்டை பலவீனமாயிருக்கிறது'' என்று சுட்டிக் காட்டினான் விஜயகுமாரன்.

''ஆம்.''

''ஏன்?''

''பலமுறை இது தாக்குதலுக்கு உட்பட்டிருக்கிறது. மீண்டும் உட்படலாம்.''

''அதனால்?''

''வேண்டுமென்றே பலவீனமாக வைத்திருக்கிறோம்.''

''காரணத்தை நான் அறியலாமா?'' என்று வினவிய விஜயகுமாரனை நோக்கி, ''பிறகு சொல்கிறேன் சாவகாசமாக'' என்று கூறிச் சட்டென்று அந்த இடத்தை விட்டு அகன்றார் தளபதி.

அவர் சென்ற திக்கைப் பல நிமிடங்கள் பார்த்துக் கொண்டிருந்து விட்டுக் கோட்டையைச் சுற்றிவிட்டு மீண்டும் தனது அறைக்கு வந்தபோது அறையில் பணி மக்கள் யாரும் இல்லை. கதவு திறந்திருந்தது. பணிமகள் மட்டும் ஒருத்தி நின்றிருந்தாள், கதவுக்கருகே. படை வீரர் மனையருகே பெண்ணொருத்தி எப்படி

வர முடியும் என்று நினைத்த விஜயகுமாரன், ''யாரம்மா நீ?'' என்று கேட்டான் வியப்புடன்.

அவள் அவனுக்கு லேசாகத் தலை வணங்கினாள். ''அந்தப் புரத்துப் பணிமகள்'' என்று கூறினாள் பணிவு நிரம்பிய குரலில்.

''படை வீரர் மனைக்கருகில் நீங்கள் அனுமதிக்கப் படுவதுண்டா?'' என்று வினவினான் விஜயகுமாரன்.

''இல்லை.''

''பின் ஏன் வந்தாய்?''

''சில சமயங்களில் சம்பிரதாயம் மாற்றப்படுகிறது? உதாரணமாக....''

''உதாரணமாக?''

''நீங்கள் என்னுடன் அந்தப்புரத்துக்கு இப்பொழுது வருகிறீர்கள்.''

இதைச் சொன்ன பணிமகளை மிக விசித்திரமாக நோக்கினான் விஜயகுமாரன். ''அந்தப்புரத்துக்குள் செல்பவர்கள் தலை போய்விடுமென்பது அரசர் ஆணையல்லவா?'' என்றும் கேட்டான் வியப்பு நிரம்பிய குரலில்.

''சாதாரணமாக அப்படித்தான்...'' என்றாள் பணிப்பெண்.

''இப்பொழுது?''

''உங்களை நான் அழைத்துப் போவதால் காவலர் தடுக்க மாட்டார்கள்.''

''ஏனோ?''

''மேலிடத்து உத்தரவு.'' இதைப் பணிப்பெண் சொன்ன போது அவள் இதழ்களில் புன்னகை அரும்பியது.

புரிந்து கொண்டான் விஜயகுமாரன், அழைப்பு அரசகுமாரியிடமிருந்து வந்திருக்கிறதென்று: இருப்பினும் கேட்டான். ''இரவு ஏறிவிட்டதே'' என்று.

''மேலிடத்துக் கட்டளைக்கு இரவு பகல் தெரியாது'' என்றாள் பணிப்பெண்.

அவளுடன் பேசுவதில் பயனில்லை என்பதை அறிந்து கொண்ட விஜயகுமாரன் அவளைத் தொடர்ந்தான், அறைக் கதவைச் சாத்திக் கொண்டும், கச்சையிலிருந்த வாளை அவிழ்க்காமலும். பணிப் பெண் இருந்த இடத்தைவிட்டு நகராமலே, ''வாளை அணிந்திருக்கிறீர்கள்'' என்று சுட்டிக் காட்டினாள்.

''ஆம்...''

''வாள், துப்பாக்கி முதலிய ஆயுதங்களைத் தரித்து அந்தப் புரத்துக்குள் வரமுடியாது.''

''என்னால் வரமுடியும்.''

''தவறு.''

''அல்ல, சம்பிரதாயங்கள் உடையும் சமயங்களில் இதுவும் ஒன்று நட, வழிகாட்டு'' என்ற விஜயகுமாரன் அவள் முன் செல்ல பின் சென்றான்.

அந்தப்புரம் அவளிருந்த இடத்திலிருந்து சற்று எட்டவே இருந்தது. அதை மெள்ள அடைந்ததும் அதைக் காத்து நின்ற காவலர் அவனுக்குத் தலை வணங்கி வழி விடவே அவன் உள்ளே சென்றான். பணிப்பெண் அவனை முகப்பு அறையொன்றில் இருத்திவிட்டு உள்ளே சென்றாள்.

முகப்பு அறையில் காத்து நின்ற விஜயகுமாரன் அளவுக்கு மீறிய எந்தச் செயலிலும் அரசகுமாரி ஈடுபடவில்லையென்பதை அறையின் அமைப்பிலிருந்தும் அது இருந்த இடத்திலிருந்தும் புரிந்து கொண்டான். அந்த அறைக்குப் பத்தடி தூரத்தில் அந்தப்புரப் பெருவாயில் இருந்தது. அங்கே காவலும் இருந்தது. ஆகவே மிக முக்கியமான விருந்தாளிகளை அரச மகளிர் சந்திக்கக் கூடிய அறையிலே தான் இருந்ததால் கட்டுப்பாட்டுக்கு அதிகம் புறம்பான எதிலும் அரசகுமாரி சம்பந்தப்படவில்லை யென்பதை அறிந்துகொண்ட விஜயகுமாரன், எதற்காகத் தன்னை நந்தினி அழைத்திருக்கிறாள் என்று சிந்தித்துக் காத்திருந்த சமயத்தில் அறைக்குள் அரசகுமாரி நுழைந்தாள்.

அரசகுமாரியும் சற்று முன்பு நீராடியிருப்பதற்கான அறிகுறிகள் அவள் அந்த அறைக்கு வருமுன்பாக அவனை நாடிவந்தன. சாம்பிராணிப் பொடியின் நறுமணத்தையும் மல்லிகை செண்பகம் இரண்டும் கலந்த கதம்பத்தின் சுகந்தத்தையும், தொடர்ந்து வந்த நந்தினியை ஏற இறங்கப் பார்த்தான் விஜயகுமாரன்.

அன்று அவள் முக்காடு அணியவில்லை. சேலையின் முக்காட்டுப் பகுதி அவள் கழுத்தில் வளைந்து கிடந்தது. தலையில் அணிந்திருந்த கதம்பச் சரம் கறுத்த கூந்தலிலாட, அறை விளக்கில் செண்பக மஞ்சளையும் மல்லிகை வெண்மையையும் மட்டுமின்றி வேறு சில வர்ண ஜாலங்களையும் வெளியிட்டுக் கொண்டிருந்தது அவள் அழகிய திருமேனி. வாசனை கலந்த மஞ்சள் பொடியைத் தேய்த்திருந்த காரணத்தால் அவள் வழவழத்த உடலிலிருந்து கிளம்பிய தசாங்க வாசனையுடன் கன்னக் கதுப்புகளை அழகு செய்த மஞ்சள் நிறம் முந்திய வர்ண ஜாலங்களுடன் போட்டி போட்டுக் கொண்டிருந்தது.

அவள் கழுத்தில் அணிந்திருந்த ஒரே ஒரு முத்து மாலை, கழுத்தைச் சுற்றிக் கிடந்த வெண்மை மஸ்லினுக்குள் காட்சியளித்தது மிக ரம்மியமாயிருந்தது பார்ப்பதற்கு. அவள் நின்ற தோரணையில் சித்திரம் இருந்தது, நடனம் இருந்தது. விம்மிய மார்பிலும் நுண்ணிய இடையிலும் சிற்பத் திறன்

இருந்தது. இத்தனை கவர்ச்சிகளை உள்ளடக்கிய நந்தினி இன்னும் எத்தனை இன்ப ஜாலங்களை உள்ளடக்கி வைத்திருக்கிறாளோ, இன்னும் எத்தனைக் கலைகள் - சாத்திரங்கள் அவளிடம் புதைந்து கிடைக்கிறனவோ என்று எண்ணிய விஜயகுமாரன் பேச முடியாமல் வாயடைத்து நின்றான். இணையற்ற அவள் அழகைக் கண்டு நிலத்தில் கண்களை ஓட்டவும் செய்தான். 'ஆர்க்கும் நூபுரங்கள் பேரி அல்குலாம் தடந்தேரொத்த வேற்கண் வெம்புருவம் போர்வில்' இவற்றுடன் 'மெல்லியர் வளைந்தபோது பார்க்கவும் அஞ்சினான் அப்பணையனும் உயர்ந்த தோளான்' என்று கம்பர் பிரான் குறித்த இளைய பெருமாளின் நிலையை விஜயகுமாரனும் அந்தத் தருணத்தில் அடைந்தான்.

பிரமிக்கத் தக்க அந்த அழகு கைகால்களுக்கு விலங்கு போட்டு ஸ்தம்பிக்க வைத்துவிட்டது அந்த வீரனை. இதனால் தான் கம்பன் அழகிகளை 'விலங்கு மெல்லியல்' என்ற வர்ணித் தானோ என்று இலக்கியத்திலும் திளைத்த வாலிபன் மீண்டும் கண்களை உயர்த்தினான் அக்காரிகையை நோக்கி.

அவள் கண்கள் அவன் கண்களுடன் இணைந்தன. அந்தக் காந்தக் கண்கள் தனது உள்ளத்தையே ஊடுருவுவதாகத் தோன்றியதால் நிலைகுலைந்த விஜயகுமாரனை அரசகுமாரியே சுயநிலைக்குக் கொண்டு வந்தாள், ''கொஞ்சம் மாறிவிட்டீர்கள்'' என்ற சொல்லால்.

''என்ன மாறிவிட்டேன்?'' என்று வினவினான்.

அரசகுமாரியின் பெருவிழிகள் நகைப்பதுபோன்ற பிரமையை ஊட்டின ஒரு விநாடி. அவள் செவ்விதழ்கள் அகன்று, ''தூராக்ருதம் குறைந்திருக்கிறது'' என்று உதிர்த்த சொற்களில் அந்த நகைப்பு விரிந்து கிடந்தது.

விஜகுமாரன் கண்கள் வியப்படன் உயர்ந்து அவள் கண்களை நன்றாகவே சந்தித்தன. ''தூராக்ருதமா?'' என்ற அவன் கேள்வியில் குழப்பம் தெரிந்தது.

''ஆம். ஸ்ரீரங்கத்தில்....'' என்று இழுத்தாள் அரசகுமாரி.

''ஓ! அதைச் சொல்கிறீர்களா?'' என்ற விஜயகுமாரன் சொற்களில் சிறிது கூச்சம் தெரிந்தது. ''அப்பொழுது ஆபத்தில் இருந்தேன்'' என்று கூறினான் அவன்.

''என்ன ஆபத்து?''

''திருடன் என்றீர்கள் என்னை.''

''அதில் தவறென்ன?''

''தவறு என்னவா?''

''ஆம்.''

''எதைத் திருடினேன்? அரங்கன் கண்ணையா?''

''இல்லை. அரசன் பெண்ணை...'' இதைச் சொன்ன அரசகுமாரி நகைத்தாள். விஜயகுமாரனை நோக்கி ஒரு அடி எடுத்து வைக்கவும் செய்தாள். அவள் பார்வையிலிருந்தது பரிதாபமா, காதலா? தெளிவாகத் தெரியவில்லை அவனுக்கு. ஆனால் அவள் சொற்களில் பரிதாபமே உதிர்ந்தது. ''நான் ஒரு கேள்வி கேட்கிறேன் சொல்வீர்களா?'' என்று வினவினாள் அரசகுமாரி மெல்ல.

''கேளுங்கள்'' என்றான் விஜயகுமாரன்.

அவள் அவனை நெருங்கினாள் சுற்றுமுற்றும் பார்த்து விட்டு. அவன் காதுக்கருகில் உதடுகளைக் கொணர்ந்தாள். அவள் சூடியிருந்த கதம்ப வாசனை, தலைக்குழலுக்குப் போட்டிருந்த சாம்பிராணி வாசனை, உடலின் தசாங்க சுகந்தம், இவையனைத்தும் அந்த வாலிபனை ஏதோ ஓர் இந்திர லோகத்துக்கு அழைத்துச் சென்றன. அவள் சேலை காற்றில் அசைந்து அவன் மீது மெல்ல உராய்ந்து அவன் உணர்ச்சிகளைக் கொந்தளிக்க வைத்தது. ஆனால் அவள் காதுக்கருகில் உதிர்த்த சொற்கள், கேட்ட கேள்வி, அவன் உடலில் மின்சாரமெனப் பாய்ந்தது ''அவள் யார்?'' என்று கேட்டாள் அரசகுமாரி.

''யார்?'' முணுமுணுத்தன விஜயகுமாரன் உதடுகள்.

''உங்களுக்கு வெறி ஊட்டியவள்'' என்று ரகசியமாகக் கேட்டாள் தஞ்சை மன்னன் மகள்.

16. இரண்டாவது சபதம்

அரண்மனை அந்தப்புரத்து முகப்பு அறையில், ஆங்கிலேயரின் மண்ணெண்ணெய் பவர் விளக்கின் வட்டத் திரி வீசிய மென்மையான ஒளியில், அரசகுமாரியை நன்றாகவும் நிதானமாகவும் பார்க்க நேரிட்ட சந்தர்ப்பத்தில், அவள் அழகை அள்ளிப் பருகிய கண்களும், சுகந்தத்தை வீசிய சுகந்தப் பொடிகளும் கதம்ப மலர்களும் அளித்த நறுமணத்தை முகர்ந்த நாசியும் தங்கள் அநுபவங்களைச் சித்தத்துக்கு அனுப்பியதால் மதிமயங்கி விஜயகுமாரன் நின்ற நேரத்தில், அவனை அளவுக் கதிகமாகவே நெருங்கிய நந்தினி, ''யார் அவள்? உங்களுக்கு வெறி ஊட்டியவள்?'' என்ற கேள்விகளைக் காதுக்கருகில் உதிர்த்தபோதே, அந்த வாலிப வீரனின் உணர்ச்சிகள் ஊசி முனையில் நின்றனவென்றால் கேள்விகளைக் கேட்டுக் காதிலிருந்து அவள் உதடுகள் பின் வாங்கிய சமயத்தில் அவள் கேள்வி விளைவித்த அதிர்ச்சியால் அவன் கன்னத்தைச் சரேலென்று இருப்பவே, அவள் அழகிய அதரங்கள் அவன்

கன்னத்தைத் தடவிவிட்ட காரணத்தால், அவன் மட்டுமென்ன, அவளும் அதிர்ச்சியுற்றே நின்றுவிட்டாள் பல விநாடிகள். அந்த நெருங்கிய நிலையிலிருந்து அரசகுமாரி மீண்டபோது இருவருக்கும் இடையில் பரம சங்கடமான நிலைமை நீடித்து நின்றதால் மௌனமும் நீடித்தது.

நீடித்தது உண்மையில் மௌனந்தானா என்ற சந்தேகம் இருவரையும் பீடிப்பதற்கு இதயங்கள் காரணமாக இருந்தன. அவள் இடையில் கையைச் செலுத்தி அணைத்துப் பலவந்தமாகப் பூவுடல் முழுதும் தன்மீது படத் தூக்கிப் புரவி மீது ஸ்ரீரங்கத்தில் போட்டபோது ஏற்படாத உணர்ச்சி வேகம், மனத் திண்டாட்டம், இடையே ஊடுருவாத இன்ப ஜுரம் - இவை விளைவிக்காத இதய ஓட்டம், அந்த ஓட்டத்தினால் ஏற்படாத மன இரைச்சல், இவை இந்தச் சாதாரண சம்பவத்தின், எதிர்பாராதவிதமாக அவள் இதழ்கள் கன்னத்தில் தடவி விட்ட காரணத்தால், ஏன் ஏற்பட வேண்டும் என்று எண்ணிப் பார்த்தான் விஜயகுமாரன்.

அரசகுமாரியின் நிலையோ சொல்லத் தரமல்லாமல் உயிர்ப் பெண்ணை உயிரற்ற சிலையாக அடித்திருந்தது. 'இவர் தொட்டுத் தூக்கிய சமயத்தில் இல்லாத நாணம் இப்பொழுது எங்கிருந்து திடீரென வந்துவிட்டது எனக்கு?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள் அவள். 'கொள்ளிட நீர்க்காலின் கரையில் உட்கார்ந்திருந்தபோது கைத்துப்பாக்கியை நீட்டி அச்சுறுத்தினேனே இவரை, அந்தத் துணிவு இப்பொழுது எங்கு ஓடிவிட்டது?' என்று வினவிக் கொண்டாள். 'இவரை அப்போதே நான் ஏன் சுடவில்லை? கட்டுவிட்டுப் புரவியில் ஏறித் திரும்பவும் ஸ்ரீரங்கம் வந்து டபீர் பண்டிதருடன் சேர்ந்து சொந்த நகரம் ஏன் திரும்பவில்லை?' என்றும் சுயசோதனை செய்துகொண்டாள்.

மெள்ள மெள்ள உண்மை உதயமாகவே கண்களை நிலத்திலேயே ஓட்டினாள். இந்த வாலிபனைக் கண்டது முதல் தன் மனத்தில் எழுந்த பரிதாபம் (பரிதாபம்தான் அது என்று தன்னை ஏமாற்றிக் கொண்டாள் அரசகுமாரி) பரிவும் (இதுவும் ஒரு ஏமாற்றம்) தன் இதயத்தை அவன்பால் இழுத்துவிட்டதை உணர்ந்த அரசகுமாரி, 'ஆம். இந்த வாலிபனிடம் பரிதாபமும் பரிவையும் தவிர வேறு என்ன ஏற்பட்டிருக்க முடியும் எனக்கு?' என்றும் கேட்டுக் கொண்டாள்.

ஆனால் அந்தக் காரணங்கள் அர்த்தமற்றவை, கேள்விகளும் அர்த்தமற்றவை என்பதை அவள் மனம் இடித்துக் காட்டியது. ''இவனிடம் ஏற்பட்டது பரிதாபமென்றால், பரிவென்றால், முராரி ராவின் உதவி கிடைத்ததும் அவருடன் பயணம் செய்து இங்கு வந்திருக்கலாமே. அவர் சொன்னார்

என்பதற்காக இவனுடன் ஏன் வந்தாய்? இவனிடம் உனக்குப் பைத்தியம், அதை ஏன் மறைக்கிறாய்?'' என்று இதயம் இரைந்து கேட்டது, நகைக்கவும் செய்தது. ''அதெல்லாம் கிடக்கட்டும், இவனை அந்தப்புரத்துக்கு எதற்காக வரவழைத்தாய்? காதுக்கருகில் போய்த்தான் கேள்வி கேட்க வேண்டுமா? அடி கள்ளி!'' என்று மனம் தூற்றவும் செய்தது.

சங்கடத்தை உதறிக்கொண்டு விஜயகுமாரன் ஏறெடுத்துப் பார்த்தான். அவள் நின்ற விதத்திலேயே சிருங்காரம் இருந்தது, கலையும் இருந்தது. சற்றே ஒடிந்து ஒருபுறம் ஒதுங்கிய இடை, அவள் உடலை நர்த்தனப் பாவையாக அடித்திருந்தது. நிலத்தில் கண்கள் நோக்கியதால் கவிழ்ந்த தலை, ஜதி ஸ்வரங்களைக் கற்ற கால்கள் நர்த்தனத்துக்குத் தயாராயிருக்கின்றனவா என்பதை ஆராய்வதைப் போன்ற பிரமையை ஏற்படுத்தியிருந்தது. தலையின் கறுத்த குழலைப் பவர் லைட்டின் வெண்மை வெளிச்சம் அதிகக் கருமையாக்கவே கதம்பச் சரத்தின் செண்பகமும் மல்லிகையும் அதிகப்படி காந்தியை வீசின. தன்னைத் திடப்படுத்திக் கொள்வதற்குப் பக்கத்தில் வாயிற்படி இல்லாததால் இடையில் ஒரு கையைக் கொடுத்து அவள் நின்றதன் விளைவாக, பக்கவாட்டில் முக்கோணம் அமைத்த முழங்கை சேலையை லேசாகத் தூக்கவே ஒரு பக்கத்து மார்பின் ஏதோ ஒரு சிறு பகுதி கண்களுக்குப் படவே செய்தது.

ஆனால், எது மறைத்தாலும் மறைக்க முடியாத அவள் இடைக் கடுத்த திரண்ட எழில்களும், நடன பாவத்தில் வளைந்து இயற்கை கடைந்திருந்த உருண்ட மணிக் கால்களும் மருதாணியால் சிவந்த பாத விரல்களும், புறப் பாத சித்திரமும், தஞ்சை மண்டலத்தில் சோழர்களுக்குப் பிறகு சிற்பமோ சித்திரமோ அழிந்துவிடவில்லையென்ற நினைப்பையே ஊட்டின.

இத்தகைய தோற்றத்தைத் திரும்பத் திரும்ப அவன் பருகுவதை நந்தினியும் உணர்ந்தே இருந்தாள். உணர்ந்தும் என்ன? செய்யும் வகையேதும் அறியாமல் திண்டாடினாள். அவள் திண்டாட்டத்தை உணர்ந்ததாலோ அல்லது அரச மகளை அப்படிப் பார்ப்பது பண்பாட்டுக்கு உகந்ததாகாது என்ற நினைப்பாலோ விஜயகுமாரன் மெள்ள பேச்சைத் துவங்கி, ''என்ன கேட்டீர்கள் அரசகுமாரி?'' என்று வினவினான்.

அரசகுமாரியும் ஒரு நிதானத்துக்கு வந்திருக்க வேண்டும், அல்லது வந்துவிட்டதாக நினைத்திருக்க வேண்டும். அதன் விளைவாகத்தன் கண்களை நிலத்திலிருந்து மீண்டும் அவனை அரை குறையாகப் பார்த்தாள். ''யாரவள் என்று கேட்டேன்'' என்று பழைய கேள்வியைக் கிள்ளையைப் போல் திருப்பினாள்.

சொன்னதைச் சொல்வது கிள்ளைதான். ஆனால் அவள் மொழியும் கிள்ளைமொழிபோல் அவன் செவிக்கு மிக ஆனந்தமாகவே இருந்தது. ஆகவே அவனும் சொன்னான், ''ஆமாம், கேட்டீர்கள்'' என்று சற்றுத் திணறி.

''உங்களுக்கு அவள் பெரிதும் வெறியூட்டியிருக்க வேண்டும்'' என்றாள் நந்தினி, மெள்ள ஏதோ விஷயத்தை விசாரிப்பவள் போல்.

இந்தக் கேள்வி விஜயகுமாரன் கண்களில் ஏதோ ஒரு விபரீத ஒளியைப் படரவிட்டது. ''ஒருவிதத்தில் வெறிதான் எனக்கு. ஆனால் அதை ஊட்ட யாருமில்லை. ஊட்ட வேண்டியவள் இந்த உலகில் இல்லை'' என்று கூறிய சொற்களில் துன்பம் மிதமிஞ்சிக் கிடந்தது.

''உங்கள் அன்னை என்று ஏதோ கூவிச் சபதம் செய்தீர்களே அரங்கன் சந்நிதியில்!'' என்று வினவினாள் அரசகுமாரி மெதுவாக.

''ஆம், என் அன்னைதான். அன்னையாகத் தான் இருக்கவேண்டும்; இல்லாவிட்டால் என் ரத்தம் இத்தனை தூரம் கொதித்திருக்காது. அதை ஏன் கேட்கிறாய் இப்பொழுது? அது பெருங் கதை...'' என்று கூறிய விஜயகுமாரன் துன்பப் பெருமூச்சு விட்டான்.

எல்லையில்லாத் துன்பம் அவனை ஆட்கொண்டு விட்டதையும் அவன் சரீரம் லேசாக நடுங்குவதையும் கண்ட அரசகுமாரி, அவன் தன்னை அழைத்தபோது மரியாதையைக் கைவிட்டதைக் கூடக் கவனித்தாள். 'ஆம் ஆம். உணர்ச்சிகள் மேலிடும்போது மரியாதை பறந்துவிடுகிறது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

அவள் உள்ள உணர்ச்சிகளை அவன் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. தவிர அவன் துணிவும் சற்று மிதமிஞ்சியது. அரசகுமாரியை அணுகி அவள் தோள்மேல் கையை வைத்தான் பலமாக. ''நந்தினி! அந்தக் கதை உனக்குத் தெரியவேண்டுமா? காலம் எப்படியும் அவிழ்க்கும் அந்தச் சதியை. ஆனால் இப்போதே தெரிந்துகொள்கிறாயா? பாரதம் யாரால் இன்னும் பிழைத்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள விரும்புகிறாயா?'' என்று வெறி பிடித்தவன்போல் வினவினான். அவன் சொற்களிலும் வெறியிருந்தது. அவளைப் பார்த்த கண்களிலும் வெறியிருந்தது. அவள் பூவினும் மென்மையான தோளில் அழுந்திய கை லேசாக நடுங்கியது. அவன் உன்மத்த நிலையிலிருக்கிறான் என்பதைப் புரிந்துகொண்ட அரசகுமாரி சற்றுப் பயம் அடைந்தாள்.

அவள் விழிகளில் படர்ந்த அச்சத்தை அவன் வெறிபிடித்த

கண்கள் கவனித்திருக்க வேண்டும். ஆகவே அவன் கூறினான், ''அஞ்சாதே அரசகுமாரி. பாரதப் பெண்கள் அச்சத்தை உதற வேண்டிய காலம் இது. ஏற்கனவே பல கற்புக்காரசிகள் உதறி யிருக்கிறார்கள். அவர்கள் தியாகத்தால் பாரதம் இன்னும் ஜீவிக்கிறது. இந்து மதமும் சமுதாயமும் அதனால்தான் இன்னும் உயிருடன் இருக்கிறது'' என்று.

விஜயகுமாரன் கை அவள் தோளிலிருந்து அகன்றது. பிறகு இரு கண்களும் அவள் கண்களை ஊடுருவின.

அச்சமுற்றாள் அரசகுமாரி. காவலரைக் கூப்பிடலாமா என்று ஒரு கணம் யோசிக்கவும் செய்தாள். என்ன காரணத்தாலோ அவள் தன்னை விடுவித்துக் கொள்ளவும் இல்லை, காவலரை அழைக்கவும் இல்லை. சற்றே நடுங்கிய வண்ணம் அந்த வெறியனைப் பார்த்துக் கொண்டு நின்றாள். அப்போது அவன் வாயிலிருந்து மெல்ல உதிர்ந்தன சொற்கள். ''உன் கன்னங்களை இப்பொழுது என் கைகள் பிடித்திருக்கின்றன பலமாக. நீ தப்ப முடியாது என்னிடமிருந்து. உன் கண்களை வெறித்துப் பார்க்கிறேன். நீ அகற்றமுடியாது உன் கண்களை. இப்போது நீ அஞ்சுகிறாய். ஆனால் இப்படி எத்தனை இந்துப் பெண்களை எதிரிகள் பார்த்திருக்கிறார்கள்! தங்கள் வெறிக்கு அடிமையாக்கி யிருக்கிறார்கள்! ஆனால் அதிலிருந்து தப்பிய பெண்களும் உண்டு. அவர்களில்...''

''அவர்களில்?''

''என் அன்னை ஒருத்தி'' என்ற விஜயகுமாரன், ''கேள் கதையை அரசகுமாரி, பிற்காலத்துக்கு ஓடு'' என்று கூறி நந்தினியை நோக்கினான்.

''எத்தனை தூரம் ஓடவேண்டும்?''

''இப்போது என்ன ஆண்டு இது?'' என்ற கேள்வியை வீசினான் விஜயகுமாரன்.

''ஆங்கிலேயர் கணக்குப்படி *1749*'' என்றாள் மெல்ல அரசகுமாரி.

''பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு சென்றுவிடு.''

''*1736?*''

''ஆம், அதே ஆண்டுதான். அந்த ஆண்டில்தான் நாயக்கர் க்ஷத்திரிய வம்ச ஆதிக்கம் அழிந்தது. வீரத்தின் குறைவாலல்ல, வஞ்சகத்தால், நம்பிக்கைத் துரோகத்தால்.''

''சொல்லுங்கள்.''

உடனே சொல்லவில்லை விஜயகுமாரன்.

''இந்துக்களின் அரசுகளை, அதாவது தென்னாட்டு அரசுகளை, அழித்து முடித்து விட முஸ்லீம் ஆட்சிப் பீடங்கள் முயன்ற காலம்'' என்ற வார்த்தைகளைச் சொல்லிவிட்டு

அவளைப் பிடித்திருந்த கைகளை நீக்கிவிட்டு மீண்டும் அறையில் உலாவினான் மௌனமாக.

பிறகு மெள்ள மெள்ள உதடுகள் சொற்களை உதிர்த்தன மெதுவாக, உறுதியாக, ரோசமாக. ''மதுரை நாயக்கர்கள்* ஸ்தாபித்த சாம்ராஜ்யம் மெள்ளச் சதியாலும் அரச குடும்பக் கலகங்களாலும், இந்துக்களுக்கு இயற்கையாவுள்ள சிறு பூசல்களாலும் மெள்ளக் குறுக முற்பட்ட காலம். விஜயரங்க சொக்கநாத நாயக்கர் குழந்தையின்றி இறந்துவிட்டார். ஆகவே அவர் மனைவி ராணி மீனாட்சி அரசுக் கட்டில் ஏறினாள். நாடு இருந்த நிலையை முன்னிட்டு அரசபீடத்தை மதுரையிலிருந்து திருச்சிக்கு மாற்றிக் கொண்டாள். அரசுப் போட்டி குடும்பத்தில் வலுத்தது. ஆதரவற்ற ராணி மீனாட்சி பங்காரு திருமலா என்பவரின் குழந்தையைச் சுவீகாரம் செய்துகொண்டாள். இருப்பினும் வலுத்தது குலச் சண்டை. விரைவில் பங்காரு திருமலா, வெங்கடாசரியார் என்ற தளபதியின் உறவு கொண்டு மீனாட்சியின் அரசைப் பறிக்கத் திருச்சிமீது படையெடுத்தார்.

நிர்க்கதியான ராணி மீனாட்சியின் உதவிக்கு ஒரு நவாப் வந்தார், ஆற்காடுப் படைகளுடன். 'நான் உனக்குச் சதோதரன். உன்னைக் காப்பாற்றுகிறேன். உன் அரசையும் காப்பாற்றுகிறேன்' என்று குர்ஆன்மீது கை வைத்துச் சத்தியம் செய்தார். அந்தச் சத்தியத்தை நம்பிய ராணி மீனாட்சி நவாபைத் திருச்சிக்குள் அனுமதித்தாள். அவளைக் காப்பாற்ற நவாப் ஒரு கோடி ரூபாய் கேட்டார். அதற்கும் ராணி சம்மதித்தாள். ஆனால் நவாப் சத்தியத்தை மீறினார். திருச்சியை விழுங்கினார். சகோதரராக நடந்து கொள்ளவில்லை. ராணியைச் சிறையில் தள்ளினார். அதிக்கிரமும் செய்திருப்பார். ஆனால் ராணி தன்னைக் காப்பாற்றிக் கொண்டார். இங்கே சற்று நின்ற விஜயகுமாரன் ''எப்படியென்று கேட்கவில்லையே நீ?'' என்று வினவினான்.

''எப்படி?'' அரசகுமாரியின் குரலில் துன்பச் சாயை ஏறியிருந்தது.

''ராஜபுத்திரிகள் வழியில். ஜோஹரில் தன்மீது தீயிட்டுக் கொண்டாள். அவள் புனித உடலை அக்கினி பகவான் காப்பாற்றினான் நவாபின் கைகளிலிருந்து'' என்ற விஜயகுமாரன், ''இப்போது புரிகிறதல்லவா கதை?'' என்றான்.

''புரிகிறது. ஆனால்....''

''ஆனால் என்ன?''

''ராணி மீனாட்சி ஒரு சிறுவனைச் சுவீகாரம் செய்து கொண்டாள் என்றீர்களே?''

---

*For details of these incidents refer "History of the Nayaks of Madura" by R. Sathianatha Iyer and Dr. S. Krishnaswamy Iyengar.

''ஆம்.''

''அவர் பெயர்?'' இங்கு மரியாதை திரும்பியது. அரசகுமாரியின் குரலில் கனிவும் காணப்பட்டது.

''விஜயகுமாரன்'' என்று முடித்த விஜயகுமாரன் நகைத்தான்.

''ஏன் நகைக்கிறீர்கள்?''

''அந்த விஜயகுமாரன் மறைந்துவிட்டான். அவன் நான்தானா என்பது எனக்குத் தெரியவில்லை. அந்த மர்மம் பின்னால் அவிழ்க்கப்படலாம். ஆனால் அவன் பெயர் எனக்கு இருக்கிறது. அவன் ஆற்ற வேண்டிய பணியும் என்மீது சுமத்தப்பட்டிருக்கிறது. அதை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவேன்'' என்ற விஜயகுமாரன் ஏதோ சிந்தித்துவிட்டு, ''அரசகுமாரி! இப்போது இன்னொரு சபதமும் செய்திருக்கிறேன்'' என்றான்.

''என்ன அது?'' என்று வினவினாள் அரசகுமாரி.

''நாளை சொல்கிறேன். என் உணர்ச்சிகள் என் வசத்தில் இல்லை'' என்று சொல்லிவிட்டு வெகுவேகமாக அந்த அறையை விட்டு நடந்தான் விஜயகுமாரன்.

அரசகுமாரி அவன் சென்ற பின்பு நீண்ட நேரம் அங்கேயே நின்றிருந்தாள். 'அந்த இரண்டாவது சபதம் எதுவாயிருக்கும்? இன்னும் யார் தலையைக் கொய்யப் போகிறார்?' என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டாள். பிறகு அந்தப்புரத்துக்குள் சென்று தன் அறையை அடைந்து பஞ்சணையில் படுத்தாள், யோசித்தாள். ஆனால் விடை கிடைக்கவில்லை. மறுநாள் விடை கிடைத்தது. விடை கிடைத்தபோது விஜயகுமாரன் கிடைக்கவில்லை.

17. பாதுகா ஸகஸ்ரம் - 826

இரண்டாவது சபதம் ஒன்றையும் செய்துவிட்டதாகப் புதிர் போட்டுவிட்டு அந்தப்புரத்து முகப்பு அறையிலிருந்து விஜயகுமாரன் வெளியேறிவிட்ட பிறகும்கூடப் பல விநாடிகள் அரசகுமாரி அந்த அறையிலிருந்து அகலாமல் சிலையென நின்றிருந்தாள், பலமான உணர்ச்சிகள் உள்ளத்தே ஊடுருவி ஓடியதன் விளைவாக. பிறகு மெல்லச் சுய உணர்வை வரவழைத்துக் கொண்டு முகப்பறையிலிருந்து புறப்பட்டு வந்த பின்பும்கூட விஜயகுமாரனின் வெறி பிடித்த கண்கள் தன் கண்களை ஊடுருவி நிற்கும் பிரமை அவள் உள்ளத்தை வளையபிட்டுக் கொண்டிருந்தபடியால், அவள் தனது பஞ்சணை முகப்பிலேயே நீண்ட நேரம் உட்கார்ந்திருந்தாள்.

அப்படி உட்கார்ந்திருந்த நிலையில், தான் எழுந்து நின்று

கொண்டிருப்பதாகவும் தன் கன்னங்களை விஜயகுமாரன் அழுத்திப் பிடித்துக்கொண்டு அந்தப் பயங்கரக் கதையைச் சொல்வதாகவும் தோன்றியது, அந்தப் பாவைக்கு.

'அப்பா! அந்த ராணி மீனாட்சியைப் பற்றிப் பேசியபோது என்ன வெறி அவருக்கு! எத்தனைத் துணிவுடன் என் கன்னங்களைப் பிடித்தார்! எவ்வளவு பலமாக அழுத்தினார்!' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டு, 'உம் விடுங்கள் என்னை. அந்தப்புரத்தில் வந்து என்னைத் தொட உங்களுக்கு என்ன துணிச்சல்?' என்று இதழ்களைக் குவித்து விரித்துச் சொற்களை முணுமுணுக்கவும் செய்தாள். பிறகு அவன் எதிரேயில்லையென்பதைப் புரிந்து கொண்டு தனக்குத் தானே சிரித்துக்கொண்டாள். 'வெறி அவருக்கு அல்ல, எனக்குத்தான். வெறி மட்டுமென்ன பைத்தியமும் பிடித்திருக்கிறது எனக்கு' என்று நினைத்தாள்.

அந்த நினைப்பின் காரணமாகவோ என்னவோ எழுந்திருந்து சற்று அப்பாலிருந்த கண்ணாடிக்கெதிரில் நின்றுகொண்டு தனது முகத்தைக் கவனிக்கவும் செய்தாள். முகம் தனது பழைய முகமாகத் தெரியவில்லை, பிரதாப்சிம்மனின் மகளுக்கு. அது பெரிதும் மாறிவிட்டதையும் அதிலிருந்த பழைய கம்பீரமும், துடுக்குத்தனமும், குழைவுக்கும் விவரிக்க முடியாத அடக்கத்துக்கும் வெட்கத்துக்கும் இடம் கொடுத்துவிட்டதையும் கவனித்தாள்.

விஜயகுமாரன் பிடித்த பிடியில் தனது இரு கன்னங்களும் செவ்வல்லியைவிடச் சிவந்து விட்டதைப் பார்த்த நந்தினி, 'அவருக்கு எதற்காக இத்தனை தூரம் இடம் கொடுத்தேன்?'' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள். 'இத்துடன் நின்றதே...' என்று எதையோ நினைக்கத் துவங்கியவள், 'மனமே! நீ பொல்லாதவன்' என்று மனத்துக்கும் பாடம் கற்பித்துப் பட்டென்று கண்ணாடியிலிருந்து திரும்பி மீண்டும் பஞ்சணைக்கு வந்தவள் முகப்பில் உட்காரவில்லை; திடீரென விழுந்தாள் பஞ்சணையில். புலன்கள் எங்கோ லயித்திருந்ததால் பஞ்சணையின் மிருதுத் தன்மையையோ அதில் தூவப்பட்டிருந்த மலர்களின் நறுமணத்தையோ ரசிக்க முடிய வில்லை அவளால். தலையணையில் தலையை அசைத்து, பஞ்சணைக்கு எதிரேயிருந்த சுவரில் தன் முழு உருவமும் தெரிந்த பெரிய நிலைக்கண்ணாடியில் தன் நிலையைப் பார்த்தாள்.

யாரோ ஒரு தேவலோக மோகினி கிடப்பதுபோல அந்த நிலைக் கண்ணாடியில் அவள் உருவம் தெரிந்தது. திடீரெனப் பஞ்சணையில் விழுந்ததால் ஒரு காலில் சற்று ஏறிக் கலைந்து கிடந்த சேலைப் பகுதி, அந்தக் காலின் சிவப்பையும்

www.thamizhthenee.blogspot.com

வழவழப்பையும் இயற்கை கடைந்திருந்த சிறப்பையும் பளீரென விளக்கு வெளிச்சத்தில் எடுத்துக் காட்டியிருந்தது. கழுத்தில் அதுவரை சுற்றிக் கிடந்த மஸ்லின் முகத்திரை மட்டுமின்றி மேலாடையின் ஒரு பகுதியும் லேசாகச் சுருண்டு விட்டதால் அவள் மார்பகங்களின் முழுப் பரிமாணமும் ஓரளவு புலனாகத் தொடங்கினாலும் *'பிறை நுதலவன் பெண்மையெனப்படும்' என்ற அச்சத்தினால் முழுமையும் வெளிப்படாமல் அரையுங்குறையுமாகத் தெரிந்து கொண்டிருந்தது.

ஆனால் அறைகுறையின் தூண்டுதல் எத்தனை யிருக்க முடியும் என்பது மட்டும் தெளிவாகத் தெரிந்தது கண்ணாடியில். அந்தச் சமயத்தில் அவள் தன்னிலையைத் தானே ரசித்துக் கொண்டாள். 'இந்த நிலையில் அவர் பார்த்தால்...?' என்றும் எண்ணினாள் வெட்கத்தை விட்டு. அதனால் சிரித்தாள் களுக்கென்று. பிறகு சற்றுப் புரண்டு ஒருக்களித்துப் படுத்துத் தலையை லேசாக நிமிர்த்தி எட்ட சுவரிலிருந்த ரதி-மன்மத விலாசப் படத்தைப் பார்த்தாள்.

தஞ்சைக்கென்றே பெயர் போன பாணியில் வண்ணங்கள் தீட்டியும் கற்களைப் புதைத்தும் தயாரிக்கப் பட்டிருந்த அந்தச் சித்திரம் உயிருடன் துடிப்பதைப் பார்த்த அரசகுமாரி, 'இந்தப் படத்தை இங்கு மாட்டியது தவறு' என்று அர்த்தமில்லாமல் யாரையோ கடிந்துகொண்டாள். ஆனால் அந்தத் தஞ்சைப் படம் அவள் நெஞ்சை என்ன ஆட்டு ஆட்டி வைத்தது! விஜயகுமார மன்மதனை மீண்டும் மீண்டும் அவள் நெஞ்சுக்குள் எத்தனை முறைகள் புகுத்தி வைத்தது! என்ன என்ன கனவுகளைக் காணவைத்தது! படத்துக்குத் தன் மனத்தைப் படபடக்க வைக்கும் திறன் இருந்ததைப் பார்த்த அரசகுமாரி ஏதேதோ எண்ணியபடியே உறங்கி விட்டாள்.

அவளுக்கு உணவுத் தட்டை ஏந்தி வந்த பணிப் பெண் அவளை எழுப்ப முயன்றாள் இருமுறை. ஒருமுறை அரைவாசிக் கண் விழித்த அரசகுமாரி தனக்கு உணவு ஏதும் தேவையில்லையென்று கூறி விட்டாள். புறத்தேயிருந்த பங்கயக் கண்கள் மீண்டும் மூடின. உள்ளக் கண்கள் விரிந்தன. விஜயகுமாரனின் இரண்டாவது சபதத்தை இதயம் ஆராயத் தொடங்கியது.

இத்தகைய ஏதோ ஓர் ஆராய்ச்சியில்தான் இருந்தான் விஜயகுமாரனும் தனது அறையில். அந்தப்புரத்து முகப்பு அறையிலிருந்து தான் தங்கியிருந்த அறைக்கு வந்தவன் அங்கியைக் களையவும் இல்லை, கச்சையில் தொங்கிய வாளை

* கம்பராமாயணம் - மிதிலைக் காட்சிப் படலம் - பாடல் - 40

அவிழ்க்கவும் இல்லை. மனத்திலிருந்த வேகத்தைக்கூடக் களைய முடியாமல் நீண்ட நேரம் அறையில் உலாவிக் கொண்டிருந்தான். அவன் கண்களில் முன்பு அந்தப்புரத்திலிருந்த அழகுச் சிலை தோன்றினாள்; பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன் தீக்குளித்த அக்கினிச் சிலையும் தோன்றினாள். அழிந்த அந்தப் பழைய சிலை அழியாத இந்தச் சிலையிடம் தன்னைக் கொண்டு விட்டதை எண்ணிப் பார்த்து விதியின் விசித்திரத்தை நினைத்து வியந்தான் விஜயகுமாரன். அதைவிட அரசகுமாரியின் தோளைப் பிடித்ததையும் கன்னங்களை நெறித்ததையும் எண்ணித் தன் உள்ளங்களையும் பார்த்துக் கொண்டான். அந்தச் சமயத்தில் அந்த இரண்டாவது சபதம் நினைவுக்கு வரவே கையை இருமுறை தட்டிக் காவலன் ஒருவனை வரவழைத்து, ''காகிதமும் எழுது கருவிகளும் எடுத்துவா'' என்று பணித்தான்.

அவற்றைக் காவலன் கொண்டு வந்ததும் அறையின் கோடியிலிருந்த ஒரு மேஜை மீது கோழியிறகுப் பேனாவை மையில் தோய்த்துச் சில வரிகளைக் காகிதத்தில் விறுவிறுவெனத் தீட்டினான்: பிறகு காகிதத்தை மடித்து விலாசமும் எழுதிக் கச்சையில் செருகிக் கொண்டு, மிக நிம்மதியாகப் படுக்கைக்கு வந்து உட்கார்ந்து கைவிரல்களைப் பின்னிய வண்ணம் யோசனையில் ஆழ்ந்து விட்டதால் நேரம் ஓடியது தெரியவில்லை அவனுக்கு. உள்ளம் உவகையால் துடித்துக் கொண்டிருந்தது.

''முதல் சபதம் ஊட்டியது உக்ரத்தை. இந்த இரண்டாவது சபதம் ஊட்டியது உவகையை. உக்ரத்துக்கும் உவகைக்கும் சம்பந்தமில்லைதான். இருந்தாலும் என் உள்ளத்தில் இரண்டுக்கும் உறவு ஏற்பட்டிருக்கிறது'' என்ற சற்று இரைந்தே சொல்லிக் கொண்டான். அப்படி அவன் உட்கார்ந்திருந்த சமயத்தில்தான் தளபதி மானாஜி அறைக்குள் நுழைந்தார்.

அவர் நுழைந்த நேரத்தில் அவன் உட்கார்ந்த நிலையை விட்டு எழுந்திருக்கவில்லை, அவர் பூனைபோல் சத்தம் போடாமல் அறையில் நுழைந்த காரணத்தால். ''எந்தக் கோட்டையைப் பிடிக்க மனக் கோட்டை கட்டுகிறாய் விஜயகுமாரா?'' என்று அவர் வினவிய பின்பே தலையை நிமிர்ந்த விஜயகுமாரன், ''தாங்களா, வாருங்கள்!'' என்று எழுந்திருந்து தலை வணங்கினான்.

மானாஜி தமது ராட்சத விழிகளை அவன் முகத்தில் நாட்டினார். அடர்த்தியான அவரது பயங்கரப் புருவமும், மகாராஷ்டிரர் வாள்களைப் போலவே நீண்டு நுனிகளில் வளைந்து நிமிர்ந்த பெரிய மீசையும் ஒருமுறை அசைந்தன. அவரது பருத்த உதடுகள் லேசாகப் புன்சிரிப்பைக் காட்டின. ''நான் கேள்வி கேட்டேனே?'' என்றும் கூறினார்.

விஜயகுமாரன் இதழ்களிலும் இளநகை விரிந்தது. ''இப்பொழுது தஞ்சைக் கோட்டையைப் பிடித்திருக்கிறேன். அதற்குள் இருக்கிறேன்'' என்றான் அவன் உள்ளேயிருந்த உவகை சொற்களிலும் ஒலிக்க.

தளபதியும் நகைச் சுவையில் சளைப்பவராகத் தெரியவில்லை. ''இன்னொரு கோட்டையும் உனக்குக் கிடைக்கப் போகிறது'' என்றார் லேசாகச் சிரித்து.

''எந்தக் கோட்டை?'' விஜயகுமாரன் கேள்வியில் வியப்பிருந்தது.

''மகாராஜாவே சொல்லுவார் உன்னிடம்'' என்றார் மானாஜி.

''எப்பொழுது?''

''இப்பொழுதே.''

''அப்படியானால்?''

''இப்பொழுது மகாராஜாவிடம் நாம் போகிறோம்.''

''நள்ளிரவு தாண்டி விட்டதென்று நினைக்கிறேன்.''

''ஆம்.''

''இப்பொழுது மகாராஜா.''

''உறங்கவில்லை. உனக்காகக் காத்திருக்கிறார்.''

மானாஜியின் இந்தச் சொற்களைக் கேட்ட விஜயகுமாரன் பிரமித்துப் போனான். ''மகாராஜா உறங்குவதில்லையா?'' என்று விசாரித்தான்.

''முடி தரித்தவர்கள் யாருக்குமே உறக்கம் அபூர்வம்'' என்று விளக்கிய மானாஜி, அறையை விட்டு வெளியேற முற்பட்டார்.

விஜயகுமாரன் கட்டிலில் கிடந்த தன் கைத்துப்பாக்கியையும் எடுத்து இடையில் செருகிக் கொண்டு அவரைத் தொடர்ந்தான். சிறிது தூரம் நடந்து பழையபடி அரண்மனைப் பிரதான கட்டிடத்திலிருந்து மகாராஜாவின் ஆஸ்தான அறையை அடைந்ததும் பிரதாப சிம்மன் அவர்களை முக மலர்ச்சியுடன் வரவேற்றார்.

இருவரும் தலைதாழ்த்தி வணங்கியதும் மானாஜியைக் கேட்டார், மகாராஜா, ''விஜயகுமாரனிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டீர்களா?'' என்று.

''இல்லை'' என்ற மானாஜி புன்முறுவல் செய்தார்.

தமது தளபதியின் ஒவ்வோர் அசைவுக்கும் காரணம் இருக்கும் என்பதை நீண்ட நாளாகப் புரிந்துகொண்டிருந்த மகாராஜா சற்றுச் சிந்தித்தார். பிறகு, ''ஏன்?'' என்று வினவினார்.

''இந்த வீரன் தங்களுக்குச் செய்தி வைத்திருக்கிறான்'' என்றார் மானாஜி.

அவர் கூறியதைக் கேட்ட விஜயகுமாரனும் வியப்புத் ததும்பிய விழிகளைத் தளபதிமீது நாட்டினான். மன்னர் கேட்பதற்கு முன்பாக, ''என்ன செய்தி?'' என்று வினவினான்.

ஒரு பெரிய வெடியை எடுத்து வீசினார் மானாஜி. ''அதோ, அந்தச் செய்தி'' என்று அவன் கச்சையில் நீட்டிக் கொண்டிருந்த காகிதத்தைக் காட்டினார்.

அதிர்ச்சியுற்று நின்றான் பல விநாடிகள் விஜயகுமாரன். தளபதியின் கண்களிலிருந்து எதுவும் தப்புவதில்லை என்ற விஷயம் அவனுக்கு மிகத் தெளிவாகப் புரிந்தது. ''அது மன்னருக்குத் தான் என்பது தங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தான்.

''கடிதத்தில் பாதி கச்சையில் நீட்டிக் கொண்டிருக்கிறது. அதில் 'மகாராஜா' என்ற சொல் மட்டும் விலாசப் பகுதியில் தெரிகிறது'' என்று கூறி அந்த இடத்தையும் விரலால் சுட்டிக் காட்டினார் தளபதி. ''வேறு மகாராஜா யாரும் தஞ்சையில் இல்லை'' என்று சூசகமாகவும் கூறி இளநகை கொண்டார்.

அந்த இளநகை அவனுக்கு எரிச்சலை மிக அதிகமாக உண்டாக்கினாலும் அதை வெளிக்குக் காட்டாமல் கச்சையிலிருந்த கடிதத்தை எடுத்து, ''என் காணிக்கை'' என்று மகாராஜாவிடம் வணக்கத்துடன் நீட்டினான்.

கடிதத்தில் நான்கே வரிகள்தான் இருந்தன. ஆனால் அந்த நான்கு வரிகள் பிரதாப் சிங்கின் மனத்தை இளக்கியிருக்க வேண்டும். ''வீரனே! நன்றி, என் வேலையைச் சுலபமாக்கிவிட்டாய். ஆனால் இந்த ஒன்று மட்டும் உன் கையிலும் இல்லை, என் கையிலும் இல்லை'' என்றார் மிகவும் உருக்கமாக.

''ஏன் மகாராஜா! என் வாள் அப்படியொன்றும் சப்பையானதல்ல, என் உயிரும் அற்பமானதல்ல'' என்றான் விஜயகுமாரன் உணர்ச்சி வேகத்துடன்.

மகாராஜா அறையின் ஓரத்துக்குச் சென்று சாளரத்தின் மூலம் வெளியே நீண்டநேரம் நோக்கிவிட்டுத் திரும்பி வந்து, ''விஜயகுமாரா! என்னை இந்த அரியணையிலிருந்து யாரும் அகற்றாமல் பாதுகாப்பதாகச் சபதம் செய்திருக்கிறாய், இந்தக் கடிதத்தில். அதற்காக உன் உயிரையும் வாளையும் அர்ப்பணிக்கிறாய்'' என்று கூறினார்.

''ஆம்'' என்றான் விஜயகுமாரன்.

''அரியணையில் யார் உட்காருவது என்பதை நாம் தீர்மானிப்பதில்லை. இந்தத் தஞ்சையை எடுத்துக்கொள். இதில் எத்தனை அரண்மனைப் புரட்சிகள் நடந்திருக்கின்றன! எத்தனை பேர் மாறி மாறி இந்த அரியணையில் உட்கார்ந்திருக்கிறார்கள்! இப்போதுகூட இதில் உட்கார ஷாஹூஜி முயலவில்லையா?''

''ஆம். முயன்றால் நடந்துவிடுமா?''

''நடக்கலாம், நடக்காதிருக்கலாம். தெய்வ சித்தம் நமக்குத் தெரியாது.''

''இதில் தெய்வசித்தம் என்ன இருக்கிறது?''

விஜயகுமாரனின் இந்தக் கேள்விக்கு மகாராஜா உடனடியாகப் பதில் சொல்லாமல் சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு, ''விஜயகுமாரா, இராமாயணம் படித்திருக்கிறாயா?'' என்று கேட்டார். விஜயகுமாரன், ''அந்த இதிகாசத்தைப் படிக்காதவன் இந்துவாக இருக்க முடியாதே!'' என்றான்.

''விஜயகுமாரா! அந்தக் கதையில் தந்தையான தசரதன் யாரை அரியணையில் அமர்த்த இஷ்டப்பட்டார்?''

''ராமனை.''

''தாயான கைதேவி யாரை அரச பீடமேற்ற எண்ணி வரம் கேட்டாள்?''

''பரதனை.''

''மன்னன் வரம் கொடுத்தானல்லவா?''

''கொடுத்தான்.''

''கடைசியில் அந்த இருவரும் அமரவில்லை அரியணையில். ஒரு காலணி போய் உட்கார்ந்துகொண்டது. அதற்கு நடந்தது பட்டாபிஷேகம். இந்த விசித்திரத்தை எங்காவது கேட்டிருக்கிறாயா?''

விஜயகுமாரன் மௌனம் சாதித்தான். மன்னர் அவனை அணுகி அவன் தோள்மேல் கையை வைத்தார். ''விஜயகுமாரா! இது என் யுத்தியல்ல. தூப்புல் பெரியவர்* நிகமாந்த மகா தேசிகன் 'பாதுகா ஸகஸ்ரம்' என்ற நூலில் இப்படியொரு சுலோகம் எழுதி வைத்திருக்கிறார். தந்தைக்குப் பிரியம் ராமன் முடிசூட. பிரஜைகளுக்கும் அது சம்மதம். தாய்க்குப் பிரியம் பரதன் முடிசூட. சத்தியவாதியான தசரதனும் வரம் கொடுத்தான். ஆனால் என்ன ஆச்சரியம்! இருவருக்கும் இல்லாமல் பாதுகைக்கு நடந்தது முதல் ராஜ்யாபிஷேகம். ஆகவே இறைவன் உள்ளத்தை யார் அறிய முடியும்? மனித அறிவை மீறிய விஷயமல்லவா அது?' என்று எழுதியிருக்கிறார் அந்த மகான். அது அன்றும் உண்மை; இன்றும் உண்மை! அந்த உண்மையை இந்தத் தஞ்சை சிம்மாசனமே நிரூபித்திருக்கிறது. உலக வரலாறு நிரூபிக்கிறது.'' இதைச் சொன்ன மகாராஜாவின் கண்கள் கனவுலகத்தில் சஞ்சரித்தன.

விஜயகுமாரன் மகாராஜாவின் சொற்களைக் கேட்டுப் பிரமித்து வாயைப் பிளந்துகொண்டு நின்றான். அவர் சம்ஸ்கிருத

*பாதுகா ஸகஸ்ரம் - சுபாஷித பத்ததி - சுலோகம் 826

அறிவு அவனைப் பெருவியப்பில் ஆழ்த்தியது. அதை ஊகித்திருக்க வேண்டும் தளபதி. அதுவரை சம்பாஷணையில் குறுக்கிடாத அவர் குறுக்கிட்டு, ''மகாராஜாவின் வடமொழி அறிவுபற்றி வியப்பதற்கு எதுமில்லை. இவர்கள் பரம்பரையே சம்ஸ்கிருதப் பரம்பரை. இவர் தந்தை துகோஜி 'ஸங்கீத ஸாரமைத' என்ற இசைக் கிரந்தம் எழுதியிருக்கிறார். அவர் சபையிலிருந்த கனச்யாம பண்டிதர் பவபூதியின் உத்தரராம சரித்திரத்துக்கு வியாக்கியானம் எழுதியிருக்கிறார்'' என்றார்.

விஜயகுமாரன் மகாராஜாவின் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டான். ''மகாராஜா! எனக்குச் சம்ஸ்கிருதம் அதிகமாகத் தெரியாது. தெய்வசித்தப்படி நடப்பது நடக்கட்டும். ஆனால் நாம் நமது கடமையைச் செய்ய வேண்டாமா?'' என்றான்.

''கண்டிப்பாய்ச் செய்யவேண்டும், பலனை எதிர் பார்க்காமல். அதனால்தான், உன்னை அழைத்தேன் விஜயகுமாரா! நீ இப்போதே செல் தளபதியுடன்'' என்றும் உத்தரவிட்டார்.

''எதற்கு?''

''அபாய ஸ்தலத்திற்கு.''

''எது அபாய ஸ்தலம்?''

''தற்சமயம் தேவிக் கோட்டை.''

மானாஜி மகாராஜாவுக்குத் தலை வணங்கித் திரும்பினார். வெளியேற விஜயகுமாரன் தயங்கினான். சற்று மகாராஜா புன்முறுவல் கொண்டார். பிறகு கையிலிருந்த கடிதத்தைக் காட்டி, ''இதை நந்தினிக்கு அனுப்பிவிடுகிறேன்'' என்றார்.

மன்னருக்கு மனோதத்துவ சாஸ்திரமும் தெரிந்திருக்க வேண்டுமென்று நினைத்த விஜயகுமாரன், ஸ்தம்பித்து நின்றுவிட்டான். நின்ற இடத்திலிருந்து நகராமல் மானாஜி திரும்பி, ''நீ அந்தப்புரம் சென்றது மன்னனுக்குத் தெரியும்'' என்று இன்னொரு பாணத்தையும் அவன் மீது வீசினார்.

18. '' PRO REGE ET PATRIA''

(For King and Country)

'அமரர்கள் அதிபதி' என்று தேன்தமிழில் நம்மாழ்வாராலும், 'தேவநாதன்' என்று வடமொழியில் ஸ்தல புராணக்காரர்களாலும் சிலாகிக்கப்பட்ட திருவஹீந்திரப் பெருமாளின் திருநாமத்தைத் தரித்து, ஆதியில் தேவநாதன்பட்டினம் என்று வழங்கி, காலத்தில் மருவி தேவாநாம்பட்டினம் என்று மகாராஷ்டிரர்களால் அழைக்கப்பட்டதும், இன்று புதுக் கடலூரை

(கடலூர் நியூ டவுனை) அடுத்து அதன் ஒரு பகுதியாய்க் கடலோரம் நிற்பதுமான புராதன நகரில், பிரிட்டிஷ்காரர்களின் தலையாயப் பாதுகாப்பு நிலையமாகவும் அரணாகவும் இருந்த செய்ன்ட் டேவிட் கோட்டைக்கு, தஞ்சையிலிருந்து தேவிக் கோட்டைக்கு விஜயகுமாரன் கிளம்பிய அதே இரவின் ஆரம்பத்தில் வாலிபனான ராபர்ட் கிளைவ் உணவும் பொதிவண்டிகளுடனும் போர்டைஸுடனும் வந்து சேர்ந்தான்.

சுற்றிலும் சுமார் 18 அடிகளுக்கு மேலிருந்த பெரும் கோட்டைச் சுவர்களால் மூன்று பக்கங்கள் சூழப்பட்டதும், மற்றொரு பக்கம் கடலலைகள் வாரி அணைத்துவிட்ட மணற் பகுதியால் பாதுகாக்கப்பட்டதும், சுவர் ஓடி வளைத்த மூன்று பக்கங்களையும் அணைந்து நின்ற ஆழமான அகழியுடனும், உயர்ந்த கோட்டைச் சுவர்கள்மீது பிரவேசிக்கக் கெடிலம் நதியை அடுத்து, புதுச்சேரியை நோக்கிக் கொண்டிருந்த பெருவாயிலுடனும் காட்சி யளித்த தேவானாம்பட்டினக் கோட்டையான டேவிட் கோட்டைக்குள் நுழைந்த லெப்டினண்ட கிளைவ், பொதிவண்டிகளை மட்டும் சப்ளை ஸ்டோருக்குச் செல்லப் பணித்துவிட்டு, தான் மட்டும் போர்டைஸுடன் *கவர்னர் மாளிகைக்கு நேராகச் 'செய்ஸை'வேகமாக செலுத்தினான்.

கவர்னர் மாளிகையின் முன்புறத்துக்குச் சற்று எட்டவே வண்டியை நிறுத்த உத்தரவிட்டு, போர்டைஸைக் கீழே இறங்கச் சொல்லி, அநாயாச நடை நடந்து மாளிகையின் முதல் கட்டு வாயிலில் நின்ற சோல்ஜரிடம் தான் வந்திருப்பதைக் கவர்னருக்கு அறிவிக்கும்படி உத்தரவிட்டான்.

அந்த பிரிட்டிஷ் சோல்ஜரும் என்ன காரணத்தாலோ இரவென்றும் பார்க்காமல் கிளைவின் உத்தரவைக் கேட்டதும் உள்ளே பறந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் திரும்பி வந்து உள்ளே செல்லலாமெனக் கூறவே, கிளைவ் போர்டைஸுடன் மாளிகைக்குள் சென்றான்.

தாழ்ந்து வளைந்த கமான்களுடன் மிக உறுதியாகக் கோட்டை போலவே கட்டப்பட்டிருந்த செய்ன்ட் டேவிட் கவர்னரின் மாளிகையில் ஒவ்வோர் இடத்திலும் பிரிட்டிஷ் சோல்ஜர்களின் பாதுகாப்பு அன்று மிக அதிகமாயிருந்ததைக் கவனித்த கிளைவ் அதற்குக் காரணத்தை அறியாவிட்டாலும், கவர்னர் ஏதோ முக்கிய மந்திராலோசனையில் அமர்ந்திருக்கிறார்

* இந்த மாளிகையில் கிளைவ் கவர்னரான பின்பு வசித்தார். அதில் இப்பொழுது தென்னார்க்காடு மாவட்ட கலெக்டர் வசிக்கிறார். அந்த மாளிகையில் கிளைவ் வசித்ததைக் குறிக்கக் கல்லொன்று புதைக்கப்பட்டிருக்கிறது.

என்பதைப் புரிந்து கொண்டு மிகுந்த எச்சரிக்கையுடன் உட்புறம் நடந்து சென்றான்.

இரண்டு வாயிற்படிகளைத் தாண்டியதும் ஒரு பெரிய அறை முகப்பில் பிரிட்டிஷ் ராணுவ அதிகாரியொருவர் கிளைவை எதிர் கொண்டு உள்ளே அழைத்துச் சென்றார். கிளைவைத் தொடர முற்பட்ட ரெவரண்ட் போர்டைஸைக் கையசைப் பினாலேயே நிறுத்தவும் முயன்றார். ஆனால் போர்டைஸ் கடுங் கோபத்துக்குள்ளாகி, ''போர்டைஸைத் தடுக்க கவர்னருக்கும் அதிகாரமில்லை. தடுப்பவர் யாவருக்கும் பரமபிதாவின் சாபம் கிடைக்கும்'' என்று ஆங்கிலத்தில் சீறினார். அது மட்டுமின்றி அந்த ராணுவ அதிகாரியை ஒரு கையால் விலக்கிவிட்டுக் கிளைவுடன் தாமும் கவர்னர் அறைக்குள் நுழைந்தார்.

கவர்னரின் மிகப் பெரிய ஆலோசனை அறையின் தன்மையே இந்த நாட்டில் பிரிட்டிஷ் ஆதிக்கம் காலூன்றத் தொடங்கியதை நிரூபித்தது. அதன் நட்ட நடுவே இருந்த நீண்ட விரிப்பும், அந்த விரிப்பின் மீது ஐந்தாறு இடங்களில் வைக்கப் பட்டிருந்த பீங்கான் பிளேட்டுகளும், அவற்றிலிருந்த உணவு வகையறாக்களைப் பிய்த்தெடுத்து உண்ண வைக்கப்பட்டிருந்த 'ஃபோர்க்' க்கும் ஸ்பூன்களும், உணவுக்கடுத்தபடி விஸ்கி, ஒயின், இவற்றை அருந்த வைக்கப்பட்டிருந்த நீளக் கண்ணாடி டம்ளர்களும், மேலே பல முகங்களுடன் கீழே இறங்கியும் ஏறியும் ஜாஜ்வல்லியமாகப் பளிச்சிட்டுக் கொண்டிருந்த 'ஷாண்டி லியர்ஸின்' அமைப்பும், பிரிட்டிஷ் நாகரிகத்தின், ஏகாதி பத்தியத்தின் உறுதியைச் சந்தேகமின்றி விளக்கிக் கொண்டிருந்தன.

அந்த மேஜையின் தலைப்பிலிருந்து வேலைப்பாடுகள் நிறைந்த பிரிட்டிஷ் ராஜ்ய சின்னம் அமைந்த பெரிய நாற்காலியில், தூய்மையான வெள்ளை சூட்டணிந்து கவர்னர் ஃப்ளாயர் மிகக் கம்பீரமாக உட்கார்ந்திருந்தார். அவருக்கு எதிரே மேஜையில் பெரிய டம்ளர் ஒன்றில் விஸ்கி முக்கால் பாகம் நிரம்பிச் சின்னஞ்சிறு பொரிகளை மேலே அனுப்பிக் கொண்டிருந்தது. அத்துடன் சீட்டுக் கட்டு ஒன்றும் பாதி பிரித்து வெட்டப்பட்டு இரண்டு பகுதிகளாகக் காட்சியளித்தது.

கவர்னரையடுத்து மேஜையின் இருபக்கங்களிலும் கம்பெனி போர்டு அங்கத்தினர்கள் வீற்றிருந்தார்கள். அவர்களையடுத்த கோடி நாற்காலிகள் இரண்டில் இரண்டு ராணுவ அதிகாரிகள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். ஒருவர் பருத்த சரீரமுடையவர். அவரது பெரிய தொப்பை, மேஜைக்கு அடியிலிருந்ததால் வெளியே தெரியவில்லை. அவருடைய தலை பெரியதாகவும் நுதலிலிருந்த கண்கள் சிறியனவாகவும் இருந்

தாலும், தலையும் கண்களும் அவர் மிக மேதாவி என்பதையும், சிறந்த போர் வீரர் என்பதையும் கூறின. இன்னொரு அதிகாரி வாலிபர். இருப்பினும் அநுபவமும் நிறைமையும் உள்ளவராகத் தோன்றினார். போர்டு அங்கத்தினர் நால்வரே அன்றைய கூட்டத்துக்கு வந்திருந்தாலும் அவர்களைத் தீவிர சிந்தனை கவர்ந்திருந்ததை அவர்கள் முகங்கள் நிரூபித்தன.

ஆனால் மேஜையின் தலைப்பில் அக்கிராசனம் வகித்த ஆஜானுபாகுவான கவர்னர் சார்லஸ் ஃப்ளாயரின முகத்தில் எந்தவிதக் கவலையும் தெரியவில்லை. அவர் நீல நிறக் கண்கள், எதிரேயிருந்த விஸ்கி டம்ளரையும் இரண்டாக வெட்டப் பட்டிருந்த சீட்டுக் கட்டையும் நோக்கிக் கொண்டிருந்தன. சற்றுக் குடித்திருந்தாலும் கவர்னர் சிறிதும் நிதானத்தை இழக்கவில்லை யென்பதை அவர் சர்வசகஜமாகச்* சீட்டு ஒன்றைக் கையிலெடுத்து நோக்கிய திடமே தெரியப்படுத்தியது.

கிளைவும் போர்டைஸும் ஆலோசனை அறையில் நுழைந்தபோது கூட உடனே தமது கண்களைத் தூக்கி அவர்களை நோக்கிவில்லை. கவர்னர் மீண்டும் நாலைந்து சீட்டுகளை எடுத்து இடக் கையில் விசிறிபோல் பிரித்தார், பிறகு வாயிலிருந்து தொங்கிய பைப்பின் முகப்புக் குழாயிலிருந்து புகையை இருமுறை வெளியிட்டார். அடுத்தபடி வலக் கையில் புகைக்குழாயை எடுத்து இரண்டு விரல்களில் மடக்கிப் பிடித்துக் கொண்டு பிறகு நோக்கினார் கிளைவையும், போர்டைஸையும்.

அவர் நோக்கியதும் கிளைவ் தனது இரு கால்களையும் சட்டென்று குவித்து இரு பூட்ஸ்களிலும் ஒலி எழுப்பி மிலிடரி சல்யூட் அடித்தான். போர்டைஸ் எதற்கும் அசையவில்லை. யாரையும் லட்சியம் செய்யவில்லை. ''கிறிஸ்டியானிட்டிக்கு இவனால் பெருத்த அவமானம் ஏற்பட்டிருக்கிறது'' என்று போர்டைஸ் சுட்டிக் காட்டினார்.

கவர்னர் பதில் கூறாததால் போர்டைஸ் தொடர்ந்தார் மேலே, ''என்னைத் திருச்சியில் சவுக்கால் அடிக்க வந்தான், கிறிஸ்துவின் விரோதிகளுடன், பாவிகளுடன் சேர்ந்து கொண்டான். இவனை உடனடியாகச் சிறையில் தள்ள வேண்டும்'' என்று போர்டைஸ் வெறியுடன் கூவினார்.

கவர்னர் புகைக்குழாயை மீண்டும் வாயில் வைத்து ஒரு முறை இழுத்துப் புகையை விட்டுவிட்டு, கையிலிருந்த சீட்டுகளை நோக்கினார். பிறகு பாதிரியைப் பார்த்து, ''ரெவரண்ட்! நீங்கள் சர்ச்சுக்குச் செல்லுங்கள்'' என்று மட்டும் கூறினார்.

---

* போர்ட்செய்ன்ட்டேவிட்டின் கவர்னர் - ப்ளாயர் குடிப் பதிலும் சீட்டாடுவதிலும் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தார்- 'Clive Proconsul of India' by James P. Lawford- Page-84.

''என் கம்ப்ளெய்ண்ட்?'' என்று கேட்டார் போர்டைஸ் வெறி பிடித்த கண்களுடன்.

''பிறகு கவனிக்கப்படும்.''

''இப்போதே கவனிக்கவேண்டும். கவர்னரோ, இந்த போர்டோ ரெவரண்டை மிஞ்சியதல்ல.''

இதை நிதானமாகக் கேட்ட கவர்னர் பின்புறம் திரும்பினார். அங்கு நின்ற ஆங்கில ஆர்டர்லி தலைகுனிந்தார், கவர்னரின் உத்தரவைக் கேட்க. ''இந்தப் பைத்தியத்தை ஏதாவது ஓர் அறையில் தள்ளிவிடு'' என்றார் கவர்னர் மெதுவாக.

பிரிட்டிஷ் ஆர்டர்லி ராணுவ நடை நடந்து போர்டைஸிடம் வந்து, ''ரெவரண்ட்'' என்று கேலியாகத் தலை வணங்கி விட்டு அவர் கையைப் பிடித்து, ''கமான்'' என்று வெளியே இழுத்துக் கொண்டு போனான். ''விடு என்னை. பரமபிதாவின் சாபம் உங்கள் தலைமேல் விழும்'' என்று கூவி மீறிய ரெவரண்டை இரும்புப் பிடியாகப் பிடித்து இழுத்துக் கொண்டு ஆர்டர்லி சென்றதும், கவர்னர் கிளைவை நோக்கி மேஜையின் ஓர் ஆசனத்தைச் சுட்டிக் காட்டி உட்காரும்படி சைகை செய்தார்.

ராபர்ட் கிளைவ் உடனடியாக உட்காரவில்லை. ''யுவர் எக்ஸலென்ஸி! முக்கிய செய்தி கொண்டு வந்திருக்கிறேன்.'' என்றான்.

கவர்னர் ப்ளாயரின் புருவங்கள் சற்று அசைந்தன. நீலநிறக் கண்கள் கிளைவை உற்று நோக்கின, செய்தியைக் கூறலாம் என்பதற்கு அறிகுறியாக, ''எஸ்'' என்று ஒரு சொல்லை மட்டும் கேள்வி கேட்கும் பாவனையில் கவர்னரின் உதடுகள் உதிர்த்தன. புகைக்குழாவை அசக்கிய வண்ணம்.

கிளைவ் கவர்னரையும் நோக்கினான், இரு ராணுவ அதிகாரிகளையும் நோக்கினான். ''இங்கு ராணுவ ஆலோசனை நடக்கிறது. அதைப்பற்றித்தான் என் செய்தியும்'' என்று கூறவும் செய்தான்.

''எதைப்பற்றி?'' என்று தெளிவாகக் கேட்டார் கவர்னர்.

''தேவிக்கோட்டையைப் பற்றி'' என்று வெடியை வீசினான், கிளைவ்.

அதைக் கேட்ட பருத்த உடலைப் படைத்த ராணுவ மேஜரான ஸ்ட்ரின்ஜர் லாரன்ஸ் சற்று ஆசனத்தில் நிமிர்ந்து உட்கார்ந்தார். ''அதைப்பற்றியே நாங்கள் பேசுகிறோம் என்பது உனக்கு எப்படித் தெரியும் லெப்டினன்ட்?'' என்று வினவினார், வியப்பால் சிறு கண்களைச் சிறிது மலரச் செய்து.

''எனக்கு மட்டும் தெரியுமென்று நினைக்க வேணடாம். தஞ்சை ராஜ்யம் முழுவதுக்கும் தெரியும்'' என்றான் கிளைவ்.

''அப்படியா!'' என்றார் எட்வர்ட் க்ருக் என்ற போர்ட் அங்கத்தினர்.

''இது ஸீக்ரட் (ரகசியம்) என்று நினைத்தோம்!'' என்றார் வில்லியம் ஹேறால்ட் என்ற இன்னோர் அங்கத்தினர்.

எதிரேயிருந்த வாலிப அதிகாரியைச் சுட்டிக் காட்டிய வெஸ் காட் என்ற இன்னோர் அங்கத்தினர், ''லெப்டினன்ட் கிளைவ்! காப்டன் கோப்பைச் சந்தியுங்கள். இவர் தலைமையில் தான் தேவிக்கோட்டை தாக்கப்படும்'' என்று கூற, கிளைவ் அந்த வாலிப அதிகாரியுடன் கைகுலுக்கினான்.

அந்தச் சமயத்தில் மேஜர் லாரன்ஸூம் சொன்னார்; ''லெப்டினன்ட் கிளைவும் அவருடன் செல்லட்டும்'' என்று.

இத்தனை சம்பாஷணையிலும் கலந்து கொள்ளாமல் இடித்த புளி மாதிரி கவர்னர் உட்கார்ந்திருநாந்தார். எல்லோருடைய சம்பாஷணையும் அடங்கியதும், ''லெப்டினன்ட்! சொல் உனக்குத் தெரிந்ததை'' என்றார் சர்வ சாதாரணமாக.

கிளைவின் கூரிய விழிகள் கவர்னரின் நீலநிற அதிகாரக் கண்களைச் சந்தித்தன. ''யுவர் எக்ஸலென்ஸி! நான் எப்படிப் பேசட்டும்! லெப்டினன்டாகப் பேசட்டுமா அல்லது தஞ்சை அரசரின் தூதனாகப் பேசட்டுமா?'' என்று வினவினான், கிளைவ்.

இதைக் கேட்ட கவர்னர் சபை மெம்பர்கள் வியப்பினால் அசைந்தனர். கவர்னர் மட்டும் அசையவில்லையானாலும் அவர் முகத்தில் சிறிது கடுமை தெரிந்து. முகம் சிவக்கவும் செய்தது. ''ஒரு பிரிட்டிஷ் லெப்டினன்ட் சுதேச ராஜாவின் தூதன்!'' என்று வெறுப்புடன் சொற்களை உதிர்த்தார் கவர்னர். வாயிலிருந்து குழாயை எடுத்து எதிரிலிருந்த பீரோட்டில் வைத்தார் அதைப் புகையவிட்டு.

''சுதேச மன்னனாக இருக்கலாம், ஆனால் பலமான எதிரி'' என்று சுட்டிக் காட்டினான் கிளைவ்.

கவர்னரின் நீலநிறக் கண்கள் ஈட்டிகளாயின. ஒருமுறை சபையை நோக்கினார். பிறகு கிளைவின்மீது நிலைத்தன.

''ஜென்டில் மென்! 149 வருஷங்களுக்கு முன்பு செல்லுங்கள். 16-ஆவது நூற்றாண்டின் கடைசி நாள். அதாவது 1599ஆவது ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதி, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத் தலைநகரில், லண்டனில் பக்கிங்காம் அரண்மனையில் ஏர்ல் ஆப் கம்பர்லாண்ட் ஜார்ஜ் பிரபு, நைட் பட்டம் பெற்ற வீரர்கள், ஆல்டர்மென், வர்த்தகர்கள் கொண்ட இருநூற்றைம்பது பிரிட்டிஷ் பிரமுகர்களுடன் நிற்கிறார். அப்போது பிரிட்டிஷ் ராணி எலிஸபெத் அவர்களிருந்த கூட்டத்தில் நுழைகிறார். கம்பர்லாண்ட் பிரபு மண்டியிட, மற்றவர்கள் மண்டியிட, பிரபுவிடம் ஒரு சாஸனத்தை ராணி அளிக்கிறார். அந்தச்

சாஸனத்தின்மேல் ஏற்பட்டது ஈஸ்ட் இந்தியா கம்பெனி. அந்தக் கம்பெனி பிறகு வளர்ந்தது, சற்றுத் தளர்ந்தது, மீண்டும் துளிர்த்தது. இப்பொழுது விரிவடைய இருக்கிறது.

''அத்தகைய கம்பெனியின் பிரதிநிதி நான். இதோ இப்போது நாம் இருக்கும் தேவனாம்பட்டினம் சரித்திரப் பிரசித்தி பெற்றது. 1684'வது ஆண்டில் காப்டன் காரிகிரண்ட் இங்கும் கடலூரிலும் நாம் தொழிற்சாலைகளைக் கட்ட மகாராஷ்டிர மன்னர் ஷாஹூஜீவிடம் அனுமதி வாங்கினார். பின்னர் ராஜாராம் ஜிஞ்ஜிகோட்டைக்கு (செஞ்சி) வந்தபோது தேவனாம் பட்டினம் கோட்டையையும் கடலூரையும் முதலில் இரண்டு லட்ச சக்கரம் கேட்டுப் பிறகு 51500 சக்கரத்துக்கு விற்றார். அந்த விற்பனை ஒப்பந்தத்தில் சார்லஸ் பார்வெல்லும் தோமேல் ஏல் என்பவரும் கையெழுத்திட்டு நமக்கு உரிமை வாங்கி வந்தார்கள்.

''இப்படிச் சிரமப்பட்டு வாங்கிய தேவனாம்பட்டணக் கோட்டையை அபிவிருத்தி செய்து ஸெய்ன்ட் டேவிட் கோட்டையாக்கினோம். இந்தக் கோட்டை பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் வித்து. இதனருகே அட்மிரல் போஸ்கவானின் கடற்படையின் ஒரு பகுதி கடலில் புறப்படத் தயாராயிருக்கிறது. இதோ கேப்டன் கோப்பின் தலைமையில் இயங்க நிலப்படை தயாராயிருக்கிறது''* என்று விளக்கிய கவர்னர் மிகுந்த கம்பீரத்துடன் ஆசனத்தில் நிமிர்ந்து உட்காரவும் செய்தார். ''இந்தப் படையெடுப்பு நிற்காது'' என்று அறிவிக்கவும் செய்தார்.

கிளைவ் பதில் சொல்லவில்லை, சில விநாடிகள். ''இத்தனையும் ஒரு பிரிடெண்டருக்காக'' என்று கடைசியாகச் சொன்ன பதிலில் வெறுப்பிருந்தது.

''ஸவாய் ஷாஹூஜி பிரிடெண்டரல்ல. சரியான வாரிசு. பிரதாப்சிங் தஞ்சையைச் சூதினால் கைப்பற்றியிருக்கிறார்'' என்றார் கவர்னர் உஷ்ணத்துடன்.

''யுவர் எக்ஸலன்ஸி! இதில் நாம் தலையிட வேண்டிய அவசியம்?'' என்று வினவினான் கிளைவ்.

கவர்னர் உடனடியாகப் பதில் சொல்லாமல் தம் எதிரே யிருந்த விஸ்கி பாட்டிலை எடுத்து. பின்னாலிருந்த பட்லரிடம் கொடுத்தார். பட்லர் எல்லாருக்கும் டம்ளர்களில் விஸ்கியை ஊற்றினான். கவர்னர் ப்ளாயர் பிறகு தமது நாற்காலியை விட்டு எழுந்திருந்து விஸ்கி டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டார். மற்றவர்களும் ஆசனங்களிலிருந்து எழுந்து, கையில் டம்ளர்களை எடுத்துக் கொண்டனர். அந்த நிலையில் கிளைவை நோக்கிக் கேட்டார், ''லெப்டினன்ட்! அவசியத்தைக் கேட்டாயல்லவா?'' என்று.

---

*The History of the East India Company by - Captain Thornton, R.N.Page1

ஆமாம் என்பதற்கு அறிகுறியாகத் தலையசைத்தான் கிளைவ்.

கையிலிருந்த டம்ளரைச் சற்றுத் தூக்கிய கவர்னர், ''லெப்டினன்ட்! நாம் இங்கிருப்பது வர்த்தகத்துக்கு மட்டுமல்ல, பிரிட்டிஷ் சக்தியை உயர்த்துவதற்கும்கூட. அதனால்தான் தேவிக்கோட்டை மீது படை யெடுக்கிறோம்'' என்று கூறிவிட்டு, ''ஜெண்டில்மென்! * ப்ரோ ரெஜி எட் பாட்ரியா'' என்று சொல்லி விஸ்கியை உறிஞ்சினார். மற்றவர்களும் அந்த வாக்கியங்களைச் சொல்லி உறிஞ்சினார்கள். பெரிய அனர்த்தத்துக்கு அடிகோலப் பட்டதைக் கிளைவ் உணர்ந்தான்.

19. அதிர்ஷ்டச் சீட்டு!

'ப்ரோ ரெஜி எட் பாட்ரியா.' — அதாவது மன்னருக்கும் நாட்டுக்கும்' என்று உணர்ச்சி கோஷம் எழுப்பி, கவர்னர் உறிஞ்சியது போலவே கிளைவும் விஸ்கியை உறிஞ்சினானாலும் அவன் மனத்தில் சந்துஷ்டி சிறிதும் இல்லை. பிரிட்டிஷ் மன்னருக்கும் தாய் நாடான பிரிட்டனுக்கும் சிறப்புண்டாக்கத் தக்க எந்தப் பணியிலும் வாலிபனான கிளைவ் இறங்கத் தயாராக இருந்தாலும், தேவிக்கோட்டை படையெடுப்பு அத்தனை சுலபமல்ல வென்றும், பிரதாப் சிங் போன்ற அறிவாளியான ஒரு மன்னன் பிரிட்டிஷ் பக்கம் இருப்பதே பிரிட்டனுக்கு லாபமென்றும் அவன் கருதியதால், அவன் முகத்தில் தீவிர சிந்தனையும் உற்சாக மில்லாத வெறுப்பு கலந்த ஒரு சாயையும் படர்ந்து கிடந்தன. அதைக் கவர்னரும் கவனித்தார். அவ்விருவரில் மேஜர் லாரன்ஸ் கேள்வி எதுவும் கேட்காவிட்டாலும் கவர்னர் மட்டும் விஸ்கி டம்ளரை மேஜைமீது வைத்துவிட்டுக் கேட்டார், ''லெப்டினண்ட்! உங்களுக்கு இந்தப் படையெடுப்பில் அவ்வளவு உற்சாகம் இல்லைபோல் தெரிகிறது. காரணம் சொல்ல முடியுமா?'' என்று.

கிளைவின் கண்கள் கவர்னரின் நீலநிறக் கண்களைத் தைரியத்துடன் சந்தித்தன. ''நமது மன்னரின் சிறப்பையும் நாட்டின் சிறப்பையும் ஓங்கச் செய்ய இப்பொழுது சபதம் செய்தோம். அந்தச் சபதத்திற்கு உயிரைக் கொடுக்க ஒவ்வொரு பிரிட்டிஷ் பிரஜையும் கட்டுப்பட்டவன். ஆனால் சபதம் நிறைவேறக் கூடியதாகவும் இருக்க வேண்டும்'' என்று கிளைவ் சிறிதும் அச்சமின்றிப் பதில் கூறினான்.

---

* Pro rege ef patria For king and country From-Chats on Military Curios-by Stanley C, Johnson. Page 48.

கவர்னர் ஆசனத்திலமர்ந்து மீண்டும் புகைக்குழாயை வாயில் வைத்துக் கொண்டார். அதில் பக்கத்திலிருந்த வெள்ளிக் குப்பியிலிருந்த புகையிலையையும் சிறிது அடைத்துப் பற்ற வைத்துப் புகையை வெளியே ஊதினார். இதற்குப் பிறகு கேட்டார், ''ஏன் நமது சபதம் நிறைவேறாது?'' என்று.

கவர்னர் ஆசனத்தில் அமர்ந்தவுடன் மற்றவர்களும் ஆசனத்தில் அமர்ந்துவிட்டாலும் கிளைவ் மட்டும் உட்காரவில்லை. அவன் முகத்திலிருந்த வெறுப்பும் மறையவில்லை. கையிலிருந்த டம்ளரை மேஜைமீது வைத்துபோதுகூடச் சிறிது சத்தத்துடனேயே வைத்தான். அவன் உதடுகள் மெல்ல அசைந்தன. ''உங்கள் படையெடுப்பு மந்திராலோசனை என்று நடந்தது?'' என்று வினவினான் மெள்ள.

''நேற்று...'' கவர்னர் பதில் அலட்சியமாக உதிர்ந்தது; புகைக்குழாயும் அதனால் உதடுகளில் அசைந்தது.

''அதாவது ஏப்ரல் 10-ஆம் தேதி?'' என்று கேட்டான் கிளைவ்.

''ஆம்'' என்றார் கவர்னர்.

''அதன் பிரதியைப் பிரதாப் சிங் மறுநாளே என்னிடம் காட்டுகிறார். இதிலிருந்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?''

''நம்மிடை யாரோ ஒற்றின் இருக்கிறான்.''

''சந்தேகம் இல்லை. அந்த ஒற்றனும் கவர்னரின் வெகு சமீபத்தில் இருக்கிறான். ஏனென்றால் கவர்னர் உபயோகிக்கும் காகிதத்திலேயே அந்தப் பிரதி எடுக்கப்பட்டிருக்கிறது. நமது நடவடிக்கைகளை முழுதும் அறிந்த தஞ்சை மன்னன் நமது படையெடுப்பைச் சமாளிக்க முன்னதாக நடவடிக்கை எடுத்திருக்க மாட்டானென்று நினைக்கறீர்களா?'' என்று கேட்ட கிளைவ் மேலும் சொன்னான்: ''இந்த ஷாஹூஜி போலியென்று பிரதாப்சிங் சொல்லுகிறார். இவரை நம்பிப் போரில் இறங்குவது நமக்கு உசிதமல்லவென்றும் என்னைச் சொல்லச் சொன்னார். மகாராஷ்டிர சாம்ராஜ்யத் தலைநகரான ஸதாராவிலிருந்து விடுதலை யடைந்துள்ள சந்தா சாகேப் பிரெஞ்சுக்காரர்களுடன் சேர்ந்திருப்பதால் நமது பலம் துர்ப்பலமென்றும் தமது நட்பே நமக்கு நல்லதென்றும் தஞ்சை மன்னர் கூறுகிறார். இதில் அதிகத் தவறில்லையென்று எனக்குத் தோன்றுகிறது.''

கவர்னர் இதற்கு ஏதும் பதில் சொல்லவில்லை. மேஜர் லாரன்ஸே பதில் சொன்னார். ''பிரதாப் சிங்கின் பலம் அதிகம் இல்லையென்பது நமது நம்பிக்கை. ஷாஹூஜி தஞ்சை நோக்கி வருகிறார் என்று தெரிந்தால் உடனடியாகத் தஞ்சை சைன்னியத்தின் ஒரு பகுதியும், தஞ்சை சம்ஸ்தான பிரபுக்கள் பலரும் ஷாஹூஜியுடன் சேர்ந்து கொள்வார்கள். தவிர

மந்திராலோசனை நடந்தது நேற்றே ஆனாலும் நிலப்படையின் பெரும் பகுதி முன்னதாகவே வெள்ளாற்றங்கரையை நோக்கி அனுப்பப்பட்டிருக்கிறது. இங்குள்ள கடற்படை காலையில் புறப்பட்டு விடும். அப்படையில் நிலப்படைக்கு வேண்டிய உணவுப் பொருள்களும் பீரங்கிகளும் வருகின்றன. காப்டன் கோப் மீதியுள்ள சிறுபடையுடன் இன்றிரவே கிளம்புகிறார். அதுமட்டு மல்ல. உதவிக்கு வரும் கப்பல்கள் பலமானவை. இவற்றில் உணவு சப்ளை கப்பல்கள் இரண்டைத் தவிர * அப்போலோ என்ற சிகிச்சை மருந்துகளும் கருவிகளும் தாங்கிய கப்பலும், பெம்ப்ரோக் என்ற 60 பீரங்கிக் கப்பலும், 74 பீரங்கிகளை உடையதும், அட்மிரல் போஸ்கவானின் கொடியைத் தாங்கியிருப்பதுமான நாமூர் என்ற பெரும் போர்க் கப்பலும் இருக்கின்றன. ஆகவே வெற்றியைப்பற்றிச் சந்தேகமில்லை'' என்று விளக்கினார் மேஜர் லாரன்ஸ்.

கிளைவ் மேஜர் லாரன்ஸை நோக்கித் திரும்பினான் கம்பீர மாக. ''இவ்வளவு பலம் இருக்க இந்த ஸவால் ஷாஹுஜி என்ற காட்டுராஜாவின் தயவு நமக்கு எதற்கு?'' என்று வினவினான்.

இதற்குக் கவர்னர் பதில் சொன்னார். ''உண்மையில் இத்தனை பலம் தேவையில்லை. தஞ்சைப் பகுதிக்குள் நுழையுமுன்பே சிதம்பரத்தில் ஷாஹுஜியுடன் தஞ்சைப் படையின் ஒரு பகுதியும் பிரமுகர்களும் வந்து கலந்து கொள்வார்கள்.''

''அதனால்?''

''ஷாஹுஜி மன்னராகிவிடுகிறார். தேவிக் கோட்டையை யும் சுற்றுப்புறங்களையும் நமக்களிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார். போர் ஏற்பட்டால் அதற்கான செலவையும் தந்துவிடுவதாக ஒப்பந்தம் செய்திருக்கிறார்.''

இதைக் கவர்னர் திடமாகச் சொல்லவில்லை. அவர் குரலில் வேறு ஏதோ பொருள் புதைந்து கிடப்பதாகத் தோன்றியது கிளைவுக்கு. ''ஷாஹுஜிக்கு அத்தனை சொல்வாக்கு இருக்கு மானால் நாம் இத்தனை படைபலத்துடன் ஏன் செல்ல வேண்டும்?'' என்று மீண்டும் வினவினான்.

சாதாரண லெப்டினண்டுக்குக் கவர்னர் பதில் சொல்ல அவசியமில்லைதான். ஆனால் புதுச்சேரி போரில் போஸ்கவா

---

* ORMES "History of the Military Transactions of the British Nation in Indostan" - Vol. II - Page 113.

* "The Expelled Savai Shahuji of Kattu Raja sought the help of the French but Dupleix refused to entertain him. Kattu Raja then sought the help of the English at Fort St. David in 1749" - Maratha Rule in Carnatic - by C.K. Srinivasan - PP 251-252.

னிடம் சேவை செய்தபோது கிளைவ் காட்டிய வீரமும், உணவுப் பொருள் பொதி வண்டிகளை எந்தவிதச் சங்கடமுமில்லாமல் கொண்டு வந்து சேர்த்த அவன் திறனும் கவர்னருக்கும் மேஜர் லாரன்ஸுக்கும் அவனிடம் அதிகப்படியான பாசத்தை உண்டாக்கியிருந்தபடியால் கவர்னர் உரையாடலை மேற் கொண்டு நடத்தினார். ஆனால் இம்முறை அவர் நேர்முகமாகப் பேசாமல் விஷமமான பாணியில் திரும்பி, ''மேஜர் லாரன்ஸ்! ஷாஹுஜி ஏன் நமக்கு அவசியம்?'' என்றார்.

மேஜர் லாரன்ஸும் கவர்னர் பாணியைப் பின்பற்றி, ''தேவிக்கோட்டை அவசியம்'' என்றார்.

''காரணம்?'' கவர்னர் ஒற்றைச் சொல் கேள்வியை வீசினார்.

''மசூலிப் பட்டணத்திலிருந்து கேப் காமரின் (குமரிமுனை) வரை தேவிக் கோட்டையைப் போல் வசதியுள்ள கோட்டை கிடையாது. அதன் சுற்றுப்புறங்கள் செழிப்பானவை. நமது வர்த்தகத்துக்கு வேண்டிய லினன் உற்பத்தித் தறிகள் அதைச் சுற்றித்தான் இருக்கின்றன. தேவிக்கோட்டையை அடுத்த துறைமுகம்போல் ஏற்றுக் கொள்ளத் தக்க துறைமுகம் எதுவும் கிழக்குக் கடற்கரையில் கிடையாது'' என்றார் ஸ்ட்ரிஞ்ஜர் லாரன்ஸ்.

''அந்தக் கோட்டை கொள்ளிடத்தின் முகத்துவாரத்தில் இருகிறதல்லவா?''

''ஆம்.''

''அதன் முகத்துவாரம் அடிக்கடி மணல் தட்டி அடைத்து விடுகிறதே!''

''உண்மை. ஆனால் அந்த மணலுக்குக் குறுக்கே பெரிய ஆழமான வாய்க்கால் ஓடுகிறது. அதில் பெரும் கப்பல்கள் வர முடியும். சற்றுச் சிரமப்பட்டு மணற் பகுதியை வெட்டி விட்டால் இன்னும் வசதி அதிகம். அதற்கு இணையான துறைமுகம் இந்தக் கரையோரத்தில் எதுவுமே இல்லை.''

''இது கிடைத்துவிட்டால்?''

''பிரிட்டன் இந்தியக் கீழைக் கடற்கரையின் அதிபதி.''

இதற்குப் பிறகு கவர்னர் பேசவில்லை. மேஜர் லாரன்ஸின் பேச்சை ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார். அவர் முகத்தில் மகிழ்ச்சிச் சாயை படர்ந்தது. சற்றுப் பொறுத்து, ''மேற்கொண்டு கேள்வி ஏதாவது உண்டா?'' என்று வினவினார் கிளைவை நோக்கி.

கிளைவுக்கு விஷயம் திட்டவட்டமாகத் தெரிந்தது. கவர்னருக்கும் போஸ்கவானுக்கும் காட்டுராஜாவைவிட தேவிக் கோட்டை மீதுதான் அக்கறையென்றும், கோட்டையைப் பிடிக்க

ஷாஹூஜியை ஒரு சாக்காகவே அவர்கள் உபயோகப் படுத்துகிறார்களென்றும் புரிந்து கொண்டான். இருப்பினும், அதே சமயம் அவன் கண் முன்பு வீரனான பிரதாப் சிம்மனின் கம்பீர முகமும் எழுந்தது.

தஞ்சை மன்னர் அந்தத் திட்டத்தைக் குறித்து நகைப்பதாகக் கூடக் கிளைவுக்குத் தோன்றியது. இருப்பினும் பிரிட்டனுடைய நன்மை, கீர்த்தி இவை முக்கியமாக அவன் மனத்தில் எழுவே, அவன் முகத்தில் பெரும் கனவுச் சாயை படர்ந்தது. தேவிக்கோட்டை கிடைத்தால் கர்நாடக ராஜ்யம் பிரிட்டனின் கைக்குள் சிக்குவது சாத்தியம் என்ற நினைப்பு மற்ற நினைப்புகளைச் சிதறடித்தது.

பிரிட்டிஷ் கொடி தேவிக் கோட்டை மீதும் ஆற்காட்டுக் கோட்டை மீதும் பறப்பதாக மனக்கண்ணில் தோன்றியது. அதனால் முகத்தில் வெறுப்பு மறைந்து மந்தகாசம் மலர்ந்தது. தன் இடையிலுள்ள கத்தியின் மீது கையை வைத்தான் கிளைவ்.

அவன் முகத்தின் மாறுதலையும், வாளின்மீது அவன் கை அமர்ந்ததையும் கவனிக்கத் தவறாத கவர்னர் ஃப்ளாயர், ''லெப்டினண்டும் இந்தப் படையெடுப்பில் கலந்து கொள்ள இஷ்டப்படுவதாகத் தெரிகிறது'' என்றார்.

''சரியான பிரிட்டிஷ் சோல்ஜரின் சகஜமான அபிலாஷை தானே அது'' என்றார் மேஜர் லாரன்ஸூம் விஷமமாக.

கவர்னர் தமது வாயிலிருந்து புகைக் குழாயை எடுத்து எதிரிலிருந்த தட்டில் வைத்தார். பிறகு சீட்டுக் கட்டை எடுத்துக் கலந்தார். ''கிளைவ்! உன் அதிர்ஷ்டம் எப்படியிருக்கிறதென்று பார்க்கிறேன். சீட்டை நகர்த்துகிறேன். ஒன்றை எடு. அது ஸ்பேட் ஏஸாயிருந்தால் நீ காப்டன் கோப்புடன் சிவிலியனாக (சாதாரண பிரஜையாக) அலுவல் புரியலாம்'' என்று கூறிச் சீட்டுக்களைப் பரபரவென்று நகர்த்தினார். கிளைவும் அவர் சொற்படி ஒரு சீட்டை சட்டென்று உருவினான். கவர்னர் மீதிச் சீட்டுகளை மேஜைமீது போட்டுவிட்டு அந்தச் சீட்டை வாங்கிப் பார்த்தார். ''கிளைவ்! நீ அதிர்ஷ்டசாலி! ஸ்பேட் எஸ் கிடைத்திருக்கிறது உனக்கு. பிரிட்டனின் எதிர்காலம் உன்னால் நிர்ணயிக்கப்படும்'' என்று கூறி மற்றவர்களுக்கும் சீட்டைக் காட்டினார்.

கிளைவின் இதழ்களில் புன்னகை அரும்பியது. கவர்னருக்குச் சீட்டுத் தந்திரங்கள் தெரியுமென்பதும் தான் கைவைக்கும் இடத்தில் ஸ்பேட் ஏஸை அவரால் நகர்த்த முடியுமென்பதும் கிளைவுக்குத் தெரிந்திருந்தபடியால், அந்தப் படையெடுப்பில் தன்னை இணைக்க அவர் முன்னமே தீர்மானித்திருந்தாரென்பதை உணர்ந்து கொண்டான். இருப்பினும் அதை வெளிக்குக் காட்டாமல் மேஜர் லாரன்ஸைப் பார்த்தான்.

ஸெய்ன்ட் டேவிட் கோட்டையிலிருந்த உதவாக்கரை ரௌடிகளாயிருந்த வெள்ளையரைக் கொண்டு வீரமுள்ள படையொன்றை உருவாக்கிய ஸ்ட்ரிஞ்ஜர் லாரன்ஸூம் விஷயத்தைப் புரிந்து கொண்டு புன்னகை பூத்தார்.*

கிளைவ் கடைசியாகக் காப்டன் கோப்பை நோக்கித் தலை தாழ்த்தி, ''நான் எப்பொழுது புறப்பட வேண்டும்?'' என்று கேட்டான்.

''நௌ (இப்பொழுதே)'' என்ற காப்டன் கோப் ஆசனத்தை விட்டு எழுந்தான்.

அத்துடன் ஆலோசனை முடிந்ததென்பதைக் குறிப்பிட கவர்னர் கையை அசக்கியதால், கிளைவும் காப்டன் கோப்பும் சபைக்குத் தலைவணங்கி வெளியே சென்றனர். தனக்குப் பெரிய அதிர்ஷ்டம் அடித்துவிட்டதென்ற எண்ணத்துடனும், தேவிக் கோட்டை அப்பொழுதே பிடிபட்டுவிட்டது என்ற உற்சாகத் துடனும் காப்டனுடன் நடந்தான் கிளைவ்.

ஆலோசனை அறைக்கு வெளியே வந்ததும் காப்டன் கோப், கிளைவை நோக்கி, ''லெப்டினண்ட்! நீ இரண்டு மணி நேரம் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்'' என்றான்.

''தேவையில்லை. இப்பொழுதே புறப்பட நான் தயார்'' என்றான் கிளைவ்.

கிளைவின் உற்சாகத்தைக் கண்ட காப்டன் கோப் ''நீண்ட தூரம் பயணம் செய்திருக்கிறாய்'' என்று சுட்டிக் காட்டினான்.

''அதிர்ஷ்டம் அலுப்பைக் கலைத்துவிட்டது'' என்றான் கிளைவ்.

அப்பொழுதே இருவரும் புறப்பட்டார்கள். கோட்டையிலிருந்த சிறு படையுடன் துரிதமாகப் புரவிகளில் பயணம் செய்து பெரும் படை தங்கியிருந்த வெள்ளாற்றங்கரைக்கு மறுநாள் மாலை வந்து சேர்ந்தார்கள்.

அதிர்ஷ்டத்தை எண்ணி மகிழ்ந்துகொண்டே பயணம் செய்த கிளைவ் எதிரேயிருந்த படைகளின் கூடாரங்களைக் கண்டு பெருமிதம் அடைந்தான். ஆனால் அவன் நினைத்தபடி அதிர்ஷ்டம் வேலை செய்யவில்லை. நிகமாந்த மகா தேசிகனின் சுலோகம் வெகு துரிதமாக வேலை செய்தது. கிளைவையும் கோப்பையும் அந்தப் படையையும் எதிர்பாராத பிரளயம் வளைத்துக் கொண்டது.

---

* Major Stringer Lawrence forged a competant army out of the ruffians of Fort St. David-Lawford's 'Clive' - page 24

www.thamizhthenee.blogspot.com

20. காட்டுராஜா சாட்சியமளிக்கிறார்

மனித முன்னேற்றத்துக்குத் தேவை அதிர்ஷ்டந்தான். ஆனால் அது ஏன் வருகிறது, எப்படி வருகிறது, எப்படி மாறுகிறது என்பது மட்டும் மனித அறிவுக்கும் புலன்களுக்கும் அப்பாற் பட்டதாயிருக்கின்றது. திருஷ்டிக்குப் புலப்படாத காரணத்தாலேயே அது அதிர்ஷ்டம் என்று அழைக்கப்படுகிறது. அது சம்பந்தப்பட்டவரை 'தைவமத்ர ப்ரமாணம்' என்ற நிக மாந்த மகாதேசிகன் வாக்குப்படி தெய்வ சித்தமே சத்தியமாகிறது. அதற்கு வெள்ளாற்றங்கரையே உதாரணமாயிற்று.

செயின்ட் டேவிட் கோட்டையிலிருந்து காப்டன் இரவோடு இரவாகக் கிளம்பி மறுநாள் மாலை வெள்ளாற்றங்கரைக்கு வந்தபோது, அந்த ஆற்றின் வெள்ளத்தைப் போலவே தனது அதிர்ஷ்டமும் கரைபுரண்டு ஓடுகிறது என்று நினைத்தான் வாலிபனான கிளைவ். அவ்விருவரும் வந்தபோது வானம் நிர்மலமாயிருந்தது. கொல்லி மலையில் கிளம்பி, தொழுதூருக்கு மேற்கே வசிஷ்ட நதியும் கலந்து கொண்டதால் விசாலப்பட்டு, சுவேத நதியென்று வடமொழியிலும், வெள்ளாறு என்று தமிழிலும் அழைக்கப்பட்ட அந்தப் புண்ணிய நதிகூட, கிளைவ் தனது கரையை அடைந்தபோது அவன் அதிர்ஷ்டத்தை உயர்த்துவது போலும், அவனுக்கு அடங்கி நடப்பது போலும் மிக நிதானமாகவே பிரவகித்துக் கொண்டிருந்தது.

கிளைவ் சில நிமிடங்கள் தனது புரவியை நிறுத்தி எதிரே அந்நதியையும் நதிக்கரையில் விரிந்த காட்சியையும் அநுபவித்தான். ஆற்றுக்கு அக்கரையிலிருந்த சோலைகளைத் தழுவி வந்த தமிழ் நாட்டு இன்பக் காற்றையும் நுகர்ந்தான். ஆற்றங்கரையில் அடிக்கப் பட்டிருந்த பல கூடாரங்களும், ஆங்காங்கு உலாவிக் கொண்டிருந்த சோல்ஜர்களும் இந்தியச் சிப்பாய்களும், நடுவே யிருந்த ஒரு கூடாரத்தில் கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்த யூனியன் ஜாக்கும் (பிரிட்டிஷ் கொடியும்) அவனுக்குப் பெருமகிழ்ச்சி அளித்ததென்றால், அவனை நோக்கித் துரிதமாகப் புரவி யொன்றில் வந்த இன்னொரு வெள்ளை வீரன் உருவமும் அவன் ஆனந்தத்தை ஆகாசத்துக்குக் கொண்டு போயிற்று. கனவேகமாகப் புரவியில் வந்த அந்த வீரன், காப்டன் கோப்பும் கிளைவும் இருந்த இடத்தை அணுகியதும் சட்டென்று புரவியை நிறுத்தி வியப்பு நிரம்பிய கண்களைக் கிளைவ்மீது நாட்டி, ''நீ இங்கு எப்போது வந்தாய்?'' என்று வினவினான்.

வந்தவன் தனது ஆருயிர்த் தோழனான எட்மண்ட் மாஸ்கலீன் என்பதைக் கண்ட கிளைவ் புரவியிலிருந்து குதித்து

அவனையும் புரவியிலிருந்து கீழே இழுத்து அவனைத் தழுவிக் கொண்டான். ''எட்மண்ட்! நீ இங்கிருப்பது எனக்குத் தெரியாதே. இத்தனை நாள் நீ செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் இருப்பாய் என்றல்லவா நம்பினேன்'' என்றான்.

அவ்விருவரும் மேலே பேசியிருப்பார்கள், காப்டன் கோப் குறுக்கிட்டிராவிட்டால். ''உறவாட இது நேரமுமல்ல, இடமுமல்ல'' என்ற காப்டனின் கடும் சொல் இருவரையும் விலகச் செய்தது. அவர்கள் விலகியதும் காப்டன் கோப் கேட்டான், ''மிஸ்டர் மாஸ்கலீன்! கூடாரங்கள் சரியாக அமைக்கப் பட்டிருக்கின்றனவா? சோல்ஜர்களுக்கு உணவு போதுமான அளவு இருக்கின்றதா?'' என்று.

''கூடாரங்கள் அசைக்க முடியாது. உணவுப் பொருள்கள் இன்னும் நான்கு நாளைக்கு இருக்கும்'' என்றான் எட்மண்ட்.

''பீரங்கிகள், வெடிமருந்து, குண்டுகள்?'' கோப்பின் குரல் அதிகாரத் தோரணையில் விசாரித்தது.

''நமது படையில் 430 வெள்ளையர்கள், 1000 இந்தியச் சிப்பாய்களுமே இருக்கிறார்கள் என்பது தங்களுக்குத் தெரியும். செயின்ட் டேவிட் கோட்டையில் நான்கு மத்திய தர பீரங்கிகளும், நான்கு சிறுபீரங்கிகளும்தான் கொடுத்தார்கள்'' என்றான் எட்மண்ட். அவன் குரலில் அவை போதாதென்ற பொருள் நன்றாக ஒலித்தது.

''கவலை வேண்டாம். கப்பல்களில் கோட்டையைத் தகர்க்கும் பெரும் பீரங்கி வருகிறது. உணவுப் பொருள்களும் வருகின்றன. அவை வந்ததும் நமது பலம் அதிகமாகிவிடும். அதுமட்டுமல்ல. சிதம்பரத்தில் காட்டு ராஜாவின் (ஷாஹூஜியின்) படைகளும், தஞ்சையிலிருந்து வந்து கலந்து கொள்ளும். தேவிக் கோட்டை நமது கையிலிருப்பதுபோலத் தான்'' என்றான் காப்டன் கோப். பிறகு மறுபேச்சுப் பேசாமல் புரவியை முன்னால் நடத்தினான்.

நண்பர் இருவருங்கூட தமது புரவிகளில் ஏறி, காப்டனைத் தொடர்ந்தார்கள். கூடாரங்களிலிருந்த சோல்ஜர்கள் புரவிகளின் காலடிச் சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்ததும் 'அட்டென்ஷ'னில் நின்று காப்டனுக்குச் சலாம் செய்தார்கள். அவர்களுக்குத் தலையை மாத்திரம் லேசாகத் தாழ்த்தி மிகக் கம்பீரமாகக் காப்டன் கோப் புரவியை நடத்திச் சென்று, மத்தியில் யூனியன் ஜாக் பறந்து கொண்டிருந்த கூடாரத்தின் வாயிலில் இறங்கிக் கிளைவையும் இறங்கும்படி சைகை செய்தான். பிறகு எட்மண்ட்டை நோக்கி, ''மிஸ்டர் மாஸ்கலீன்! காட்டு ராஜாவை என் கூடாரத்துக்கு வரச் சொல்லுங்கள்'' என்று உத்தரவிட்டுக் கூடாரத்துக்குள் நுழைந்தான்.

காப்டன் கோப் கூடாரத்துக்குள் நுழைந்த பின்பும் கிளைவ் சூழ்நிலையைப் பார்த்துக் கொண்டு நின்றான். அவனது நண்பன், ''லெப்டினெண்ட்! தாங்களும் உடன் செல்லுங்கள். இரவு சந்திக்கிறேன்'' என்று கூறி விஷமப் புன்முறுவல் செய்தான்.

''எட்மண்ட், நாம் பேச வேண்டியது நிரம்ப இருக்கிறது. நானும் உன்னுடன் தங்குகிறேனே'' என்றான் கிளைவ்.

எட்மண்ட் மாஸ்கலீன் சிறிது தயங்கினான். முடிவில் கூறினான். ''முடியாது'' என்று.

''ஏன்? நாம் இருவரும் சென்னைக் கோட்டையில் ஒரே அறையில் தானே இருந்தோம்? பிரெஞ்சுக்காரர் அதைப் பிடித்த போது ஒன்றாகத் தானே ஓடி வந்தோம்?'' என்று வினவினான் கிளைவ்.

''அப்பொழுது நீ சாதாரண ரைட்டர்—குமாஸ்தா, என்னைப் போல். இப்பொழுது லெப்டிணண்ட் தவிர, கமிஸ்ஸரியேட்டை (உணவுப் பொருள் சப்ளை அதிகாரியாக) உயர்ந்து பணமும் சேர்த்துவிட்டாய்.''

''பணம் நட்பைப் பிரிக்க முடியுமா?''

''முடியாது. அந்தஸ்தைப் பிரிக்க முடியும்.''

''என்ன அந்தஸ்து?''

''நீ லெப்டினன்ட், நான் சாதாரண சோல்ஜர். நீ இருக்க வேண்டியது காப்டன் கூடாரத்தில், தவிர...'' இந்த இடத்தில் சிறிது தயங்கினான் எட்மண்ட்.

கிளைவின் புருவங்கள் சந்தேகத்தால் உயர்ந்தன. ''தவிர?'' என்று கேள்வியும் உதிர்ந்தது அவன் உதடுகளிலிருந்து.

''நான் தனிமையில்லை'' என்றான் எட்மண்ட்.

''வேறு யார் இருக்கிறார்கள்?'' என்று கேட்டான் கிளைவ் சந்தேகத்துடன்.

''சிறிது நேரத்தில் உனக்கே புரியும்'' என்று கூறிய எட்மண்ட், தனது புரவியைத் துரிதமாக நகர்த்திச் சென்று விட்டான்.

கிளைவ் மிகுந்த யோசனையுடன் புரவியிலிருந்து இறங்கி, காப்டன் கூடாரத்திற்குள் நுழைந்தான். அங்கு இரு 'காம்ப் காட்ஸ்' (முகாம் கட்டில்கள்) போடப்பட்டிருப்பதையும் மற்ற வசதிகள் இருந்ததையும் கவனித்தான். நடுவிலிருந்த கட்டிலில் காப்டன் உட்கார்ந்திருந்தான். கோட்டையும் ஷர்ட்டையும் கழற்றி விட்டு ஷர்ட்டுடன் உள்ளே நுழைந்த கிளைவ் ஷர்ட்டைக் கழற்றாமலே உட்கார்ந்தான் மற்றொரு கட்டிலில். அவன் முகத்தில் தீவிர யோசனை படர்ந்து கிடந்தது. ''அந்தக் காட்டு ராஜா எப்பேர்ப்பட்டவர்?'' என்று வினவினான் கடைசியாக.

காப்டன் கோப் நகைத்தான். ''மற்ற இந்திய ராஜாக்களைப் போல்தான்'' என்று நகைப்பின் ஊடே கூறவும் செய்தான்.

''அப்படி என்றால்?'' கிளைவின் குரலில் கடுமையிருந்தது.

''தஞ்சையின் உண்மை மன்னனை நம்மிடம் காட்டிக் கொடுக்கிறான். நாம் கொடுக்கும் விஸ்கி, வொயின் மற்றும் பல வசதிகளை அநுபவிக்கிறான்...''

''இந்த வசதிகள்....''

''உன் நண்பரின் கூடாரத்தில் இருக்கின்றன.''

''இதுதான் என் நண்பனுக்கு வேலையா?''

''இதுவும் ஒரு வேலை. ஆனால் உன் நண்பன் இதை ரசிப்பதாகத் தெரியவில்லை.''

கிளைவ் சிறிது நேரம் சிந்தித்துவிட்டு, ''கேப்டன் எனது நண்பனைப் பார்க்க, அவனுடன் தங்க, தங்கள் அனுமதி வேண்டும்'' என்றான்.

''பார்த்துவிட்டு வரலாம். ஆனால் லெப்டினன்ட் தங்க வேண்டிய இடம் காப்டனுடன்'' என்று கூறிய கோப் ''கிளைவ்! சற்றுப் பொறு. நமது மன்னரைப் பார்த்துவிட்டுப் போகலாம்'' என்றான்.

அதற்குப் பிறகு கிளைவ் மௌனம் சாதித்தான். தனக்குத் தேவிக் கோட்டையைப் பிடிக்கும் பணியில் இடம் கிடைத்தது அதிர்ஷ்டமாகவும் மகிழ்ச்சியாகவும் தோன்றியதென்றாலும், பிரதாப் சிம்மனை நினைத்தபோது தான் செய்யும் காரியம் அநியாயம் என்ற யோசனையும் பிறந்தது. எதற்கும் காட்டு ராஜாவையும் பார்த்த பின்பு தீர்மானத்துக்கு வரலாம் என்று நினைத்தான்.

நிமிடங்கள் பறந்தன. அரை மணிஆயிற்று. காட்டு ராஜா வரவில்லை. அவருக்குப் பதில் எட்மண்ட் வந்து சேர்ந்தான். ''எங்கே காட்டு ராஜா?'' என்று சீறினான் காப்டன்.

''வர மறுக்கிறார்'' என்றான் எட்மண்ட் பதிலுக்கு.

''ஏன் ?'' காப்டன் கோப்பின் சினம் அதிகமாகி முகம் சிவந்தது.

''அவர் மன்னராம். தாங்கள் கேவலம் காப்டனாம்'' என்று எட்மண்ட் மேலும் குத்தினான் சொற்களால்.

காப்டன் கோப்பின் முகத்திலிருந்து சினம் மறைந்து வியப்பு விரிந்தது. கட்டிலிலிருந்து எழுந்திருந்து கூடாரத்தில் இருமுறை உலாவினான். பிறகு திடீரென்று நின்று. ''கிளைவ்!'' என்று கூவினான்.

கிளைவ் கட்டிலிலிருந்து சரேலென்று எழுந்திருந்து, கால்களைக் குவித்து, ''எஸ் காப்டன்'' என்று ஆஜராக நின்றான்.

''நீ காட்டு ராஜாவின் கூடாரத்துக்கச் சென்று அவரை மரியாதையுடன் அழைத்து வா. அவர் வராவிட்டால் எப்படியாவது அழைத்து வா. திஸ் ஈஸ் ஆன் ஆர்டர்... இது உத்தரவு'' என்றான் கோப் சினத்துடன். பிரிட்டிஷ் சாம்ராஜ்யக் கலை பூராவும் காப்டன் கோப்பின் வதனத்தில் பிரகாசித்தது.

கிளைவ் தலை தாழ்த்தி எட்மண்டுடன் வெளியே சென்றான். வெளியே வந்ததும் கிளைவை நோக்கிய எட்மண்ட், ''ராபர்ட்! நிதானத்தைத் தவறவிடாதே. என் கூடாரத்திலிருந்த சரக்குகள் இப்போது ராஜாவின் கூடாரத்தில் இருக்கின்றன. எதையும் கண்டுகொள்ளாதே! எப்படியும் அவர் நமது பிற்காலத் தஞ்சை மன்னர் என்பதை மறவாதே'' என்று நல்ல ஆங்கிலத்தில் போதித்தான். லேசாக நகைக்கவும் செய்தான்.

கிளைவ் ஏதும் பேசாமல் நண்பனுடன் நடந்தான். பத்துக் கூடாரங்களைத் தாண்டியதும் இருந்த ஒரு பெருங் கூடாரத்தின் முன்பாக நின்ற எட்மண்ட், ''ராபர்ட்! உள்ளே போ. ஆனால் நான் சொன்னது நினைவிலிருக்கட்டும்'' என்று எச்சரித்தான்.

அவன் எதற்காக இத்தனை தூரம் எச்சரிக்கிறான் என்பதைப் பற்றிக் குழம்பிய கிளைவ் திடீரென விழித்துக் கொண்டான். கூடாரத்திற்குள்ளிருந்து பெரும் சிரிப்பு அந்த நதிக்கரையின் அமைதியைப் பிளந்தது. அதைக் கேட்டதும் நிலைமையை ஓரளவு புரிந்துகொண்ட கிளைவ் ஒருமுறை நண்பனை நோக்கினான். பிறகு சரேலென்று கூடாரத்துக்குள் நுழைந்தான்.

கூடாரத்தின் உட்புறநிலை அவனைத் திகைக்க வைத்தது. ஒரு மடக்கும் ஈஸிசேரில் காட்டுராஜா தலையணையொன்றில் மல்லாந்து கிடந்தார். அவர் கையொன்றில் பெரும் விஸ்கி குப்பியொன்று காட்சியளித்தது. இருபுறமும் இரு வெள்ளைக்காரப் பெண்கள் நின்றிருந்தார்கள். அவ்விருவர் உடைகளிலிருந்தும் அவர்கள் ராணுவ நர்ஸ்கள் என்பதைப் புரிந்துகொண்டான், கிளைவ். அவர்களில் ஒருத்தியின் இடையை ராஜாவின் இன்னொரு கை சுற்றிக்கொண்டிருந்தது. ''நர்ஸ்கள் எனக்குச் சிகிச்சை செய்யவேண்டும். உம், செய்யுங்கள்'' என்று உத்தரவிட்ட ராஜா, அவர்கள் வாளாவிருக்கவே கண்களைத் திறந்து கூடார வாயிலில் நின்ற கிளைவைப் பார்த்தார். ''யார் நீ, உத்தரவில்லாமல் உள்ளே வர?'' என்றும் கேட்டார்.

கிளைவைக் கண்டதும் நர்ஸ்கள் விலக முற்பட்டனர். மன்னரிடமிருந்து ஒருத்திதான் விலக முடிந்தது. இன்னொருத்தியின் இடையில் பதிந்திருந்த காட்டுராஜாவின் முரட்டுக் கை அவளை விடாததால், அவள் நெளிந்தாள் வேதனையுடன்.

கிளைவ் முதல்முதலாக நிதானத்தை இழந்தான். அந்தக் காட்டுராஜாவைப் பார்த்தபோது தஞ்சை அரண்மனையின் நினைவு அவன் மனக்கண் முன்பு எழுந்து, பிரதாபசிம்மனின் கம்பீரமான அறிவு முதிர்ந்த முகமும் அவனைப் பார்த்து நகைத்தது. 'இவனையா மன்னனாக்கப் பார்க்கிறீர்கள்?'' என்று பிரதாபசிம்மன் கேட்பது போல் இருந்தது வீரனான கிளைவுக்கு. ஆகவே, ''எடு கையை, விடு அவளை!'' என்ற சொற்கள் கடுமையுடன் உதிர்ந்தன கிளைவிடமிருந்து.

காட்டுராஜாவின் கை நர்ஸின் இடையை இரும்புப் பிடியாகப் பிடித்தது. ராஜா மற்ற விஷயங்களில் பலவீனமானவரானாலும் பெண்கள் இடுப்பைப் பிடிப்பதில் எமகாதகர் என்பதை உணர்ந்த நர்ஸ் செயலிழந்து நின்றாள்.

அந்தச் சமயம் இரவு மூண்டு விட்டதால் மாலையில் ஏற்றப்பட்டிருந்த கூடார விளக்கில் ராஜாவின் குடிகார முகம் மிக விரசமாகக் காட்சியளித்தது. ''விடு அவளை'' என்று இரண்டாம் முறை கூறிய கிளைவ், தன் இடுப்பிலிருந்த கைத்துப்பாக்கியை எடுத்து நீட்டினான், காட்டு ராஜாவை நோக்கி.

ஆனால் காட்டுராஜா அதற்கெல்லாம் மசியவில்லை. இடிஇடியெனப் பெரிதாக நகைத்தார். நகைத்தது அவர் மட்டுமல்ல, இயற்கையும் நகைத்தது. வெளியே திடீரென ஆகாயத்தில் பேரிடியொன்று தலையில் விழுவதுபோல் முழுங்கியது. பெரும் புயற்காற்று கூடாரத்தின் துணிகளைத் தூக்க முயன்றது. இரண்டாம் முறையும் பாட்டிலைத் தூக்கினார் ராஜா. அம்முறை அவர் கண்களுக்கு மட்டுமின்றிக் கிளைவுக்கும் ஆகாயம் தெரிந்தது. புயல் பலமாக உட்புகுந்து கூடாரத் துணியைக் கந்தல் கந்தலாகப் பிய்த்துவிட்ட காரணத்தால் மேலே கருமேகமாக, பார்க்கப் பயங்கரமான மின்னல் அதன் ஊடே ஒளிவிட்டது. சில விநாடிகளில் அதிர்ஷ்டம் தன்னைவிட்டுப் பறந்துவிட்டதைக் கிளைவ் உணர்ந்தான்.

அத்தனையிலும் காட்டு ராஜாவின் அதிர்ஷ்டமும் பறந்துவிட்டதை எண்ணி மகிழ்ச்சியுடன் அந்தக் கூடாரத்தை விட்டு வெளியேறினான். அந்தச் சமயத்தில் பிரதாப் சிம்மன் முகம் அவனைப் பார்த்து நகைத்தது. மீண்டும் சுலோகத்தை உதிர்த்தது. 'இதுதான் விதி' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் கிளைவ். விதி அத்துடன் விடவில்லை அந்தப் படையை. மறுநாளும் அதற்கு மறுநாளும் விடாமல் தொடர்ந்தது. சிதைந்த படை தன்னை உருவாக்கிக் கொள்ளப் பறங்கிப்போட்டைக்கு நகர்ந்தபோது அங்கும் காத்திருந்தது பயங்கரச் செய்தி!

21. தோணியில் வந்த தூது

குருட்டு நம்பிக்கைகள் கறுப்பர்களுக்குத்தான் அதிகம் என்று வெள்ளக்காரர்கள் அன்றும் இன்றும் எண்ணி நகை யாடினாலும், அதை வெள்ளைத் தாஸர்கள்கூட ஒப்புக்கொண்டு பகுத்தறிவைப் பல படி நமக்குப் பகிர்ந்து தந்தாலும், எண் 13 என்பது துரதிருஷ்ட எண் என்று வெள்ளைக்காரர்கள் இன்றும் நம்புவதை நமது தற்கால அரசியல்வாதிகளில் முக்கால்வாசிப் பேர் அறியாததால் வெள்ளைத் தோலுடையோருக்கும் அத்தகைய குருட்டு நம்பிக்கைகளுக்கும் சம்பந்தமில்லையென எண்ணி அவர்கள் பெருமையை நினைத்து உடலும் உள்ளமும் பூரித்தாலும், 1749 ஏப்ரல் 13-ஆம் தேதி வெள்ளாற்றங்கரையில் விளைந்த விபரீதத்தை எண்ணிப் பார்த்த காப்டன் கோப்பும் இதர வெள்ளைக்காரர்களும் அந்தப் பதின்மூன்றாம் தேதி சாயந்தரம் வரையில் நிர்மலமாயிருந்த ஆகாயம் திடீரென இரவில் கறுத்து மெல்லென்ற தென்றலும் திடீரெனச் சூறாவளியுமாக மாறி, தங்கள் கூடாரங்களைத் தார் தாராகக் கிழித்துவிட்டதையும், உணவுப் பொருள் வண்டிகளை இழுத்து வந்த பொதிக் காளைகள் எல்லாமே அந்தச் சூறாவளியிலும் அதைத் தொடர்ந்த கடுமழையிலும் செத்து விட்டதையும், பீரங்கிகளில் திணிக்க வேண்டிய வெடி மருந்துகளும் கரைந்தோடி விட்டதையும் கண்ட காப்டன் கோப், 13வது எண்ணை மறுநாள் காலை பெரிதும் கடிந்து கொண்டான். ''இந்தச் சனியன் வந்திரா விட்டால் இந்தத் தொல்லை ஏற்பட்டிருக்காது'' என்ற காட்டு ராஜாவைக்கூட வெளிப்படையாகத் தூற்றலானான் காப்டன் கோப்.

ஏப்ரில் 13-ஆம் தேதி இரவில் காட்டுராஜாவின் கூடாரக் கூரை திடீரெனக் கிழிக்கப்பட்டு, ஆகாயக் கூரை கண்களுக்குப் புலப்பட்டவுடனேயே கிளைவ் திடீரென ராஜாவின் அருகிலிருந்த இரண்டு நர்ஸ்களையும் வெளியே அழைத்து வந்து, சற்று எட்ட இருந்த பெரிய ஆலமரத்தடியில் தங்க வைத்துவிட்டுக் காப்டன் கோப்பின் கூடாரத்தை நோக்கி ஓடினான். சர்சர்ரென்று விடா மலடித்த பெருமழைக்கிடையே அங்கே காப்டனின் கூடாரமும் கிழிந்து போய், காப்டனும் வெளியில் நிற்பதைப் பார்த்ததும் அவனையும் கையைப் பிடித்து இழுத்து வந்து அதே மரத்தடியில், விட்டான்,. பிறகு காப்டனின் கடமைகளைத் தானே மேற் கொண்டு மற்றக் கூடாரங்களில் இருந்தவர்களையும், உணவுப் பொதி வண்டிகளையும் காப்பாற்ற சோல்ஜர்களுக்கும் இந்தியச் சிப்பாய்களுக்கும் உத்தரவிட்டுத் தானும் அங்குமிங்கும் ஓடினான்.

ஆனால் புயலின் வேகம் வரவர வலுத்ததால் ஏதும் செய்ய

முடியாத நிலையில் எட்மண்டையும் அழைத்துக் கொண்டு வேறொரு மரத்தின் அடிக்கு ஓடினான். கடுங்காற்றடித்தது, கடுமழை பொழிந்தது. அவ்வப்போது ஆகாயத்தை ஊடுருவிக் கண்களைப் பார்வையிழக்கச் செய்த மின்னலும் காதுகளைச் செவிடாக்கிய இடித் தொடரும் விவரிக்க இயலாக பயங்காத்தை விளைவித்தன.

ஆபத்துக்கும் இரவுக்கும் நெருங்கிய சம்பந்தமிருந்ததால் நேரமும் மிக மெதுவாகவே நகர்ந்தது. ஆனால் புயல் மட்டும் தனது வேலையைத் திறம்படச் செய்து பல மரக்கிளைகளையும் ஓரிரண்டு பெருமரங்களையும் சாய்த்து விட்டதால், இரவு கழிந்த பின்பு இருந்த நிலை இரவைவிடப் பன்மடங்கு பயங்கரத்தைத் தந்ததால் காப்டன் கோப்பின் சினம் அதிகமாயிருந்தது.

படை வீரருக்குச் சேதம் அதிகமில்லை யென்றாலும், குடை சாய்ந்து கிடந்த பொதி வண்டிகளையும் அவற்றின் கீழும் சில பெருமரக்கிளைகளின் கீழும் அகப்பட்டுக் கொண்டு மாண்டு கிடந்த காளைகளையும், வெள்ளாறு திடீரென நிரம்பி அதில் அடித்துக் கொண்டு போய்க்கொண்டிருந்த சில மாட்டுச் சடலங் களையும், மாமிசத்துக்காகக் கொண்டு வரப்பட்ட ஆடுகளையும் கோழிகளையும் கசாப்புக் கத்தியிலிருந்து தப்புவிக்க ஆறு இழுத்துக்கொண்டு போய்க் கொண்டிருந்த பயங்கரத்தையும் பார்த்துக் கொண்டு காலையில் கிழக்கில் கிளம்பிவிட்ட கதிரவன் முகத்தைப் போலவே சிவந்து கிடந்த முகத்துடனிருந்த காப்டன் கோப்பின் உள்ளம் வெள்ளச் சேதத்தால் குமுறிக் கொண்டிருந்த சமயத்தில், காட்டுராஜா அவன் இருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார். அப்போதுதான் சொன்னான் காப்டன் கோப் கிளைவை நோக்கி எரிச்சலுடன், ''இந்த ஸாடன் (சனியன்) தான் இத்தனைக்கும் காரணம்'' என்று.

சுமார் ஆறுமாத காலமாக ஸெய்ன்ட் டேவிட் கோட்டை யில் வெள்ளைக்காரரிடம் காவடி எடுத்துக் கொண்டிருந்த காட்டு ராஜாவுக்குச் சிறிது ஆங்கிலமும் தெரிந்திருரந்ததால், ''யாரைப் பார்த்து ஸாடன் என்கிறாய்?'' என்றார்.

காப்டன் கோப் இருந்த மனநிலையில் மரியாதை என்ற சொல்லுக்கு இடமில்லாததால் ''உன்னைத்தான்'' என்று வெகு அலட்சியமாகவும் வெறுப்புடனும் இகழ்ச்சியுடனும் பதில் சொன்னான்.

ஸவாய் ஷாஹூஜி என்ற காட்டு ராஜா தமது கம்பீரத்தை விடவில்லை. அவரது உடை நனைந்தும், சில இடங்களில் மரக்கிளை மாட்டிக் கிழிந்து இருந்தும்கூட, ''நீ ஒரு காப்டன்'' என்றார் கோபம் குரலிலும் ஒலிக்க,

''யூ ஆர் ரைட்'' என்றான் காப்டன்.

''நான் தஞ்சை மன்னன்'' என்று கட்டிக் காட்டினார் காட்டு ராஜா.

''யூ ஆர் ராங்'' என்றான் காப்டன் கோப்.

தாம் மன்னனென்று சொன்னதைக் காப்டன் கோப் மறுத்ததாலும், அவன் சொன்னதைக் கேட்ட இரு நர்சுகளும் நகைத்ததாலும் கோபத்தின் உச்சகட்டத்தை எய்திய காட்டுராஜா, ''காப்டன்! ஸெய்ன்ட் டேவிட் கோட்டைக்குத் திரும்பியதும் நான் யாரென்பதை உணர்ந்து கொள்வாய்'' என்று சீறினார்.

காப்டன் அத்தனை சேதத்திலும் இளநகை கொண்டான். ''இப்போது புத்திசாலித்தனமாகப் பேசுகிறீர்'' என்றான் ஆங்கிலத்தில்.

''என்ன புத்திசாலித்தனம்?'' காட்டு ராஜாவின் குரலில் குழப்பம் இருந்தது.

''ஸெய்ன்ட் டேவிட் கோட்டைக்குத் திரும்ப வேண்டிய அவசியத்தைப் புரிந்து கொண்டது புத்திசாலித்தனம்.''

''அதில் என்ன புத்திசாலித்தனம் இருக்கிறது?''

''தேவிக் கோட்டையில் உமக்கு வேலையில்லையென்பதைப் புரிந்து கொண்டிருக்கிறீர்?''

''ஏன் தேவிக்கோட்டைக்குப் போகக்கூடாது? நான்தான் உங்களுக்கு அதைத் தானம் செய்து விட்டேனே.''

இதைக் கேட்ட காப்டன் பெரிதாக நகைத்தான். அந்த நகைப்பைச் சகிக்க முடியாத காட்டுராஜா, ''ஏன் நகைக்கிறாய்?'' என்று வினவினார்.

''நீங்கள் தேவிக்கோட்டையை எங்களுக்குத் தானம் செய்ததை நினைத்து'' என்றான் கோப்.

''ஏன், அதில் என்ன தவறு?''

''அது இன்னும் உங்களுக்குச் சொந்தமில்லை. அது கிடக்கட்டும். நானும் உங்களுக்கு ஒரு தானம் செய்கிறேன்.''

''என்ன தானம்?''

''உங்களை டில்லி நவாப் ஆக்கிவிட்டேன்.''

''அதை எப்படி நீ தானம் செய்ய முடியும்?''

''நீங்கள் தேவிக் கோட்டையைத் தானம் செய்ததுபோல்'' என்ற கூறிய காப்டன் கோப், அந்தச் சமயத்தில் அங்கு வந்த கிளைவையும் எட்மண்டையும் நோக்கி, ''லெப்டினண்ட்! நமது படையைச் சரி செய்து கொள்ள நாம் இந்த ஆற்றங்கரை வழியே போர்ட்டோநோவோ செல்கிறோம், இன்னும் ஒரு மணி நேரத்தில். மிஸ்டர் எட்மண்ட்! இந்த இரு நர்ஸ்களையும் அழைத்துச் சென்று உடைப் பெட்டியில் ஏதாவது உடைகள் இருந்தால் அதைக் கொடுத்து மாற்றிக் கொள்ளச் சொல். சோல்ஜர்களையும் சிப்பாய்களையும் அணிவகுக்க லெப்டினன்ட்டுக்கு

உதவுங்கள். ஏதாவது உணவுப் பொருள்களோ, ஆஸ்பத்திரிச் சாமான்களோ பாக்கியிருந்தால் திரட்டுங்கள்'' என்று மடமடவென உத்தரவுகளைப் பிறப்பித்துவிட்டுச் செல்ல முற்பட்டவன் சட்டென்று எதையோ நினைத்துக்கொண்டு திரம்பி, ''கிளைவ்! இந்தச் சீட்டு ராஜாவை மரியாதையுடன் அழைத்துப் போ'' என்றான் வெறுப்புடன்.

தஞ்சை மன்னராக விரும்பிய ஷாஹூஜி, ''என் பெயர் காட்டுராஜா'' என்று குறிப்பிட்டார்.

''இல்லை, சீட்டு ராஜா'' என்று மீண்டும் கத்தினான் காப்டன்.

''தவறு.''

''இல்லை. லெப்டினண்டைக் கேட்டுப் பாரும். சீட்டை நம்பித்தான் அவர் வந்தார்.''

இந்தச் சமயத்தில் இடைபுகுந்த கிளைவ், ''காப்டன்! நான் கவர்னரிடமிருந்து பெற்றது இஸ்பேட் ராஜா அல்ல, இஸ்பேட் ஏஸ். உங்களுக்கும் தெரியும்'' என்றான் இருவரையும் சமாதானப்படுத்த.

ஆனால் காட்டுராஜா விடவில்லை. தமது சாமர்த்தியத்தை மேலும் காட்டி, ''உங்களை யார் 13-ஆம் தேதி வரச் சொன்னது? - ஆம், அது உங்களுக்குத் துரதிர்ஷ்ட எண் அல்லவா?'' என்று வினவினார்.

காப்டன் இதழ்களில் அத்தனை கொடூரத்திலும் புன்னகை விரிந்தது. ''உமக்கு எங்கள் நம்பிக்கையும் தெரியுமா?'' என்று கேட்டான்.

''தெரியும்.''

''அப்படியானால் இன்று 14-ஆம் தேதி. இது பிரமாதமாக இருக்கும்!''

''இருக்கும். பறங்கிப்பேட்டை (போர்ட்டோ நோவோ) சென்றதும் தெரியும்.'' இதைச் சொல்லிவிட்டுக் காட்டு ராஜா விடுவிடுவென்று நடந்தார்.

ஒரு மணி நேரத்திற்கெல்லாம் படையும் நடந்தது ஆற்றங்கரையோரம். அன்று மாலை பறங்கிப் போட்டைக்கு வந்து சேர்ந்த படை அந்தத் துறைமுக நகரில் முகாம் செய்தது. காப்டன் கோப், மன்னருடனும், எட்மண்ட், நர்சுகள் இவர்களுடனும் துறைமுக அதிகாரியின் இல்லத்துக்குச் சென்றான்.

அவர்களை வரவேற்ற துறைமுக அதிகாரியின் முகம் விளக்கெண்ணெயாக இருந்தது.

அவருக்குக் காப்டன் கோப், மன்னனையும், கிளைவ், எட்மண்ட் ஆகிய இருவரையும் அறிமுகப்படுத்தி வைத்தான். துறைமுக அதிகாரியின் நீல விழிகள் அவர்களை ஒருமுறை

விசனத்துடன் பார்த்தன. பிறகு நர்சுகளையும் பார்த்தன. ''இவர்கள் எதற்கு?'' என்று வினவினார்.

''இவர்கள் நர்சுகள். வெள்ளை நர்சுகள் இந்தியாவில் அதிகம் கிடையாதென்பது உங்களுக்குத் தெரியும். ஆகையால் இவர்களை ஆஸ்பத்திரிக் கப்பலில் அனுப்பாமல் நிலப் படையுடன் அழைத்து வந்தோம்.

''அப்படியா!'' என்ற துறைமுக அதிகாரியின் பதிலில் வெறுப்பு மண்டிக் கிடந்தது.

''ஏன், இவர்கள் தேவையில்லையா?'' என்று வினவினான் கிளைவ்.

''ஆஸ்பத்திரியிருந்தால்தான் நர்சுகள் தேவை.''

''ஆஸ்பத்திரிக் கப்பல் 'அப்போலோ' வருகிறது.''

''வராது.''

''ஏன்?''

துறைமுக அதிகாரி உடனடியாகப் பதில் சொல்லவில்லை. சிறிது சிந்தித்துவிட்டு அவர் பதில் கூறியபோது அது இடியென இறங்கியது மற்றவர் மனங்களில்.

''நேற்றுப் புயலில் 'அப்போலோ' கடலூருக்கும் செயின்ட் டேவிட் கோட்டைக்குமிடையில் மூழ்கி விட்டது'' என்று மெள்ளக் கூறினார் துறைமுக அதிகாரி.

யாரும் பல விநாடிகள் பேசவில்லை. துறைமுக அதிகாரி வீட்டின் அந்த முகப்பு ஹாலில் பெரும் மௌனம் குடி கொண்டது. அந்த மௌனத்தை மீண்டும் உடைத்தார் அதிகாரி ''அது மட்டுமல்ல'' என்றார்

''வாட் எல்ஸ் (வேறு என்ன)?'' காட்டுராஜா தமது ஆங்கில அறிவை அந்தக் கேள்வியின் மூலம் காட்டினார்.

''அறுபது பீரங்கிகள் கொண்ட பெம்ப்ரோக் மூழ்கிவிட்டது. பிரிட்டிஷ் கடற்படையின் மிகச் சிறந்த போர்க் கப்பல், 74 பெரும் பீரங்கிகள் கொண்டது. அதுவும் மூழ்கிவிட்டது. அதிலிருந்த 750 மாலுமிகளும் மூழ்கி இறந்துவிட்டார்கள். தப்பியது இருவர், இதோ இந்த நர்சுகள்'' என்று அறிவித்த துறைமுக அதிகாரியைப் பிரமிப்பும், அதிர்ச்சியும் கலந்த விழிகளால் நோக்கினார் காட்டு ராஜா.

காப்டன் கோப் பேசச் சக்தியற்று உட்கார்ந்தது உட்கார்ந்தபடி இருந்தான். கிளைவ் மட்டும் சற்றுச் சமாளித்துக் கொண்டு காட்டு ராஜாவை உஷ்ணத்துடன் நோக்கினான். ''மகாராஜா! உமது அதிர்ஷ்டம் இங்கும் எங்களை விடவில்லை'' என்றான்.

காப்டன் கோப் தனது தீ விழிகளைத் திருப்பினான் ஷாஹூஜி மீது. ஷாஹூஜி அவன் கண்களைச் சந்திக்க மறுத்தார்.

அந்தச் சங்கட நிலைமையைக் கடைசியாகக் கிளைவே சீர்படுத்திக் கொண்டு, ''கிளம்புகிறோம், தேவிக்கோட்டையை நோக்கி. அதற்கு வேண்டிய உதவியைச் செய்யுங்கள்'' என்றான் துறைமுக அதிகாரியை நோக்கி.

''நீங்கள் ஏன் செயின்ட் டேவிட்டுக்கே திரும்பக் கூடாது?'' என்றுவினவினார் துறைமுக அதிகாரி.

''அட்மிரல் போஸ்கவான் உத்தரவு தேவிக் கோட்டையைத் தாக்க. அது மாற்றப்படவில்லை. ஆகையால் நாங்கள் போய்த்தான் ஆக வேண்டும். சோல்ஜரின் கடமை அது'' என்று விளக்கினான் கிளைவ்.

துறைமுக அதிகாரியும் அதை ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையசைத்தார். இரண்டு நாட்களில் தேவையான சகல வசதிகளையும் செய்தும் கொடுத்தார். தவிர செயின்ட் டேவிட் கோட்டையிலிருந்து மீண்டும் ஒரு கப்பலில் சப்ளை வருவதாகவும் செய்தி வந்தது.

மூன்று நாட்கள் கழித்து மீண்டும் அந்தப் படை காப்டன் கோப்பின் தலைமையில் கிளம்பியது தேவிக்கோட்டையை நோக்கி. கிளம்பும் சமயத்தில் காட்டு ராஜா கூறினார், ''பயப்படாதீர்கள். சிதம்பரத்தை அடைந்ததும், தஞ்சைப் படைகள் நம்முடன் இணையும். தேவிக்கோட்டை நமது கையில் இன்னும் பத்து நாட்களுக்குள் விழுந்துவிடும்'' என்றார்.

படை நகர்ந்தது. இரண்டு நாட்களில் சிதம்பரம் வந்தது. தில்லை நடராஜன் கீழ்க்கோபுர வாயிலில் தங்கியது. நாட்கள் மூன்று ஓடின. தஞ்சையிலிருந்து ஈ காக்கை வரவில்லை. ''எங்கே உமது படை?'' என்று கேட்டான் காப்டன்.

''வரும்'' என்றார் காட்டுராஜா.

''எப்பொழுது? எங்கே?''

''இங்கேயே வரவேண்டும். எதற்கும் நாம் புறப்படுவோம். தேவிக் கோட்டையை அடையுமுன்பு வந்துவிடும்'' என்றார் மன்னர்.

காப்டன் தனது படையுடன் மீண்டும் புறப்பட்டு அடுத்த இரண்டு நாளில் மெதுவாகக் கொள்ளிடத்தின் வடக்குக் கரையை அடைந்து பாசறை அமைத்தான். எதிர்க்கரையில் படைகள் தென்படத்தான் செய்தன. ஆனால் அவை தங்கள் துணைக்கு வரத் துடித்ததாகத் தெரியவில்லை. காப்டன் கோப்புக்கும் கிளைவுக்கும்.

அவர்கள் பாசறை அமைத்த மறுநாள் இரவு கொள்ளிட நீரில் மிதந்து வந்தது ஒரு தோணி. அந்தத் தோணி இரவின் இருளில் பேயென வந்து கரையை அடைய, அதிலிருந்து இறங்கிய ஒரு வீரன் காப்டன் கோப்பின் கூடாரத்துக்கு துரிதமாகச்

சென்றான். அவன் கூடாரத்துக்குள் நுழைந்தபோது அங்கே கிளைவும் இருந்தான். வந்தவனைக் கண்டதும் மிகுந்த மகிழ்ச்சி எய்திய கிளைவ், ''விஜயகுமாரனா! நீயே எங்கள் பக்கம் வந்துவிட்டாயா?'' என்று குதூகலத்துடன் வினவி எழுந்திருந்து, அவனுடன் கைகுலுக்கத் தனது வலக் கையையும் நீட்டினான்.

விஜயகுமாரனின் கை எழாமல் பக்கவாட்டிலேயே இருந்தது. கிளைவ் புரிந்துகொண்டான், காப்டனும் புரிந்து கொண்டான். ஏன் அப்பொழுது அங்கிருந்த காட்டுராஜா கூடப் புரிந்துகொண்டார். விஜயகுமாரன் மெள்ள மெள்ளச் சொற்களை உதிர்க்கலானான். அவை சொற்களா? காட்டு ராஜாவைச் சுட வந்த நெருப்புத் துண்டங்களா? விவரம் ராஜாவுக்கே புரிந்தது. தோணியில் வந்த தூது உண்மையில் தனக்கு யமபாசம் என்பதை மன்னர் உணர்ந்துகொண்டார்.

22. புரியாத கதை

காப்டன் கோப்பின் கூடாரத்துக்குள் விஜயகுமாரன் நுழைந்ததும், பழைய சம்பவங்கள் எழுப்பிவிட்ட தோழமையின் காரணமாகவும், காட்டுராஜா கிளப்பிவிட்டுப் பலிக்காமற் போன எண்ணத்தின் விளைவாகவும், தஞ்சைப் பிரமுகர்கள் வேறு யாரும் துணைக்கு வராவிட்டாலும், விஜயகுமாரனாவது வந்தானே என்ற நினைப்பினாலும், நண்பனுடன் கைகுலுக்க ராபர்ட் கிளைவ் தனது வலக்கரத்தை நீட்டியதும், விஜயகுமாரன் அதைக் கவனிக்காதது போலவே இருந்துவிட்டதால் பெரும் சங்கடத்துக் குள்ளானான் பிரிட்டிஷ் லெப்டினண்ட்.

விஜயகுமாரனின் மனநிலையும் கிளைவின் மனநிலைக்கு எந்த விதத்திலும் குறையாமல் குழம்பினாலும், தஞ்சை நெடுஞ்சாலைச் சத்திரத்து நினைப்புகள் அந்தச் சமயத்தில்கூட அவன் புத்தியில் வலம் வந்து நெஞ்சைத் தொட்டாலும், அத்தனையும் உள்ளடக்கிக் கொண்ட நாய்க்கர் வம்ச வாலிபன் கிளைவின் முகத்தைச் சந்திக்கவும் கூச்சம் கொண்டு, தனது சங்கடத்தை நீக்கிக்கொள்ளத் தலையை ஒருமுறை ஆட்டிக்கொண்டான்.

அப்பொழுது அவனது அழகிய குழல்களும் சிலிர்த்து ஆடி, ஓரிரண்டு மயிரிழைகள் அவன் சந்தனத் திலகத்தைத் தொட்டு அவன் முகக் கம்பீரத்தைப் பல மடங்கு உயர்த்திக் காட்டியதுடன், அவன் கண்களும் சில விநாடிகளிலேயே குழப்பத் திரையை உறுதி விலக்கிக் கொண்டதால் அவன் அந்தக் கூடாரத்திலிருந்த காப்டன் கோப்பையும் காட்டுராஜாவையும்

மாறிமாறி நோக்கிவிட்டுக் கிளைவை நோக்கிக் கேட்டான், ''இவர்தான் காப்டனா?'' என்று.

அதுவரை குழப்பமும் சங்கடமும் அடைந்திருந்த கிளைவும் தலையை நிமிர்த்தி, ''ஆம், இவர்தான் காப்டன் கோப். இந்த பிரிட்டிஷ் படையின் தலைவர்'' என்று கூறினான்.

இந்தச் சமயத்தில் காட்டு ராஜாவும் சும்மாயிருக்காமல், ''தஞ்சை மன்னன் சந்நிதானத்தில் நீ நிற்கிறாய், தலை வணங்கு'' என்று உத்தரவிட்டார்.

விஜயகுமாரன் விழிகள் காட்டு ராஜாவை ஏறிட்டுப் பார்த்தன ஒருமுறை. ''நீதான் அந்தப் போலியா?'' என்று அவன் உதடுகள் விசாரித்தன.

''இது ராஜ துரோகம், ராஜ நிந்தை. இதற்கு மரணதண்டனை தான்!'' என்று சீறிய காட்டுராஜா காப்டன் கோப்பை நோக்கி, ''இந்த அதிகப் பிரசங்கியை முதலில் கைது செய்யுங்கள்'' என்று கூவினார் ஆத்திரத்துடன்.

ஆனால் காப்டன் கோப் உட்கார்ந்த இடத்திலிருந்து அசையவும் இல்லை, அவர் போட்ட உத்தரவைப் அமல்ப்படுத்தவும் இல்லை. வியப்புடன் விஜயகுமாரனைச் சில விநாடிகள் நோக்கினான். சற்று முன்பு விஜயகுமாரன் பெயரைச் சொல்லிக் கிளைவ் அழைத்திருந்ததால் அவன் பெயர் மட்டும் காப்டனுக்குத் தெரிந்ததேயொழிய அவன் யாரென்பது தெரியாததால், ''நீங்கள் யாரென்பதை நான் அறியலாமா?'' என்று வினவினான்.

''தஞ்சைப் படையின் உப தலைவர்களில் ஒருவன். தற்சமயம் தேவிக்கோட்டையைக் காக்கவும், இந்தப் போலி ராஜாவைப் பிடித்துச் செல்லவும் சேனாதிபதி மானாஜியுடன் வந்திருக்கிறேன்'' என்றான் விஜயகுமாரன்.

காப்டன் கோப் ஏதோ சொல்ல வாயெடுக்குமுன்பு காட்டு ராஜாவே முந்திக் கொண்டு, ''மானாஜியா வந்திருக்கிறான் தேவிக் கோட்டைக்கு?'' என்று வினவினார்.

''ஆம்.''

''சரி, அவனை நான் வரச் சொன்னதாகச் சொல். வந்து அடி பணியட்டும், மன்னித்து விடுகிறேன்.''

''மன்னிப்பை மகாராஜா அளிப்பது கஷ்டம்.''

''ஏன்?''

''முடியுமானால் தங்களை உயிருடன் பிடித்துவரப் பிரதாப் சிம்ம மகாராஜாவின் உத்தரவு.''

''என்ன பொருள் இதற்கு?''

''முடியாவிட்டால் உங்கள் பூத உடல் முழுவதும் தேவையில்லை. தலையை மட்டும் கொண்டு போனால் போதும்.''

இதைச் சொன்ன விஜயகுமாரன் வெறுப்புடன் திரும்பி, ''காப்டன்! நான் தூதனாக வந்திருக்கிறேன். இந்த வெட்டி ராஜாவுடன் பேச அவகாசமில்லை. தங்களிடம் விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன்'' என்று துவங்கி, ''காப்டன் கோப்! தஞ்சைப் படைகளின் தலைவர் பிரபு மானாஜி தங்களைத் திரும்பிச் சென்றுவிடும்படி கூறுகிறார். தேவிக்கோட்டையை உங்களால் பிடிக்க முடியாதென்று சொல்லச் சொன்னார். பிரிட்டிஷார் ஒரு போலி ராஜாவுக்காக வீணாகப் படைச் சேதத்தையும், மானக்குறைவையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டா மென்று அபிப்பிராயப்படுகிறார். பிரிட்டிஷாரிடம் அவருக்குள்ள மரியாதையாலும் நல்லெண்ணத்தாலும் என்னையே தூது செல்லும்படி பணித்தார்'' என்று கூறினான்.

காப்டன் கோப்பின் கண்கள் விஜயகுமாரனை நன்றாக ஏறெடுத்து நோக்கின. பிறகு அவன் உதடுகள் சொற்களை மிகக் கம்பீரமாக உதிர்த்தன. ''ஆறாயிரம் மைல்கள் கடல் தாண்டி இங்கே வந்திருக்கும் பிரிட்டிஷார் அச்சத்தையும் தாண்டியவர்கள். இங்கே புது வரலாறு படைக்கவும், இங்குள்ள அநீதத்தைத் தவிர்க்கவும் எண்ணுகிறார்கள். இந்தக் காட்டு ராஜாதான் தஞ்சையின் உண்மையான மன்னர் என்று நாங்கள் நினைக்கிறோம்'' என்று சொல்லிக் கொண்டு போன காப்டனை இடைமறித்து ஷாஹூஜி, ''பலே பலே! இப்பொழுதுதான் நீங்கள் சரியான காப்டன்!'' என்று கூவிச் சிலாகித்தார்.

காப்டனின் கண்கள் சரேலென்று அவரை நோக்கித் திரும்பி எரித்துவிடுவது போல் பார்த்தன. ''லெப்டினண்ட்! இந்தப் பைத்தியத்தை அவர் கூடாரத்துக்கு அனுப்பிவிடு'' என்றும் அவன் வாயிலிருந்து சொற்கள் கடுமையுடன் உதிர்ந்தன.

விஜயகுமாரன் இதழ்களில் புன்முறுவல் விரிந்தது. கிளைவை நோக்கிய அவன் விழிகளிலும் அந்தப் புன்முறுவலின் சாயை இருந்தது. ''காட்டுராஜா எப்படியென்று உங்களுக்கும் தெரியும் போலிருக்கிறது?'' என்றான்.

''எங்களுக்குத் தெரியாவிட்டாலும் அவர் அடிக்கடி தெரியப்படுத்துவார்'' என்றான் கிளைவ் எரிச்சலுடன்.

காட்டுராஜா ஆசனத்திலிருந்து எழுந்திருக்க முயன்றார் ஆத்திரத்துடன்.

காப்டன் கோப்பின் ஒரு பார்வை அவரை மீண்டும் உட்கார வைத்துவிட்டது. அதற்குப் பிறது காப்டன், ''தூதுவரே! கேளுங்கள்'' என்று மரியாதையுடன் பேச்சைத் துவங்கி, ''தேவிக்கோட்டையைப் பிடிக்க எங்களுக்குக் கவர்னர் உத்தரவிட்டிருக்கிறார். ஆகையால் அதைப் பிடித்தே தீருவோம். அதற்கான பீரங்கிகளுடன் வந்திருக்கிறேன். வெள்ளை

சோல்ஜர்களின் தரம் உங்களுக்குத் தெரியாது. ஒவ்வொரு பிரிட்டிஷ் சோல்ஜரும் பத்து இந்தியச் சிப்பாய்களுக்கு நிகர்'' என்று கூறினான்.

''அப்படியும் கணக்குச் சரியாக வரவில்லையே?'' என்றான் விஜயகுமாரன்.

கிளைவ் புரிந்து கொண்டதால் கண்களை மட்டும் ஓட்டினான் விஜயகுமாரன்மீது. காப்டனுக்கும் விஷயம் புரிந்து தானிருந்தது. இருப்பினும் கேட்டான், ''என்ன கணக்கு?'' என்று.

விஜயகுமாரன் ஒரு விநாடி யோசனையில் இறங்கினான். பிறகு, ''உங்களிடம் வெள்ளை சோல்ஜர்கள் நானூறு பேர்கள் தான் இருக்கிறார்கள்'' என்று குறிப்பிட்டான்.

விஜயகுமாரன் சொன்னது காப்டன் கோப்பிற்குப் பெரு வியப்பை அளித்தது. ''அதனால்?'' என்றான்.

''தேவிக்கோட்டையை ஐயாயிரம் வீரர்கள் காத்து நிற்கிறார்கள். ஆகவே பத்துக்கு ஒன்று என்ற உங்கள் கணக்குச் சரியாக வரவில்லை. தவிர...''

''தவிர?''

''மகாராஷ்டிரர்களின் காற்று வேகக் குதிரைப் படை, நீங்கள் 'மராத்தா லைட்ஹார்ஸ்' என்று குறுப்பிடுகிறீர்கள், அது, அதன் முழுப் பிரிவும் தேவிக் கோட்டையில் இருக்கறது.''

இந்தச் செய்தி பேரதிர்ச்சியை அளித்தது காப்டனுக்கு. இந்த 'லைட்ஹார்ஸ்' படையைப் பற்றி அவன் பலமுறை கேட்டிருக்கிறான். மின்னல் வேகத்தில் வரும் மகாராஷ்டிரக் குதிரைப் படை கண்ணிமைக்கும் நேரத்தில் எதிரிகளை நிர்மூலம் செய்து விடும் என்பது பிரிட்டிஷ் வட்டாரங்களில் சாதாரணமாகப் பேசப்பட்டு வந்த விஷயம். அதுவே காப்டனுக்கு அதிர்ச்சியை அளித்ததென்றால், தங்கள் படைபலத்தை எதிரிக்கு அறிவிக்க எத்தனைத் துணிவிருக்க வேண்டும் விஜயகுமாரனுக்கு என்று எண்ணியதால் வியப்பும் நிரம்பியது அவன் இதயத்தில்.

காப்டன் மனத்திலோடிய எண்ணங்களை விஜய குமாரனும் உணர்ந்திருக்க வேண்டும். ஆகவே அவன் கூறினான், ''படை பலத்தை உங்களுக்கு விளக்கும்படி மானாஜியே சொன்னார்'' என்று.

இந்தச் சமயத்தில் கிளைவ் உட்புகுந்தான் சம்பாஷணையில், ''உங்கள் படைபலத்தைக் கூறுவது உங்கள் நம்பிக்கையைக் குறிக்கிறது. ஆனால் படை பலம் மட்டும் போர்களை வெல்வதில்லை. இதை உன் தளபதியிடம் சொல், விஜயகுமாரா! அது மட்டுமல்ல. பிரிட்டிஷ்காரர்கள் முன்வைத்த காலைப் பின் வைப்பதில்லை என்று சொல்'' என்று கூறினான் கிளைவ் மிகத் திடமான குரலில்.

விஜயகுமாரன் கிளைவை நோக்கித் தலை தாழ்த்தினான். ''லெப்டினன்ட்! அநாவசியமான அழிவைத் தவிர்க்கவே என்னைத் தூது அனுப்பினார் தளபதி. பிறகு உங்கள் விருப்பம். நீங்கள் எப்பொழுதும் கொள்ளிடத்தைக் கடக்கலாம். மகாராஷ்டிரர் உங்களை நட்டாற்றில் கொல்ல மாட்டார்கள். ஒருமுறை தரையை அடைந்துவிட்ட பிறகு நாங்கள் எதற்கும் பொறுப்பாளிகளல்ல'' என்று கூறினான். பிறகு காப்டனையும் நோக்கி வணங்கிவிட்டு, ''வருகிறேன்'' என்று கூறிவிட்டு வெளியேறினான்.

காட்டுராஜா கல்லாய்ச் சமைந்து உட்கார்ந்திருந்தார். காப்டன் கோப் அவரை மிகுந்த வெறுப்புடன் நோக்கினான். அவரை நோக்கிச் சற்றே நகைத்த கிளைவ், ''காட்டுராஜாவின் வீரம் பறந்து விட்டதுபோல் தெரிகிறது'' என்று கூறிவிட்டு, கூடாரத்திலிருந்து வெளியேறிச் சற்று எட்டச் சென்று கொண்டிருந்த விஜயகுமாரனைப் பின் தொடர்ந்தான்.

பின்னால் காலடிச் சத்தம் கேட்பதை அறிந்த விஜய குமாரன் சட்டென்று நின்று திரும்பினான். தொடர்ந்தவன் கிளைவ் என்று தெரிந்ததும் அவன் முகம் மந்தகாசத்தால் விரிந்தது. கிளைவ் அருகில் வந்ததும், ''கிளைவ்! இப்பொழுது உன் கையை நான் குலுக்க முடியுமா?'' என்று கூறிப் பலவந்தமாகக் கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டு அவன் கையுடன் தன் கையைப் கோத்துக்கொண்டு கொள்ளிடக் கரையை நோக்கி நடந்தான். ''கிளைவ்! தூதனாயிருந்தபோது நான் உன் எதிரி. உன்னுடன் கைகுலுக்குவது தவறு. இப்போது தூது முடிந்துவிட்டது. இனி நாம் பழைய நண்பர்கள்'' என்றான் அன்பு சொட்டிய குரலில்.

''ஆம். ஆம். நாம் இருவரும் எதிர்க்கட்சிகளில் இருப்பது துர்ப்பாக்கியம்'' என்றான் கிளைவ் வருத்தத்துடன்.

''தவறு கிளைவ். பெரும் பாக்கியம் என்று சொல்'' என்றான் விஜயகுமாரன்.

''பாக்கியமா?''

''ஆம்.''

''நாம் இருவரும் ஒருவரை யொருவர் கொல்வது பாக்கியமா?''

''வேறு கையால் இறப்பதைக் காட்டிலும் வீரனும் நண்பனுமான உன் கையால் இறப்பதை நான் பாக்கியமாகக் கருது கிறேன். ஆனால் கிளைவ், ஒன்று நிச்சயம்.''

''என்ன அது?''

''நான் உயிருடன் இருக்கும் வரை உன்னை யாரும் தொடவிட மாட்டேன்.''

''ஏன்?''

''நீ என் உயிரையும் அரசகுமாரியின் உயிரையும் காப் பாற்றியவன். எல்லாவற்றுக்கும் மேலாக மகாவீரன்!'' இதைச் சொன்ன விஜயகுமாரன் குரல் குழைந்து கிடந்தது.

கிளைவ் பதில் பேசாமலே நடந்தான். நண்பன் கையுடன் தன் கை இணைந்து கிடந்தது பெரும் இன்பமாயிருந்தது அவனுக்கு. இப்படி நடந்துகொண்டே கொள்ளிடக்கரையில் இறங்கி, தோணியிருந்த இடத்துக்கு வந்ததும், ''கிளைவ்! நாம் மீண்டும் சந்திப்போம்'' என்று கிளைவைத் தழுவிக் கொண்டான் விஜயகுமாரன்.

கிளைவின் கைகளும் விஜயகுமாரன் உடலைத் தழுவி நின்றன. அவர்களை விலக்க ஒலித்தது தோணிக்காரன் குரல், ''நேரமாகிறது. இப்பொழுதே கொள்ளிடத்தில் நீர் ஏறுகிறது கடல் அலைகளால். நேரம் போனால் இந்த இருட்டில் ஆற்றைக் கடப்பது சிரமப்படும்'' என்று.

அந்தக் குரல் கணீரென்று அதிகாரத்துடன் ஒலித்ததைக் கேட்ட கிளைவ் அர்த்தம் பொதிந்த பார்வையை விஜயகுமாரன் மீது செலுத்தனான். கிளைவை விட்டு லேசாகச் சிரித்துக்கொண்ட விஜயகுமாரனும், ''கிளைவ்! இந்தத் தோணிக்காரரைச் சந்தி. இருவரும் என் நண்பர். உன்னைப் போல் இவரும் என்னைக் காப்பாற்றியவர்'' என்று கூறவே கிளைவின் மனம் வியப்பைத் தழுவியது.

''யார் இவர்?'' என்று கேட்டுக்கொண்டே தோணியை அணுகினான்.

கண் தெரிந்த தூரம் வரையில் கொள்ளிடம், இருளில் பயங்கரமாகக் காட்சியளித்தது. எதிர்க்கரையில் சற்றுத் தூரத்தே கிழக்கில் தெரிந்தது தேவிக்கோட்டை, சின்னஞ்சிறு விளக்கு களுடன். தோணியிலும் ஒரு விளக்கு இருந்ததால் தோணிக்காரனையும் கிளைவ் நன்றாகப் பார்க்க முடிந்தது. தோணியை ஆற்றில் நகர்த்த நீண்ட பெரும் கழியைத் தாங்கி நின்றவன் தோணிக் காரனல்ல என்பதையும் அவனும் ஒரு வீரனென்பதையும் பார்த்த மாத்திரத்தில் புரிந்துகொண்டான் கிளைவ். அவ்விருவரையும் அறிமுகப்படுத்திய விஜயகுமாரன், ''இவர்தான் என் நண்பர் கிளைவ். கிளைவ்! இவர் மகாராஷ்டிரத்தின் பெரும் வீரர்களில் ஒருவர். பெயர்...'' என்று சிறிது தயங்கினான்.

''பெயர்?'' சந்தேகத்துடன் எழுந்தது கிளைவின் கேள்வி.

''முராரி ராவ் கோர்படே'' என்று விஜயகுமாரன் அறிவித்ததும் எதற்கும் அஞ்சாத கிளைவும் அஞ்சினான். ''முராரி ராவ், முராரி ராவ்!'' என்று இருமுறை சற்று உரக்கவே சொல்லவும் செய்தான்.

தோணியிலிருந்த முராரிராவ் லேசாக நகைத்தார். "எதிர் எதிரான படைகளில் இருக்கும் இருவர் நேசமும் எனது நெஞ்சத்தை உருக்குகிறது" என்று கூறினார் நகைப்பின் ஊடே! அத்துடன் கை நீட்டிக் கிளைவின் கையைக் குலுக்கவும் செய்தார்.

"மகாராஷ்டிரர்களின் மகாவீரனுக்குத் தலை வணங்குகிறேன்" என்று கூறிய கிளைவ் கையையும் குலுக்கித் தலையையும் வணங்கினான். அத்துடன், "இங்கு எதற்கு நீங்கள் வந்தீர்கள்? உங்களுக்கும் தஞ்சை மன்னருக்கும் விரோதம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றும் சொன்னான்.

"நான் ஒரு நாடோடி. இப்பொழுது இங்கிருக்கிறேன்" என்று கூறினார் முராரி ராவ் சர்வசாதாரணமாக. அத்துடன் விஜயகுமாரனைத் தோணியில் ஏறச் சொல்லித் தோணியை நகர்த்தவும் செய்தார்.

தோணி புறப்படுவதைப் பார்த்துக் கொண்டே நின்ற கிளைவின் மனத்தில் எண்ண அலைகள் புரண்டன. முராரி ராவ் எதிர்க்கரையில் இருப்பதிலிருந்தே அபாயத்தை அவன் முழுதும் உணர்ந்துகொண்டான். "வீ மஸ்ட் பி கேர்ஃபுல் அபௌட் மராத்தா லைட் ஹார்ஸ்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அதனால் மிகுந்த சிந்தனையுடனும் கோபத்துடனும் திரும்பக் கூடாரத்தை நோக்கி நடந்து சென்றான்.

எதிர்க்கரையை அடைந்த விஜயகுமாரன் நிலையும் அப்படித் தானிருந்தது. தோணி கரையை அடைந்ததும், "பிறகு சந்திக்கிறேன், பழைய இடத்தில்" என்று கூறிய முராரிராவ், எதிரேயிருந்த அடர்ந்த தோப்பொன்றை நாடிச் சென்றார். தனியே விடப்பட்ட விஜயகுமாரன் கிளைவை எண்ணியபடியே நடந்து சென்றான் கோட்டையை நோக்கி.

பல புதர்களைக் கடந்தே கோட்டையை அணுக வேண்டியிருந்ததால் சிறிது எச்சரிக்கையுடன் செல்ல வேண்டியிருந்தாலும் சிந்தனை சித்தத்தில் மண்டிக் கிடந்ததால் குருடன் போலவே ஒரு புதருக்கருகில் வந்ததும் யார் மீதோ மோதிக் கொண்டான். "மன்னிக்க வேண்டும்" என்று கூறித் தலை நிமிர்ந்தவன் இதயம் திடீரென எரிமலையாகித் தணலைக் கொட்டியது. "யார் வரச் சொன்னது, உன்னை இங்கே?" என்று சீறினான் அந்த வாலிப வீரன்.

பதிலுக்கு நகைப்புத்தான் கிடைத்தது மோதிய தபரிடமிருந்து. அந்த நகைப்பு குளிர் நீராக விஜயகுமாரன் இதயத்தில் விழுந்ததால் தணல் அணையவே செய்தது. நந்தினியின் அழகிய பெருவிழிகள் அந்த இருட்டில்கூட ஒளி பெற்று அவனைப் பார்த்தன. "உபதளபதியானதும் அதட்டல் சிறிது அதிகமாயிருக்கிறது" என்று அவள் உதடுகளிலிருந்து உதிர்ந்த சொற்களில்

விஷமம் இருந்தது, கேலியிருந்தது. இன்னொன்றும் இருந்தது. அதை உணர்ந்துகொள்ள முடியவில்லை, விஜயகுமாரன் இதயத்தால். ஆகவே, "அரசகுமாரி..." என்று துவங்கினான் அவன்.

"உங்களுக்கல்ல..." நந்தினியின் குரல் குழைந்து கிடந்தது.

"சொல்வது புரியவில்லை" என்றான் விஜயகுமாரன்.

"புரியாத கதைதான் இது" என்ற அரசகுமாரி அவனை நெருங்கவும் செய்தாள்.

23. ஊர், பேர், இடம்!

அந்தப்புரத்தில் இருக்க வேண்டிய அரசமகள் அந்தப் புதருக்கருகில் தன்மீது திடீரென மோதிவிட்டதால் அதிர்ச்சியடைந்த விஜயகுமாரன், அவள் தன்னைத் துணிவுடன் நெருங்க முற்பட்டதும் செய்வது என்னவென்று தெரியாமல் விழித்ததைக் கண்டு, தூரத்தேயிருந்த தேவிக்கோட்டையின் உயர்ந்த மாட விளக்குகள் அவனைப் பார்த்து நகைப்பனபோல் தீக்சுடர்களை ஆட்டவே செய்தனவென்றால், கொள்ளிடத்து அலைகளைக் கொஞ்சிக் கொஞ்சி முத்தமிட்டு நெருங்கி வந்து அந்த வஞ்சியின் தலைக்குழல் வாசமலரையும் வளைந்த உடலையும் தழுவி மெல்லச் சுழன்று அவன் உடலையும்கூடத் தொட்டுவிட்டுச் சென்ற தென்றலின் இன்ப ஸ்பரிசம், அவனை ஏதோ கண் காணாத சொர்க்கத்துக்கு இழுத்துச் சென்றது.

நெருங்கிய நங்கையின் சேலையின் மேற்பகுதி சற்றே நழுவியதையும், அவள் அதைத் திரும்பவும் தோள்மீது தூக்கிவிட்டுக் கொண்டதையும் புதரையடுத்த இருளில் அவன் சரியாகப் பார்க்க முடியவில்லை யென்றாலும், தன்னைக் கடமையினின்றும் நழுவச் செய்ய அலுவல் ஒன்று நெருங்கி விட்டதை அந்த வாலிபன் உணர்ந்தான். சற்றே நெருங்க முற்பட்ட அரசகுமாரியும் என்ன காரணத்தாலோ சட்டென்று நின்று விட்டாளானாலும், அவளுக்கும் அவனுக்கும் இருந்த மிகக் குறைந்த இடைவெளி காரணமாக அவள் சேலை முந்தானை அவன் கைமீது மெல்ல உராய்ந்து அவன் உயிரையே உறிஞ்சிவிடக்கூடிய வேதனையை அளித்தது, வாலிபனான விஜயகுமாரனுக்கு.

பருவமளித்த வேதனை, சமயமளித்த சோதனை, புதரளித்த மறைவு, புனமயிலளித்த துணிவு, இத்தனையும் சேர்ந்துவிட்டதன் காரணமாக, விஜயகுமாரன் தன்

www.thamizhthenee.blogspot.com

கைகளிலொன்றைத் தூக்கிச் சற்றுத் திடமாகவே நந்தினியின் அழகிய தோள் ஒன்றில் வைத்தான். அந்தச் சைகைக்காகவே காத்திருந்தாலும், சரேலென்று எதிரேயிருந்த வாலிபன்மீது விழுந்தவிட உள்ளம் துள்ளியே வந்தாலும், நந்தினி இருந்த இடத்தைவிட்டு நகராமலே நின்றாள், இயற்கையளிக்கும் நாணமெனும் பாதுகாப்பின் விளைவாக. ஆனால் அந்தப் பாதுகாப்பில்லாத விஜயகுமாரன் மட்டும் சற்று அத்து மீறி அவள் இடையிலும் தனது மற்றொரு கையைப் பாய்ச்சி அவளைத் தன்னை நோக்கி இழுத்தான்.

அந்த நிலையில் அரசகுமாரி ஏதும் பேசவில்லை. பேச்சுக்கு அவசியம் இல்லாத சந்தர்ப்பம், மனம் உந்திய ஆசை- இவற்றால் சற்று அவன் கைகளை அப்புறப்படுத்தவே முயன்றாள் தஞ்சை மன்னன் மகள். ஆனால் அவள் முயற்சி பலிக்கவில்லை; இடையில் தவழ்ந்த கையை அவள் அகற்றத் தனது கையை அதன்மீது வைத்ததும், அந்தப் பொல்லாக் கை அவளது இடையைவிட்டுக் கையைச் சுற்றிக் கொண்டது கெட்டியாக. பிறகு அவளை இழுத்துச் சற்று எட்ட இருந்த தரையில் உட்கார்த்தவும் செய்தது.

தரை கடினமாகத்தான் இருந்தது. உட்கார்ந்த இடத்தில் கற்கள் அவள் பூக்குவியல்களை உறுத்தவே செய்ததால், அவள் சிறிது சாய்ந்தே உட்கார்ந்தாள். இடக் கையை ஒருபுறம் தரையில் ஊன்றி, விஜயகுமாரனும் அவளை அணுகி உட்கார்ந்து கொண்டான் பக்கத்தில். அவள் ஒரு கையைத் தன் கையில் பிடித்துக் கொண்டு அவள் கூந்தலிலிருந்த மலரை முகர்ந்தான் நீண்ட நேரம். அப்படி அளித்த காந்தத்தால் மெய்மறந்தோ என்னவோ அவன் முகவாய்க்கட்டை அவள் தலைக்கருங்குழலில் அதிகமாகவும் அழுத்தமாகவும் புதைந்தது. அதன் விளைவாகக் குழலின் புஷ்பத்துக்கும் குழலுக்கும் அருகில் அணைந்து விட்ட அவன் நாசி புஷ்ப இன்பத்தையும் முகர்ந்தது. குழலில் தடவி யிருந்த தஞ்சை அரைக்கீரை விதைத் தைலத்தின் இணையற்ற நறுமணத்தையும் நுகர்ந்தது. அந்தப் பொல்லாத நாசிக்குப் புத்தியில்லையென்பதை விஜயகுமாரன் இதழ்கள் நிரூபித்தன.

சிறிது நேரத்தில் தலையிலிருந்த மோவாய்க்கட்டை எழுந்து அவன் இதழ்கள் அவள் கழுத்தில் புதைந்ததும், அங்கிருந்தும் விலகி, கீழே எழுந்திருந்தாலும் கண்ணுக்குப் புலப்படாத எழிலிரண்டிலிருந்தும் எழுந்த சுகந்தத்தை நுகரக் கழுத்துக்குச் சற்று அடியில் வந்து நின்றன. மலரும் தைலமும் இணைந்த நறுமணம் தையலின் உடலிலிருந்த கந்தத்தின் முன்பு எம்மாத்திரம் என்பதை எடுத்துக் காட்டவோ என்னவோ இதழ் களுடன் நாசியும் இணைந்தது.

'இவர் இடக் கை' அதுதான் தோளைப் பிடித்த கை, 'எதற் காக அத்தனை அழுத்திப் பிடிக்க வேண்டும்? எனக்கு வலிக்க மென்று தெரியாதா?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள் நந்தினி. ''உம்...'' என்ற எரிச்சரிக்கைச் சொல் அவள் உதடுகளிலிருந்து உதிர்ந்தது.

''என்ன நந்தினி?'' அவள் காதுக்கருகில் தன் உதடுகளைக் கொண்டு சென்று வினவினான் விஜயகுமாரன்.

''நான்... நான்...''

''என்ன நீ...?''

''இதற்காக... இதற்காக...''

''சொல்லேன்.''

''வரவில்லை.''

பின் எதற்காக வந்தாய்?''

''போரைப் பார்க்க வந்தேன்.'' இதைச் சொன்ன நந்தினி சிறிது விலகப் பார்த்தாள்.

ஆனால் அவன் இரும்புக் கைகள் விடவில்லை அவளை,

''நந்தினி...!''

''உம்'' என்றாள் நந்தினி கடுமையாக.

''அப்பா! 'உம்'மே ரொம்பக் கடுமையாக இருக்கிறதே!'' என்றான் விஜயகுமாரன்.

''சும்மா இருங்கள்.''

''சும்மா இல்லாமல் என்ன செய்கிறேனாம்?''

''அது உங்களுக்குப் புத்தியிருந்தால் தெரியும்.''

''அதுதான் போய்விட்டதே!''

''எங்கே?''

''உன்னிடம்.''

''எப்பொழுது?''

இதற்கு விஜயகுமாரன் உடனடியாகப் பதில் சொல்ல வில்லை. பிறகு சொன்னபோதும் மெதுவான குரலிலேயே சொன்னான், ''நந்தினி! ஸ்ரீரங்கம் நினைவிருக்கிறதா உனக்கு?'' என்று.

''ஏன் நினைவிருக்காது? அங்கேதானே நீங்கள்...'' இந்த இடத்தில் அவள் சொல் அறுந்தது, உணர்ச்சி புரண்டது.

''நான்?''

''யாரும் தொடவும் துணியாத அரசமகளைத் தொட்டுத் தூக்கினீர்கள்...''

''தூக்கி?''

''புரவிமீது போட்டீர்கள், முரட்டுத்தனமாக... நான் ஏதோ மூட்டைபோல்.''

''ஏன் நீ மூட்டையல்லவா?''

''மூட்டையா?''

''ஆம், புஷ்ப மூட்டை.''

''போதும் போதும் நிறுத்துங்கள். தொட்டுக் காட்ட வேண்டாம்... சொன்னால் போதும்!'' அவள் சொற்களில் கோபம் கரை புரண்டு ஒலித்தது. கொள்ளிட அலைகள் தூரத்தே எழுந்து தரையை உடைத்துக்கொண்டு அவள் உதவிக்கு வந்து விடுவனபோல் கூச்சல் போட்டன.

விஜயகுமாரன் மெல்ல நகைத்தான். ''ஏன் நகைக்கிறீர்கள்?'' என்ற வினவினாள் நந்தினி.

''இந்தப் புஷ்ப மூட்டையை அன்று முரட்டுத்தனமாகத் தூக்கி என் புரவியில் போட்டபோது அது இத்தனை எதிர்ப்பைக் காட்டவில்லை.''

நந்தினி உடனடியாகப் பதில் சொல்லவில்லை அவனுக்கு. சொன்னபோது அவள் குரலில் கனிவு இருந்தது. ''அன்று என் இதயம் நிலை வேறு'' என்றாள் நந்தினி மிக ரகசியமாக.

''என்ன நிலை நந்தினி?''

''விரோத நிலை. உங்களைக் கொன்றுவிடக்கூட முயன்றேன் இருமுறை.''

''இப்போது மாத்திரம் என்ன செய்கிறாயாம்?''

''இப்போது கொல்கிறேனா?''

''ஆம்.''

''பொய் பொய்.''

''உண்மை உண்மை.''

''எப்படி உண்மை?''

''அன்று நான் தொட்டபோது சும்மா இருந்தாய். இன்று தொட்டால் சிணுங்குகிறாய்.''

நந்தினி மௌனம் சாதித்தாள். பிறகு மெள்ள அவன் கால் மீதிருந்த அவள் தொடை சற்று அதிகமாகவே அழுந்தியது. உடலும் அவனை நோக்கிச் சாய்ந்தது. அவன் காதுக் கருகில் தனது உதடுகளைக் கொண்டு வந்து சொன்னாள் அவள், ''உடலின் நிலை இதயத்தின் நிலையைப் பொறுத்தது,'' என்று.

''அது என்ன நிலையோ?''

''வேண்டும்போது இடம் தரும்; வேண்டாதபோது விலகும்!''

''எப்பொழுது வேண்டும், எப்பொழுது வேண்டாமென்பது எப்படி விளங்கும்?''

''விளங்காத நிலைதான் அது.''

''விளங்காது, புரியாது.''

''புதிர் போடுகிறாயே!''

நந்தினி அத்தனை இருட்டிலும் புன்முறுவல் கொண்டாள். ''அது புரியாத புதிர்தான். இதுவரை, இத்தகைய இதய நிலை எப்படி ஏற்படுகிறது, ஏன் ஏற்படுகிறது, திடீரென ஏன் மாறுகிறது என்பதைக் கண்டுபிடித்தவர்கள் யாருமில்லை'' என்றாள் நந்தினி.

''நாம் கண்டு பிடித்தால் என்ன?'' என்று அவளை இழுத்து இறுக்கிக் காதில் சொற்களை மிக ரகசியமாகச் சொன்னான் விஜயகுமாரன்.

நந்தினி நெகிழ்ந்தாள் உணர்ச்சி மிகுதியால்.

கோட்டையைச் சுற்றிலும் நடமாடிக் கொண்டிருந்த வீரர்கள் கூச்சலோ, எரிந்த தீபங்களோ, பந்தங்களோ, எதுவும் காதிலோ கண்களிலோ படவில்லை அவனுக்கு. கடலலைகள் முட்டித் தள்ளியதால் எழுந்துவிட்ட கொள்ளிட அலைகளின் இரைச்சலும் அவனைப் பாதிக்கவில்லை. இருவருமே அந்தப் புதருக்கருகில் வேறு ஓர் உலகத்தைத் தங்களுக்காகவே சிருஷ்டித்துக் கொண்டதால் கோட்டை ஒன்று இருப்பதாகக்கூட நினைப்பில்லை அவ்விருவருக்கும். புதரில் இருக்கக்கூடிய விஷ ஜந்துக்களைக்கூட விஷய சுகம் மறைத்துவிட்டது.

உப புக்தம் விஷம் ஹந்தி, விஷயை ஸ்மரணாதபி (உண்ட பின்பு கொல்லும் விஷம்; காமமோ நினைப்பினாலேயே கொன்று விடுகிறது) என்ற வாக்கியம் எத்தனை உண்மை என்பதை நினைத்துப் பார்த்தான் விஜயகுமாரன். வீரனான அவன் விரகத்தால் துடித்தான். இருப்பினும் பண்பாடு அவனை அத்தகைய துடிப்பிலும் தேக்கி வைத்தது. உணர்ச்சி வெள்ளம் அவள் இதயத்தை மூழ்கடித்துக் கொண்டிருந்தது. பெண்களின் நிலையே இப்படித்தான். தாங்கும் வரையில் திடம், தாங்காத நிலையில் வீழ்ச்சி. அதன் விளைவாக அவள் உடல் நன்றாகச் சாய்ந்தது அவன்மீது. என்ன காரணத்தாலோ சட்டென்று விஜயகுமாரன் விலகினான்.'' ''தவறு ராஜகுமாரி, தவறு'' என்று மெல்லிய குரலில் கடிந்தும் கூறினான்.

''கொஞ்சம் எனக்குப் பேச இடம் தருவீர்களா?'' என்று ஒரு குரல் ஊடே புகுந்தது சற்று எட்ட இருந்து.

அந்தக் குரலைப்பற்றி இருவருக்கும் சந்தேகம் இல்லை. ஆகவே இருவரும் எழுந்தார்கள் அச்சத்தினால். குரலுக்குடையவர் அவர்களை நோக்கி மெல்ல வந்தார்.

24. முராரிராவின் ஜோஸ்யம்

புதுக் குரலொன்று இடையே புகுந்துவிட்டதன் காரணமாக, பரஸ்பரப் பிணைப்பிலிருந்து பிரிந்துவிட்ட விஜயகுமாரனும் தஞ்சை மன்னனின் செல்வியும் சற்றே சங்கடப்பட்டுத் திண்டாடியதைக் கண்ட முராரிராவ் புன்சிரிப்புத் தவழ்ந்த வதனத்துடன் அவர்கள் இருவரையும் சில விநாடிகள் கவனித்துக் கொண்டிருந்தது விட்டு, ''நந்தினி! இவரைச் சிறிது நேரம் எனக்கு விட்டுக் கொடுக்கிறாயா?'' என்று வினவினார்.

நந்தினி முராரிராவைச் சுட்டுவிடும் சுடர் விழிகளுடன் ஏறெடுத்து நோக்கிவிட்டுக் கேட்டாள். ''தாராளமாக எடுத்துக் கொள்ளுங்கள். இவரை நான் பிடித்துக் கொண்டா இருக்கிறேன்?'' என்று.

''இப்பொழுது இல்லை'' என்று இழுத்த சுமுராரிராவ் ''நந்தினி! நீ கோட்டைக்குப் போ. வெகு சீக்கிரம் இவரை அனுப்பி விடுகிறேன்'' என்று கூறினார் விஷமம் ஒலித்த குரலில்.

நந்தினி உட்கார்ந்த இடத்தைவிட்டு வெகு வேகத்துடன் எழுந்து இருவரையும் உற்று நோக்கினாள் சில விநாடிகள். பிறகு தூரத்தே தெரிந்த கோட்டையையும் நோக்கினாள்; அடுத்து எதிர்க் கரையில் தெரிந்த வெள்ளையர் பாசறையையும் நோக்கினாள். நின்ற இடத்தில் வலக் கால் பெருவிலால் கோடு ஒன்றைப் பாதி வட்டமாக இழுத்தாள். சரேலென்று ஏதும் பேசாமல், விஜயகுமாரனிடம்கூட விடைபெறாமல் கோட்டையை நோக்கிக் காற்சிலம்புகள் கலீர் கலீரென ஒலிக்க வேகமாக நடந்தாள்.

அவள் போவதை விஜயகுமாரன் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் சரேலென்று திரும்பிய வேகத்திலும் ஒய்யாரமிருந்ததைக் கவனித்தான். கோபத்துடன் நடந்தபோது இலங்கிய நுண்ணிடை அடுத்திருந்த இருபெரும் அழகுகளை அசைத்த விந்தையையும் கவனித்தான். அதன் விளை வாகக் கோபத்துக்கும் அழகுக்கும் எத்தனை சம்பந்தம் இருக்கிற தென்பதை நினைத்துப் பெருமூச்சும் விட்டான். அந்தப் பெரு மூசைக் கவனித்த முராரிராவ் மெல்ல நகைத்தார்.

முராரிராவின் அநாகரிகமான தலையீட்டினாலேயே வெகுண்டிருந்த விஜயகுமாரன் அவர் நகைத்ததால் சினம்கொண்டு, ''எதற்காக நகைக்கிறீர்கள்?'' என்று கேட்டான் சினம் குரலிலும் பூர்ணமாகத் தொனிக்க.

முராரிராவின் கண்கள், புதரின் அருகாமையிலிருந்த இருட்டில்கூட ஜொலித்தன விஷமத்துடன். ''நீ பெருமூச்சு விட்டதைக் கண்டு நகைத்தேன்'' என்றார் கேலி நிறைந்த குரலில்.

''பெருமூச்சு நகைப்பதற்கு உரியதா?'' என்று வினவினான் விஜயகுமாரனும் மேலும் சினத்தைக் கூட்டி.

''சாதாரண காலங்களில் அனுதாபத்திற்குரியது'' என்றார் முராரிராவ்.

''இப்பொழுது நகைப்பதற்குரியதாக்கும்?''

''ஆம். நாடே தனது கதி என்ன ஆகுமோ என்று பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறது. அந்தச் சமயத்தில் ஏற்படும் காமப் பெருமூச்சு எதற்கு உரியது? நீ தான் சொல்லேன்.''

விஜயகுமாரன் நீண்ட நேரம் பதில் சொல்லவில்லை. முராரி ராவ் சொன்னதில் பெரும் பொருள் புதைந்திருந்ததால் அவன் மனம் அவனையே கண்டித்தது, 'உன் போக்கு சரியல்ல' வென்று. அதனால் மனத்திடமும் வெகுண்டான் விஜயகுமாரன். 'நீ தானே அவளிடம் என்னை இழுத்துக்கொண்டு போனாய்? உனக்குப் புத்தியில்லை?' என்று தன் மனத்தைக் கேள்வியும் கேட்டான் உள்ளூற. விஜயகுமாரன் வேதனையை முராரிராவும் உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். ஆகவே அவனை ஆசுவாசப் படுத்தச் சொன்னார், ''விஜயகுமாரா! உன் வயதின் கோளாறு இது. ஆகையால் மன்னிக்கத் தக்கது'' என்று.

விஜயகுமாரன் பதிலில் வெறுப்பு இருந்தது. ''இல்லை தளபதி! மன்னிக்கத் தகாதது'' என்றான்.

''காரணம்?'' முராரிராவின் கேள்வியில் ஏதோ சந்தேகம் இருந்தது.

''எதிரி அக்கரையில் இருக்கிறான்.''

''ஆம்.''

''இந்தச் சமயத்தில் மனம் போரில் ஊன்றியிருக்க வேண்டும். மாற்றம் மன்னிக்கத் தகாதது.''

இதைக் கேட்ட முராரிராவ் மெல்லச் சொன்னார், ''அதை நான் காரணமாக ஒப்புக் கொள்ள மாட்டேன்'' என்று.

''வேறு என்ன காரணம்?'' என்று வினவினான் விஜயகுமாரன்.

''இதயத்தைத் தொட்டுப் பார்'' என்றார் முராரிராவ், இந்தச் சமயத்தில் அவர் குரலில் விஷமமற்ற உணர்ச்சி நிரம்பி நின்றது.

''இதயம் சரியாகத்தான் இருக்கிறது தளபதி.''

''இல்லை. உன் உயிர்ப்பணியை உதாசீனம் செய்து விட்டது.''

''என்ன பணியைக் குறிப்பிடுகிறீர்கள்?''

''அதுவும் மறந்துவிட்டதா விஜயகுமாரா? அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே என்ற அறிவுரையாவது உன் அறிவிலிருந்து விலகாதிருக்கிறதா?'' என்று வினவின முராரிராவ் மேலும்

சொன்னார்: ''விஜயகுமாரா! நீ சிவகங்கையிலிருந்து புறப்பட்ட போது புனிதமான பணியை நிறைவேற்றப் பயங்கரமான சபதத்தைச் செய்திருக்கிறாய். யாருடைய தலையைக் கொய்வதாக நீ சபதம் செய்திருக்கிறாயோ, யாருடைய பொய் சபதத்தினால் ராணி மீனாட்சி தீக்குளித்தாளோ, அந்த மனிதன் பெரும் பலம் பெற்று மீண்டும் தமிழகம் நுழைந்திருக்கிறான். இந்த நிலையில் நீ இந்த இடத்தில் தஞ்சை மன்னனுக்கு உதவ முன்வந்திருக்கிறாய், பழைய சபதத்தை நிறைவேற்றும் ஒரு படியாக இதைக் கொள்ளவில்லை. நந்தினியின் நீள்விழி வீச்சினால் அவள் தந்தைக்கு உதவ இங்கு வந்திருக்கிறாய். ஆனால் பிரதாப சிம்மனை முழுதும் நம்பி அவனுக்கு உதவுவதால் உன் சபதம் நிறைவேறாது. பிரதாபசிம்மன் சமயத்துக்குத் தகுந்தபடி மாறக்கூடியவன். ஹிந்து சாம்ராஜ்யத்தை விஸ்தரிப்பதில் விருப்பம் இல்லாதவன்...''

இங்கே சிறிது தமது ஆவேசப் பேச்சை நிறுத்தினார் முராரிராவ். பிறகு ஏதோ கேள்வி கேட்க முற்பட்ட விஜயகுமாரனைத் தமது கையின் சைகையால் அடக்கி, ''விஜயகுமாரா! ஹிந்துக்களின் இந்தப் புண்ணிய பூமியைப் பார். ஏதோ ஒரு மகாவீரன் பிறந்து தலைதூக்கும் காலத்தில் ஹிந்துக்கள் தலை தூக்குகிறார்கள், மௌரியர்கள், குப்தர்கள் காலத்துக்குப் பின் சிவாஜி மகா ராஜா ஹிந்து சாம்ராஜ்யத்தை அமைத்தார். அவர் தந்தை ஷாஹுஜி மகாராஜா தென்னாடு முழுவதையும் மகாராஷ்டிர ஆதிக்கத்தில் கொண்டு வந்தார். மேற்கே சூரத்திலிருந்து தெற்கே திருச்சி வரை மகாராஷ்டிரர் ஆட்சி இருந்தது. அவருக்குப் பின்பு வியங்காஜி ஸதாராவுடன் தமது ராஜ்யத்தை இணைத்திருந்தால் இன்று கூட ஆர்க்காடு அரசும் இதர சில்லறை அரசுகளும் இங்கே தலைகாட்டியிருக்க மாட்டா. அவர்தான் முன்னோக்குடன் செய்யவில்லை. பெரிய அறிவாளி என்று பெயர் வாங்கியிருக்கும். இந்தப் பிரதாபசிம்மன் சற்று முன்னோக்கிப் பார்த்து ஸதாராவிடம் இணைந்திருந்தால் சந்தாசாகேபும், முஸபர் ஜங்கும் தலைதூக்க முடியாது. அவர்கள் தலைதூக்காவிட்டால் பிரிட்டிஷ்காரரும் பிரெஞ்சுக்காரரும் தலையிட முடியாது தட்சிணப் பிரதேச விவகாரங்களில். அப்படித் தலையிட முடியா தென்றால் இந்த காப்டன் கோப் அக்கரையில் வர அவசியம் இருக்காது'' என்று உணர்ச்சி ததும்பப் பேசினார். இதை முடித்ததும் அவரும் துன்பப் பெருமூச்சு விட்டார்.

எதற்கும் நெகிழாத முராரிராவின் உள்ளமே நெகிழ்ந்து விட்டதைக் கண்ட விஜயகுமாரன் ஸ்தம்பித்து உட்கார்ந்திருந் தான். பிறகு மெல்ல வினவினான்: ''இத்தனை பேதம் நீங்கள் தஞ்சையின் சுற்றுப்புறங்களைப் பலமுறை சூறையாடியிருக்

கிறீர்களே. மகாராஷ்டிர தளபதி மகாராஷ்டிர அரசையே சூறையாடுவது ஹிந்து ஆதிக்கத்திற்கு அடிகோலுவதாகுமா?''

முராரிராவ் தமது கண்களை உயரத் தூக்கி விஜயகுமாரனை நன்றாகப் பார்த்தார். அந்தக் கண்களில் அவன் கேள்வியால் வெட்கமோ வேறுவிதக் கலக்கமோ ஏற்படவில்லை. ''பிரதாப சிம்மன் ஸதாராவுடன் இணையாமல் தனிக்காட்டு ராஜாவாக இருக்க ஆசைப்படும் வரையில் மகாராஷ்டிர சாம்ராஜ்யத்துக்கு ஆபத்து இருக்கிறது. அந்த ஆபத்தைத் தவிர்க்க எதையும் செய்வேன், யாரையும் சூறையாடுவேன். ஆனால் விஜயகுமாரா! அவனும் ஒரு நாள் எனது வாளை நாட்டு நலனுக்காக எதிர்பார்ப்பான். அப்பொழுது முராரிராவ் பிரதாபசிம்மனுக்கு உதவத் தயங்கமாட்டான்'' என்று கூறினார் முராரிராவ்.

விஜயகுமாரன் மேற்கொண்டு அந்தப் பேச்சை வளர்த்த விரும்பவில்லை. பிரதாபசிம்மன் பெரிய அறிவாளியென் பதிலோ முராரிராவுக்கு இருக்கும் நாட்டுப்பற்று அவருக்கும் இருக்குமென்பதிலோ விஜயகுமாரனுக்குச் சந்தேகம் ஏதுமில்லாத தால் மெள்ள விஷயத்தை மாற்றி, ''தளபதியவர்கள் திடீரென இங்கு முளைத்த காரணம் தெரியவில்லை. எனக்குத் தோணி விடுவது அந்தக் காரணங்களில் ஒன்றாயிருக்காது என்று நினைக்கிறேன்'' என்றான் மெதுவான குரலில்.

சாதாரண சமயமாயிருந்தால் முராரிராவ் நகைத்திருப்பார், விஜயகுமாரன் குத்தலை ரசித்துமிருப்பார். ஆனால் கனவு நிரம்பிய அவர் முகத்தில் அத்தகைய உணர்ச்சி ஏதும் தோன்றவில்லை. ''விஜயகுமாரா! நான் இங்கு வந்த காரணம் தோணிவிட அல்ல என்று நிச்சயமாகக் கூற முடியாது. போர்ப் பிரவாகத்தில் அறிவாகிய தோணியை விட உனக்குக் கற்றுக் கொடுக்கவே வந்திருக்கிறேன்.'' என்றார் முராரிராவ் மெதுவாக.

''ஏன் அதை தேவிக்கோட்டையைக் காக்க வந்திருக்கும் மானாஜியிடம் கூறினால் என்ன?'' என்று வினவினான்.

முராரிராவ் ஒரு விநாடி சிந்தித்துவிட்டுப் பதில் கூற முற் பட்டு, ''விஜயகுமாரா! மானாஜி பெரும் படைத்தலைவர், மகாவீரர், பல போர்களைக் கண்டவர், என்னைவிட வயதில் மூத்தவர். ஆகையால் நான் சொல்லும் எதையும் அவர் ஏற்க மாட்டார். ஆகையால்தான் உன்னிடம் சொல்கிறேன்'' என்றார்.

''நான் சாதாரண உபதளபதி'' என்று தயங்கினான் விஜயகுமாரன்.

''சில சமயங்களில் தளபதிகள் செய்ய முடியாததை உபதளபதிகள் செய்வார்கள். உதாரணமாக, நாம் சற்று முன்பு சந்தித்தோம் கிளைவ் என்பவனை.அந்தக் காப்டன் கோப்பை

விடப் பெரிய காரியங்களை அவனால் சாதிக்க முடியும்'' என்றார் முராரிராவ்.

இதைக் கேட்ட விஜயகுமாரன் அசந்து போனான். ''கிளைவ்! அவனைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?'' என்று வினவினான் வியப்புடன்.

''அவன் பிரிட்டிஷ் படையில் ஒரு லெப்டினண்ட் என்பது தெரியும், வேறு எதுவும் தெரியாது.''

''அப்படியிருக்க அவனைப்பற்றி மிகப் பெரிதாக எடை போட்டிருக்கிறீர்களே?''

''பெரிதாகப் போடவில்லை விஜயகுமாரா! சரியாகத்தான் போட்டிருக்கிறேன். அவன் கண்களில் மகா சூட்சுமம் இருக்கிறது. சாம்ராஜ்ய சிந்தனை இருக்கிறது.''

''கண்களிலா!''

''ஆம்.''

''அவற்றிலிருந்து எதையும் கண்டுபிடிக்க முடியுமா?''

''கண்கள் மூளையின் சாளரம்.''

''அதனால்?''

''அவை காட்டிக் கொடுக்கும் ஒரு மனிதனின் மேதையை. எதற்கும் இந்தக் கிளைவிடம் மிக எச்சரிக்கையாயிரு. தேவிக் கோட்டையை இந்த இங்கிலீஷ் படையால் பிடிக்க முடியாது. ஆனால் இந்தக் கிளைவ் பிடித்தாலும் பிடிப்பான். ஆகையால் எச்சரிக்கையாக இரு'' என்றார் திட்டவட்டமாகச் முராரிராவ்.

இதைக் கேட்ட விஜயகுமாரன் வியப்பினால் ஏதும் பேசவே இல்லை பல விநாடிகள். ஆனானப்பட்ட முராரிராவே கிளைவை அத்தனை தூரம் எடை போடுவதானால் அவன் புத்தி அசாதாரணமாயிருக்க வேண்டும் என்று எண்ணினான். ஆகையால் மேலும் முராரிராவ் கிளைவைப்பற்றி அதிகம் பேசுவா ரென்று நினைத்தான். அந்த நினைப்பை முராரிராவ் உடனடியாக உடைத்தார். ''நான் இப்பொழுது உன்னிடம் பேச வந்தது கிளைவைப்பற்றி அல்ல. தேவிக்கோட்டையைப்பற்றி, அதன் பாதுகாப்பைப்பற்றி...'' என்ற முராரிராவ் ''இந்தக் கோட்டையைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?'' என்று வினவினார்.

''பலமான கோட்டை, கொள்ளிடத்தின் முகத்துவாரத்தி லிருக்கிறது. நல்ல கப்பல் துறை'' என்றான் விஜயகுமாரன்.

இதற்கு முராரிராவ் உடனடியாகப பதில் சொல்லவில்லை. ''இதன் பழங்காலப் பெயர் தெரியுமா உனக்கு? இதன் முதற் பெயர் தீவுக்கோட்டை, பின்னால் சோழமாதேவி ஒருத்திக்கு, சாஸனம் செய்யப்பட்டபடியால் தேவிக் கோட்டையாயிற்று.''

''அப்படியா...''

''ஆம். கொள்ளிடத்தின் முகத்துவாரத்தில் ஆறுகள் இருபுறமும் வளைத்த தீவில் இது அமைந்திருக்கிறது. இந்தத் தீவு முழுவதும் அடர்த்தியான காடும் புதர்களும் நிறைந்திருக் கின்றன. இந்தத் தீவுக்குக் குறுக்கே ஒரு பெரிய வாய்க்காலும் ஓடுகிறது. தேவிக் கோட்டையென்னும் இத் தீவுக்கோட்டை பிரிட்டிஷ்காரர் கணக்குப்படி ஒரு மைல் சுற்றளவுள்ளது. இதோ பார்...'' என்று சொல்லிக் கொண்டே முராரி ராவ் எழுந்து நின்றார். விஜயகுமாரனும் எழுந்து நின்றான்.

முராரி ராவ் கோட்டையையும் சுற்றுப் புறங்களையும் ஒருமுறை தமது கையால் சுட்டிக் காட்டிவிட்டு, ''விஜயகுமாரா! ஒரு மைல் சுற்றளவுள்ள இந்தக் கோட்டையை அணுக முதலில் கொள்ளிடத்தைக் கடக்க வேண்டும். அது ஓர் இயற்கைப் பாதுகாப்பு. அப்படியே கடந்தாலும் இப்புறம் இருப்பதும் பெருங்காடு, புதர்கள். அதோ அந்தக் கோட்டையைப் பார். பதினெட்டு அடி உயரமுள்ள 'சுவர்கள். ஆங்காங்கு இடையிடையே உயரமான கூண்டுகள். பீரங்கி வைத்துச் சுடுவதற்கும் எதிரி வரும் திசையை அறிவதற்கும் பலமான கோட்டை. ஆனால் இன்று அதற்குப் போதிய பலமில்லை'' என்றார்.

''ஏன்?''

''காரணம், ஆயுதக் குறைவு.''

''என்ன ஆயுதங்கள் தேவை?''

''முக்கியமாகப் பீரங்கிகள்.''

''அவை இருக்கின்றன.''

''ஆம். கோட்டைக்குள் பத்திரமாக. ஆனால் எதிரி, கோட்டைக்கு எதிரில் வந்து தரிசனம் கொடுக்க மாட்டான் நீங்கள் கூட. அவர்களிடம் கோட்டையை நீண்ட தூரத்திலிருந்து தகர்க்கும் 'பாட்டரிங் கானன்' (கோட்டையைத் தகர்க்கும் பெரிய பீரங்கி) உண்டு.''

முராரி ராவ் விஷயத்தை விளக்க விளக்க விஜயகுமாரன் இதயத்திலும் மெல்ல அச்சம் உதயமாயிற்று. அதனால் கேட்டான்; ''அப்படியானால் அவர்களைச் சமாளிக்க முடியாதா?'' என்று.

''முடியும் ஒருவகையில்'' என்றார் முராரி ராவ்.

''எப்படி?''

''எதிரியைக் கோட்டையில் சந்திக்காதே.''

''வேறெங்கே சந்திப்பது?''

''இந்தக் காட்டில் சந்தி. இங்குள்ள புதர்களில் சந்தி.''

''இங்கிருந்தா!''

''ஆம்'' என்ற முராரிராவ் வெகு ரகசியமாக விஜயகுமார

னுக்குப் போர் முறையை உபதேசித்தார். மெள்ள மெள்ள எதிரியை எப்படி எதிர்கொள்ள வேண்டும், எப்படி இம்சை செய்ய வேண்டும் என்று விவரித்தார், அணு அணுவாகத் தமது திட்டத்தை விளக்கி. ''இதைச் சொல்லத்தான் வந்தேன் விஜயகுமாரா, தஞ்சைக்கு வடமேற்கிலிருக்கும் எனது படையை விட்டு. இந்தப் படையெடுப்பைப் பற்றி நீண்டநாளாகப் பிரஸ்தாபம் இருந்து வருகிறது. ஆகையால் வந்தேன் மாறுவேட உடையில்'' என்றும் கூறினார்.

''ஆம், ஆம். உங்கள் வேடத்தைக் கண்டு நானே முதலில் தோணிக்காரனென்று மலைத்தேன்'' என்றான் விஜயகுமாரன்.

முராரி ராவ் பழைய நிலைக்கு வந்தார். ''இப்போது நீ செல்லலாம். எதையும் நான் சொன்னதாக மானாஜியிடம் சொல்லாதே. நீயாகச் சொல். எல்லாவற்றையும்விட, பீரங்கிகளைவிட மகாராஷ்டிரர் புரவிப் புயல் படையை நம்பு. மராத்தா லைட் ஹார்ஸ் என்று சொன்னால் பிரிட்டிஷாரே நடுங்குவார்கள்'' என்று சொல்லி நகைத்த முராரி ராவ், ''விஜயகுமாரா! இனி நீ கோட்டைக்குச் சென்று நந்தினியின் கோபத்தைத் தணி. அதற்கு நான் வழி சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை என்று நினைக்கிறேன்'' என்றார்.

''போர் எதிரில் இருக்கும்போது...'' என்று இழுத்தான்.

''இன்னும் இரண்டு நாட்களுக்குப் போர் கிடையாது'' என்று கடைசியாக ஒரு அஸ்திரத்தை எடுத்து வீசிய முராரி ராவ் வேகமாக நடந்து அடுத்திருந்த காட்டுப் பகுதியில் மறைந்தார்.

விஜயகுமாரன் அவர் சென்ற திசையை நோக்கிக்கொண்டு சில விநாடிகள் நின்றான். பிறகு கோட்டையை நோக்கி நடந்தான். அவன் அன்று பல விஷயங்களை, புதுப் போர் முறைகளைக் கற்றிருந்தான் முராரி ராவிடம். ஆனால் எதிரிகள் தாக்க இரண்டு நாட்கள் ஆகுமென்று முராரிராவ் ஜோஸ்யம் சொன்னாரே, அதை எப்படிச் சொன்னார் என்பது அவனுக்கு விளங்கவில்லை. ஆனால் எதிர்க்கரையிலிருந்த கிளைவுக்கு அது விளங்கியது. மறுநாள் காலை தாக்குதலைத் தொடங்க வேண்டு மென்று காப்டன் கோப் கட்டளையிட்டபோது, ''இன்னும் இரண்டு நாள் போகட்டும்'' என்றான் கிளைவ்.

25. கொள்ளிடக் காவியம்

தேவிக்கோட்டையைத் தாக்க இரண்டு நாள் போகட்டும் என்று கிளைவ் கூறியதைக் கேட்ட காப்டன் கோப் வியப்பும் சினமும் ஒருங்கே இணைந்துவிட்ட உணர்ச்சியால் ஒரு விநாடி

திணறினான். பிறகு மெல்லத் தனது கொந்தளிப்பை அடக்கிக் கொண்டு, ''காப்டன் இடும் உத்தரவுக்கு லெப்டினண்ட் பணிய வேண்டியது பிரிட்டிஷ் ராணுவப் பழக்கம்'' என்றான்.

கிளைவின் முகம் கூடார விளக்கில் இகழ்ச்சிக் குறியை நன்றாகக் காட்டியது. ''பலக்குறைவுடனும் பட்டினியுடனும் எதிரியைத் தாக்குவதும் பிரிட்டிஷ் ராணுவப் பழக்கமா?'' என்று வினவினான் கிளைவ்.

''பட்டினியா!'' கோப்பின் கேள்வியில் உள்ளிருந்த கோபம் அகன்று வியப்புத் தலைதூக்கி நின்றது.

''ஆம்! நாம் கொண்டு வந்துள்ள உணவு சப்ளை இன்னும் மூன்று நாளைக்குத்தான் இருக்கும்'' என்றான் கிளைவ்.

''மேலும் கப்பல் மூலம் உணவு சப்ளைகள் அனுப்புவதாகக் கவர்னர் கூறியிருக்கிறாரே!''

''அந்தக் கப்பல்கள் அனைத்தும் கடலில் மூழ்கிவிட்டதாகப் போர்ட்டோ நோவோ துறைமுக அதிகாரி கூறவில்லையா? அப்படியிருக்க ஸெய்ன்ட் டேவிட் கோட்டைக்குத் தகவல் போய் உணவு சப்ளை கப்பலும் இதர உதவிக் கப்பலும் வர இன்னும் குறைந்தபட்சம் இரண்டு நாட்களாவது ஆகாதா?''

''ஆகும்.''

''தவிர நமது படைகளும் புயலில் தத்தளித்துக் களைத்திருக்கின்றன. இந்தப் படையை வைத்துக்கொண்டு எதிரேயுள்ள கோட்டையைப் பிடிக்க முடியாது.''

''அதனால்?''

''இன்னும் சில சோல்ஜர்களை அனுப்பும்படி கேட்டு ஸெய்ன்ட் டேவிட் கோட்டைக்குக் கடிதம் எழுதுங்கள்'' என்றான் கிளைவ்.

காப்டன் கோப் சிந்தனையில் ஆழ்ந்தான் சிறிது நேரம். பிறகு, ''அப்படியே செய்வோம்'' என்று கூறிவிட்டுக் காகிதமும் பேனாவும் கொண்டு வரச் செய்து விவரங்களைக் கவர்னருக்கு எழுத முற்பட்டான்.

அவன் எழுத முற்பட்டதுமே கூடாரத்திலிருந்து கிளம்பிய கிளைவ் தீவிர யோசனையுடன் கொள்ளிடக்கரையை நோக்கி நடந்து அதன் கரைமீது நின்றான். எதிரே ஒரு மைலுக்கு அகண்டமாக விரிந்த கொள்ளிடமும், இடையே காடுகளும் புதர்களும் நிரம்பிய தீவுப் பிரதேசமும், கோடியில் முகத் துவாரத்துக்கும் அருகிலிருந்த தேவிக்கோட்டையின் மதிளும் பீரங்கிக் கூண்டுகளும் அவன் சிந்தனையைப் பெரிதும் கிளறின.

கண்ணுக்கு மிக ரம்மியமான அந்த இயற்கைக் காட்சி போர் ஏற்படும்போது எத்தனை பயங்கரமாக மாறக்கூடும் என்று

எண்ணி, போயும் போயும் இந்தக் காட்டுராஜா எதற்காக நம்மிடம் வந்து சேர்ந்தான் என்று தன்னைத்தானே கேட்டும் கொண்டான் இளைஞன். காட்டுராஜா நினைப்பு வந்ததும் தேவிக் கோட்டையை அடுத்திருந்த காட்டையும் புதர்களையும் ஊன்றிக் கவனித்தான். அந்த இருளில் காடு பெரும் பிசாசு போல் காட்சியளித்தது. ''இந்தக் காடு எனக்குப் பிடிக்க வில்லை'' என்று தனது தலையை இருபுறமும் ஆட்டிக்கொண்டான். இருப்பினும் ரசிகனாதலால் இரவிலும் கொள்ளிடமும் தீவுக் கோட்டையும் அளித்த ரம்மியமான காட்சியில் மனத்தைப் பறிகொடுத்து நீண்ட நேரம் கொள்ளிடக் கரையிலேயே நின்றிருந்தான்.

கொள்ளிடத்தை ரசித்து அவன் மட்டுமல்ல, காட்டை நினைத்ததும் அவன் மட்டுமல்ல, எதிர்க்கரையில் முராரிராவைப் பிரிந்து கோட்டைக்குள் புகுந்த விஜயகுமாரனும் அதே விஷயங்களில் இதயத்தைச் செலுத்திக் கொண்டிருந்தான். கோட்டையின் மேற்கு வாசல் வழியாக உள்ளே நுழைந்தவன் நேராகத் தனது அறைக்குச் செல்லாமல் கோட்டைச் சுவரைச் சுற்றி, வீரர்கள் உலாவவும் எதிரிகள் வருகையை அறியவும் கட்டப்பட்டிருந்த அகலமான தளத்திற்குச் சென்று படிகள்மீது ஏறிச் சென்றான்.

அன்று என்ன காரணத்தாலோ வீரர்கள் யாரும் அங்கு அதிகம் இல்லை. கோட்டைச் சுவரின் இடைவெளிகளிலிருந்த பெரும் காவற்கூண்டுகளில் மட்டும் பார்வையாளர்கள் மாட்ச்லாக் துப்பாக்கிகளுடன் காவல் இருந்தார்கள். அக்கூண்டுகளில் ஒன்றைத் தாண்டி, சுவரோரத் தளத்தில் அவன் நடந்துசென்றபோது அங்கிருந்த வீரனொருவன் அவனுக்குத் தலை வணங்கினாலும் அதைக் கவனியாமலே அந்தத் தளத்தில் நடந்து சென்ற விஜயகுமாரன் தளத்தின் ஒரு மூலைக்கு வந்ததும் நின்றபடியே சுற்றுமுற்றும் நோக்கினான்.

இரவும் வானக் கூரையின் தாரகைகளும் கொள்ளிடத்துக்கு இணையிலா அழகைக் கொடுத்திருந்தன. தூரத்தே கொள்ளிடத்தை அணைக்கத் துடித்த கடலுங்கூட மிக இன்பமாகக் காட்சியளித்தது. அவனுக்கு இடப் பக்கத்தில் எட்ட இருந்த காட்டில் அவன் கண்கள் நிலைத்தபோது முராரி ராவின் எண்ணமே அவன் இதயத்தை ஆட்கொண்டது. அவர் சொல்லிவிட்டுப் போன போர் முறைகளை அவன் மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்த்தான். தேவிக்கோட்டை இருந்த தீவுக்குக் குறுக்கே ஓடிய வாய்க்கால்களையும் கவனித்தான். 'அப்பப்பா! முராரி ராவ் சொன்னது எத்தனை சரி. அவர் போர் முறையை விடச் சிறந்த போர்முறையை யார் வகுக்கமுடியும்?' என்று தன்னைப் பல முறைக் கேட்டுக் கொண்டான்.

சமயபுரச் சத்திரத்தில் சந்தித்த சம்பங்கள் அவனை முராரி ராவுடன் பெரிதும் இணைத்து நெருக்கின. அவர் தனது சபதத்தை நினைவு படுத்தியதுகூட அவன் மனத்திலே எழுந்தது. ராணி மீனாட்சியின் உருவம்; அவள் கண்கள் அவனைச் சுட்டன. உடலை வளைத்த தீயின் மத்தியில் அவள் காட்சியளித்தாள். 'என்னை மறந்துவிட்டாயா விஜயகுமாரா? உன் வம்சத்தையும் மறந்துவிட்டாயா? சபதம் என்னவாயிற்று?' என்று பல கேள்விகளைத் தீயின் மத்தியிலிருந்தே ராணி தொடுத்தாள்.

விஜயகுமாரன் தனது கண்களை இரு கைகளாலும் மூடிக்கொண்டான். ''இல்லை தாயே, மறக்கவில்லை, மறக்கவில்லை'' என்று வாய்விட்டு வெறியன்போல் கூவவும் செய்தான்.

அப்பொழுது அவன் தோள்மேல் பதிந்தது ஓர் ஆறுதல் கரம். ''எதை மறக்கவில்லை?'' என்று வினவியது ஒரு கிள்ளைக் குரல் அவன் காதுக்கருகில்.

விஜயகுமாரன் திரும்பவில்லை. அவன் காதுக்கருகில் முணுமுணுத்த உதடுகளுக்குரியவள் நந்தினி என்பதை அவன் அறியவில்லையா என்ன? அவள் உடல் தன் முதுகுப்புறத்தில் மெல்லப் பட்டுக் கொண்டிருந்தையும் புரிந்து கொள்ளாத அளவுக்கு அவன் உணர்ச்சிகள் மங்கிவிட்டனவா என்ன?

இல்லை, இல்லை, மங்கவில்லை. அதற்குப் பதில் கொந்தளித்து எழுந்துகொண்டிருந்தன. இரவு அளித்த இருட்டின் பாதுகாப்பு, அவள் உடலழகுகள் பின்புறம் பதித்தளித்த இன்ப ஜாலம், காதுக்கருகே ஒலித்த சிறுகுரல் அளித்த மந்திர ஸ்வரம், ஆகிய மூன்றும் அவன் உள்ளத்தின் சோகத்தைக் கிழித்தன. சபதத்தின் வேகத்தைக்கூடச் சிறிது சமனப்படுத்தின. அந்த நிலையில் திரும்பாமலும் அவளை முன்புறம் இழுக்காமலும் சற்றுக் கோபத்துடன் பேசுபவன்போல் கேட்டான் விஜயகுமாரன், ''நீ எதற்கு இங்கு வந்தாய்?'' என்று.

அரசகுமாரி நந்தினி பின்னால் பதுங்கிய நிலைவிட்டு அவன் பக்கத்தில் வந்து அவன் கையொன்றுடன் தனது கையைக் கோத்தாள். சற்று இடித்துக் கொண்டும் நின்றாள், வேண்டுமென்றே. அத்துடன் கேட்டாள் மெதுவாக, ''நீங்கள் எதற்கு இங்கு வந்தீர்கள்?'' என்று.

''கோட்டைக் காவலைப் பார்க்க வந்தேன்'' என்றான் விஜயகுமாரன். ஏதோ பதில் சொல்லித் தப்பவேண்டுமென்பதற்காக. ''எந்தக் கோட்டைக் காவலை?'' என்றாள் அரசகுமாரி சிரித்துவிட்டு.

''தேவிக் கோட்டைக் காவலை'' என்றான் விஜயகுமாரன். மெள்ளத் தனது இடக் கையை அவள் இடையிலும்

செலுத்தினான். செலுத்திய இடை சிறிது சாய்ந்திருந்ததால் அதன் கீழே இருந்த பகுதியின் மேலெழுச்சியிலும் அந்தக் கை பட்டது.

அந்தக் கையின் ஸ்பரிசத்தால், அது தவழ்ந்து திடீரெனத் தங்கிவிட்ட இடத்தின் காரணத்தால், நந்தினி பெரிதும் நிலை குலைந்தாள். அதன் விளைவாக அவன் காதில் ரகசியமாகச் சொன்னாள், ''இல்லை, தேவக்கோட்டைக் காவலை நீங்கள் சரியாகக் கவனிக்கவில்லை'' என்று.

''என்ன! காவலைக் கவனிக்கவில்லையா!'' என்றான் விஜயகுமாரன். அவன் சொற்களில் ஒலித்தது வியப்பா விரகமா என்பது நந்தினிக்குப் புரியவில்லை. ''இல்லை'' என்றாள் நந்தினி.

''என்ன இல்லை?''

''காவலைக் கவனிக்கவில்லை.''

''வேறு என்ன செய்கிறேன்?''

''உடைக்கிறீர்கள்!''

சட்டென்று அவளை நோக்கித் திரும்பினான் விஜயகுமாரன், ''உடைக்கிறேனா?'' என்றான் வேகத்துடன்.

அவன் திரும்பிய வேகத்தில் அவன் மார்புடன் தனது மார்பு சரேலென்று உராய்ந்துவிட்டதால் திடுக்கிட்டாள் அரசகுமாரி. திடுக்கிட்டாளா அல்லது திருப்திப்பட்டாளா? அவளுக்கே புரியவில்லை.

விஜயகுமாரன் நிலையும் பெரும் சங்கடத்தில் இருந்தது. அப்படி இரு கருங்கற்கள் தன்மீது தாக்கும் என்பதை அவன் எதிர்பார்க்காததால் பயத்தால் அவன் மார்பு துடித்துக் கொண்டிருந்தது. பயத்தை உள்ளெழுந்து கொண்டிருந்த வெறி உதறிவிடும்போல் இருந்தது. அதனால் என்ன செய்வதென்று அறியாத விஜயகுமாரன், ''காவலை உடைக்கிறேனா? யார் காவலை?'' என்று ஏதோ உளறினான். அத்துடன் அவள் இடையில் தனது இரு கைகளையும் செலுத்தித் தனது தலையை அவள் தோள்மீது வைத்தான்.

''ஆம் உடைக்கிறீர்கள், காவலை உடைக்கிறீர்கள். கோட்டைக் காவலை உடைக்கிறீர்கள். தேவிக்கோட்டைக் காவலை'' என்று முணுமுணுத்தாள் அரசகுமாரி.

விஜயகுமாரன் தன் உணர்ச்சிகளைப் பெரிதும் அடக்கிக் கொண்டாலும், முடியாமல் திணறினான். அந்த நிலையிலிருந்து தப்ப, ''தேவிக்கோட்டைக் காவலை நான் உடைக்கவில்லை. தவறு'' என்றான் மெல்ல.

நந்தினியின் கரமொன்று, தனது தோள்மீது சாய்ந்து அவன் தலையைத் தடவிக் கொடுத்தது. ''நான் தேவியல்லவா?'' என்று அவள் உதடுகள் முணுமுணுத்தன.

''ஆம் ஆம்'' என்றான் விஜயகுமாரனும் உணர்ச்சிப் பெருக்கால்.

''என் கோட்டையை உடைத்து விட்டீர்களே, என் பாதுகாப்பெல்லாம் பறந்துவிட்டதே...'' என்ற அரசகுமாரி அவனை விட்டு மெல்ல அகல முயன்றாள்.

அவன் இரும்புக் கைகள் அவளை விடவில்லை. ''இது இன்னும் மோசம்...'' என்றாள் அவள் மெதுவாக.

''எது?''

''இப்பொழுது உங்கள் கைகள்...''

''என்ன அவற்றுக்கு?''

''கோட்டையை நெரிக்கின்றன.''

''சே சே, அரசகுமாரி...!''

''என்ன சே சே! அரசகுமாரியைப் பிடிக்கவில்லை?''

''பிடிக்காமல் என்ன?''

''ஆம் ஆம். பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள் பலமாக. அடடே, விடுங்கள், வலிக்கிறது.''

இதைக் கேட்ட அவன் மெள்ளப் பிடியைத் தளர்த்தினான். ஆனால் முழுதும் அவளைச் சுதந்திரமாக விடாமல், ''அரச குமாரி...'' என்று அழைத்தான்.

''ஆமாம், இத்தனைக்குப் பிறகும் அரசகுமாரி பட்டம் வேறு...'' என்று இன்பமாக நகைத்தாள் நந்தினி.

''நந்தினி!'' என்று அழைத்தான் விஜயகுமாரன்.

''என்னவாம் நந்தினிக்கு?''

''அதோ பார் கொள்ளிடத்தை!'' முகத்துவாரத்தைச் சுட்டிக் காட்டினான்.

''அதற்கென்ன?''

''கடலலைகள் கொள்ளிடத்தைத் தழுவத் துடிக்கின்றன.''

''உம்...!''

''ஆனால் இடையே எழுந்திருக்கும் மணல் மேடு அவற்றைத் தடுக்கிறது.''

''உம்...''

''என் நிலையும் அப்படித்தான் இருக்கிறது.''

''உங்கள் நிலையா?''

''ஆம் நந்தினி. உன்னை அடைய என் இதயக் கடலில் அலைகள் கொந்தளித்து எழுகின்றன. இடையே என் சபதம் என்ற மணல் மேடு அலைகளைத் தடுக்கின்றது'' என்ற விஜயகுமாரன் பெருமூச்செறிந்தான்.

''கடலும் உங்களைப் போலத்தான்'' என்றாள் அவள்.

''எப்படி?''

''அதோ பாருங்கள் கடலை.''

''பார்த்தேன்.''

''தெரியவில்லையா?''

''எது?''

''மணல் மேட்டைப் பிளந்து கொண்டு அலைகள் ஒரு கால்வாயைச் சிருஷ்டித்திருக்கின்றன.''

''ஆம்.''

''அதன் மூலம் கொள்ளிடத்துக்குள் பாய்ந்து வருகின்றன.''

''ஆம்'' என்ற விஜயகுமாரன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

''என்ன சிந்திக்கிறீர்கள்?'' என்று வினவினாள் நந்தினி.

''அந்தக் கால்வாய்...'' என்று இழுத்தான் விஜயகுமாரன். அவன் குரலில் வேகம் இருந்தது.

வேகத்துக்குக் காரணம் புரியாததால் நந்தினி கேட்டாள், ''என்ன அந்தக் கால்வாய்க்கு?'' என்று.

''மிக ஆழம்'' என்றான் விஜயகுமாரன்.

''சேச்சே, மிகவும் மோசம்'' என்றாள் நந்தினி.

''மோசமில்லை. நல்ல ஆழம் நந்தினி. அதில் பெரும் கப்பல்கள் நுழைய முடியும்.''

''நல்ல பேச்சு.''

''அதனால்தான் பிரிட்டிஷ்காரர்கள் இந்தத் தேவிக்கோட்டையை விரும்புகிறார்கள்.''

விஜயகுமாரன் பேச்சும் தன் நினைப்பும் வெவ்வேறு திசைகளில் ஓடுவதை உணர்ந்த நந்தினி வெட்கத்தால் குன்றிப் போனாள். 'ஐயையோ வெட்கக் கேடே! என் நினைப்பு என்னை இத்தனை மோசமாகிவிட்டது!' என்று தன்னை நொந்து கொண்டாள்.

அவன் கைகளிலிருந்து பலவந்தமாக விடுவித்துக் கொண்டு தாழ்வரையில் மெல்ல நடந்து சென்றாள். அவளைப் பின் பற்றிச் சென்றான். அவள் ஓரிடத்தில் நின்று கடலையும் கொள்ளிடத்தையும் நோக்கினாள். விஜயகுமாரன் பின்புறமாக வந்து அவளை வளைத்து வலுவுடன் அணைத்தான். அவள் ஏதும் பேச வில்லை. அவன் பேசினான் அவள் காதுக்கருகில், ''கோட்டையை உடைக்கப் போகிறேன்'' என்று.

அதற்கும் பதில் சொல்லவில்லை அவள். ''அதோ பார் கொள்ளிடத்தையும் கடலையும். கடல் வழி வகுத்துக் கொண்டது வீரகாவியம். கொள்ளிடம் இடங்கொடுத்தது காதல் காவியம். இரண்டும் கலப்பதில் விளைந்திருக்கிறது இன்ப வெள்ளம். இயற்கையின் வெள்ளம் அது. கரையை அலட்சியம் செய்வது, விளைவுகளை அறியாதது. ஆனால் கடவுள் அளித்தது'' என்று அவள் காதுக்கு அருகில் காவியம் பேசினான்.

அவள் இதயமும் அந்தக் கதையைத்தான் சொல்லிக் கொண்டிருந்தது. மெள்ள மெள்ள நிலை அத்துமீறிக் கொண்டு இருந்தது. இருவர் உள்ளத்திலும் எழுந்த எச்சரிக்கைக் கூச்சல்கள் அடங்கத் தொடங்கின. துணிவு தலையெடுத்தது.

26. காதலி ஓட்டம்

கைகளில் வளைந்த வஞ்சி, காரிருள் அளித்த காப்பு, கடலலைகளின் கூச்சலளித்த வேகம், கொள்ளிட நீரைத் தொட்டுக் கொஞ்சி வந்த தென்றல், அவள் கூந்தலின் வாசமலரைத் தழுவியளித்த போதை, இயற்கையாகவே அவள் உடலில் கமழ்ந்த சுகந்தம் தந்த மயக்கம், நாண மெனும் கரையுடைந்ததால் எதற்கும் தயாராயிருந்த மனம் - இத்தனையும் அந்த ஆண்மகனுக்குத் துணிவை அளித்தும், இச்சையின் பூர்த்திக்குச் செல்ல, துளிர்த்த துணிவின் பூர்த்தியை எட்ட, அவனுக்கு ஏனோ மனம் வரவில்லை!

இத்தனைக்கும் காவற் கூண்டுகளில் மட்டுந்தான் வீரர்கள் இருந்தார்கள். காவற் கூண்டுகளும் நீளமும் அகலமுமான கோட்டைச் சுவர்களின் இடையே நல்ல தூரத்தில் தான் இருந்தன; எதிர்க்கரையில் பிரிட்டிஷ் படையிருந்ததால் பந்தங்கள் கூண்டுகளைத் தவிர வேறு எதுவும் கிடையாது. அப்படியிருந்தும் ஏன் தயங்கினான் விஜயகுமாரன்? கைகளில் விலகி அவன் தோள்களில் மட்டும் பதிவானேன்? அவன் உடல் ஏன் திடீரெனக் கெட்டிப்பட்டு விட்டது? இந்தக் கேள்விகளை நந்தினி கேட்கவில்லை, ஆனால் அநுபவித்தாள்.

தன்னையும் காதற்கடலில் அழுத்தி அவனும் அழுந்த முற்பட்ட நிலையில், ஏன் அப்படி ஓர் இடையூறு வந்தது என்பது விளங்காத நந்தினி ஏக்கப் பெருமூச்சு விட்டாள். விஜயகுமாரன் அவள் ஏக்கத்தை உணர்ந்த பின்பும் உணர்ச்சிகளைக் கொட்டினானில்லை. ஆகவே, ஏதும் பேசாமல் தன் கைகளை அகற்றிச் சரிந்துவிட்ட அவள் மேலாடையைத் தன் கைகளாலேயே எடுத்து அவள்மீது போர்த்தினான் மிக மெதுவாக. அவள் இதயம் படபடத்தது. அவள் பின்னால் மீண்டும் அவன் உடல் ஒரு முறை பலமாக அழுந்தியது. அந்த நிலையில் அவள் காதுக்கருகில் சொன்னான் விஜயகுமாரன், ''நேரமாகி விட்டது நந்தினி'' என்று மிக மெதுவாக.

அவள் உதடுகளிலிருந்து பதிலேதும் உதிரவில்லை பல விநாடிகள்.

பிறகு உதிர்ந்ததும் ஒரு 'உம்'; அதுவும் நீண்டிருந்தது.

www.thamizhthenee.blogspot.com

''நந்தினி!'' இதைக் காதுக்கருகில் சொன்ன விஜயகுமாரன் அவள் கழுத்தில் இதழ்களை ஆழப் புதைத்தான் ஒருமுறை. மீண்டும் அழைத்தான் ஒருமுறை, ''நந்தினி! உன்னைத்தான்'' என்று.

அந்த 'உன்னைத்தான்' அவளை எழுப்பியிருக்க வேண்டும். ''என்ன எனக்கு?'' என்று உதிர்ந்த சொற்களில் வேகம் இருந்தது, வேகமளித்த சீற்றமும் இருந்தது.

விஜயகுமாரன் கைகள் அவள் தோள்களை நெரித்தன. ''இன்னும் சந்தேகமா?'' என்று சொற்கள் உதடுகளிலிருந்து உதிர்ந்தன ஆசையுடன்.

''எதைப்பற்றி?'' நந்தினியின் குரலில் சீற்றம் இருந்தது.

''என் ஆசையைப்பற்றி...''

''இல்லை. சந்தேகம் இல்லை. அதற்காகத் தோளை முறிக்க வேண்டாம். எடுங்கள் கையை.'' நந்தினியின் சொற்கள் கடுமையுடன் உதிர்ந்தன.

''நீ என்னைப் புரிந்து கொள்ளவில்லை நந்தினி'' என்று கெஞ்சினான் விஜயகுமாரன், தோள்களிலிருந்த கைகளை எடுக்காமலே.

ஆனால் அந்தக் கைகளை அவள் தன் கைகளால் பிடுங்கி எறிந்தாள். ''நன்றாகப் புரிந்து கொண்டேன்'' என்றும் கூறினாள் சற்று விலகி நின்று, அவனை நோக்கித் திரும்பி.

''என்ன புரிந்து கொண்டாய்?'' என்று வினவினான் விஜயகுமாரன் சோகக் குரலில்.

அந்த வாள் மகளின் கண்கள் நன்றாகச் சாணை பிடிக்கப் பட்ட வாள்களின் நுனிகளைவிடக் கூர்மையுடன் அந்த இருட்டில் பளபளத்தன. ''சொல்லட்டுமா?'' என்று கேட்ட அவள் குரலில் பழைய இன்ப கீதம் இல்லை. புலியின் உறுமல் இருந்தது. அடிபட்ட பெண் வேங்கை போல் இருந்தாள் அவள்.

''சொல்'' என்றான் விஜயகுமாரன்.

''பெண்களைத் தழுவிக் கைவிடும் கயவன் நீ'' என்றாள் அவள், தயை, தாட்சண்யம், காதல் அனைத்தையும் கைவிட்டு.

''இல்லை நந்தினி!''

''வேறு என்ன?''

''பெண்ணின் தனிமையைப் பயன்படுத்தாதவன்.''

''இத்தனை நேரம் செய்ததெல்லாம் என்ன?''

''அப்படி ஏதும் தவறு ஏற்படவில்லையே?''

''பெண்ணைத் தொடுவது தவறல்லவா? பின் நின்று தழுவுவது தவறல்லவா?''

இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாத விஜயகுமாரன் திணறினான். ஆனால் அவள் தொடர்ந்து

பேசினாள்: ''என்னை அடைய நீ இஷ்டப்படாததன் காரணம் தெரியும் எனக்கு. என்னைக் குழந்தையென்று நினைக்காதே.''

விஜயகுமாரன் அவள் பேச்சினால் நிதானத்தை இழந்தான். ''என்ன காரணம் தெரியும் உனக்கு?''

''நீ என்னை வேண்டாத காரணம்...என் தந்தை'' என்றாள் நந்தினி.

இந்தப் புதிய அஸ்திரம் அவன் இதயத்தில் வேகமாகப் பாய்ந்தது. புத்தியைக் கூடக் குழப்பியது. ' நீ சொல்வது எனக்குப் புரியவில்லை'' என்றான் விஜயகுமாரன் குழப்பத்துடன்.

''என் தந்தை, அவர் தந்தைக்கு ஒழுங்காகப் பிறந்தவரல்ல'' என்ற நந்தினி அவனைக் கூர்ந்து நோக்கினாள்.

''உன் தாய்தான் அவர் வாளுக்கு மாலையிட்டாளே! க்ஷத்திரிய தர்மப்படி அது விவாகம்தானே?''

''அது ராஜபுத்திரர் வழக்கம். மராட்டியர் பழக்கமல்ல.''

''அதனால்?''

''துக்காஜி என் தந்தையின் மனைவியைச் சேர்த்துக் கொண்டதாகச் சொல்கிறார்கள். அவர் ஆசைநாயகியாகக் கருதுகிறார்கள். ஆகவே என் தந்தை அவர் தந்தையின் வைப்பாட்டி மகன்.''*

இந்தச் செய்தி விஜயகுமாரனுக்குப் புதிதல்ல வென்றாலும் நந்தினி தன் போக்குக்கு அதை ஒரு காரணமாகக் காட்டியதும், அவள் தன் பிறப்பைப்பற்றிச் சொன்ன விதமும் அவன் இதயத்தைச் சம்மட்டி கொண்டு தாக்கின. அதனால் அவன் கூறினான், ''அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. இது எனக்குத் தெரியாத விஷயமுமல்ல'' என்று இறுக்கிப் பிடித்தான்.

அவள் திமிறினாள். ''திமிறினால் நொறுக்கி விடுவேன்'' என்று இரைந்த அவன் தன் கைகளால் அவளை அளவுக்குமீறியே நெரித்தான். ''இதோ பார் நந்தினி! உன் தகப்பன் யார் என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. எதிர்க்கரையிலிருக்கும் காட்டு ராஜாவைப் போல் அவன் குப்பியின் மகனாயிருந்தாலும் இருக்கட்டும். சாதி காதலைத் தடுக்காது. என் விஷயத்தில் திருமணத்தையும் தடுக்காது...'' என்று சீறிக்கொண்டு சொற்களை வாரிக் கொட்டிய அவனை நோக்கி நந்தினி கேட்டாள், ''இப்போது தடுப்பது என்ன?'' என்று.

---

* துக்காஜி ராஜாவுக்கு விவாகங்கள் நடந்தன. இதைத் தவிர அபிமானத்தால் சேர்த்துக்கொள்ளப்பட்டஅறுவரில் மராட்டியப் பெண்ணும் ஒருத்தி. கத்தி வைத்து விவாகம் செய்து கொண்ட அந்த மராட்டியப் பெண்ணான அன்னபூர்ணாபாயிடம் சகம் 1664-சர்வதாரி வருஷத்தில் பிரதாப சிம்மராஜா பிறந்தார்.
Bhonsle Vamsa Charita- Tanjore Saraswati Mahal Series No. 46- Marathi Inscription in Big Temple Tanjore-Tamil Version-Page 46.

''என் சபதம். எதிரேயுள்ள போர். இதில் எதை நிறை வேற்றுவதில் நான் மடிந்தாலும், சந்தர்ப்பம் கிடைத்தும் உன்னைக் கெடுக்கவில்லையென்ற சந்துஷ்டியுடன் நான் மடிய வேண்டும். ஆனால் இவையனைத்திலும் நான் பிழைத்து விட்டால் உன்னை நோக்கி வருவேன். உன் தந்தை மறுத்தாலும் உன்னைத் தூக்கிச் சென்று மணம் புரிவேன். இது சத்தியம், சத்தியம்'' என்று ஆவேசத்துடன் இரைந்த அவன், அவள் கன்னத்தில் இதழ்களை ஆழப் புதைத்தான். பிறகு கழுத்திலும் புதைத்தான். பிறகு அவளை விலக்கி நின்று, ''நீ செல்லலாம்'' என்று உத்தரவும் இட்டான்.

அவள் செல்லவில்லை, வேறு எதுவும் சொல்லவும் இல்லை. நகைக்க மட்டும் செய்தாள்.

''ஏன் நகைக்கிறாய்?'' என்றான் கடுமையுடன் விஜய குமாரன்.

''நீங்கள் என்னைக் கெடுக்கவில்லை?''

''இல்லை.''

''இப்பொழுது நீங்கள் செய்தது...''

''உம்...?''

''வேகமா, மோகமா?'' நந்தினி அதைச் சொல்லி மீண்டும் நகைத்தாள். பிறகு விடுவிடுவென்று கோட்டை மதிள் தாழ்வரையில் நடந்து சென்று கீழே சென்ற படிகளில் தடதடவென ஓடினாள்.

விஜயகுமாரன் அவளைத் தொடராமல் நின்ற இடத்திலேயே நின்றான். அவள் படிகளில் இறங்கியோடிக் கண்ணுக்கு மறைந்ததும் பெருமூச்சொன்றை விட்டான். பிறகு அந்தத் தாழ்வரையில் இரண்டு கூண்டுகளுக்கு இடையில் இருந்த இடைவெளியில் நடந்தான் அங்குமிங்குமாக. கடைசியில் கடலை நோக்கினான். கோட்டையின் வடபுறத்தில் அக்கரையிலிருந்த பிரிட்டிஷ் படையை நோக்கினான். 'எதிரி இன்னும் இரண்டு நாட்களுக்குத் தாக்க மாட்டானென்று முராரி ராவுக்கு எப்படித் தெரியும்?' என்று தன்னைத்தானே வினவிக்கொண்டான். அவன் எண்ணங்களில் பகிர்ந்து கொள்ள இஷ்டப்படுபவர் போல் அந்தச் சமயத்தில் தளபதி மானாஜியும் படிகளில் மெள்ள ஏறி வந்தார்.

படிகளில் ஏறிக் கோட்டைச் சுவரின் அகல பீடத்தை அடைந்ததும் மானாஜி சற்று நின்று விஜயகுமாரனைப் பார்த்தார். பிறகு அவனை மெள்ள அணுகி, ''உப தளபதி தீவிர சிந்தனையில் இருப்பதாகத் தெரிகிறது'' என்றார்.

அவரது கரகரத்த குரலைக் கேட்டதும் சுயநிலைக்கு வந்த விஜயகுமாரன், ''தளபதியவர்கள் சொல்லியனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேனே'' என்றான் பணிவுடன்.

மானாஜியின் வளைந்த மேலெழுந்த முரட்டு மீசை சற்று அசைந்தது. கண்கள் விஷமத்தைக் கொட்டின. ''வந்திருக்க மாட்டாய்'' என்ற அவர் சொல்லிலும் விஷமம் ஒலித்தது.

''தங்கள் உத்தரவை மீறக் கூடியவனா நான்?'' என்று விஜயகுமாரன் வினவினான்.

''உத்தரவை மீற மாட்டாய். ஆனால்...''

''ஆனால்?''

''அதற்குப் பணிய நேரமாகும். அது குற்றம் இல்லை.''

''குற்றமில்லையா?''

''இல்லை''

''ஏனோ?''

''தளபதியைவிட அரசகுமாரியின் பதவி உயர்ந்தது.''

''என்ன சொல்கிறீர்கள்?''

''அரசகுமாரி ஓர் உத்தரவிட்டு நானும் ஓர் உத்தரவை இட்டால், முதலில் நீங்கள் படியக் கூடியது அரசகுமாரியின் உத்தரவுக்கு'' என்று கூறினார் மானாஜி சர்வசகஜமாக.

''அரசகுமாரி எனக்கு என்ன உத்தரவிட முடியும்?'' என்று வினவினான் விஜயகுமாரன் சந்தேகத்துடன்.

''அது எனக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்ட மானாஜி, ''ஆனால் அரசகுமாரியின் உத்தரவுக்கு நீங்கள் படியவில்லையென்பது தெரிகிறது'' என்றும் தெரிவித்தார்.

''அது எப்படித் தெரியும் உங்களுக்கு?'' என்று வினவினான் விஜயகுமாரன்.

''அரசகுமாரி படிகளில் இறங்கிக் கோபத்துடன் ஓடிக் கொண்டிருக்கிறாள், என்மீது இடித்தும் விட்டாள். அதனால் பாதகமில்லை. எனக்கு வயதாகிவிட்டது'' என்ற மானாஜி தமது மேலுதட்டை நன்றாக விலக்கி வெள்ளை வெளேரென்ற தந்தங்களைக் காட்டிச் சிரித்தார்.

விஜயகுமாரன் பொறுமை இழந்தான். ''தளபதி!'' என்று ஆத்திரத்துடன் அழைத்தான். ''அரசகுமாரி மீது நீங்கள் மோதியது தவறு.''

மானாஜி முகத்தில் ஒரு விநாடி சிந்தனைச் சாயை படர்ந்து மறைந்தது. பிறகு, ''மகிழ்ச்சி'' என்றார் புன்முறுவல் கொண்டு.

''எதற்கு மகிழ்ச்சி?'' என்று கேட்டான் விஜயகுமாரன்.

''அவள் உடலின் மென்மையை நீ அறிந்து கொண்டதற்கு'' என்றார் மானாஜி.

''நான் அறிந்து கொள்ளவில்லை'' உளறினான் விஜயகுமாரன்.

''ஊகித்திருப்பாய்?''

''ஆம்.''

"ஊகத்துக்கு நீண்டநேரம் பிடித்திருக்கிறது. இடமும் மாற வேண்டியிருக்கிறது."

"என்ன சொல்கிறீர்கள்?"

"முதலில் புதர், பிறகு கோட்டைச்சுவர்..."

"தளபதி!"

"இங்கே பல நாழிகைகள்..."

"தளபதி!"

"பிறகு காதலி ஓட்டம், கதாநாயகன் திண்டாட்டம்."

இதைச் சொன்ன மானாஜி பிறகு விஜயகுமாரனைக் கவனிக்காமல் வானத்தைக் கவனித்தார். "பாதி இரவு ஓடிவிட்டது. எனக்குத் தூக்கம் வருகிறது" என்றார்.

"தூங்குங்களேன்."

"அதற்கு முன்பு உன்னிடம் இதைக் கொடுக்க வேண்டியிருக்கிறது" என்று ஓலையை எடுத்துக் கொடுத்தார் விஜயகுமாரனிடம்.

"இங்கு இருட்டாயிருக்கிறதே!" என்றான் விஜயகுமாரன்.

"வா, என் அறைக்குச் செல்லுவோம்" என்று கூறி அவனைத் தமது அறைக்கு அழைத்துச் சென்றார் மானாஜி.

மானாஜியின் அறையிலிருந்த விளக்கில் ஓலையைப் படித்த விஜயகுமாரன், "முடியாது. இது நடவாது" என்றான்.

"ஏன்?" என்று வினவினார் மானாஜி.

"எதிரியை அழிக்க இது வழியல்ல" என்றான் விஜயகுமாரன திட்டவட்டமாக.

"இது மன்னரின் ஆணை" என்றார் மானாஜி.

"தேவையான போது அதை மீறுவது, மன்னர் நன்மையை முன்னிட்டே மீறுவது குற்றமாகாது" என்றான் விஜயகுமாரன்.

"வேறு வழி இருக்கிறதா?" என்று கேட்டார். மானாஜி.

"இருக்கிறது."

"சொல்."

சொன்னான் விஜயகுமாரன். பல போர்களைக் கண்ட மானாஜி கூட வியப்பாலும் பிரமிப்பாலும் வாயைப் பிளந்து கொண்டு நின்றார்.

27. போர்த் துவக்கம்

தஞ்சை மன்னர் பிரதாபசிம்மனின் ஆணைக் கடிதத்தை, அதாவது, அந்தக் காலத்து மொழி வழக்கப்படி மன்னரின் திருவோலையைப் படித்தபின்பு அதன்படி நடப்பது சாத்தியமில்லையென்று விஜயகுமாரன் சொன்னதும்,

வியப்படைந்த மானாஜி அவசியமானால் அரசர் உத்தரவை மீறுவதும் தவறாகதென்று அவன் கூறியதைக் கேட்டதும் திக்பிரமை அடைந்த விழிகளை அவன்மீது திருப்பினாரென்றால், எதிரியை முறியடிக்கும் வழியை அவன் விளக்கியதும் அவர் பிரமிப்புப் பன்மடங்கு அதிகமாகவே அவர் ஏதும் பேசாமல் சில விநாடிகள் நின்றார்.

நள்ளிரவாகியதால் தனக்குத் தூக்கம் வருகிறதென்று கோட்டை மதிளின் மேல்தாழ்வரையில் அவர் பேசின ஹாஸ்யப் பேச்சுக்கூட அவரிடமிருந்து மறைந்திருக்க வேண்டும் என்பதை, அவர் முகத்திலிருந்த பிரமிப்பும், அவர் சில விநாடிகளுக்கு மேற்கொண்ட மௌன விரதமும் நிரூபித்தன. கடைசியாக அவர் கேட்ட கேள்வியில் விஜயகுமாரன் திட்டத்தை ஒப்புக் கொள்ளக்கூடிய தோரணையும் இருந்தது. "அப்படியானால் மன்னர் உத்தரவில் சாரமில்லையென்று சொல்கிறாயா?"

"அப்படிச் சொல்லவில்லை தளபதி. இது பழைய போர் முறை. இதிலும் நாம் வெற்றிகொள்ளலாம். ஆனால் நமது வீரர்களில் பலரைக் காவு கொடுத்துத்தான் வெற்றி கொள்ள வேண்டும்" என்று சுட்டிக் காட்டினான் விஜயகுமாரன்.

"ஏன்?" வினவினார் மானாஜி.

"எதிர்க்கரையில் எதிரிகள் இருக்கிறார்கள்--" விஜயகுமாரன் தொடங்கினான்.

"ஆம்."

"எதிரியை முன் சென்று தாக்கும்படி மன்னர் அந்த ஓலையில் குறிப்பிட்டிருக்கிறார்."

"ஆம்."

"அப்படித் தாக்க வேண்டுமானால் கொள்ளிடத்தை நாம் கடந்து, இந்தத் தீவின் பாதுகாப்பை விட்டுச் செல்ல வேண்டும்."

அப்படி முக்கால்வாசிக் கொள்ளிடத்தைத் தாண்டியதும் எதிரி நம்மீது பீரங்களைப் பிரயோகிப்பான். துப்பாக்கிகளால் சுடுவான். நீரிலிருந்து நாம் போராட வேண்டும். கொள்ளிட நீர், மாலை அலைகளில் பெருகினால் அலை வேகம் புரவிகளை முன்னும் பின்னும் தள்ளும். மாட்ச்லாக்குகளை நாம் கையிலெடுப்பதற்குள் நிலத்தில் திடமாக நின்றிருக்கும் எதிரி நம்மைத் தீர்த்துவிடுவான்."

இப்படி விஜயகுமாரன் விவரித்ததைக் கேட்ட மானாஜி மீண்டும் சிந்தனையிலாழ்ந்தார். "எதிரியை எதிர்க்கரையில் அதிக நாள் தங்கவிட்டு அவன் பலத்தை விருத்தி செய்து கொள்ள வசதியளிப்பது சரியாகுமா?" என்றார் முடிவில்.

"தவறாகாது. ஏனென்றால் அதிக நாள் எதிர்க்கரையில் எதிரி தாமதிக்கமாட்டான். மிஞ்சினால் இன்னும் நான்கு

நாட்களுக்குள் ஆற்றில் இறங்கிக் கோட்டையை நோக்கி வருவான்'' என்று விஜயகுமாரன் மேலும் விளக்கினான்.

''எதிரிக்கு உணவுப் பொருள்களோ, தளவாடங்களோ எல்லாம் ஸெய்ன்ட் டேவிட் கோட்டையிலிருந்து வரவேண்டும். தரை மார்க்கத்தில் வர நாளாகும். ஆகவே கடல் மார்க்கத்தில் தான் வர வேண்டும். அப்படி வந்த கப்பல்கள் ஏற்கனவே அடித்த சூறாவளியில் அமிழ்ந்து விட்டன. மீண்டும் துரிதமாக அவர்களுக்கு ஆயுதவசதிகள் வேறு கப்பல்களில் வர வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டு போன விஜயகுமாரனை இடைமறித்த மானாஜி, ''அதற்குள் அவர்களை நாம் தாக்கிவிடுவது நல்லதல்லவா?'' என்று கேட்டார்.

''அல்ல. பறங்கிப் பேட்டையை விட்டால் கப்பல்களுக்கு அடுத்த துறைமுகம் தேவிக்கோட்டைதான். ஆகவே எதிரி அதிக ஆயுத வசதிகளையும் உணவு வசதிகளையும் பெறத் துறைமுகத்துக்கு வந்தாக வேண்டும்; துறைமுகத்துக்கு வர தேவிக்கோட்டைக்கு வந்தாக வேண்டும். தேவிக்கோட்டைக்கு வரக் கொள்ளிடத்தை ஏதாவது ஓர் இடத்தில் கடக்க வேண்டும்...'' என்று சுட்டிக் காட்டினான் விஜயகுமாரன்.

ஒப்புக்கொண்டதற்கு அறிகுறியாகத் தமது தலையை அசைத்தார் மானாஜி. அந்தச் சமயத்தில் அவர்கள் இருவரும் ஒரு பெரும் பவர் விளக்கின் அடியில் நின்று கொண்டிருந்தார்கள். தங்கள் தலைக்கு மேலிருந்த விளக்கைச் சுட்டிக் காட்டிய விஜயகுமாரன், ''இந்த விளக்கைப் பாருங்கள்'' என்றான் தளபதியை நோக்கி.

தளபதி தலையை உயர்த்திப் பார்த்தார். ''நன்றாக இருக்கிறது'' என்றார் விஷமமாக.

''இது வெள்ளைக்காரர் விளக்கு. உண்மையில் பிரிட்டிஷார் உபயோகப்படுத்தும் விளக்கு. சிம்னி எண்ணெயில் எரிகிறது. அதை நாம் உபயோகப்படுத்துகிறோம். பழைய கடலை எண்ணெய் விளக்கை மாற்றிவிட்டோம்'' என்ற விஜயகுமாரன் சொற்களிலும் விஷமம் இருந்தது.

''ஆம். மாற்றிவிட்டடோம்.''

''மாறுதல் காலத்தின் இயல்பு.''

''உண்மை.''

''அதை எதிர்ப்பவன் கால வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகப்படுகிறான்.''

''ஆம். ஆம்.''

மானாஜியின் ஒப்புதலைக் கேட்டதும் பணிவுடன் கூறினான் விஜயகுமாரன். ''தளபதியவர்களைவிட நான் வயதில் சிறியவன். தளபதிக்கு யோசனை சொல்வது தவறு. ஆனால்

காலத்தின் போக்குப்படி போர்முறைகளை நாம் மாற்றிக் கொள்ளத் தான் வேண்டியிருக்கிறது. எதிரியை முன்னேறித் தாக்குவது பழைய போர் முறை. நாம் இருக்கும் நிலையில் நாம் கொள்ளிட நீரில் இறங்குவதைவிட அவனை இறங்கச் செய்வது நல்லது. காலத்திற்கேற்றபடி போர்முறையை மாற்றிக் கொள்கிறோம்.''

''நல்லது, சொல் மேலே'' என்றார் மானாஜி.

''எதிரி கொள்ளிடத்தில் இறங்கி வரட்டும். இந்தக் கரைக்கே வரட்டும்.''

''தேவிக் கோட்டையை அணுகட்டும் என்கிறாய்.''

''ஆம். அணுகித் தானாக வேண்டும். கப்பல்களை எதிர்பார்க்க.''

''சரி.''

''அவனை இந்தத் தீவின் இக்கரைக்கு வந்ததும் நாம் அவனை வளைத்துக் கொள்வோம். கோட்டையின் மேற்புறத்திலிருக்கும் காடுகளிலிருந்து.''

''அப்படியா?''

''நமது வில்வாளிகள் விஷ அம்புகளைப் புதரின் மறைவிலிருந்து எய்வார்கள் எதிரிமீது. மாட்ச் லாக் துப்பாக்கிகளும் சீறும்.''

''அவர்கள் பீரங்கிகள் சும்மாயிருக்குமா?''

''அவையும் சீறும். அதன் வீச்சிலிருந்து விலகி நிற்போம். அவசியம் வரும்போது நமது சூறாவளிப் புரவிப் படை வெகு வேகத்துடன் எதிரிமீது பாயும்.''

இதற்குப் பிறகு மீண்டும் மோனநிலையை எய்தினார் தஞ்சைத் தளபதி. ''தேவிக்கோட்டைக்குக் குறுக்கேயும் ஒரு சிற்றாறு ஓடுகிறது...'' என்றார் சிறிது நேரத்திற்குப் பிறகு.

''நாம் புதர்களிலிருந்து தாக்கினால் எதிரி அதைக் கடந்து கடற்கரைப் பக்கம் போக வேண்டியிருக்கும். அனுமதிப்போம்''.

''அனுமதித்தால்...''

''அங்கு எதிர்ப்புறத்தில் கோட்டையின் பீரங்கிகள் இருக்கின்றன. அவற்றுக்குப் பயந்து திரும்பினால் மாலை வந்துவிடும். சிற்றாற்று நீரும் கொள்ளிட நீரும் மாலைக் கடலலைகளில் பெருகி விடும். நீர்வேகம் அவர்களை அழிக்காவிட்டால் சிற்றாற்றின் எதிர்க்கரையில் நிற்கும் என் புரவிப் படை அவர்களைக் கரை ஏற வொட்டாது.''

''எதிரி வீரர்கள் அடியோடு அழிந்து போவார்கள். பயங்கர அழிவு'' என்றார் மானாஜி.

''போரே அழிவுக்காகத்தான் தளபதி?'' என்றான் விஜய குமாரன்.

மானாஜி ஏதோ யோசித்தார். பிறகு, ''இந்தப் போர் முறை...'' என்று கூறித் தலையை இருபுறமும் அசைத்துக் கொண்டார். திடீரென அவர் கண்கள் பளிச்சிட்டன. பளிச்சிட்ட கண்கள் விஜயகுமாரனை நோக்கவும் செய்தன.

விஜயகுமாரன் கண்கள் அந்தக் கண்களைக் தைரியமாகவே சந்தித்தன. ''நான் வகுத்ததல்ல'' என்று அவன் உதடுகளிலிருந்து உதிர்ந்த சொற்களிலும் வெட்கமும் இல்லை, அதைரியமும் இல்லை.

சட்டென்று வினவினார் மானாஜி. 'முராரிராவ் இங்கு எப்பொழுது வந்தான்?'' என்று

''இன்று மாலை''என்று பணிவுடன் கூறினான் விஜய குமாரன்.

''உனக்கு எப்பொழுது இந்தப் போர் போதனையைச் செய் தான்?''

''சில நாழிகைகளுக்கு முன்பு.''

''இது வேறு யாருக்காவது தெரியுமா?''

''தெரியும். அரசகுமாரிக்கு அவர் வந்தது தெரியும். போர்த் திட்டம் தெரியாது.''

''ஏன்? அரசகுமாரியை அனுப்பிவிட்டு உன்னுடன் பேசினானா?''

''ஆம்.''

''முராரிராவுக்கு நேரிடைப் போர் பழக்கம் இல்லை. தந்திரக் காரன்'' என்றார் மானாஜி வெறுப்புடன்.

''பிரிட்டிஷ்காரர்களும் தந்திரக்காரர்கள். தந்திரத்தைத் தந்திரத்தால்தான் ஜெயிக்க முடியும்'' என்றான் விஜயகுமாரன்.

மானாஜி அதற்குமேல் பேசவும் இல்லை, கேள்வி கேட்கவும் இல்லை. ''நாளை பேசுவோம். நீ போய்ப் படுத்துக் கொள்'' என்று கூறிவிட்டுப் பெரிய ஆலோசனை முடிந்து விட்டதற்கு அறிகுறியாகத் தமது கையை அசைத்தார்.

அத்துடன் தளபதியின் அறையைவிட்டு வெளியேறிய விஜயகுமாரன் உறங்கச் செல்லவில்லை. கோட்டையின் பல பகுதி களைச் சுற்றி வந்து காவலைப் பரிசோதித்தான். நீண்ட நேரம் எதிர்க் கரையைப் பார்த்துக் கொண்டிருந்தான். தானே ஏதோ முணுமுணுத்துக் கொண்டான். விடிய சிறிது நேரம் இருக்கும் சமயத்தில் உறங்கச் சென்றவன் மறுநாட் காலை சூரியோதயமாகி நான்கு நாழிகைக்குப் பிறகே எழுந்திருந்தான்.

எழுந்ததும் தனது புரவியை அவிழ்த்துச் சேணம் போட்டு அதன் மீதேறிக் கோட்டைக்கு மேற்புறமிருந்த அடவிக்குள் நுழைந்தான். அங்கு இருக்கும் நிலையைச் சுற்றிப் பார்த்துவிட்டு

கோட்டைக்குத் திரும்பியபோது அவனை வரவேற்கக் கோட்டை வாசலில் மற்றுமிரு தளபதிகளுடன் மானாஜி காத்திருந்தார். விஜயகுமாரனைப் பார்த்தவுடன் தமது புரவியைச் சற்று முன்பு நகர்த்திய மானாஜி, ''விஜயகுமாரா! இந்த இரு உப தளபதிகளும் இனி உன் சொற்படி கேட்பார்கள். இந்தக் கோட்டை உண்மையில் உன்னுடையது. இந்தப் போரை உன்னிஷ்டப்படி நடத்தலாம்'' என்று கூறிவிட்டுத் தமது புரவியை நடத்திக் கொண்டு கடற்புறம் சென்றார்.

அவருடன் புரவிகளில் அமர்ந்திருந்த உபதளபதிகள் விஜய குமாரனை நோக்கித் தலை வணங்கினார்கள். சிறிதும் தயக்கமின்றியும் அரை விநாடிகூடத் தாமதமின்றியும் தலைமையேற்ற விஜயகுமாரன் உப தளபதிகளை நோக்கி, ''உங்களில் ஒருவர் அக்கரையிலுள்ள எதிரிகளைக் கவனியுங்கள்; இன்னொருவர் நமது புரவிப் படையைக் காட்டுக்குள் நிறுத்துங்கள். புதர்களில் நமது வில்வீரர்கள் மறைந்திருக்கட்டும்'' என்று உத்தரவுகளை மடமடவெனப் பிறப்பித்தான்.

பிறகு கோட்டைக்குள் சென்று தனது அறையில் உணவருந்தினான். பிறகு தனது கட்டிலில் உட்கார்ந்து ஒரு பெரிய நாட்டுப் படத்தை விரித்துப் பார்த்துக் கொண்டே பல இடங்களைப் பக்கத்திலிருந்த கோழி இறகுப் போனாவை மையில் தோய்த்துச் சுழித்தான். பிறகு மன நிம்மதியுடன் படத்தை மடித்துவைத்து விட்டுப் படுக்கையில் மல்லாந்து விழுந்தான். பிற்பகலில் ஏதோ ஒரு கடிதத்தை எழுதி ஒரு வேலைக்காரனிடம் அதை அனுப்பினான். அது சென்ற ஒரு நாழிகைக்கெல்லாம் சூறாவளியொன்று அவன் அறைக்குள் புகுந்தது. ''இந்தக் கடிதத்தை எழுத உங்களுக்கு என்ன துணிச்சல்?'' என்று அந்தச் சூறாவளி சீறவும் செய்தது. அதன் அழகிய காலொன்று தரையில் உதைத்த போது கலீரென்ற தண்டை கூட ராஜ பேரிகைபோல் முழங்கியது.

''இன்னும் நான்கு நாட்களில் போரை எதிர்பார்க்கிறேன்'' என்றான் விஜயகுமாரன் எதிரே கனல் கக்கும் விழிகளுடன் நின்ற அரசகுமாரியை நோக்கி.

''அதனால்...''

''பெண்கள் இங்கு இருப்பதில் ஆபத்திருக்கிறது.''

''அது எனக்குத் தெரியும்.''

''போர் சமயத்தில் பெண்கள் இங்கிருப்பது உசிதமல்ல.''

''அதனால்?''

''உங்களை மீண்டும் தஞ்சைக்கு அனுப்பத் தீர்மானித்தேன்.''

''போகாவிட்டால் என்ன செய்வீர்கள்?''

''நந்தினி...''

''கொஞ்ச வேண்டாம்... சொல்லுங்கள், என்ன செய்வீர்கள்? உத்தரவை மீறியதற்குச் சிறை செய்வீர்களா?''

''உன்னை எப்படிச் சிறை செய்யமுடியும் நந்தினி?''

''தாங்கள் இக்கோட்டையின் உபதளபதியாயிற்றே!''

''இருக்கலாம். ஆனால் நீ அரசகுமாரி, யார் உத்தரவையும் மாற்றலாம்.''

''மாற்றுகிறேன்'' என்று சீறிய அரசகுமாரி மிகுந்த கோபத்துடன் அந்த அறையிலிருந்து வெளியேறினாள்.

அடுத்த இரண்டு மூன்று நாட்கள் அவள் கண்களில் படவில்லை. கோட்டையை விட்டுப் போகவும் இல்லை என்பதையும் புரிந்து கொண்டான் விஜயகுமாரன்.

அடுத்த நான்கு நாட்கள் கழித்து அக்கரையிலிருந்த எதிரிகள் நடமாட்டம் அதிகரித்தது.

எதிரி வீரர்கள் பீரங்கிகளையும் இதர தளவாடங்களையும் சின்னஞ்சிறு தோணிகளில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். கொள்ளிடத்தைக் கடக்கப் பலவித ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார்கள். விஜயகுமாரன் கோட்டை மதிள்மீது நின்றபடி எதிர்க்கரையில் நடந்த அனைத்தையும் கவனித்தான். காப்டன் கோப்பும் லெப்டினண்ட் கிளைவும் அக்கரையில் நிற்பதைக்கூட அவனால் பார்க்க முடிந்தது. அவர்கள் சைகைகளிலிருந்து அவர்களுக்குப் புது உதவி வந்து விட்டது என்பதை விஜயகுமாரன் உணர்ந்து கொண்டான்.

உண்மையில் புது உதவி வந்துதான் இருந்தது. கிளைவின் விருப்பப்படி அதிகப்படியாகவே நூறு வெள்ளைக்கார சோல்ஜர்களையும் ஐந்நூறு சிப்பாய்களையும் கவர்னர் அனுப்பியிருந்தார். அவர்கள் வந்தவுடன் காப்டன் கோப் சுறுசுறுப்பைக் காட்டினான். கிளைவை நோக்கி, ''லெப்டினண்ட்! இரண்டு நாள் பொறுக்கச் சொன்னாய். நான்கு நாட்கள் பொறுத்துவிட்டோம். உதவியும் வந்து விட்டது. இனி போரில் இறங்க என்ன தடை?'' என்று விசாரித்தான் காப்டன் கோப்.

''தடை ஒன்றுமில்லை, எடை சரியா என்றுதான் யோசனை'' என்றான் கிளைவ்.

''எந்த எடை?''

''எதிரிகளைப்பற்றி நாம் போட்ட எடை.''

''சுதேசிகளைக் கண்டு பயப்படுகிறாயா லெப்டினண்ட்?''

''துப்பாக்கிக் குண்டு பாயும்போது சுதேசி விரோதி என்று அது பார்ப்பது கிடையாது'' என்ற கிளைவ், ''சரி! இனி யோசித்துப் பயனில்லை. படைகள் ஆற்றில் இறங்க உத்தர விடுங்கள்'' என்று கூறினான்.

காப்டன் கோப் கத்தியை உயர்த்தி, ''மார்ச்!'' என்று கூறியவுடன் கொள்ளிடத்தில் தடதடவென்று இறங்கியது வெள்ளையர் படை.

28. தோல்வி

காப்டன் கோப் 'மார்ச்' என்று கூறியவுடன் வெகு துரிதமாக வெள்ளையர் படை கொள்ளிடத்தில் இறங்கிவிட்ட தென்றாலும், ஸெய்ன்ட் டேவிட் கோட்டையிலிருந்து வந்த உதவியால் அது இன்னும் அதிகப் பலம் பெற்றதாயிருந்தாலும் கிளைவுக்குப் பல விஷயங்கள் சந்தேகத்தில் இருந்தன.

பிரிட்டிஷ் படைகளும் சிறு பீரங்கிகளும் எதிரியின் கண்களுக்கு எதிரிலேயே தோணிகளிலும் படகுகளிலும் நதியில் இறங்கிய பின்புகூட எதிரி படையெடுப்பு விஷயத்தில் எந்தவிதச் சிரத்தையும் காட்டாமல் கப்சிப் என்று கம்மா இருந்ததைக் கண்ட கிளைவ், எதிரியின் இத்தனை மௌனத்துக்கும் அசிரத்தைக்கும் காரணம் என்னவாக இருக்குமென்று நினைத்துப் பார்த்தும் விடை கிடைக்க வில்லை அவனுக்கு. ஆகவே தன்னுடன் நின்றிருந்த காப்டனைப் பார்த்து, ''காப்டன்! எதிர்க்கரையில எதிரியின் நடமாட்டமே காணோமே. எல்லாமே திடீரென்று நிசப்தமாகி விட்டதே!'' என்று வினவினான்.

அதற்குக் காப்டன் விடை கூறுமுன்பு சர்வாலங்கார பூஷிதராய் அரச கோலத்தில் நின்றிருந்த காட்டுராஜா குறுக்கே புகுந்து, ''நம்மைக் கண்டு எதிரி நடுங்குகிறான்'' என்றான்.

இதைக் கேட்ட காப்டன் கோப் மிகுந்த வெறுப்புடன் அவரைப் பார்த்தான். ''உங்கள் பிரதாபத்தைக் கேட்க இந்தப் படையெடுப்பை நாங்கள் நடத்தவில்லை'' என்றும் சொன்னான்.

காட்டு ராஜாவுக்கிருந்த உற்சாகத்தில் அந்தக் கடுமையைக் கவனிக்காமலே தமது சொரூபத்தைக் காட்டினார். ''இத்தனை நாளாக எதிர்க் கரையில் நடமாடிக் கொண்டிருந்த எதிரிப் படை திடீரென ஏன் மறைந்துவிட்டது?'' என்று கம்பீரமாகக் கேட்டார்.

''உம்மைக் கண்டு பயந்து விட்டார்கள்'' என்றான் கிளைவ் இகழ்ச்சி நிரம்பிய குரலில்.

''யூ ஆர் ரைட்'' என்று இங்கிலீஷிலும் தமது பரிச்சயத்தைக் காட்டிய காட்டு ராஜா, ''இங்கு நீ ஒருத்தனாவது புத்திசாலியாக இருக்கிறாயே!'' என்று சிலாகித்தார்.

''இருக்கிறேன். அதனால்தான் இத்தனை வெள்ளைக் காரரையும் பலி கொடுக்க வந்திருக்கிறேன்'' என்றான் கிளைவ் இகழ்ச்சி மிதமிஞ்சி ஒலித்த குரலில்.

www.thamizhthenee.blogspot.com

இந்தச் சமயத்தில் காப்டன் கோப் சீற்றத்துடன் திரும்பினான், காட்டு ராஜாவை நோக்கி. ''மகாராஜா, கான் யூ கீப் கொய்ட் ஆர் நாட்?'' என்று வினவினான் சீற்றம் ததும்பிய குரலில்.

காட்டுராஜாவுக்கு அத்தனை ஆங்கிலப் பரிச்சயம் இல்லாததால் மிரள மிரள விழித்தார். ''சற்று நேரம் உம்மால் சும்மா இருக்க முடியுமா முடியாதா என்று கேட்கிறார் காப்டன்'' என்று கிளைவ் விளக்கினான் ஷாஹூஜிக்கு.

இதைக் கேட்ட காட்டு ராஜாவின் கோபம் எல்லை கடந்தது. ''காப்டன்! தஞ்சை மன்னனை மரியாதைக் குறைவாக நடத்துகிறீர்கள்'' என்று இரைந்தார்.

காப்டன் கோப் அதற்கு மேல் பேச்சை வளர்த்த இஷ்டப் படாமல் இரண்டு சோல்ஜர்களை அழைத்து, ''மகாராஜாவைத் தோணியில் ஏற்றுங்கள்'' என்று உத்தர விட்டான்.

காட்டுராஜாவை இரண்டு சோல்ஜர்கள் பலவந்தமாகத் தூக்கித் தோணியொன்றில் ஏற்றினார்கள். அவர் கை கால்களை என்ன உதைத்தும் பயனில்லாமல் போகவே, தோணிக்குச் சோல்ஜர் வாகனத்தில் சென்றபோது, ''விடுங்கள் என்னை. பின்னால் இதற்குப் பெரும் தண்டனை அநுபவிப்பீர்கள்'' என்று கூவினார் பெரிதாக. அவரை அதிகமாகக் கூவவிடாமலிருக்க ஒரு வெள்ளை சோல்ஜர் அவர் வாயை இறுகப் பொத்தினான்.

மகாராஜா தோணியில் ஏற்றப்பட்ட பிறகு காப்டனும் கிளைவும் ஒரு தோணியில் ஏறிக்கொள்ள படை கொள்ளிடத்தைக் கடக்க ஆரம்பித்தது. திடீரென வெள்ளமெடுத்தும் திடீரென வெள்ளம் வடிந்தும் பழக்கமுடைய கொள்ளிடத்தில் பிரவாகம் அதிகம் இல்லாததால் படை அக்கரையை நோக்கி அதிகம் சிரமம் இல்லாமலே நகர்ந்தது. முதல் தோணிகளில் மூட்டைகளைத் தூக்கிக் கொண்டிருந்த கூலிகள் சென்றார்கள். அடுத்து, சிப்பாய்கள் பகுதியும், கடைசியில் சோல்ஜர் பகுதியும் வந்தது. பாதி கொள்ளிடம் வந்ததும் காப்டன் கோப் கத்தியை உயரத் தூக்கி அசைக்கவே தோணிகள் ஒன்றுகூடிச் சென்றன.

காப்டன் கோப் இத்தனைக்கும் எதிர்க்கரையை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தான். கொள்ளிடத்தின் இரு கிளைகளுக்கும் இடையேயிருந்த தீவு மிக அமைதியாக இருந்தது. அதன் காட்டுப் பகுதிகளிலும் கோட்டைப் பகுதியிலும்கூட அரவமெதுவும் இல்லை. இடையேயிருந்த வெட்டவெளியும் மிக அமைதியாகவே காட்சி யளித்தது. அந்த நிலையைக் கண்ட காப்டன் கோப், ''லெப்டினண்ட்! எதிரிப்படை அடியோடு மறைந்துவிட்டதே. இந்தப் பூர்ண அமைதி எனக்குத் திருப்தியாயில்லை'' என்றான்.

''எனக்கும் திருப்தியில்லை'' என்றான் கிளைவ்.

''நம்மைத் திடீரெனத் தாக்க எதிரிகள் முயல்கிறார்கள்'' என்று குறிப்பிட்டான் கோப்.

''இருக்காது'' என்றான் கிளைவ்.

''ஏன்?''

''அவர்கள் நம்மைச் சுடுவதானால் இப்பொழுதே சுடலாம்.''

''ஆம்.''

''சுடவில்லை.''

''அதற்குக் காரணம் கூடிய வரையில் அவர்களும் படைச் சேதத்தை விரும்பவில்லை என்று நினைக்கிறேன்.''

கிளைவின் இந்த விளக்கத்தை ஆமோதிப்பதற்கு அறிகுறியாகக் காப்டன் கோப் தலையை அசைத்தான். அணி வகுத்த படை தோணிகளில் மெல்ல மெல்ல தேவிக்கோட்டைத் தீவில் இறங்கலாயிற்று. இறங்கியபின்புகூட அவர்களை யாரும் எதிர்க்க வில்லை. பிரிட்டிஷ் படை இறங்கி முகாம் செய்த இடத்திலிருந்து தேவிக்கோட்டை ஒரு மைல் தூரம் இருந்தது. அதைத் தான் இருந்த இடத்திலிருந்து கவனித்த காப்டன் கோப் ''வெளிச்சம் இருக்கும் போதே படையை நடத்திச் செல்வோம் லெப்டினண்ட்'' என்றான் கிளைவை நோக்கி.

''செய்யலாம்'' என்று கூறிய கிளைவ் இரண்டு சோல்ஜர்களை அழைத்து, ''கூலிகள் உணவுப் பொருள்களுடன் படைக்குப் பின்னால் வரட்டும். படையை அணிவகுத்து முன்னால் நடத்துங்கள். நம்மிடமுள்ள சிறு பீரங்கிகள் (ஃபீல்ட் பீஸஸ்) வெள்ளையர் படையுடன் செல்லட்டும்'' என்றான்.

அவன் உத்தரவுப்படி படை முன்னேறத் தயாராகி நின்றது. அப்பொழுது ஒரு சோல்ஜர் கோட்டைக்குச் செல்ல புதிய ஒரு பாதையும் இருப்பதாகக் கூறினான். அது நல்ல அகலமுள்ள பாதை என்பதை அவனுடன் சென்று கண்டுகொண்டு வந்த கிளைவ், காப்டன் கோப்பிடம் விஷயத்தைக் கூறி, ''பின்வாங்க அவசியம் இருந்தால் இந்தப் பாதை மிகவும் தேவைப்படும். ஆகவே அது வழியே செல்வோம்'' என்று தெரிவித்தான்.

அதை ஆமோதித்த காப்டன் கோப், படையை நகரும்படி ஆணையிடவே அந்தப் பாதையில் படை நகர்ந்தது. சற்று முன்னேயிருந்த அடவியை நாடுமுன்புகூட எந்தவிதத் தொல்லையும் இல்லை பிரிட்டிஷ் படைக்கு. அந்த நிசப்த நிலையில் திடீரெனக் கோட்டையில் ஒரு பேரிகை திமுதிமுவென மெல்ல சப்தித்தது. அதைக் கேட்டதும் கிளைவை நோக்கித் திரும்பிய காப்டன் கோப் தனது லெப்டினண்ட் முகத்தில் பெரும் கவலை மண்டிக் கிடப்பதைக் கண்டு, ''என்ன லெப்டினண்ட்! என்ன இது?'' என்று வினவினான்.

''ராஜ பேரிகை!'' கிளைவின் குரலில் மரியாதை, கவலை இரண்டுமே தெரிந்தன.

''யூ மீன் ட்ரம்ஸ்'' என்று கேட்டான் கோப்.

''எஸ். கிங்க்ஸ் ட்ரம்ஸ்'' என்றான் கிளைவ்.

''எதற்கு?''

''பிரதாபசிம்மனாவது கோட்டைக்குள் வந்திருக்க வேண்டும், அல்லது அரச பரம்பரையினர் யாராவது வந்திருக்கவேண்டும். தவிர, போர் சன்னத்தத்துக்கும் அந்தப் பேரிகைதான் சப்திக்கும்'' என்று கூறிய கிளைவ் சற்று நடையை நிறுத்தி நாலாபக்கமும் கண்களைச் செலுத்தினான். அவர்கள் இருந்த இடத்திலிருந்து வெகு தூரத்தில் பின்னாலும் பக்கவாட்டுகளிலும் மகாராஷ்டிரப் புரவிப் படை நிதானமாக வந்துகொண்டிருந்தது.

எதிரிப் புரவிப் படையைக் காப்டன் கோப்பும் கவனித்தான். ஆகையால், ''லெப்டினண்ட்! நமது ஃபீல்ட் பீஸஸ் (சிறு பீரங்கிகள்) வேலை செய்யட்டும்!'' என்று உத்தரவிட்டான்.

அந்த உத்தரவைக் கிளைவ் கத்தியை ஆட்டி அறிவிக்கவே, திடிரெனச் சோல்ஜர்கள் பீரங்கிகளை இயக்கினார்கள். சிறு குண்டுகளையே வீசவல்ல அந்தப் பீரங்கிகள் சீறியதை எதிரி லட்சியமே செய்யவில்லை. அதன் குண்டுவீச்சுக்கு எட்டாமலே மகாராஷ்டிரர் புரவிப் படை ஊர்ந்துகொண்டிருந்தது.

மிக நிதானமாகவும் ஒரே சீராகவும் வந்து கொண்டிருந்து புரவிப்படை. பக்கங்களிலும் முன்னும் பின்னும் வந்த படையினர் தங்கள் கைகளிலிருந்த மாட்ச் லாக் துப்பாக்கிகளைக் கூடப் பிரயோகிக்கவில்லை. மிக அமைதியாக ஊர்வலம்போல் வந்து கொண்டிருந்தார்கள். வெள்ளைக்காரர் பீரங்கிக் குண்டுகள் விழுந்தபோது சற்று விலகிச் சிரித்துக் கொண்டே புரவிகளை நடத்தினார்கள்.

மெள்ள மெள்ள இந்த ஊர்வலம் புதர்களிருந்த இடத்தை அடைந்ததும் மீண்டும் கோட்டையிலிருந்து திமுதிமுவென ராஜபேரிகை சப்தித்தது. அடுத்த விநாடி புதர்களின் மறைவிலிருந்து சீறி வந்த பல அம்புகள் வெள்ளையர் படைமீது விழுந்தன. உணவுப் பொருட்களைத் தாங்கிச் சென்ற நாள்கைந்து கூலிகளும், சில சிப்பாய்களும் பத்துப் பதினைந்து சோல்ஜர்களும் கண்ணிமைக்கும் நேரத்தில் காயமுற்று வீழ்ந்தனர். மீண்டும் புரவி வீரர்கள் தங்கள் மாட்ச் லாக் துப்பாக்கிகளால் சுட்டார்கள். மீண்டும் சில வெள்ளையர் பலியானார்கள்.

காப்டன் கோப் நகர்ந்து கொண்டிருந்த தனது படையைச் சட்டென்று நிறுத்தி அணிவகுத்து, ''ஃபையர்'' என்று கூச்சலிடவே, பிரிட்டிஷ் சோல்ஜர்கள் தங்கள் மஸ்கெட்

துப்பாக்கிகளால் ஏககாலத்தில் எதிரிப் புரவிப்படையை நோக்கிச் சுட்டார்கள். ஒரே சமயத்தில் முழங்கிய துப்பாக்கிப் பிரயோக ஒலி காட்டுப் பகுதியில் பெரும் எதிரொலியை விளைவித்தாலும் எதிரிப் புரவிகள் ஒரே சீராக நகர்ந்து வளைந்து பாய்ந்து விலகி விட்டதால் ஒரு புரவிகூடச் சேதப்படவில்லை. மீண்டும் புதர்களிலிருந்து கிளம்பிய அம்பு வீச்சு அதிக நாசத்தை விளைவிக்கா விட்டாலும், சோல்ஜர்கள் கலக்கம் அதிகமாகவே காப்டன் கோப் படையைக் கடற்பகுதியை நோக்கி விரையுமாறு கட்டளையிட்டான். கடற்பகுதியைக் கடக்க தேவிக்கோட்டைக் காட்டுக்குக் குறுக்கே ஓடிய ஒரு சிற்றாறையும் கடக்க வேண்டியிருந்ததாலும் பிரிட்டிஷ் படை சிரமமின்றி அதைக் கடந்து கோட்டைக்குக் குறுக்கே தளம் அமைத்தது. ''இன்றிரவு இங்கேயே தங்குவோம்'' என்று அறிவித்தான், காப்டன் கோப் கிளைவுக்கு.

காட்டுராஜா குறுக்கிட்டு, ''எதற்காக?'' என்று வினவினார்.

காப்டன் கோப் அவரைப் பார்க்காமலே கிளைவை நோக்கிச் சொன்னான், ''கடல் மார்க்கத்தில் உணவு சப்ளையும் ஆயுத சப்ளையும் அனுப்புவதாகப் போஸ்கவான் உறுதி கூறியிருக்கிறார்'' என்று.

கிளைவ் ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையசைத்தான். அன்றும் அடுத்த நாளும் கப்பல் ஏதும் கண்ணுக்குப் படாது போகவே, காப்டன் கோப் தனது படையில் பிரதான தலைவர்களை அழைத்து மந்திராலோசனையில் இறங்கினான். ''உணவு சப்ளை கப்பல்கள் வரவில்லை. நம்மிடம் கோட்டையைத் தாக்குவதற்கு வேண்டிய பெரிய பாட்டரிங் பீரங்கி இல்லை. என்ன செய்யலாம்?'' என்று வினவினான்.

கிளைவ் ஏதோ சொல்லத் தொடங்கிய சமயத்தில் அவசரமாக ஒரு சோல்ஜர் படையின் ஊடே ஒரு புரவியில் வந்து, ''காப்டன் கோப்! நான் போர்ட்டோ நோவோவிலிருந்து வருகிறேன். அட்மிரல் போஸ்கவான் எப்படியும் தேவிக் கோட்டையைத் தாக்கச் சொல்லி உத்தரவிடுகிறார். அந்த உத்தரவைத் தாங்கி ஒரு தோணியில் ஏறி இங்கே வந்தேன். இதோ உத்தரவு'' என்று மடியிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து நீட்டினான்.

மாலை முதிர்ந்த நேரம். எதிரே எரிந்து கொண்டிருந்த காட்டுச் சுள்ளியின் ஒளியில் அந்த நேரத்தில் அந்த உத்தரவைப் படித்த காப்டன் கோப், கிளைவிடம் அதை நீட்டினான். அதைப் படித்த கிளைவ், ''காப்டன்! கோட்டையைத் தாக்குவதைத் தவிர

வேறு வழியில்லை. அட்மிரலின் உத்தரவு திட்டமாயிருக்கிறது'' என்றான்.

''என்ன செய்ய லெப்டினன்ட்?'' என்று வினவினான் காப்டன்.

''நூறு சோல்ஜர்களைக் கொடுங்கள். இன்றிரவு நமது சிறு பீரங்கிகளைக் கொண்டு கோட்டை கிழக்கு வாயில் கதவுகளைத் தூளாக்கி விடுகிறேன். உடனே நாம் உள் நுழைந்து கோட்டையைக் கைப்பற்றுவோம்'' என்று யோசனை கூறினான் கிளைவ்.

அதை ஆமோதித்த காப்டன் இருந்த இடத்திலிருந்தே கோட்டைமீது பீரங்கிக் குண்டுகளை வீசுமாறு உத்தரவிட்டான். பீரங்கிகள் மறுநாட் காலையில் முழங்கின. ஆனால் கோட்டை தூரத்தில் இருந்ததால் எல்லாம் வியர்த்தமாயின. போதாதற்குப் படையின் உணவு நிலை பயங்கரமாகிவிட்டது. கையிலிருந்த மூன்று நாள் உணவும் தீர்ந்துவிட்டதால் பிரிட்டிஷ் படை திணறியது.

ஆகவே மறுநாள் மாலை சிற்றாற்றைக் கடந்து திரும்புமாறு படைக்கு உத்தரவிட்டான் காப்டன். ஆனால் காலையில் தண்ணீர் குறைவாயிருந்த சிற்றாறு மாலை கடல் அலைப் பிரவாகத்தில் தண்ணீர் உயர்ந்து விட்டதால் பல கூலிகள் தண்ணீரில் மூழ்கி விட்டார்கள். பண்டங்களைத் தாங்கிய பாத்திரங்கள் நீர்வேகத்தில் ஓடின. அவற்றைப் பிடிக்கப் போகிறவர்கள்போல் கூலிகள் மூச்சுத் திணறி மூழ்கியும் எழுந்தும் மிதந்தும் அவற்றுடன் சென்றார்கள். முன்னதாகக் கரை ஏறிவிட்ட சோல்ஜர்களையும் சிப்பாய்களையும் மகாராஷ்டிரப் புரவிப் படை திடீரெனத் தாக்கியது. மின்னல் வேகத்தில் வந்த புரவி வீரர்கள் தங்கள் வளைந்த வாட்களால், பீரங்கியை இயக்க முயன்ற பிரிட்டிஷ் சோல்ஜர்கள் பலரைப் பீரங்கியில் வெடி மருந்தைத் திணிக்கு முன்பாகவே வெட்டிப் போட்டார்கள்.

காப்டனும் கிளைவும் தங்கள் சோல்ஜர்களையும் சிப்பாய்களையும் அணிவகுத்து நிறுத்திப் போரிட்டார்கள். துப்பாக்கிகள் வெடித்த சமயங்களில் எதிரி பின்வாங்கினான். பிறகு திடீர் திடீரெனச் சாரி சாரியாக வந்து தாக்கினான். இதனால் சிதைக்கப்பட்ட பிரிட்டிஷ் படை காட்டை நோக்கி நகர்ந்தது. அங்கே கோட்டையின் பீரங்கிகள் காத்துக் கொண்டிருந்தன.

காப்டன் கோப் கொள்ளிட இக்கரையை அடைந்ததும், முகாமைக் கலைத்துக் கடற்கரைக்குப் படையை நடத்தியதுமே, விஜயகுமாரன் கோட்டைப் பீரங்கிகளைக் காட்டுக்குள் கொண்டு வந்து ஒளித்து வைத்திருக்கவே, பிரிட்டிஷ் படையின் சேதம் சொல்ல முடியாததாயிற்று. பிரிட்டிஷ் படை நிலை குலைந்து ஓடியது, புதிதாகக் கண்டுபிடித்த பாதை மூலம். ஆனால் கிளைவ்

மட்டும் அந்தக் காட்சியை வெறுப்புடன் பார்த்துக்கொண்டு நின்றான். தன்னை நெருங்கிய இரு மகாராஷ்டிரப் புரவி வீரர்களைக் கைத்துப் பாக்கியால் சுட்டு வீழ்த்தினான். அவன் கண்களில் கோபம் மிதமிஞ்சிக் கிடந்தது. சற்று நேரம் போர்க்களத்தைக் கவனித்துக் கொண்டே நின்றான். ''விஜயகுமாரா! இம்முறை வென்றுவிட்டாயென்று மனப்பால் குடிக்காதே. மீண்டும் வருகிறேன்'' என்று எதிரேயிருந்த திறந்த வெளியை வெறுப்புடன் நோக்கிக் கூறிவிட்டு நிதானமாகவே நடந்தான். காட்டு முகப்பிலிருந்த இரு மகாராஷ்டிர வீரர்கள் தங்கள் மாட்ச்லாக் துப்பாக்கிகளை அவன்மீது குறி வைத்தார்கள். ஆனால், ''நிறுத்துங்கள்'' என்ற ஆணை அவர்களைத் தேக்கியது. அவர்களுக்குப் பின்னால் நின்ற விஜயகுமாரன், ''இத்தகைய வீரன் பல தலைமுறைகளில் ஒருவன் பிறக்கிறான். அவனைக் கொல்லக்கூடாது'' என்ற தத்துவம் பேசினான்.

29. வீரமகள் ஒருத்தி

செயின்ட் டேவிட் கோட்டையின் கவர்னர் மாளிகையின் மந்திராலோசனை அறையில் 1749-ஆவது ஆண்டு மே மாதம் 2-ஆம் தேதி அளவுக்கு மீறிய மௌனம் நிலவிக் கொண்டிருந்தது. முந்திய மந்திராலோசனை போலவே அப்போதும் இரவு நேரம்தான்; அப்போதும் அந்த அழகிய சாண்டலியர்ஸ் விளக்கு தனது ஒளிக்கதிர்களை வீசிக் கொண்டிருந்தது; அப்போதும் கவர்னர் ஸான்டர்ஸ் கையிலிருந்த டம்ளரிலிருந்து விஸ்கியைக் கொஞ்சம் கொஞ்சமாக உறிஞ்சிக் கொண்டுதானிருந்தார்; அப்போதும் மேஜர் லாரன்ஸூம் மற்றுமுள்ள கௌன்சில் மெம்பர்களும்கூட மேஜையின் பக்க வாட்டுகளில் அமர்ந்துதான் இருந்தார்கள். ஒரே ஒரு வித்தியாசம், காப்டன் கோப்பும் லெப்டினன்ட் கிளைவும் ஆசனங்களில் அமரவில்லை. விஸ்கி டம்ளர்களைத் தொடவும் இல்லை. கைகளில் இடுக்கிக் கொண்ட ஹாட்டுடன் நின்று கொண்டிருந்தார்கள். நீண்ட நேரம் வரை அவர்களைக் கேள்வி ஏதும் கேட்காமல் விஸ்கியை மெள்ள மெள்ள டம்ளர்களிலிருந்து உறிஞ்சிக் கொண்டிருந்த கவர்னர், கடைசியாக டம்ளரை மேஜைமீது வைத்துவிட்டுத் தமது நீலக்கண்களைக் காப்டன்மீது நாட்டி, ''எஸ். லெட் மி ஹாவ் இட்'' என்றார் எந்தவிதக் கலக்கத்தையும் குரலில் காட்டாமலே.

காப்டன் கோப் மெள்ளத் தனது தொண்டையைக் கனைத்துக் கொண்டான். பிறகு சொன்னான், ''தேவிக் கோட்டையில் தோல்வியடைந்தோம்; தப்பி வந்தோம், சிரமப்பட்டு'' என்று.

''சேதம்?'' என்று வினவினார் கவர்னர், சேதம் என்பது சாதாரண விஷயம் போல.

''நூறு பேர் சொச்சம்'' என்றான் காப்டன் துன்பம் துலங்கிய குரலில்.

''வெள்ளையர்?''

''நாற்பது பேர்.''

'' மற்றவர் கறுப்பர்களா?''

''ஆம்.''

''அது கிடக்கட்டும். ஆயுதங்கள், உணவுச் சேதங்கள் எவ்வளவு?''

''எதுவும் கப்பல்களில் வராததால் சேதம் மிகக் குறைவு தான்'' என்றான் காப்டன் கோப், லேசாக எரிச்சலைக் குரலில் காட்டி.

கவர்னர் அதற்கும் கோபத்தைக் காட்டவில்லை. ஆனால் நிதானமாகச் சொன்னார். ''காப்டன், இதன் விளைவு பயங்கர மானது'' என்று.

''எப்படி?'' என்று கேட்டான் கோப்.

கவர்னர் மீண்டும் சிந்தனையில் இறங்கினார். அவர் பேச முற்பட்டபோது உணர்ச்சியே தெரியாத அவர் குரலிலும் உணர்ச்சி தெரிந்தது.

''முன்பு பிரெஞ்சு என்ஜினியர் பராடிஸ் அடையாற்றுப் போரில் ஆற்காட்டு நவாபின் குமாரன் மாபூஸ்கானின் பெரும்படையை முறியடித்தபோது, ஐரோப்பியர் படைகளின் போர் முறையின் உயர்வு இந்தக் கர்நாடகம் முழுவதும், ஏன் வடக்கிலுங்கூடப் பரவியது. இப்போது இந்தத் தேவிக் கோட்டைப் போர் அந்தப் புகழை அழித்து விட்டது. வெள்ளைக்காரர்கள் அப்படியொன்றும் பிரமாத வீரர்களல்ல என்ற உணர்வு சுதேசிகளுக்கு இனி ஏற்படும். நமக்கு இது அவமானம் மட்டுமல்ல, சுதேசிகளின் துணிவையும் சுயநம்பிக்கையையும் உயர்த்தும் ஒரு சம்பவம். இதனால் இனி ஏற்படக்கூடிய விபரீதங்கள் பல. உலகம் எங்கிலும் வீரக்கொடி நாட்டிய பிரிட்டனின் போர்த் திறன், புகழ் எல்லாம் தேவிக்கோட்டையில் தவிடு பொடியாகி விட்டது'' என்ற உணர்ச்சி ததும்பச் சொன்ன கவர்னர், மீண்டும் விஸ்கி டம்ளரைப் பின்னால் நீட்டி, பின்னால் அசையாமல் சாராயக் குப்பியுடன் நின்றிருந்த பட்லர் குனிந்து மீண்டும் டம்ளரை நிரப்பினான். ஏதோ பெரிய வேலையைச் செய்து களைப்புற்றவர் போல் கவர்னர் விஸ்கியைச் சற்று அதிக மாகவே உறிஞ்சினார்.

அதுவரையில் ஏதும் பேசாமல் நின்றிருந்த கிளைவ் தனது தொண்டையை மெதுவாகக் கனைத்தான். அவன் பார்வையும்

மேஜர் லாரன்ஸின் பார்வையும் ஒரு முறை இணைந்து மீண்டன. எதையும் கவனிக்கத் தவறாத ஸாண்டர்ஸ் கேட்டார், ''வாட் லெப்டினண்ட்! யூ ஹாவ் ஸம்திங் டு ஸே?'' என்று.

கிளைவ் எந்தவித யோசனையும் இல்லாமல், யாரிடம் பேசுகிறோம் என்பதைக்கூடச் சிந்திக்காமல், ''யுவர் எக்ஸ லென்ஸி...'' என்று துவங்கினான்.

மேற்கொண்டு பேசும்படி சைகை செய்தார் கவர்னர். ''என்ஜினியர் பாராடிஸையும் பிரெஞ்சுக்காரர்களையும் அடை யாற்றுப் போரையும் சுட்டிக் காட்டினீர்கள்'' என்று கூறினான் கிளைவும் நிதானமாக.

''ஆம், அதனாலென்ன?'' என்று கேட்டார் கவர்னர்.

''பிரெஞ்சு கவர்னர் அவர்களைப் பட்டினி போடவில்லை. தளவாடங்கள் அனுப்புவதாகச் சொல்லிக் கையை விரிக்கவில்லை'' என்று சுட்டிக் காட்டினான் கிளைவ். கவர்னர் வாயைத் திறக்கு முன்பு மேலும் மடமடவென்று பேசினான். ''கப்பலில் உணவு சப்ளையும் கோட்டையைத் தகர்க்கும் பீரங்கியும் வேறு பல தளவாடங்களும் அனுப்புவதாகச் செய்தியனுப்பினீர்கள். ஏதும் வரவில்லை. சோல்ஜர்கள் பட்டினி. தவிர வெறும் கைகளால் கோட்டை வாயில்களை இடிக்க முடியாது. அதற்காக முயன்றாலும் எதிரி கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருக்க மாட்டான். இத்தனை தூரம் நாங்கள் கைவிடப்பட்டும் காப்டன் போரைத் திறம்படவே நடத்தினார். நாங்கள் பூராவாக அழியாமல் தப்பிவந்ததே அவர் வீரத்துக்கும் அத்தாட்சி; எதிரியின் வீரத்துக்கும் அத்தாட்சி'' என்றான் கிளைவ்.

''எதிரியிடம் அத்தனை மதிப்பா உனக்கு?'' என்று வினவினார் கவர்னர்.

''ஆம். விருப்பப்பட்டிருந்தால், மானாஜியும், விஜயகுமாரனும் எங்களை அழித்திருக்கலாம்!'' என்றான் கிளைவ்.

கவர்னர் முகம் சுளித்தார். ''மானாஜி தெரியும். யார் அவர் விஜயகுமாரன்?'' என்று வினவினார்.

''இந்தத் தோல்விக்கு உண்மையில் அடிகோலியவன்; மகாராஷ்டிர உபதளபதி. லைட்ஹார்ஸ் படையை வெகு நன்றாக நடத்துகிறான். முராரி ராவின் சீடன்'' என்றான் கிளைவ்.

கவர்னர் சட்டென்று டம்ளரை எடுத்து விஸ்கியை இரு முறை அவசரமாக உறிஞ்சினார். ''முராரி ராவா!'' என்று கொஞ்சம் திகிலும் குரலில் ஒலிக்கக் கேட்டார்.

கிளைவின் இதழ்களில் குரூரப் புன்முறுவல் ஒன்று படர்ந்தது. ''ஆம், அவர்கூட அங்கு வந்திருந்தார்'' என்றான் அந்தப் புன்முறுவலின் ஊடே.

கவர்னர் சிறிது ஆசுவாசம் அடைந்தார். ''தட் எக்ஸ்ப்ளெய்ன்ஸ் இட்'' என்றும் கூறினார்.

கிளைவ் அந்த ஆசுவாசத்தைக்கூட அநுமதிக்கவில்லை. ''அவர் போரில் ஈடுபடவில்லை'' என்றும் கூறினான்.

கவர்னர் டம்ளரிலிருந்த விஸ்கி அத்தனையும் உறிஞ்சிவிட்டு எரிக்கும் கண்களால் கிளைவை உற்றுப் பார்த்தார். ''எதிரிகளிடம் உனக்கு அதிக நம்பிக்கை இருப்பதாகத் தெரிகிறது'' என்றார்.

''வீரன் எதிரியாயிருந்தாலும் என்னால் போற்ற முடியும். எதிரியைக் குறைத்து எடைபோடுவது தோல்வியின் முதல் படி. அசிரத்தை இரண்டாவது படி. சுயபலம் தெரியாமல், தளவாடம் இல்லாமல் உபவாசத்தால் எதிரியை வெற்றி கொள்ளலாமென்ற நினைப்பு மூன்றாம் படி....'' என்று அடுக்கினான் கிளைவ்.

''நான்காவது படி?'' என்று கர்ஜித்தார் கவர்னர்.

''நாங்கள் இங்கே தோல்வியுடன் திரும்பி வந்திருப்பது'' என்று கூறினான் கிளைவ்.

''யூ ஆர் இம்பர்ட்டினண்ட்'' என்றார் கவர்னர்.

அதுவரை வாளாவிருந்த ஒரு குரல், ''சம்பவங்களை உள்ளபடி விளக்குவது சோல்ஜரின் கடமை'' என்று இடையே புகுந்தது.

கவர்னர் சரேலென்று திரும்பினார் குரல் வந்த திசையை நோக்கி. மேஜர் ஸ்ட்ரின்ஜர் லாரன்ஸ் டம்ளரிலிருந்த விஸ்கியைத் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை. உரையாடலில் இடை புகுந்த பின்பு மேற்கொண்டு பேசாமலே இருந்தார். கவர்னரே கேட்டார், ''அப்படியானால் இந்தத் தோல்வி விவரங்களைக் கேட்டு மகிழ்ச்சியடைய வேண்டுமா?'' என்று.

''மகிழ்ச்சியடைய வேண்டியதில்லை. நமது குறைகளைத் தெரிந்து கொள்ளலாம்'' என்றார் லாரன்ஸ்.

''அப்படியானால் கோட்டையைக் கைவிட்டுவிட வேண்டியதுதானா?'' கவர்னர் கேள்வியில் இம்முறை ஆத்திரம் மறைந்து கவலை இருந்தது.

''நோ'' என்றார் லாரன்ஸ்.

''வாட் டு யூ ப்ரபோஸ் டு டு?'' என்று சீறினார் கவர்னர்.

மேஜர் லாரன்ஸ் ஆசனத்தை விட்டு எழுந்து சுற்றிலும் உட்கார்ந்திருந்தவர்களையும் கவர்னரையும் நோக்கினார். கடைசியாகக் கவர்னரை நோக்கிச் சொன்னார், ''தேவிக் கோட்டையை நான் பிடித்துத் தருகிறேன்'' என்று.

''எப்படி? எப்பொழுது?'' என்றார் கவர்னர்.

ஸ்ட்ரின்ஜர் லாரன்ஸ் பதிலேதும் சொல்லவில்லை, சில விநாடிகள். தமது பெரும் தொந்தியை ஒரு முறை தடவிவிட்டுக்

கொண்டார். இடையில் தொங்கிய வாளின் பிடிமீதும் மெள்ளக் கையை வைத்தார். கடைசியில் வார்த்தைகளைத் தெளிவுடன் உதிர்த்தார்.

''இன்று மே 22. மே 27-ஆம் தேதி கிளம்புகிறேன் கடல் மார்க்கமாக. லெப்டினண்ட் கிளைவும், கிரெனேடியர்கள் காப்டன் பால்டனும், சார்ஜண்ட் ப்ரௌனும் என்னுடன் வருகிறார்கள். 800 சோல்ஜர்களையும் 150 சிப்பாய்களையும் அழைத்துச் செல்கிறேன்'' என்று கூறி எதிர் நாற்காலிகளில் உட்கார்ந்திருந்த காப்டன் பால்டனையும் சார்ஜண்ட் ப்ரௌனையும் நோக்கினார். மீண்டும் கவர்னரை நோக்கி, ''நான்கு போர்க் கப்பல்களில் நாங்கள் செல்கிறோம்'' என்று கூறிவிட்டு, தலை தாழ்த்திக் கவர்னருக்கு வணங்கிவிட்டு அந்த அறையைவிட்டு வெளியேறினார். காப்டன் கோப் சிலையென நின்றான்.

கிளைவ் மட்டும் லாரன்ஸைப் பின் தொடர்ந்தான்.

''காப்டன் கோப்பை விட்டு விட்டீர்களே'' என்றான்.

''அவர் களைத்திருக்கிறார். படைக்கு இரு தலைவர்கள் தேவையில்லை. ஒரு மேஜர் போதும்'' என்றார் லாரன்ஸ். மேற்கொண்டு பதிலேதும் சொல்லாமல் தமது இருப்பிடம் நோக்கி விரைந்தார்.

மறுநாள் முதல் எல்லா ஏற்பாடுகளும் ரகசியமாகவே நடந்தன. ஆனால் 27-ஆம் தேதி இரவில் திடீர் திடீரெனச் சுறுசுறுப்பு காணப்பட்டது. மேஜர் லாரன்ஸ் கிளைவின் இருப்பிடம் வந்து, ''கடற்கரைக்கு வந்து சேர்'' என்று கூறிச் சென்றார்.

அப்பொழுது இரவு மணி பத்து இருக்கும். உத்தரவுக்குப் பணிந்து கிளைவ் ஆயுதம் தரித்து விரைந்தான். கடலில் ஆடி நின்றன நான்கு போர்க் கப்பல்கள். அவற்றை நோக்கி விரைந்து கொண்டிருந்தன, தளவாடங்களையும் சோல்ஜர்களையம் தாங்கிய படகுகள். கிளைவ் வந்ததும் மேஜர் லாரன்ஸ் தமது படகிலேயே அவனை ஏற்றிச் சென்றார். முதல் போர்க் கப்பலின் நூலேணியில் தானும் ஏறிக் கிளைவும் ஏறியதும் மேஜர் லாரன்ஸ் காப்டன் டால்டனை நோக்கி, ''காப்டன்! நங்கூரங்களை எடுக்கச் சொல். பாய்கள் விரியட்டும். கப்பல்கள் விரையட்டும்'' என்றார்.

காப்டன் டால்டன் ஒரு பாய்மரத்தின்மீது ஏறி உயர இருந்த தட்டில் நின்று வாளை ஆட்டி, ''ஹாய்! ஹாய்ஸ்ட் ஸெய்ல்ஸ்!'' என்று கூறினான். தனது மடியிலிருந்த கைத் துப்பாக்கியை எடுத்து ஆகாயத்தில் இரு முறை சுடவும் செய்தான். பெரும் பிசாசுகளைப் போலக் கப்பல்கள் நகர்ந்தன.

அந்தப் பிரதானக் கப்பலின் நடுவே நின்றிருந்த மேஜர் தன் தளத்திலிருந்த பெரிய பீரங்கி யொன்றை ஆவலுடன் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தார். கிளைவ் அவரை மெல்ல அணுகி, ''பாட்டரிங் கானன்?'' என்று வினவினான்.

ஆம் என்பதற்கு அறிகுறியாகத் தலையசைத்தார் மேஜர். ''இதை அனுப்பியிருந்தால் தேவிக்கோட்டையை நானே பிடித்திருப்பேன்'' என்றான் கிளைவ்.

''இருக்கலாம். ஆனால் லெப்டினெண்ட்! போர்களை ஆயுதங்கள் வெல்வதில்லை, அறிவு வெல்கிறது'' என்றார்.

கிளைவ் பதில் சொல்லவில்லை அதற்கு. ஆனால் மேஜரின் அறிவையும் சூட்சுமப் போரையும் இரண்டு நாட்களில் அவனால் உணரமுடிந்தது. மே 29-ஆம் தேதி லாரன்ஸ் கொள்ளிட முகத்துவாரத்தை அடைந்தார். 31-ஆம் தேதியன்று படைகளை தரையில் இறக்கினார். கோட்டையைத் தகர்க்கும் ஆற்றலுடைய 'பாட்டரிங் கானனை' மெதுவாகவும் சீராகவும் இறக்கி ஜூன் 8-ஆம் தேதியன்று அதைக் கோட்டைக் கதவுகளுக்கு எதிரே உயர்ந்த பீட மொன்றும் நிறுவி ஏற்றினார்.

ஒரு முறை பெரும் குண்டு ஒன்றை அதன்மூலம் கோட்டைமீது பயங்கரமாக வீசினார். பிறகு கிளைவைத் தூதனாக ஒரு செய்தியுடன் அனுப்பினார். மானாஜியையும் விஜயகுமாரனையும் கோட்டையின் நடு மண்டபத்தில் சந்தித்துத் தனது செய்தியை அறிவித்தான். ''மேஜர் லாரன்ஸ் பூர்ண தளவாடங்களுடனும் பெரும்படையுடனும் வந்திருக்கிறார். ஆகையால் உங்களைச் சரணடையச் சொல்கிறார்'' என்ற இரண்டே வரிகளைச் சொன்னான் தூதனான கிளைவ்.

மானாஜியும் வார்த்ல-ீகளை வளர்த்தவில்லை. ''இந்த நாற்பது வயதுவரை மானக்கேடு இல்லாமல் வாழ்ந்து விட்டேன். இப்போதும் சரணடைய உத்தேசமில்லை என்று சொல்லுங்கள்'' என்றார்.

கிளைவ் இதைக் கேட்டபின்பும் திரும்பவில்லை. விஜய குமாரனை நோக்கினான். விஜயகுமாரன் முகம் கல்லாயிருந்தது. அந்தச் சமயத்தில் பக்கத்து அறையிலிருந்த அரசகுமாரி தலை நீட்டினாள். ''இங்கு ஒரு பெண்ணும் இருக்கிறாளே!'' என்றான் கிளைவ் வியப்புடன்.

''வீர குமாரிகள் எங்கள் நாட்டில் உண்டு'' என்றான் விஜயகுமாரன்.

''போரிடவும் அவர்களுக்குத் தெரியும்'' என்ற நந்தினி தனது இடையிலிருந்து முன்பு கொள்ளிடத்தில் விஜயகுமாரனுக்குக் காட்டிய கைத் துப்பாக்கியை எடுத்துக் கிளைவிடம் காட்டினாள்.

எதற்கும் அசையாத கிளைவின் முகம்கூட உணர்ச்சியைக் காட்டியது. ''ஆண்டவன் உங்களைக் காப்பாற்றட்டும்'' என்று கூறி வெளியே நடந்தான். அவன் முகத்தில் இணையிலாத பிரமிப்பு விரிந்து கிடந்தது. உள்ளத்தில் விவரிக்க இயலாத உணர்ச்சிகள் தாண்டவமாடின. உண்மையில் இந்தப் போரை அவன் மனம் விரும்பவே இல்லை.

30. * NEC ASPERA TERRENT

(Difficulties do not terrify us)

விஜயகுமாரனையும் நந்தினியையும் கோட்டைக்குள் கண்ட காரணத்தாலும், மானாஜியின் கண்ணியமும் கம்பீரமும் நிரம்பிய பதிலினாலும், 'இத்தகைய ஒரு வீர சமுதாயத்தை எதிர்க்க வேண்டுமே' என்ற எண்ணி மனக் கலக்கம் அடைந்துவிட்ட கிளைவ், மேஜர் லாரன்ஸிடம் உணர்ச்சி சிறிதும் இல்லாமல் மானாஜியின் பதிலை அவர் சொன்ன தோரணையிலேயே கூறினான். காப்டன் டால்டனுடனும் ஸார்ஜண்ட் பிரெளனுடனும் நின்றுகொண்டு அந்தச் செய்தியைக் காதில் வாங்கிக் கொண்ட மேஜர் லாரன்ஸ் முகத்தில் பெரும் திருப்தியைக் காட்டினார். ''இந்தப் பதிலைத்தான் நான் மானாஜியிடமிருந்து எதிர்பார்த்தேன்'' என்று அவர் கூறிய பதிலிலும் திருப்தி பரிபூரணமாக ஒலித்தது.

''எதிர்பார்த்தீர்களா!'' கிளைவின் கேள்வியில் வியப்பு ஒலித்தது.

''ஆம்'' என்றார் லாரன்ஸ், எதிரே தூரத்தில் கொள்ளிடத்துக்கு அக்கரையில் விரிந்த கோட்டையின் பதினெட்டு அடி உயரச் சுவர்களையும், இடையிடையே இருந்த பீரங்கிக் கூட்டங்களையும் பார்த்துக் கொண்டே.

''அப்படியானால் என்னை எதற்காகத் தூது அனுப்ப வேண்டும்?'' என்று மீண்டும் வினவினான் கிளைவ்.

''யுத்த தர்மம்'' என்றார் லாரன்ஸ்.

''என்ன தர்மம் அது?''

''முடியுமானால் மனித அழிவைத் தடுப்பது சேனாதிபதியின் கடமை'' என்ற லாரன்ஸ், ''ஆனால் மகாவீரனான மானாஜியிடம் சரணாகதியை நான் எதிர்பார்க்கவில்லை'' என்றும் தெரிவித்தார்.

*Chats on Military Curios - By Stanley C. Johnson, M.A., D.Sc., F.R.E.S - Page 48

இந்தப் பதில் கிளைவுக்கு மட்டுமின்றி காப்டன் டால்டனுக்கும் புதிதாயிருக்கவே, ''உங்களுக்கு மானாஜியை முன்பே தெரியமா?'' என்று டால்டன் வினவினான்.

''தெரியாது. ஆனால் கேள்விப்பட்டிருக்கிறேன், தென்னிந்தியாவின் படைத் தலைவர்களில் மிகச் சிறந்தவர் மானாஜி என்று. அது மட்டுமல்ல; ஐரோப்பியர் போர் முறையையும் நன்றாக அறிந்தவர்'' என்று கூறிய மேஜர் விடுவிடுவென்று கொள்ளிடக் கரையின் முகப்புக்கு விரைந்தார். அப்படிச் செல்லு முன்பு, ''ஜான்மூர், மூர்'' என்று இருமுறை இரைந்து கூவவும் செய்தார்.

போர்க் கப்பலொன்றின் தச்சனான ஜான்மூர், ''ஹியர் ஹியர்'' என்று தன்னை அறிவித்துக்கொண்டு அவருடன் ஓடினான். மேஜர் லாரன்ஸ் கொள்ளிடக் கரை முகப்பில் நின்று கொண்டு நதியைச் சுட்டிக் காட்டி, ''மூர்! இந்த நதியைத் தாண்டினால் சிறு நிலப்பரப்பு வருகிறது. அதை நாம் தாண்டினால் குறுக்கே சிற்றாறு வருகிறது. அதற்கு எதிரே தேவிக் கோட்டையின் கிழக்கு வாசல் இருக்கிறது. கோட்டையின் வாயிலைத் தகர்க்க பாட்டரிங் கானனை ஏற்றியிருக்கிறேன். அது வாயிலைத் தகர்த்தால் உள்ளே நுழையப் படைகள் அக்கரை போக வேண்டும்'' என்று சுட்டிக் காட்டிக் கையால் ஏதேதோ சைகைகள் செய்தார்.

தச்சனான ஜான்மூர் கொள்ளிடப் பிரவாகத்தையும் எதிர்க்கரையையும் காட்டினான். பிறகு ஏதோ மேஜரிடம் சொன்னான். மேஜர் ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார். இருவரும் திரும்பியதும் கிளைவையும் டால்டனையும் நோக்கிய மேஜர், ''நீங்கள் இருவரும் இன்று இளைப்பாறலாம். சோல்ஜர்களும் சிப்பாய்களுங்கூட இளைப்பாறட்டும். கூலிகளில் பத்துப் பேரை ஜான்மூருக்கு உதவ அனுப்புங்கள்'' என்று கூறி வேகமாகத் தமது தொப்பை குலுங்க நடந்து தமது கூடாரத்தை நோக்கிச் சென்றார்.

கிளைவும் டால்டனும் ஏதும் பேசவில்லை. பத்துச் சுதேசிக் கூலிகளைத் தச்சனிடம் ஒப்படைத்துத் தங்கள் கூடாரத்தை நோக்கிச் சென்றார். ஜான்மூர் கூலிகளுடன் எதிரே சற்றுத் தூரத்திலிருந்த ஒரு தோப்பை நோக்கிச் சென்றான்.

அன்று பகல் முழுதும் மேஜர் கூடாரத்தை விட்டுக் கிளம்பவில்லை. கொள்ளிடத்தின் கிழக்குக் கரையில் தங்கியிருந்த ராணுவமும் சாப்பிடுவதிலும் உறங்குவதிலும் காலம் கழித்துக் கொண்டிருந்தது. இந்த நிலையைக் கோட்டைத் தளத்திலிருந்து மானாஜியும் விஜயகுமாரனும் கவனித்துக் கொண்டிருந்தார்கள். விஜயகுமாரனுக்கு எதிரியின் போக்கு அடியோடு புரியாததால்

கேட்டான்; ''இதென்ன! எதிரி ராணுவத்தில் படையெடுப்பு சன்னத்தம் எதுவும் காணோமே'' என்று.

''ஏதோ ரகசியம் நடக்கிறது'' என்றார் மானாஜி.

''என்ன ரகசியம்?'' என்று வினவினான் விஜயகுமாரன்.

''இன்றிரவு தெரியலாம். எதற்கும் நீ நமது மின்னல் குதிரைப் படையைச் சித்தமாக வைத்திரு'' என்று உத்தரவிட்டார். ஆனால் அவர் மனத்தில்கூட எதிரியின் அசிரத்தைக்குத் காரணம் புரியவில்லை.

''கரையில் இறங்கிய எதிரி கொள்ளிடத்தைக் கடந்து வரவேண்டும். கொள்ளிடத்திலும் இப்பொழுது நீர் அதிகமில்லை; வரமுடியும். இரவில் அலை அதிகப்பட்டு நீர் ஏறிவிடும். அப்போது எப்படி வர முடியும்?'' என்று தம்மைத் தாமே பல முறை கேட்டுக் கொண்டார். அதன் விளைவாகக் கோட்டைத் தளத்திலிருந்து இறங்கி வந்ததும், ''விஜயகுமாரா! எதிரிகள் தாக்குவதானால் கிழக்கில்தான் தாக்குவார்கள். எதற்கும் மேற்கு வாசலையும் திறந்து வை. அரசகுமாரி பிடிவாதம் செய்யவில்லையானால் அவளை மட்டும் தகுந்த பந்தோபஸ்துடன் மேற்குப் புறமாக ஆச்சாள்புரம் அனுப்பிவிடு'' என்று கூறினார்.

விஜயகுமாரனுக்கும் அது இஷ்டம்தான். ஆனால் அரசகுமாரி சிறிதும் பிடிகொடுக்கவில்லை. ''என்னால் போரிட முடியாதா?'' என்று கைத்துப்பாக்கியை எடுத்துக் காட்டினாள்.

''இப்போது வந்திருக்கும் எதிரி கைத்துப்பாக்கிக்கு அஞ்சுபவன் அல்ல'' என்றான் விஜயகுமாரன்.

''வேறு எதற்கு அஞ்சுவான்?'' என்றாள் நந்தினி.

''கோட்டைப் பீரங்கிகளுக்கு அஞ்சுவான். நமது மின்னல் படைக்கு அஞ்சுவான்'' என்று பதில் சொன்னான் நாயக்கர் வம்ச வீரன்.

''அப்படியானால் கோட்டை பீரங்கிகளில் ஒன்றை இயக்குகிறேன். இல்லையேல் மின்னல் படையில் வருகிறேன். எனக்குப் புரவியைப் பாயவைக்கவும் தெரியும், வளைவு வாளால் தலையைச் சீவவும் தெரியும்'' என்றாள் நந்தினி உற்சாகத்துடன்.

விஜயகுமாரன் முகத்தில் எரிச்சல் மண்டியது. ''இவை பெண்கள் வேலையல்ல'' என்றான் எரிச்சலுடன்.

''வரலாற்றைச் சரியாகப் படித்துப் பாருங்கள்'' என்ற கூறிவிட்டுச் சரேலென்று தனது அறைக்குச் சென்ற நந்தினி கதவைச் சரேலெனத் தாளிட்டாள்.

விஜயகுமாரன் மிகவும் வேதனையடைந்த மனத்துடன் தனது இருப்பிடம் சென்று உணவருந்தினான். பிறகு கோட்டையின் பின்புறம் சென்று குதிரைப் படையைக் கிழக்கு

வாசலில் அணி வகுத்து எச்சரிக்கையுடன் நிற்குமாறும், கோட்டை நோக்கிய மேற்கு வாசலைத் திறக்கும் நிலையில் வைக்குமாறும் உத்தரவிட்டு, மற்ற ஏற்பாடுகளைப் பார்வையிடக் கோட்டை மதில் படிகளில் ஏறிச் சென்றான்.

மானாஜியும் சற்று நேரத்திற் கெல்லாம் அங்கு வந்தார். இருவரும் எதிரிகள் பாசறையைக் கவனித்தார்கள். அங்கு எல்லாம் அமைதியாக இருந்தது. அந்த அமைதியைக் கண்டு முகம் சுளித்தார் மானாஜி. ''இந்த அமைதி எனக்குத் திருப்தியளிக்கவில்லை'' என்றும் கூறினார். ஆனால் அதே அமைதி அடுத்த மூன்று நாட்களும் நிலவியது.

எதிர்க்கரையில் மேஜர் மிகுந்த உல்லாசத்துடன் இருந்தார். சோல்ஜர்களிடம் அடிக்கடி ஜோக் அடித்தார். அக்கரையில் உள்ள கோட்டையைப் பற்றிய நினைப்பு அவருக்கு அடியோடு இல்லைபோல் தெரிந்தது. போதாக்குறைக்குப் போர்க் கப்பல் தச்சனான ஜான்மூரைக் காணவே காணோம். மூன்றாம் நாளிரவு மேஜர் தன்னந்தனியாக எட்ட இருந்த தோப்புக்குள் நுழைந்தார். அவரைத் தொடர முற்பட்ட கிளைவை, ''வேண்டாம் இங்கேயே இரு'' என்று கட்டளையும் இட்டார்.

அதன் பிறகு தோப்பை அடைந்த மேஜர் லாரன்ஸ் அங்கே கண்ட காட்சியால் வெகு உற்சாகம் அடைந்தார். நீண்ட நீண்ட காட்டு மரக்கழிகளை வெட்டி ஒரு தெப்பம் தயாரித்திருந்தான் *ஜான்மூர். அடியில் சில பீப்பாய்களையும் பிணைத்திருந்தான். ''பெரிதாக இருக்கிறது'' என்று உற்சாகத்தால் கூவினார் மேஜர்.

''ஆம். ஒரே சமயத்தில் நானூறு சோல்ஜர்கள் இதில் செல்லலாம்'' என்றான் ஜான்மூர்.

''படைகள் எதிர்க்கரையில் இறங்கவேண்டுமானால் இது நதியில் அடித்துக்கொண்டு போகாதிருக்க என்ன ஏற்பாடு?'' என்று வினவினார் லாரன்ஸ்.

''இன்று நள்ளிரவில் ஆற்றங்கரையோரம் வாருங்கள்'' என்றார் மூர்.

லாரன்ஸ் இரவில் மீண்டும் திரும்பி வந்தார்.

அந்த 'ப்ளோட்' அதாவது 'மிதக்கும் மேடை'யின் முகப்பில் பெரும் கயிறு ஒன்றைக் கட்டி வைத்திருந்தான் மூர். அந்த மேடையை ஆற்றங்கரைக்குக் கூலிகளை விட்டுக் கொணரச் செய்தான். பிறகு, ''நான் அக்கரை செல்ல உத்தரவு வேண்டும்'' என்றான் மூர் மேஜரை நோக்கி. மேஜர் தலையை அசைத்தார்.

* "John Mooro the carpenter made a float capable of receiving 400 men. He swam across Colroon and fastened the rope to the root of a tree" - Refer Lawford's Clive (Page 81) and also Orme's British Military Transactions (Page 116)

கயிற்றின் நுனியை இடுப்பில் கட்டிக் கொண்டு கொள்ளிடத்தில் இறங்கி அந்த நள்ளிரவில் எதிர்க் கரையை நோக்கி நீந்தினான் மூர். பிறகு அரைமணி நேரத்தில் திரும்பி வந்து, நமக்கு அதிர்ஷ்டம் அதிகம். எதிர்க்கரையில் புளியமரம் இருந்தது. அதன் வேரில் கயிற்றைப் பிணைத்து விட்டேன்! கயிறு வெளியே தெரியாதபடி நீரிலும் அமிழ்த்தி விட்டேன். இனி இந்த 'ப்ளோட்'டில் படைகள் போகலாம். எதிர்க்கரையில் போகும் முதல் படைவீரர் கயிற்றை இழுக்கலாம். 'ப்ளோட்' இருபுறமும் கயிறுகளால் இயக்கப்படலாம்'' என்றான்.

அந்த நள்ளிரவில் அந்த மிதக்கும் மேடையில் நானூறு நானூறு பேராக அக்கரையை அடைந்த பிரிட்டிஷ் படையின் எதிரே அந்தச் சிற்றாறு காட்சியளித்தது. அந்தச் சிற்றாற்றங் கரையில் அணி வகுத்த பிரிட்டிஷ் படையை மூன்று பிரிவுகளாகப் பிரித்தார் லாரன்ஸ். ஒன்றுக்குக் கிளைவையும் இன்னொரு பிரிவுக்குக் காப்டன் டால்டனையும் தலைவர்களாக அமர்த்தி, இன்னொரு பிரிவுக்குத் தாமே தலைமை வகித்தார்.

மறுநாள் ஜூன் 12-ஆம் தேதி காலையில், பிரிட்டிஷ் பாட்டரிங் கானன் மீண்டும் மீண்டும் முழங்கியது. கோட்டையின் கிழக்கு வாசல் கதவுகள் தூளாயின. இருபுறத்து மதிலும் சிறிது இடிந்தது.

''இந்தக் கோட்டையை முதலில் தாக்கும் உரிமை எனக்கு வேண்டும்'' என்று கிளைவ் வேண்டினான். லாரன்ஸ் சம்மதிக்கவே சிற்றாற்றைக் கடந்தான் கிளைவ். அவனுடன் 34 வெள்ளையரும் 700 சிப்பாய்களும் சென்றார்கள். அவர்கள் சிற்றாற்றின் அக்கரையை அடைந்ததும் துப்பாக்கிகளைச் சுட்டுக்கொண்டு விசிறிபோல் விரிந்து கிழக்கு வாசலை நோக்கி ஓடினார்கள்.

திடீரென ராஜபேரிகை பயங்கரமாக முழங்கியது. மின்னல் வேகத்துடன் மகாராஷ்டிரக் குதிரைப்படை விஜயகுமாரன் தலைமையில் வெளியே பாய்ந்து வந்தது. அவர்கள் கைகளில் உயரத் தூக்கிய வளைந்த வாள்கள் பளபளத்தன. வெள்ளையர் மண்டியிட்டு, துப்பாக்கிகளை இரண்டாம் முறை சுட முயலு முன்பாக 26 வெள்ளையர் தலைகள் நிலத்தில் உருண்டன. கிளைவின் சிப்பாய்கள் பின்னோக்கிப் பறந்தனர். வேகமாகப் பாய்ந்து வந்த குதிரை வீரன் ஒருவன் கிளைவின் தலையை வெட்ட வாளை ஓங்கினான். ஓங்கிய வாள் இறங்க வில்லை. கிளைவ் வாளிலிருந்து தப்பி விலகினான். வெட்ட முற்பட்டவன், ''கிளைவ்! ஓடிவிடு'' என்றான். கிளைவ் சிப்பாய்களை நோக்கி ஓடினான். விஜயகுமாரன் வாளை உறையில் போட்டுக் கொண்டு கோட்டையை நோக்கித்

www.thamizhthenee.blogspot.com

திரும்பினான். மகாராஷ்டிரப் படையும் அவனுடன் விரைந்து கோட்டைக்குள் மறைந்தது.

மேஜர் லாரன்ஸ் இந்த முதல் தோல்வியால் மனம் தளர வில்லை. மிகுந்த சிந்தனையுடன் தமது பெரிய தொந்தியைப் பல முறை தடவிக் கொண்டார். பிறகு தமது படையை ஒன்றாகத் திரட்டி ஒரே கட்டாகச் செய்தார்.

பக்கவாட்டுகளில் காப்டன் டால்டனையும் உயிர் தப்பிய கிளைவையும் நிறுத்தினார். படையை ஓர் இரும்புச் சுவராக சிற்றாற்றில் இறக்கி எதிர்க்கரையை அடைந்து முன்னேற்றினார். பாட்டரிங் கானன் மீண்டும் முழங்கியது. கோட்டையின் பல இடங்களில் விரிசல் கண்டது. மேஜரின் படையை ஊடுருவ மீண்டும் மகாராஷ்டிரப் புரவிப் படை வந்தது. ஆனால் பலமுறை தாக்கியும் மேஜரின் இரும்புச் சுவரைத் தகர்க்க முடியவில்லை. வெள்ளையரின் தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகத்தில் பல புரவிகள் மாண்டு விழுந்தன. கோட்டைப் பீரங்கிகளைக் காப்டன் டால்டனின் பீரங்கிகளின் எதிர்வீச்சு அடக்கியது. அன்று மாலை வெற்றி முழக்கத்துடன் வெள்ளையர் படை தேவிக் கோட்டைக்குள் நுழைந்துவிட்டது.

ஆனால் உள்ளே இருந்த காட்சியைக் கண்டு பிரமித்தார் மேஜர் லாரன்ஸ். உள்ளே மருந்துக்குக்கூடக் கைதாக வீரன் யாருமில்லை. வெளியே வந்த சிறிய குதிரைப் படையில் மிஞ்சி யவர்தான் சிறைப்பட்டார்கள். மற்றபடி தேவிக்கோட்டை காலியாக இருந்தது. மேஜர் கோட்டைக்குள் சுற்றினார். கடைசி யாக மானாஜியின் அறைக்குள் நுழைந்தார். அங்கு ஒரு பீடத்தில் விளக்கொன்று எரிந்து கொண்டிருந்தது. அதன் அருகில் கடிதம் ஒன்றிருந்தது. ''இங்கிருந்து மேற்கே ஐந்து மைல் தூரத்தில் ஆச்சாள்புரம் என்ற ஊர் இருக்கிறது. அங்கே சந்திக்கலாம்'' என்று கடிதத்தில் கண்டிருந்தது.

மேஜர் அந்தக் கடிதத்துடன் வெளிப்போந்து கிளைவிடம் அதைக் கொடுத்தார். ''மானாஜி நம்மை ஏமாற்றி விட்டார். மேற்குப்புறத்தை நாம் கவனிக்கவில்லை'' என்று துக்கத்துடன் கூறினார். அந்த வார்த்தைகளை அவர் உதிர்த்துக் கொண்டிருக் கையில் பிரிட்டிஷ் கொடி தேவிக்கோட்டையின் உயரே ஏற்றப் பட்டது. பிரிட்டிஷ் பாண்ட் வெற்றிக் கோஷத்தை ஊதியது. மேஜரும் கிளைவும் நின்ற இடத்திலிருந்து ஸல்யூட் அடித் தார்கள்.

''பிரிட்டிஷாரின் முதல் காலடி இப்பொழுது இந்தியாவில் ஊன்றிவிட்டது. அடுத்த வெற்றிகளுக்கு இது ஆரம்பம்'' என்று திட்டமாகக் கூறிய லாரன்ஸ், ''நாளைக் காலையில் நாம் ஆச்சாள்புரம் போகிறோம்'' என்றார்.

மூன்று நாள் கழித்து ஆச்சாள்புரத்தை அடைந்த மேஜர் லாரன்ஸ் அங்கிருந்த பெரும் மதிள்கள் கொண்ட சிவலோக தியாகராஜஸ்வாமி கோவிலைக் கண்டார். மதிள்கள் மேல் எதிரியின் பீரங்கிகள் ஏற்றப்பட்டிருந்தன. ''இந்த மதிள்களைத் தகர்ப்பது கஷ்டம்'' என்றான் கிளைவ்.

'நெக் ஆஸ்பெரா டெர்ரண்ட்'' (கஷ்டங்கள் நம்மை நடுங்க வைப்பதில்லை) என்றார் மேஜர் லாரன்ஸ்.

ஆனால் கஷ்டத்துக்கு இடமில்லை. அந்தப் போர் நடக்க வில்லை. அடுத்த இரண்டாவது நாள் தஞ்சை மன்னர் சமாதானத் தூது அனுப்பியிருந்தார். அதன்படி தேவிக் கோட்டையைப் பிரிட்டி ஷாருக்குத் தத்தம் செய்ததோடு காட்டு ராஜாவுக்கு ரூபாய் ஐயாயிரம் பென்ஷனும் கொடுக்க ஒப்புக் கொண்டிருந்தார்.

அந்தச் சமாதானக் கடிதத்தைக் கோவிலுக்கு எதிரே யிருந்த ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து படித்த மேஜர் லாரன்ஸ் குழம்பினார். ''கிளைவ்! இதன் காரணம் உனக்குப் புரிகிறதா?'' என்று கடிதத்தைக் கிளைவிடம் நீட்டினார்.

''புரியவில்லை. தேவிக் கோட்டையை அவர்களாக விட்டுக் கொடுத்தார்கள். இந்தக் கோவிலைத் தகர்த்து உள்ளிருக்கும் எதிரிகளைப் பிடிப்பதும் சுலபமல்ல'' என்றான் கிளைவ்.

மேஜர் தூதனை நோக்கி, ''உண்மையைச் சொல். தஞ்சை மன்னர் ஏன் சமாதானத்தை விரும்புகிறார்?'' என்று வினவினான்.

''கோவில் புனிதமானது. மன்னர், கோட்டைகளைவிடக் கோவில்களை மதிக்கிறார். அதை நீங்கள் அழிக்காதிருக்கவும், உள்ளே புகுந்து அதன் புனிதத் தன்மையைக் கெடுக்கா திருக்கவும் தேவிக் கோட்டையை விட்டுக் கொடுக்கிறார். தவிர பிரிட்டிஷார் நட்பையும் மதிக்கிறார்....''

மேஜர் அதை நம்பவில்லை. இதில் உள் மர்மம் இருப்பதாக நம்பி அதை வெளிப்படையாகவும் சொன்னார். ஆனால் சமாதான ஒப்பந்தம் அன்றே கையெழுத்திடப்பட்டது. பிரிட்டிஷ் படை தேவிக் கோட்டையை நோக்கிப் பின்வாங்கியது. ஒப்பந்தத்தில் அரசர் சார்பில் கையெழுத்திட்ட மானாஜி கொதித்துக் கொண்டிருந்தார். ''அரசரின் போக்கு எனக்குப் புரியவில்லை'' என்றார்.

தஞ்சைக்குச் சென்ற பிறகுதான் புரிந்தது. புரிந்தபோது மானாஜி திக்பிரமைக்கு உள்ளானார்.

முதல் பாகம் முற்றும்.

www.thamizhthenee.blogspot.com